Downloaded From
www.nagaicollege.com

EDUCATIONAL PSYCHOLOGY

கல்வி உளவியல்

UNIT I - INTRODUCTION TO PSYCHOLOGY

Definition of Psychology - Schools of Psychology - Behavioral. Cognitive Psychoanalysts, Methods of Psychology -Branches of Psychology - Educational Psychology -Concepts, Nature and Scope - Importance of Educational Psychology for the Teacher.

அலகு I உளவியல் ஓர் அறிமுகம்

உளவியல் வரையறை – உளவியல் கோட்பாடுகள் நடத்தையியல், அறிவுசார், உளப்பகுப்பாய்வு – உளவியல் முறைகள் - உளவியல் பிரிவுகள் - கல்வி உளவியல் - கருத்தாக்கம், இயல்பும், அளவும் - ஆசிரியருக்கு கல்வி உளவியலின் முக்கியத்துவம்.

UNIT II - HUMAN GROWTH AND DEVELOPMENT

Concept of Growth and Development-Distinction between Growth and Development-Maturation and Development - Nature versus Nurture, general principles of Growth and Development.

அலகு 2 மனித வளர்ச்சியும் முன்னேற்றமும்

வளர்ச்சி, மற்றும் முன்னேற்றத்தின் கருத்தாக்கம் - வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தின் வேறுபாடுகள் - முதிர்ச்சியும், முன்னேற்றமும் - மரபும் சூழ்நிலையும் - வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தின் அடிப்படை கோட்பாடுகள்

UNIT III - DIMENSIONS OF DEVELOPMENT

Dimensions of' development: Physical. cognitive, emotional, and moral-Stages of Development-Childhood to adolescence problems and Education of Adolescents-Developmental tasks and its Educational implications.

அலகு 3 வளர்ச்சியின் பரிமாணம்

வளர்ச்சியின் பரிமாணம்: உடல்சார், அறிவுசார், உணர்வுசார் மற்றும் ஒழுக்கசார் - வளர்ச்சியின் நிலைகள் - குழந்தைப் பருவம் முதல் குமரப்பருவம் வரை உள்ள பிரச்சனைகள் மற்றும் குமரப் பருவத்திற்கான கல்வி – வளர்ச்சி சார் செயல்கள் மற்றும் கல்வியியல் தாக்கங்கள்.

UNIT IV- COGNITIVE DEVELOPMENT – I

Cognitive process - Attention Factors relating to Attention-Span of Attention-Inattention and Distraction - Sensation and Perception -Factors relating to perception-Imagery.

அலகு 4 அறிதிறன் வளர்ச்சி – 1

அறிதிறன் செயல்முறை – கவனம் மற்றும் கவனம் சார்ந்த காரணிகள் - கவன வீச்சு – கவனமின்மையும், கவனச் சிதறலும் - புலனுணர்வுகளும், புலன் காட்சியும் – புலன் காட்சியுடன் தொடர்புடைய காரணிகள் - கற்பனை (அல்லது) சாயல்கள்

UNIT V - CONGNITIVE DEVELOPMENT – II

Concept Maps - Piaget's Stages of Cognitive Development- Reasoning and problem Solving-Meta cognition-Implications for the teacher.

அலகு 5 அறிதிறன் வளர்ச்சி – 11

கருத்துரு வரைபடம் - பியாஜேவின் அறிதிறன் வளர்ச்சி நிலைகள் - காரணமறிதல் மற்றும் பிரச்சனைகளை தீர்த்தல் - சுய அறிதலறிவு – ஆசிரியர்க்கான கல்வித் தாக்கங்கள்.

Downloaded From
www.nagaicollege.com

UNIT VI – LEARNING

Nature and Importance of Learning-Types of Learning- Theories of Learning: Thorndike, Pavlov, Skinner, Kohler and Gagne- Learning Curve- Transfer of Learning Facilitating Transfer -Remembering and Forgetting -Improving memory.

அலகு 6 கற்றல்

கற்றலின் இயல்பு மற்றும் முக்கியத்துவம் - கற்றலின் வகைகள் - கற்றல் கோட்பாடுகள்: தார்ண்டைக், பாவ்லோவ், ஸ்கின்னர், கோஹ்லர், மற்றும காக்னே – கற்றல் வளைவு – கற்றல் மாற்றம் மற்றும் அதன் தேவைகள் - நினைவு மற்றும் மறதி – நினைவு மேம்பாடு.

UNIT VII - INDIVIDUAL DIFFERENCES

Nature and causes of Individual differences- Educational programme to suit individual differences- Classroom instruction- Concept of exceptional children: gifted, backward, physically, mentally and socially challenged and Educational provisions.

அலகு 7 தனியாள் வேற்றுமைகள்

தனியாள் வேற்றுமையின் இயல்பு மற்றும் காரணிகள் - தனியாள் வேற்றுமைக்கேற்ற கல்வியியல் நிகழ்வுகள் - வகுப்பறை கற்பித்தல் - மீத்திறன் குழந்தைக்கான கருத்தாக்கம் - மீத்திறன், பின்தங்கிய, உடல் மனம், மற்றும் சமூகம் சார்ந்த குழந்தைகளுக்கான அறைகூவல்கள் - கல்வியியல் ஏற்பாடுகள்.

UNIT VIII - MOTIVATION – I

Motivation: Functions of Motives-Kinds of Motives-Theories of Motivation-Maslow's Hierarchy of Needs-Achievement motivation-Components- Fear of Failure and Hope of Success.

அலகு 8 ஊக்குவித்தல் - I

ஊக்குவித்தல் : பணிகள், வகைகள் மற்றும் கோட்பாடுகள் - மாஸ்லோவின் படிநிலைத் தேவைகள் கோட்பாடு – அடைவுத் தேவை – காரணிகள் - ஊக்குவித்தல் வெற்றி – தோல்விகளின் பங்கு.

UNIT IX - MOTIVATION II

Motivation in the classroom context motivational functions of teacher - Praise and Blame. Rewards and Punishments-Feedback / Knowledge of results-Level of Aspiration Characteristics of a motivated learner.

அலகு 9 ஊக்குவித்தல் -II

வகுப்பறை ஊக்குவித்தல் மற்றும் ஆசிரியரின் பங்களிப்பு – வெகுமதி மற்றும் தண்டனை – புகழ்தலும், இகழ்தலும் - பின்னூட்டம் அறிவின் விளைவு – அவாவு நிலை - ஊக்கப்படுத்தப்பட்ட கற்பவரின் பண்புநலன்கள்.

UNIT X - INTELLIGENCE

Theories of Intelligence - Single, Two Factor and Multi Factor theories -Multiple Intelligence, Guilford's Structure of the Intellect -- Emotional Intelligence- Individual differences in distribution of Intelligence- Test and their uses.

அலகு 10 நுண்ணறிவு:

நுண்ணறிவுக் கோட்பாடுகள்: ஒற்றை, இரட்டை மற்றும் பல்காரணி நுண்ணறிவு – கில்போர்டின் நுண்ணறிவு கட்டமைப்பு கோட்பாடு – மனவெழுச்சி நுண்ணறிவு – நுண்ணறிவுப் பரவலும், மாந்தர்களின் வகைபாடும்– நுண்ணறிவுச் சோதனைகளின் பயன்கள்.

Downloaded From
www.nagaicollege.com

UNIT XI – CREATIVITY

Creativity - Relationship and differences between intelligence and creativity -Convergent and Divergent Thinking - The Process of Creativity - Guiding for Creativity - Measuring Creativity.

அலகு 11 ஆக்கத்திறன்:

ஆக்கத்திறன் - நுண்ணறிவு மற்றும் ஆக்கத்திறனுக்கு இடையேயான வேறுபாடு மற்றும் தொடர்பு – குவிசிந்தனை மற்றும் விரிசிந்தனை – ஆக்கத்திறன் செயல்முறை – ஆக்கத்திறனை வளர்த்திடும் வழிமுறைகள் - ஆக்கத்திறனை அளவிடுதல்.

UNIT XII – PERSONALITY

Meaning and Definitions of Personality- Determinants of Personality- Theories of personality Psychoanalytic, humanistic

அலகு 12 ஆளுமை

ஆளுமையின் பொருள் மற்றும் வரையறை- ஆளுமையை தீர்மானிக்கும் காரணிகள் - ஆளுமையின் கோட்பாடுகள்: உளப்பகுப்பாய்வு, மனிதவியல்.

UNIT XIII - ASSESSMENT OF PERSONALITY

Assessment of Personality- Important Tools and techniques- Integrated Personality

அலகு 13 ஆளுமையை அளவிடுதல்

ஆளுமையை அளவிடுதல் - ஆளுமையை அளவீடுவதற்கான கருவிகள் மற்றும் உத்திகளின் முக்கியத்துவம் - ஒருங்கிணைந்த ஆளுமை.

UNIT XIV - MENTAL HEALTH

Conflict and Frustration-Concept of Adjustment-Adjustment Barriers- Adjustment mechanisms-Causes of maladjustment-Symptoms of Maladjustment-Defense Mechanisms- Problem children, Juvenile Delinquency-Concepts of Mental Health.

அலகு 14 மனநலம்

மனப்போராட்டம் மற்றும் மனமுறிவு – பொருத்தப்பாடு கருத்தாக்கம் - பொருத்தப்பாட்டின் தடைகள் - பொருத்தப்பாட்டின்மைக்கான காரணங்கள்- தற்காப்பு நடத்தைகள் - பொருத்தப்பாட்டின்மையின் அறிகுறிகள் - தற்காப்பு நடத்தைகள் - பிரச்சனைக்குரிய குழந்தைகள், நெறி பிறழ் நடத்தை மாணவர்கள் - மனநலம் கருத்தாக்கம்.

Downloaded From
www.nagaicollege.com

அலகு I உளவியல்-ஓர் அறிமுகம்
UNIT I - INTRODUCTION TO PSYCHOLOGY

உளவியல் (Psychology) என்னும் சொல்லுக்கு ஏராளமான வரையறைகள் உள்ளன. பழங்காலத்தில், உளவியல் என்பது ஆன்மாவைப் பற்றிப் பயிலும் அறிவியல் எனக் கருதப்பட்டது. பின்னர், தத்துவ இயலானது உளவியல் என்பது மனம்பற்றி முறையாக ஆராய்தல் என வரையறுத்தது. இச்சொல்லானது, மனித நடத்தை பற்றிய அறிவியல் (The Science Of Human Behaivour) என வரையறுக்கப்படுகிறது. போரன் (Baron 2003) என்பவர் உளவியல் என்னும் சொல்லை நடத்தையையும், அறிவுப்புலச் செயல்பாடுகளையும் விளக்கும் அறிவியல் என வரையறுக்கிறார். உளவியல் என்னும் சொல்லானது சைக்கீ (Psyche) லோகஸ் என்னும் இரு கிரேக்கச்சொற்களில் இருந்து வந்ததாகும். சைக்கீ (Psyche) என்றால் ஆன்மா, மனம் அல்லது சுயம் (Soul Mind or Self) என்றும், லோகஸ் (Logos) என்றால் ஆராய்தல் என்றும் பொருள் கூறப்படுகிறது. மனித நடத்தையைப் பற்றி விவரிக்கும் அறிவியலே உளவியல். மனித நடத்தையின் உள்ளார்ந்த பண்புகளையும் எளிதில் புலப்படக்கூடிய வெளிப்புறப் பண்புகளையும், உளவியல் ஆராய்கிறது.

1.1 உளவியல் வரையரை

வில்லியம் மெக்டுகல்(William Mc Dougal) - "உளவியல் என்பது மனிதனின் நடத்தை, நடத்தையின் காரணங்கள், நிபந்தனைகள் ஆகியவற்றை பற்றிப் படிப்பதாகும்".

குர்த் கோப்கா(Kutkofka) - ''ஓர் உயிரி சுற்றுப்புறத்துடன் தொடர்பு கொண்டு வெளியிடும் நடத்தைகளைப் பற்றிய அறிவே உளவியலாகும்''.

எல்.எப்.போரிங் (L.F. Boring) - "மனிதனின் இயற்கைப் பற்றி ஆராய்வதே உளவியல்" என்கிறார்.

உட்வொர்த்(R.S Woodworth) – "உளவியல் என்பது ஓர் சூழ்நிலையில் சம்பந்தப்பட்ட தனிநபரின் நடவடிக்கைகள் பற்றியதோர் அறிவியல்".

லெஸ்டர் குரோ மற்றும் ஆலிஸ் குரோ (Lester D. Crow and Alice Crow) –''உளவியல் என்பது மனிதனின் நடத்தை, மனித உறவுமுறைகளைப் பற்றிப் படிப்பதாகும்."

1.2 உளவியல் கோட்பாடுகள்

ஆரம்பத்தில், உளவியல் என்பது ஆன்மாவைப் பற்றி அதன் இருப்பிடம், அதன் தன்மைகள், இறப்புக்குப் பின் அதன் நிலை போன்றவற்றை ஆராய்வதாக அமைந்து, தத்துவ இயலின் ஓர் உட்பிரிவாக இயங்கியது. உளவியல் என்பது ஆன்மாவைப் பற்றிய ஆய்வு என்ற கருத்து கைவிடப்பட்டு, மனம் என்பதோடு தொடர்புபடுத்தப்பட்டது. மனம் மூன்று நிலைகளில் இயங்குகிறது சிந்தித்தல், உணர்தல் மற்றும் புறச்செயல்களைத் தூண்டுதல். மன இயக்கச் செயல், உடலியக்கச் செயலிலிருந்து வேறுபட்டது. டிட்ச்னரின் (Titchner) வடிவமைப்புக் கோட்பாட்டுப்படி மனம், அறிவுசார் இயக்கமுடையது. இதன் கூறுகளாக புலன் உணர்ச்சி, உணர்வுகள், மனபிம்பங்கள் அமைகின்றன. மன இயக்கத்தின் வடிவமைப்பையும், தன்மையையும் அறிய அக நோக்கு முறையே ஏற்புடையது. உளவியல் என்பது மனிதன் உணர்ந்து செயல்படும் நடத்தைகளை (Conscious Behaviour) மட்டுமே ஆராய்வதாகும்.

1.2.1 நடத்தையியல்

உளவியல் அறிஞர்களான J. B. வாட்சன், டோல்மன், ஹப், ஸ்கின்னர் போன்றோர் உளவியலை நடத்தையியல் என்றே குறிப்பிடுகின்றனர். கண்ணால் காண முடியாத உள்ளத்தைப் பற்றி அறிவதைவிட கண்ணால் பார்க்கக் கூடிய நடத்தையை உளவியலின் பொருளாகக் கொள்வதே அறிவுடைமையாகும் என்று உணர்த்தினர். சிந்தனை என்பது உள்ளத்தின் செயல் என்பதை வாட்சன்

Downloaded From www.nagaicollege.com

மறுக்கிறார். மரபுக் கொள்கையை வாட்சன் ஏற்றுக்கொள்ளவில்லை. சூழ்நிலையே, மனிதனை உருவாக்குகிறது என்றார். நடத்தைவாதிகள் மக்டுகலின் இயல்பூக்கக் கொள்கையையும் மறுத்தனர். சூழ்நிலை வாதியான பர்னார்ட் (Bernard) பயம், பாலுணர்வு, கூடி வாழ்தல் ஆகிய இயல்பூக்கங்களை நாம் அவற்றின் வழியே செயல்படவிடுவதில்லை என்றும், அவற்றைக் கட்டுப்படுத்தி நெறிப்படுத்துகிறோம் என்றும் கூறுகிறார். சூழ்நிலையே ஒருவனுடைய நடத்தை மாற்றத்திற்குப் பெரும் காரணமாகிறதென்றார். நடத்தைக் கோட்பாடினர் மனிதரின் நடத்தையை மறுவினை வாயிலாக தெளிவுறுத்தினர். ஒவ்வொரு தூண்டுதலுக்கும் ஒவ்வொரு துலங்கள் உண்டு என்றும் தூண்டல், துலங்கள் இணைப்பே நடத்தை என்றும் வாதிட்டனர்.

1.2.2 அறிதல்

1912-ம் ஆண்டு, நடத்தைக் கோட்பாட்டுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், முழுமைக் காட்சிக் கோட்பாடு (Gestalt) என்ற புதிய கொள்கை உளவியலில் உதயமாயிற்று. முழுமைக் காட்சிக் கோட்பாடு என்பது எதனையும் தனித்தனிப் பாகங்களாகப் பார்க்காது முழுமையாகப் பார்க்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துவதாகும். ஒரு சைக்கிளைப் பார்க்கும்போது சக்கரம், மணி, ஹாண்டில் பார் என்று பிரித்து, பல பாகங்களின் தொகுப்பாகப் பார்க்காது, ஒரு முழு வடிவமாக, இயங்கும் பொருளாக பார்க்கிறோம். இதுவே முழுமைக் காட்சிக் கோட்பாடாகும். கெஸ்டால்ட் (Gestalt) என்ற ஜெர்மனிய சொல்லுக்கு உருவம், வடிவம் என்று பொருள் கொண்டு, காட்சிப் பொருட்களை முழு உருவ அமைப்போடு காணுதல் என்று விளக்கமளிக்கப்படுகிறது. முழுமை காட்சியை மணந்தால் உணர்வதற்குப் புலன் உணர்ச்சியோடு ஏற்கனவே நாம் பெற்ற அனுபவங்களும் துணை புரிகின்றன. முழுமைக் காட்சிக் கோட்பாட்டினர் மனித நடத்தை புலன்காட்சி அடிப்படையில் அமைகிறதென்றும், புலன்காட்சி பெற்ற சிந்தனையும், அறிவுத் திறனும் அவசியம் என்றும் வாதிடுகின்றனர். ஒரே தூண்டல் எல்லோரிடமும் ஒரே வகையான துலங்களை ஏற்படுத்துவதில்லை. அவரவர் அனுபவத்திற்கேற்ப துலங்கலை வெளிப்படுத்துகின்றனர்.

1.2.3 உளப்பகுப்பு

சிக்மண்ட் பிராய்டு உளப்பகுப்புக் கோட்பாட்டை நிறுவினார். மனிதனுடைய நடத்தையை நிர்ணயிப்பதில் அவனுடைய அடிமன ஆழத்தில் அமைந்திருக்கும் நனவிலி மனத்தின் முக்கியத்துவத்தை இவ்வுளப்பகுப்பாய்வு கோட்பாடு வலியுறுத்துகிறது. ஆட்லர் தனிநபர் உளவியலையும், யுங் பகுப்பு உளவியலையும் தோற்றுவித்தனர். இவர்களைத் தொடர்ந்து கார்ல், மாஸ்கோ ஆகியோர் மனிதநேய உளவியலை (Humanistic psychology) முதன்மைப்படுத்தினர்.

1.3 உளவியல் முறைகள்

ஒருவரின் நடத்தையை அளந்தறியப் பல உளவியல் முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. உளவியல் முறைகளைப் பயன்படுத்தி, ஆசிரியர் தமது மாணவர்களின் நடத்தையைப் புரிந்து கொள்ள முடியும். இங்கே ஏழு உளவியல் முறைகள் விவரிக்கப்பட்டுள்ளன.

1.3.1 சுயபரிசோதனை - விளக்கம்

ஒருவர் தன்னுடைய மனநிலையைத் தானே சுயபரிசோதனை செய்து கூறும் முறைக்கு சுயபரிசோதனை (Introspection) எனப்பெயர். சுயபரிசோதனையில் ஒருவரின் சொந்த அனுபவங்களின் சுய வெளிப்பாடு நிகழ்கிறது.

நிறைகள் உள்நோக்கியறிதலில் உற்றுநோக்குபவரும், உற்று நோக்கப்படுபவரும் ஒரு முறை என்பதால் இம்முறையை ஒருவர் எந்த நேரத்திலும் பயன்படுத்தலாம்

ஒருவரின் மனமே சுயபரிசோதனைக்கு உதவும் கருவியாகவும், களமாகவும் விளங்குவதால் இம்முறையைச் செய்து பார்க்க சோதனைச் சாலையை நாட வேண்டியதில்லை, செலவும் குறைவு. இதில் நேரடியான, உண்மையான அனுபவ வெளிப்பாடு கிடைக்கிறது

Downloaded From www.nagaicollege.com

1.3.2 உற்றுநோக்கல் முறை (Observation)

பிறரது நடத்தையினைக் கூர்ந்து கவனித்தறிதல் உற்றுநோக்கல் எனப்படும். சிறு குழந்தைகள், விலங்குகள் போன்றவற்றின் நடத்தையில் இயல்புகளை அறிய இம்முறை பயனுள்ளதாகும். குழந்தை உளவியலிலும் இம்முறை சிறப்பாகப் பயன்படுத்தப்படுகிறது. மாணவர்களது இயல்புகளை அறிவதற்கும், திறன்பதிவிற்கான விபரங்களைத் திரட்டுவதற்க்கும் ஆசிரியர்கள் இம்முறையைப் பயன்படுத்துகிறார்கள். ஒரு குறிப்பிட்ட நடத்தை, வரையறுக்கப்பட்ட கால இடைவெளியில் எத்தனை முறை நிகழ்கிறது என்றும், குறிப்பிட்ட கால இடைவெளியில் என்னென்ன நடத்தைகள் வெளியிடப்படுகின்றன என்றும் ஆராய்ந்தறிய உற்றுநோக்கல் முறை பயன்படுகிறது. உற்றுநோக்கல் முறையைப் பயன்படுத்தும் போது அதில் நான்கு வித செயல் நிலைகள் இடம் பெறுகின்றன.

- புலன்காட்சி
- நடத்தையை குறித்துக் கொள்ளுதல்
- சேகரிக்கப்பட்ட நடத்தைக்கூறு விபரங்களை பகுத்து ஆராய்தல்
- பொது உண்மைகளைப் பெறுதல்.

பங்கேற்கும் - பங்கேற்கா உற்றுநோக்கல், இயற்கையான - செயற்கையான உற்றுநோக்கல், திட்டமிடப்பட்ட- ஏதேச்சையாக நிகழ்ந்த உற்றுநோக்கல் என்று பலவகை உற்றுநோக்கல்கள் உண்டு.

உற்றுநோக்கல் முறையை செம்மைப்படுத்தல்

- நோக்குவோர் பலர் ஒரே காலத்தில் ஒருவனது நடத்தையை உற்று நோக்கி, உணர்ந்தவற்றை உடனுக்குடன் குறித்து வைத்துக் கொள்ள வேண்டும். இப்பல்வேறு குறிப்புகளைப் பின்னர் ஒப்புநோக்கி ஆராய்தல் வேண்டும்.
- உற்று நோக்கப்படுவோரது நடத்தையின் ஒரு கூறை மட்டும் ஒரு சமயத்தில் கவனித்தல் நன்று.
- தாம் பிறரால் கவனிக்கப்படுகிறோம் என உற்று நோக்கப்படுவோர் தானே உணர்ந்தால் எழும் கூச்சத்தின் காரணமாக அவரது நடத்தை இயற்கையாக அமையாது போய்விடும். ஆகவே, உற்று நோக்கப்படுவோர்க்குத் தெரியாமலேயே அவரின் நடத்தை ஆராயப்பட வேண்டும்.
- உற்று நோக்கலால் பெறப்படும் கருத்துகள் உண்மையானவையாக அமைய வேண்டுமாயின், நமது அனுபவங்களையும், ஊக்கங்களையும் கவனித்தறிந்த விபரங்களுடன் கலக்கக் கூடாது.
- உற்றுநோக்கலில் முறையான பயிற்சி பெற்றவரை மட்டுமே உற்று நோக்க அனுமதிக்க வேண்டும். புறவயத்தன்மையை அதிகரிக்க உற்றுநோக்கலில் மின் கருவிகளான காமிரா, டேப்ரிக்கார்டர், கண்ணாடித் தடுப்புகள் போன்றவற்றைப் பயன்படுத்தலாம்.
- எதை உற்று நோக்க வேண்டும், எவ்வளவு காலம் இதில் ஈடுபட வேண்டும், உற்று நோக்கலின் நோக்கம் முதலியவற்றை முன்கூட்டியே உற்றுநோக்குவோர்க்கு உணர்த்திட வேண்டும்.

1.3.3 உற்றுநோக்கலின் பயன்பாடு

வகுப்புச் செயல்களில் மாணவன் எந்த அளவுக்குப் பங்கு பெறுகிறான் என்பதையும், அவனது படிக்கும் பழக்கங்கள், ஒப்படைப்புகளை முடிக்கும் திறன், சுயகட்டுப்பாட்டின் (Self control) அளவு, சமூகப் பண்புகள், மொழித்திறன்கள், மொழிக் குறைபாடுகள், உடல் குறைபாடுகள், வகுப்பில் கவனம், தண்டனைகளைப் பற்றிய அவனது மனப்பான்மை போன்றனவும் ஆசிரிரால் உற்று நோக்கப்பட்டு, திறள்பதிவேட்டில் குறிப்பிபடவேண்டும்.

1.3.4 வாழ்க்கைத் துணுக்கு முறை

ஒவ்வொருவரது வாழ்க்கையிலும் முக்கியமாக இளமைப்பருவத்தில், சில குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இந்நிகழ்ச்சிகள் அவரது மன இயல்புகளையும், ஆற்றல்களையும்

Downloaded From www.nagaicollege.com

தெளிவாக எடுத்துக்காட்டுவனவாகும். இத்தகைய வாழ்க்கை நிகழ்ச்சிகளைத் தொகுத்து வைத்தல் வாழ்க்கைத் துணுக்குமுறை எனப்படும். பெற்றோர்களும் தங்கள் குழந்தைகள் பற்றிய வாழ்க்கைத் துணுக்குகளைக் குறித்து வைத்திருப்பர். ஆனால் இத்தகைய குறிப்புகள் பெரும்பாலும் அகவயப்பட்டனவாகும். உண்மையை திரித்துக் கூறுவனவாக இருக்கக்கூடும். வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் குறித்து வைக்கும் போது தேவைப்படுவது தேதி, நிலைமை, நிகழ்ச்சி பற்றிய உண்மை விபரம், அதனுடன் தொடர்புடைய வேறு நிகழ்ச்சிகள், போதிய எண்ணிக்கையிலும், வரிசைக்கிரமத்திலும் நிகழ்ச்சிக்குறிப்புகள் ஆகியவனவாம். ஆசிரியரும் தமது மாணாக்கரது பள்ளி வாழ்க்கையில் தோன்றும் முக்கிய நிகழ்ச்சிகளைக் குறித்து வைத்திருப்பார்கள். அது அம்மாணக்கரது இயல்புகளை நன்கறிய துணை செய்யும்.

1.3.5 வாழ்க்கைத் துணுக்கு முறையின் குறைபாடுகள்

- உற்றுநோக்கலில் பெறப்பட்ட விபரங்களோடு தமது கருத்துகளையும், ஊக்கங்களையும் பலர் சோதிக்கக்கூடும்
- விவரிக்கப்படும் நடத்தை, அது நிகழும் சமூகப் பின்னணியினின்றும் தனிமைப்படுத்தப்பட்டுக் குறிக்கப்பட்டால், அதன் உண்மைத் தன்மை தெரியாது . பெரும்பாலும், அசாதரண நடத்தை மட்டும் குறிக்கப்பட்டு, அதுவே சாதாரண நடத்தையாகக் கருதப்படுவதுண்டு

1.3.6 கள ஆய்வு முறை

ஒரு நிகழ்ச்சியை, அது நிகழும் இயற்கையான சூழ்நிலையில் உற்று நோக்கி ஆராய்தல் கள ஆராய்ச்சி முறையெனப்படும். சமூக உளவியலிலும், கல்வி உளவியலிலும் இம்முறை பெருமளவு பயன்படுத்தப்படுகிறது. கள ஆராய்ச்சியில் வினா வரிசைகள், தர அளவு கோல்கள், குறியீடு பட்டியல்கள் போன்றவையும் பயன்படுத்தப்படும்.

1.3.7 பரிசோதனை முறை - விளக்கம்

பரிசோதனை என்பது கட்டுப்பாட்டுக்குட்பட்ட உற்றுநோக்கல் (Controlled Observation) எனக் கூறலாம். ஒரு கோட்பாடு அல்லது கருதுகோளினை சரிபார்த்தலுக்காக ஓர் ஆராய்ச்சியாளனால் முயன்று திட்டமிட்டு உருவாக்கப்படும் நிகழ்ச்சி பரிசோதனையாகும். இக்கோட்பாடு அல்லது கருதுகோள், காரண காரியத் தொடர்பை குறிப்பதாக இருக்கும். ஆராய்ச்சிக்கு உட்பட்ட நிகழ்ச்சியுடன் தொடர்புடைய பல்வேறு காரணிகளைக் கட்டுப்படுத்துவதற்கும், சோதனையின் விளைவுகளை நுட்பமாக அளவிடுவதற்கும் ஆய்வுக் கூடங்களில் பல்வேறு கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. முதன்முதலில், 1879-ம் ஆண்டு, ஜெர்மனியில் உளவியல் ஆய்வுக்கூடம் தொடங்கப்பட்டது.

1.3.8 பரிசோதனை முறையின் நிறை குறைகள்

நிறைகள்	குறைகள்
எல்லா அறிவியற் கலைகளுக்கும் இது பொதுவான முக்கிய முறையாகும்	உளவியலின் எல்லாப் பகுதிகளையும், இம்முறை கொண்டு ஆராய்வது என்பது இயலாது
இம்முறையால் பெறப்படும் முறைகள், முடிவுகள் முழுவதும் நம்பகமானவை. இவற்றை எவ்விடத்திலும் சரிபார்க்கலாம்	சோதனையாளரின் தனிப்பண்புகள் எதிர்பார்ப்புகள், சார்பெண்ணங்கள் போன்றனவும் சோதனைகளின் முடிவுகளைப் பாதிக்கும்
கோட்பாடுகளையும், கருத்துக்களையும் உண்மை என்று நிருபிப்பதற்கு துல்லியமான முறையாகும்	பரிசோதனை நடத்த அதிக காலம், செலவு பிடிக்கும். சோதனை ஆய்வு முறைகளை பயிற்சி பெற்றவர்கள் மேற்கொள்ள வேண்டும்.

1.3.9 வளர்ச்சி ஆய்வு முறை

குழந்தைப்பருவம் தொடங்கி, ஒருவன் முதிர்ச்சியடையும் வரை பண்புகளும், நடத்தைகளும் எப்படி வளர்ச்சியடைகின்றன, எவ்விதங்களில் மாறுபாடு அடைகின்றன என்பவற்றை அறிய வளர்ச்சி முறை உதவுகிறது.

Downloaded From www.nagaicollege.com

வளர்ச்சி முறை இருவகைப்படும்:

- நீள ஆய்வு முறை
- குறுக்கு ஆய்வு முறை

வளர்ச்சிப்படி நிலையிலுள்ள பல குழந்தைகளை தொடர்ந்து பல ஆண்டுகள் உற்று நோக்குவது நீள ஆய்வு முறையாகும். பல வளர்ச்சி நிலைகளிலும் பலரது நடத்தையைக் கவனித்து உற்றுநோக்கல் குறுக்கு ஆய்வாகும். சிறு குழந்தைகளது விளையாட்டுகள் அவர்களது தனித்தன்மையைப் பிரதிபலிப்பனவாக அமைகின்றன.

1.3.10 நிகழ்வுக்கூறு ஆய்வு முறை (Case Study Method)

தனிநபர் ஒருவரிடம் காணப்படும் பிரச்சனைக்குரிய நடத்தைக்கான காரணங்களை அறிவியல் முறைப்படி கண்டறிந்து, அவற்றை நீக்கிட விரிவான வகையில் அந்நபர் தொடர்பான விபரங்களை சேகரித்து, அவற்றை முறையாக ஆய்வு செய்து, ஆய்வின் அடிப்படையில் தகுந்த தீர்வினைப் பரிந்துரைத்து செயற்படுத்திடலே நிகழ்வுக்கூறு ஆய்வு எனப்படும். பொதுவாக இம்முறை, தனிநபர் அல்லது நிறுவனத்தின் குறிப்பிட்ட பிரச்சனையை ஆய்வு செய்து, குறிப்பிட்ட நடவடிக்கைகளை பரிந்துரைப்பதற்கு அதிகம் பயன்படுத்தப்படுவதால் இதை மருத்துவஆய்வு முறை என்றும் குறிப்பிடுவர். பள்ளி மாணாக்கர் சிலரிடம் காணப்படும் நெறிப்பிறழ்வு, கல்வியில் பின்தங்கியிருத்தல், பள்ளிக்குக் காலந்தாழ்ந்து வருதல், பிற மாணவர்களை சீண்டிக் கொண்டிருத்தல், வகுப்பறையில் கவனமின்மை, பிற மாணவர்களோடு கூடிப் பழகாமல் ஒதுங்கியிருத்தல், பொய் பேசுதல், ஆசிரியர்களிடம் பணிவுடன் நடந்து கொள்ளாமை போன்ற பிரச்சனைக்குரிய நடத்தைக்கான அடிப்படைக் காரணங்களை ஆய்வு மூலம் கண்டறிந்து, இத்தகைய நிலைகளைப் போக்க இம்முறை உதவுகின்றது. தற்போது இம்முறை விரிவுபடுத்தப்பட்டு, திறமையாக செயல்படும் நிறுவனத்தையும், மீத்திறம் பெற்று விளங்குபவரையும் விரிவாக ஆராய்ந்து அவற்றிலிருந்து கண்டறிந்தவற்றை மற்ற நிறுவனங்களுக்கும், நபர்களுக்கும் வழிகாட்டி ஆலோசனைகள் வழங்கிட பயன்படுத்தப்படுகிறது. எனவே தற்காலத்தில் இம்முறை தனியலகு ஆய்வு முறை என்றழைக்கப்படுகிறது. ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும் அலகு, தனிநபராகவோ, நிறுவனமாகவோ அல்லது ஒரு குறிப்பிட்ட சமூகப் பிரிவினராகவோ இருக்கலாம். தனியலகு ஆய்வில், விபரங்களை சேகரிப்பதற்கு உற்று நோக்கல், பேட்டி, தர அளவுகோல்கள், நுண்ணறிவுச் சோதனை, நாட்டச் சோதனை, வினாவரிசை,, மனப்பான்மை அளவுகோல்கள், ஆளுமைச் சோதனைகள் போன்றவை தனியாகவோ, இணைத்தோ பயன்படுத்தப்படும். சேகரித்த விபரங்களிலிருந்து ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட அலகின் தற்போதைய நிலை, முந்தையகால வரலாறு, எதிர்காலத்தில் எதிர்பார்க்கப்படும் நிலைமைகள் ஆகியவற்றை தெளிவுபடுத்தும் வகையில் பகுத்தாயப்பட்டு பரிந்துரைக்கப்படும்.

1.3.11 தனியாள் ஆய்வில் இடம்பெறும் படிநிலைகள்

பிரச்சனைக்குரிய அலகை தேர்வு செய்தல்

முதலில் விரிவான ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும் அலகைத் தீர்மானிக்க வேண்டும். உதாரணமாக, பள்ளி நடவடிக்கைகள் எதிலும் ஈடுபாடு காண்பிக்காத மாணவர், தேர்ச்சி விகிதம் மிகவும் குறைந்து காணப்படும் பள்ளி, நலிவுற்ற தொழிற்சாலை போன்ற ஆய்வுக்குரிய அலகினைத் தேர்ந்தெடுக்க வேண்டும். தேர்ந்தெடுத்த அலகு குறித்த தகவல்களைப் பல்வேறு வழிகளிலும் திரட்டி உற்றுநோக்கல், நேர்காணல், வினாநிரல் தேவையான உளவியல் சோதனைகள், மனப்பான்மை அளவுகோல்கள், தர அளவு கோல்கள் ஆகியவற்றை தனியாகவோ, இணைந்தோ பயன்படுத்தி ஆய்வுக்குரிய நபர்/நிறுவனத்தைப் பற்றிய அனைத்து வகைத் தகவல்களையும் முழுமையாகப் பெற முயற்சிக்க வேண்டும்.

பிரச்சனைக்கான காரணங்களை ஊகித்தல்

சேகரித்த தகவல்களை முழுமையாக, ஆராய்ந்து, பிரச்சனைக்கான காரணங்களை ஊகித்தறிய வேண்டும். பிரச்சனையைப்பற்றி நாம் ஏற்கனவே பெற்றிருக்கும் அறிவும், அனுபவங்களும், பிரச்சினைக்குரிய நபரின் நடத்தைக்கான காரணங்களைத் தீர்மானிக்க பெரிதும் உதவும்.

Downloaded From www.nagaicollege.com

பிரச்சினையை சீர்செய்யும் முறைகளை வகுத்தல்

பிரச்சினைக்குரிய காரணங்களை ஊகித்தறிந்த பின், அவற்றை நீக்கிடும் வழிமுறைகளை வகுத்து, அவற்றை குறிப்பிட்ட கால அளவு செயற்படுத்திப்பார்த்தலே அடுத்த படிநிலையாகும். உதாரணமாக, மாணவர்களை உளவியல் ஆலோசனைக்கு உட்படுத்துதல், பெற்றோருடன் விவாதித்தல், படிப்பதற்கு பண உதவி செய்தல், தன்னம்பிக்கையை வளர்த்திடும் நூல்களைப் படிக்கச் செய்தல், நண்பர்களின் தொடர்புகளைக் கண்காணித்தல் போன்ற பல்வகை அணுகுமுறைகளையும் ஒரு சேர பயன்படுத்திப் பார்க்கலாம்.

தொடர்ணி

இதுவே இவ்வகை ஆய்வின் இறுதிப்படி நிலையாகும். மாணவரின் பிரச்சினைக்குரிய நடத்தையின் அளவை, தொடர்ச்சியாக அவ்வப்போது கண்காணித்து வருவதன் மூலம், பரிந்துரைக்கப்பட்ட சீர்திருத்தும் முறைகள் எந்த அளவு பயனுள்ளவையாக அமைந்துள்ளன என்பதைக் காண முடியும். 10 நிகழ்வுக்கூறு ஆய்வின் முக்கியத்துவம் பள்ளிகளில் மேற்கொள்ளப்படும் நிகழ்வுக்கூறு ஆய்வுகள் பல்வேறு நோக்கங்களை நிறைவு செய்கிறது. அவை :

- பாதிப்புக்கு உள்ளான மாணவரிடம் தனிக்கவனம் செலுத்தி அவரது பிரச்சனைக்கான காரணத்தை அறிவியல் ரீதியாக ஆராய்ந்து, அதற்கான தீர்வையும் பரிந்துரைக்கிறது.
- சேகரிக்கப்பட்ட விபரங்கள் பொருத்தமானதாகவும், நம்பகத்தன்மை மிக்கதாகவும் இருத்தல் வேண்டும்
- ஆய்வு தொடர்ச்சியாக நடத்தப்பெறல் வேண்டும்
- சேகரிக்கப்பட்ட விபரங்களின் இரகசியத்தன்மை பாதுகாக்கப்பட்டு ஆய்வுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்
- ஒவ்வொரு நிகழ்வுக்கூறு ஆய்வு முடிவுகளும் தொடர் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட வேண்டும்

1.3.12 வினா வரிசை முறை

இம்முறையும், இன்று உளவியலிலும், சமூகவியலிலும் பெருமளவில் பயன்படுத்தப்படுகிறது. ஆய்வுக்குட்பட்ட நிகழ்ச்சி பற்றிய பல சிறு வினாக்கள் வினாவரிசையில் கொடுக்கப் பட்டிருக்கும். இவற்றிற்கான விடைகளைக் குறிப்பிட - ஆம், இல்லை, நிச்சயமாக சொல்ல இயலாது என்று சிறு அமைப்பு கொடுக்கப்பட்டிருக்கும். இவ்வினாக்களுக்கு பலர் அளிக்கும் விடைகளை ஆராய்வதன் மூலம், இந்நிகழ்ச்சி பற்றிய விளக்கம் பெற முடியும். இம்முறையை உளவியல் ஆராய்ச்சிக்கு முதன்முதலில் பயன்படுத்தியவர் கால்டன் என்பவராவார்.

பொதுவாக வினாவரிசை நிர்வாக முறையைப் பின்வரும் தருணங்களில் பயன்படுத்தலாம்:

- குறுகிய காலத்துக்குள் பல வினாக்களுக்கு விடை பெற வேண்டிய தருணம்.
- ஆராய்ச்சிக்கு உதவக் கூடியவர்களை நேரடியாக அணுக இயலாத தருணம்.
- தனி நபரோடு நெருங்கிய தொடர்பற்ற, பொதுப்படையான விபரங்கள் தேவைப்படும் தருணம்.
- தனி மனிதர்களை ஒரு அணியிரணுடன் ஒப்பிட வேண்டிய தருணம்.
- குழுக்களை ஒப்பிட்டு முடிவெடுக்க வேண்டிய தருணம்.

1.4 உளவியலின் பிரிவுகள்

உளவியலில் பல பிரிவுகள் காணப்படுகின்றன. உளவியலில் இன்று ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைப் பற்றி இப்பிரிவுகளின் எண்ணிக்கையை வைத்தே நாம் ஓரளவு அறியக்கூடும். இப்பிரிவுகளில் முக்கியமான சிலவற்றைப் பற்றி கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

Downloaded From www.nagaicollege.com

1.4.1 பொது உளவியல்

இது எல்லா உளவியல் பிரிவுகளுக்கும் அடிப்படையான, பொதுவான கருத்துக்கள் பற்றியது. முதிர்ச்சியடைந்த மனிதனின் சாதரணமான மனிதர்களின் நடத்தையை பொது உளவியல் விவரிக்கிறது. இப்பிரிவில் புலன்காட்சி, மனவுணர்ச்சிகளும், எழுச்சிகளும், ஊக்குவித்தல், கற்றல் சிந்தித்தல் போன்றவை அடங்கும். தனியாள் வேற்றுமைகளின் தன்மை, அவற்றின் அளவு, அவை தோன்றக் காரணங்கள் போன்றவற்றையும் இப்பிரிவு ஆராய்கிறது.

1.4.2 குழந்தை உளவியல்

குழந்தையின் வளர்ச்சி, இவ்வளர்ச்சியில் அதன் மரபுநிலை, சூழ்நிலை ஆகியவற்றின் பங்கு, குழந்தைகளிடம் காணப்படும் திறன்கள், இவற்றை அளவிடும் முறைகள், குழந்தை தனது சூழ்நிலையுடன் பொருத்தப்பாட்டை அடையும் வகைகள் போன்றவற்றை ஆராயும் மனவியல் பிரிவு, குழந்தை உளவியல் ஆகும். இது போன்றே குழந்தை உளவியல், குமரப்பருவ உளவியல் ஆகியவை இன்று எழுந்துள்ளன.

1.4.3 நெறிபிறழ் உளவியல்

நரம்பு நோய்கள், உள்ளத் தடுமாற்றங்கள் போன்ற கோளாறுகளால் பாதிக்கப்பட்ட மனிதர்களின் அசாதாரண நடத்தைகளை விவரிக்கும் பிரிவு, நெறிபிறழ் மனவியலாகும். இப்பிரிவு மன மருத்துவ இயலுடன் இணைந்ததாகும். பிராய்டின் உளப்பகுப்பாய்வு, இதன் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியுள்ளது.

1.4.4 உடற்கூறு உளவியல்

இப்பிரிவில் மனச்செயலானது முறையான உடலியல் அடிப்படையில் ஆராயப்படுகின்றன. நரம்பு மண்டலம், புலன்கள், சுரப்பிகள் போன்றவற்றின் அமைப்பு, செயல்பாடு ஆகியன இப்பிரிவில் இடம் பெறும்.

1.4.5 ஒப்பீட்டு உளவியல்

மனிதனின் நடத்தையுடன், பிற விலங்கினங்களின் நடத்தைகளை ஒப்பிட்டு இவற்றினுள் காணப்படும் தொடர்புகளையும், வேறுபாடுகளையும் அறியும் பிரிவே ஒப்பீட்டு உளவியலாகும். மனிதர்களைக் கொண்டு நடத்த முடியாத அல்லது நடத்தக் கூடாத சோதனைகளை விலங்குகளைக் கொண்டு நடத்த முடியும்.

1.4.6 சமூக உளவியல்

ஒரு குழு உறுப்பினராக உள்ள தனி மனிதனின் நடத்தை பற்றியும், குழுக்களுக்குள் காணப்படும் தொடர்புகள் பற்றியும் இப்பிரிவு விவாதிக்கிறது.

1.4.7 நடை முறை உளவியல்

இப்பிரிவில் தொழில் பற்றிய உளவியல், விளம்பரம் பற்றிய உளவியல், கல்வி உளவியல் போன்றவை அடங்கியுள்ளன. உளவியல் உண்மைகளின் விளைவாகப் பலவாழ்க்கைத் துறைகள் பெரும் பயன் பெற்றுள்ளன. உதாரணமாக, மருத்துவத் துறையில், உடல் மன மருத்துவப் பிரிவின் வளர்ச்சியின் பயனாக உடலைச் சார்ந்த பல நோய்களைத் தீர்ப்பதில் உளவியல் முறைகள் கையாளப்படுகின்றன. இதன் விளைவாக மருத்துவ உளவியல் (Clinical Psychology) என்ற புதுப்பிரிவு தோன்றியுள்ளது. பொய் பேசுதலைக் கண்டுபிடிக்கும் முறைகள், குற்றவாளிகளைச் சீர்திருத்தும் புதிய முறைகள் போன்றன நீதித்துறையில் உளவியலின் செல்வாக்கை அதிகரித்து குற்றவியல், உளவியல் என்ற புதுப்பிரிவு தோன்றியுள்ளது. தொழில்துறையில், பல்வேறு தொழில்களின் தகுதிக்கான நுட்பச் சோதனைகள், சிறப்பாகத் தொழிலாற்ற உதவக்கூடிய சூழ்நிலையினை உருவாக்குதல், முதலாளி - தொழிலாளி உறவினை செம்மைப்படுத்துதல் போன்ற பலவற்றில் உளவியல் உதவியுள்ளது. இப்பிரிவை தொழில்துறை உளவியல் என்கிறோம். கற்றல் - கற்பித்தல் செயல்பாட்டினை உளவியல் ரீதியாக ஆராய்ந்து, மாணவர்களது கற்றலை மேம்படுத்த உதவும் வழிமுறைகளைக் கண்டறியும் உளவியல் பிரிவு கல்வி உளவியல் என்றழைக்கப்படுகிறது.

Downloaded From www.nagaicollege.com

இப்பிரிவு நடைமுறை உளவியலின் கீழ் வந்தாலும், இன்று இப்பிரிவானது விரிந்து தனித்துறையாக உருப்பெற்று வருகிறது.

1.5 கல்வி உளவியலின் வரையறை

உளவியலின் ஓர் உட்பிரிவான கல்வி உளவியல் என்பது, கல்வியில் மேற்கொள்ளப்படும் செயல்முறைகளிலும், பின்பற்றப்படும் வழிமுறைகளிலும், உளவியல் கோட்பாடுகளையும், விதிகளையும் புகுத்தி, கற்றல் - கற்பித்தலை மேம்படுத்துதலே ஆகும் என்று கோலெஸ்னிக் என்ற இரஷ்ய அறிஞர் கூறுகிறார். பள்ளி வகுப்பறை, கல்வி உளவியலாளர்களின் ஆய்வுக்கூடம், கற்றல், கற்பித்தல், பயிற்சியளித்தல் போன்றவற்றில் எதிர்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முற்படுவதே கல்வி உளவியல்.

1.5.1 கல்வி உளவியலின் தன்மை

கல்வி உளவியல், துரிதமாக வளர்ச்சியடைந்து தனித்துறையாக தன்னை நிலைபடுத்திக் கொண்டுள்ளது. கல்வி பிரச்சனைகள் யாவும் இத்துறையின் ஆய்வுக்கு உட்படுகின்றன. குழந்தைக்கல்வி, குறையறிந்து தீர்க்கும் முறைகள், மீத்திறன் மிக்கவர்களின் கல்வி, ஊனமுற்றோர்க்கான கல்வி, கற்றலைப் பாதிக்கும் காரணிகள், கல்வி மதிப்பிடுதல், கோட்பாடுகள் போன்றவற்றை தன் ஆய்வுக்களமாக கொண்டுள்ளதன் மூலம், கல்வி உளவியல் என்பது தனித்தன்மை வாய்ந்த ஒரு சிறப்புத்துறை என்பது விளங்கும். வகுப்பறை சூழல், நடத்தை மாற்ற உத்திகள், திட்டமிட்டு கற்றல் வழிமுறைகள், நுண்திறன் கற்பித்தல், கல்வி நுட்பவியலின் மென், தளவாட அணுகுமுறைகளை பயன்படுத்துதல், கணிணி கொண்டு கற்பித்தல் போன்ற பிரிவுகளை உருவாக்கி வகுப்பறைக் கற்றலில் கற்பவர் - கற்பிப்பவர் இடையேயான இடைவெளியை மேம்படுத்த கல்வி உளவியல் பெரிதும் முயற்சிக்கிறது. உயர் கற்பித்தல் முறைகள் யாவும் முழுக்க முழுக்க உளவியல் அடிப்படையானவை.

1.5.2 கல்வி உளவியலின் வரம்பு

இப்பிரிவு, மாணக்கரது வளர்ச்சிப் படிநிலைகள், அவை ஒவ்வொன்றிலும் மாணவர்களிடம் காணப்படும் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம், வளர்ச்சிசார் செயல்கள், ஆளுமைக் கூறுகளை வெளிப்படுத்திடும் மாணக்கரது வெளிப்படையான நடத்தைகள், ஆழ்மனத்தினால் இயக்கப்படும் பல்வேறு நடத்தைகள் போன்றவற்றை உள்ளடக்குகிறது.

கற்றல் அனுபவங்கள்

மாணக்கரது பல்வேறு வளர்ச்சிப் படிநிலைகளில் ஒவ்வொன்றிற்கும் ஏற்ற கற்றல் அனுபவங்கள் எவை என்பதைத் தீர்மானிப்பதில் கல்வி உளவியல் உதவுகிறது. இப்பிரிவில் மாணவர்களுக்கு அளித்திடுவதற்குரிய பொருத்தமான கற்றல் அனுபவங்களைத் தேர்ந்தெடுக்க உதவிடும் உளவியல் கோட்பாடுகள், கொள்கைகள் ஆகியவை இடம் பெறுகின்றன.

கற்கும் முறைகள்

கற்போரின் இயல்புகளைத் தெரிந்து கொண்டு அவற்றிற்கு ஏற்றவாறு அளித்திட வேண்டிய கற்றல் அனுபவங்களைத் தீர்மானித்த பின், அவ்வனுபவங்களை மாணவர்கள் எளிதில் அடைந்திடுவதற்கான வழிமுறைகளைத் தேர்வு செய்ய வேண்டும். இப்பணியில் கற்றல் எவ்வாறு நிகழ்கிறது, கற்றலைப் பாதிக்கும் காரணிகள் எவை, கற்றல் தொடர்பான கொள்கைகள் மற்றும் கோட்பாடுகள் என்னென்ன உள்ளன என்பதை கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். இப்பிரிவில் இடம் பெறும் பாடப்பொருட்களில் மறத்தல், நினைவிலிருந்தல் (Remembering) கற்றல் - மாற்றம், பொதுமைக் கருத்துகள் உருவாகும் முறை, சிந்தித்தல், ஆராய்ந்தறிதல், பிரச்சனைகளுக்குத் தீர்வு காணுதல் போன்ற அறிவு சார்ந்த செயல்பாடுகள் ஆகியனவும் இடம் பெறுகின்றன. கற்றல் என்னும் செயல்பாட்டினில் இடம் பெறும் இரு முக்கியக் கூறுகளான, கற்பவர், கற்பிப்பவர் இவர்களுக்கிடையே வருபவை கற்றல் சூழ்நிலை, கற்கும் முறைகள், கற்கும் சூழ்நிலைகள் என்னும் பிரிவினில் வகுப்பறைச் சூழல் குழு இயக்கவியல், கவன ஈர்ப்புக் காரணிகள், கவனக் குறைவிற்கான

Downloaded From www.nagaicollege.com

காரணங்கள், கற்றலுக்கு உதவும் வலுவூட்டிகள், கற்றலை மதிப்பிடும் வழிமுறைகள், வழிகாட்டுதல் மற்றும் அறிவுரை பகர்தல் போன்ற கற்றல் செயல்பாட்டினில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

ஆசிரியர்

கற்கும் சூழ்நிலையில் ஆசிரியரும் ஒரு முக்கிய காரணியாக விளங்குகிறார். ஆசிரியரது ஊக்கம், மனப்போராட்டங்கள், செயல்திறன்கள், மனப்பான்மை, மனநலம், தொழில்முறை வளர்ச்சி ஆகியனவும் கல்வி உளவியலின் வரம்புக்குள் அடங்குகின்றன. சிறந்த செயல்திறன் மிக்க ஆசிரியரின் ஆளுமைப் பண்புகள், ஆர்வங்கள், நாட்டங்கள், கற்பிக்கும் திறன்கள் ஆகியவற்றைப் பற்றி அறிவதன் மூலம், திறமையான ஆசிரியர்கள் உருவாகின்றனர். கீழ்க்கண்டவற்றை கல்வி உளவியலின் உட்பிரிவுகளாக குறிப்பிடுகின்றனர். அவைகள்:

குழந்தையும் அதன் வளர்ச்சியும்

குழந்தையின் உடல், மன, சமூக வளர்ச்சிகளும், கற்றலில் அவற்றின் தாக்கங்களும், (உ-ம்) குழந்தையின் மொழி வளர்ச்சி, சிந்தனை வளர்ச்சி, சமூக நெறிப்படுத்தும் முறைகள் ஆகியவை அக்குழந்தையின் கற்கும் திறனை வெகுவாகப் பாதிக்கின்றன.

கற்கும், கற்பிக்கும் முறைகள்

ஊக்கம், கற்கும் திறன், கற்பிக்கும் முறை, ஆளுமையை வளர்த்திடும் வழிமுறை, நுண்ணறிவை அளந்திடும் முறை, மாணவரது நுண்ணறிவு நிலைக்கேற்ப - கற்பித்தல் முறைகளைத் தேர்ந்தெடுத்தல், நினைவாற்றலைப் பாதிப்பவை, மறுப்பதற்கான (அல்லது) எதிர்ப்பதற்கான காரணங்கள் - போன்றவை இப்பிரிவில் அடங்கும்.

மாணாக்கரது வளர்ச்சியை மதிப்பிடுதல்

மாணக்கரை மதிப்பிடும் முறைகள், தனியொரு மாணவனை ஆய்வு செய்து பிரச்சனைகளுக்கான தீர்வைக் கண்டறிதல், கற்றல் குறைபாடுகளைக் கண்டறிந்து சரி செய்தல், வெவ்வேறு கற்பித்தல் முறைகளின் திறன்களையும் பயன்களையும் கணித்தல் போன்றவை இப்பிரிவின் கீழ் வரும்.

1.6 கல்வி உளவியலின் முக்கியத்துவம்

- மாணவர்களிடையே காணப்படும் பல்வேறு நிகழ்வுக்கூறு வேறுபாடுகளையும், அவற்றிற்கேற்ப மாணவரது தேவையை நிறைவு செய்யும் வண்ணம் கற்பித்தல் முறைகளை தேர்ந்தெடுக்கவும் ஆசிரியருக்கு, கல்வி உளவியல் துணை புரிகிறது.
- மாணவர் கற்றலில் சிறந்து விளங்க ஆசிரியர் கற்றல் கோட்பாடுகளையும், பல்வேறு கற்றல் வழிமுறைகளையும், அவற்றின் நிறை - குறைகளையும், கற்றலில் எதிர்படும் குறைகளையும், அவற்றை நீக்கும் வழிகளையும் அறிந்து வைத்திருக்க வேண்டும்
- மாணவர்களது பொறுப்பற்ற நடத்தையைக் கண்டறிந்து, அதற்கான அடிப்படைக் காரணங்களை, இனம் கண்டு, நீக்கி - ஆசிரியர் மாணாக்கர்களுடைய ஆளுமை வளர்ச்சியைச் செம்மைப்படுத்த, கல்வி உளவியல் உதவுகிறது
- வகுப்பறை ஒழுங்கை நிலை நாட்டவும், மாணவர்களது மனநலத்தை மேம்படுத்தவும், மாணவர்கள் தங்களது பிரச்சனைக்குத் தீர்வு காண வழிகாட்டவும், அறிவுரை பகிரவும், கல்வி உளவியல் ஆசிரியர்க்குப் பயன்படுகிறது
- மாணவர்களது வளர்ச்சி நிலைகளுக்கேற்பவும், அந்தந்த வளர்ச்சி நிலையிலுள்ள மாணவர்களின் கற்றல் போக்குகளுக்கேற்பவும், சமூகத் தேவைகளின் மாறுதல்களுக்கேற்பவும், பாடப்பொருளைத் தேர்ந்தெடுத்து வரிசைப்படுத்தவும் கல்வி உளவியல் ஆசிரியருக்கு உதவுகிறது
- மாணவரின் கல்வி அடைவை மதிப்பிட உளவியல் அடிப்படையிலான பல்வேறு சோதனைகளை செயல்படுத்தி அளவீடுகளைப் பெற்று பொருள் உணர ஆசிரியருக்கு கல்வி உளவியல் அறிவு பெரிதும் துணை புரிகிறது

Downloaded From www.nagaicollege.com

- மாணவர்களது மனப்பான்மைகளைச் சீர்படுத்தவும், குழு நடத்தையின் மூலம் மாணவர்களது நடத்தையை மேம்படுத்தி ஆளுமை வளர்ச்சிக்கு திட்டமிடும் வண்ணம், பல்வேறு பாடத் துணைச் செயல்கள் அமைத்திடவும் கல்வி உளவியல் வகுப்பறை ஆசிரியருக்குப் பெரிதும் துணை புரிகிறது.
- வகுப்பறைக் கற்பித்தலில் மாணவர்களுக்கு ஊக்கம் அளித்திடும் வழிமுறைகளையும், மாணவர்களின் கவனத்தை ஈர்க்கும் அக, புற - காரணிகளை அறிந்து அவற்றை பயன்படுத்தியும், கவனக்குறைவுக் காரணிகளை அறிந்து அவற்றை அகற்றியும் மாணவர்களது கவனத்தை பாடத்தில் நிலைநிறுத்தும் வழிமுறைகளை ஆசிரியர் அறிந்திருந்தால் மட்டுமே ஆசிரியர் தனது வகுப்பறைக் கற்பித்தலில் திறன் மிக்க ஆசிரியராகத் திகழ முடியும்
- மாணவர்களது நாட்டங்களை அறிந்து ஊக்குவிக்கவும், பரிசு, பாராட்டு, தண்டனைகளை முறையாகச் செயல்படுத்தி விரும்பத் தக்க கற்றலை மட்டும் வலுப்படுத்தும் வழிமுறைகளை ஆசிரியர் மேலும் அறிந்திருப்பார் என்றால், அவர் எல்லோராலும் பாராட்டப்படும் ஆசிரியராகத் திகழ்வார். எனவே சிறந்த ஆசிரியருக்குப் பாடப் பொருளின் தேர்ச்சியோடு, அதை மாணவர்களுக்கு முழுமையாக சேர்ப்பிக்க பொருத்தமான கற்பித்தல் முறைகளைக் கையாளும் திறன் பெற்றிருக்கவும் வேண்டும். இதற்குக் கல்வி உளவியல் பெரிதும் துணை புரிகிறது.

Downloaded From www.nagaicollege.com

அலகு 2 மனித வளர்ச்சியும் முன்னேற்றமும்: மனித வளர்ச்சியும், முன்னேற்றமும்
UNIT II - HUMAN GROWTH AND DEVELOPMENT

பிறந்தவுடன் சிறுகுழந்தை பார்ப்பதற்கு சிறியதாகவும் தனது தேவைகளைத்தானே நிறைவு செய்து கொள்ள முடியாத நிலையிலும் காணப்படுகிறது. ஆனால், தகுந்த சூழ்நிலையில் வளர்ச்சியடைந்து செயலியக்கத்திறனிலும், உளப்பண்புகளிலும் மேம்பாடு அடைந்து, முதிர்ச்சி அடைந்த முழு மனிதனாக மாறுகிறது. குழந்தையின் உடல் உறுப்புகள் வளர்ச்சியடைந்து முதிர்ச்சியடைந்த நிலையில், கற்றல் அல்லது பயிற்சியின் காரணமாக உடலுறுப்புகள் செயற்படுதலிலும், நடத்தைக் கோலங்களிலும் மிகுந்த முன்னேற்றம் ஏற்படுகிறது.

2.1 வளர்ச்சி வரையறு

ஓர் உயிரியின் உருப்பெருக்கம் அல்லது அளவு அதிகரித்தலை வளர்ச்சி (Growth) என்று கூறுகிறோம். ஒரு குழந்தை வளர்ச்சியடையும் போது அதன் உயரம், எடை, மொத்த கண பரிமாணம் ஆகியவை அதிகரிக்கின்றன. வளர்ச்சி என்பதன் கீழ் வரும் மாற்றங்களை புறவயத்தன்மையோடு உற்றுநோக்கவும், அளவிடவும் முடியும். முன்னேற்றம் (Development) அல்லது மேம்பாடு என்பதன் ஓர் உட்கூறே வளர்ச்சியாகும். முன்னேற்றம் என்பதன் அளவீட்டுக் கூறு (Quantitative measure) வளர்ச்சியாகும்.

2.2 முன்னேற்றம் வரையறு

ஓர் உயிரியின் உருவத்திலோ அல்லது அமைப்பிலோ ஏற்படும் மாற்றங்களையும், அது இயங்கும் விதத்தில் ஏற்படும் மேம்பாடுகளையும் ஒட்டு மொத்தமாகக் குறிப்பதே முன்னேற்றம் ஆகும். உயிரியின் செயல்பாட்டுத் தன்மையைக் குறிப்பதே முன்னேற்றம். வளர்ச்சி, முதிர்ச்சி கற்றல் இவற்றின் கூட்டு விளைவால் ஏற்படுவது முன்னேற்றம்.

2.3 வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் உள்ள வேறுபாடுகள்

வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் உள்ள வேறுபாடுகள்	
வளர்ச்சி	**முன்னேற்றம்**
வளர்ச்சி உருப்பெருக்கத்தால் விளைவதால் துல்லியமாக அதை அளக்க முடியும்.	உயிரியின் அமைப்பிலும், செயல்பாட்டிலும், ஏற்படும் மாற்றங்களால் அதன் இயங்கும் அமைப்பிலும் முன்னேற்றம் ஏற்படுகிறது.
வளர்ச்சியை புறவயத்தன்மையோடு உற்று நோக்கி துல்லியமாக அளக்க முடியும்.	முன்னேற்றம் இயக்கத்தோடு தொடர்புடையதால், துல்லியமாக அளவிட முடியாதது. நடத்தைக் கோலங்களை உற்று நோக்குவதன் மூலம் அதனைக் கணிக்க முடியும்.
வாழ்நாள் முழுவதும் வளர்ச்சி தொடர்வதில்லை குறிப்பிட்ட காலத்துடன் வளர்ச்சி நின்று போகின்றது.	முன்னேற்றம் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து ஏற்படக் கூடியது.
முன்னேற்றத்தின் ஓர் உட்கூறு தான் வளர்ச்சி.	முன்னேற்றம் சிக்கலான செயல்பாடாகும் பன்முகம் கொண்டது.
உடலின் அனைத்து பாகங்களிலும் வளர்ச்சி ஏற்படுகிறது.	உயிரியின் இயக்கத்தில் ஏற்படும் ஒட்டு மொத்த மாறுபாடே முன்னேற்றம் ஆகும்.
வளர்ச்சி விகிதம் வாழ்க்கையின் எல்லா பருவங்களிலும் ஒரே சீராக இருப்பதில்லை.	முன்னேற்ற விகிதம் வாழ்க்கையின் எல்லா பருவங்களிலும் ஒரே சீராக அமைவதில்லை
வளர்ச்சியில் நிகழ்வுக்கூறு வேற்றுமைகள்	பல்வகை முன்னேற்றங்களில், உடல், அறிவு, ஒழுக்கம்,

Downloaded From www.nagaicollege.com

காணப்படுகின்றன.	சமூக உணர்வு, மன எழுச்சி போன்றவற்றில் குழந்தைகள் ஒருவருக்கொருவர் மாறுபடுகின்றனர்.
வளர்ச்சி மரபினால் பெரிதும் தீர்மானிக்கப்படுகிறது.	கற்றல் அனுபவங்களும் முன்னேற்றத்தைத் தீர்மானிப்பதில் பெரும் பங்கு வகிக்கின்றன
வளர்ச்சி முன்னேற்றத்திற்கு வழிகோலாக அமையலாம், துணை புரியாமலும் போகலாம் .	ஒரு குறிப்பிட்ட வகை முன்னேற்றம், பிற வகை முன்னேற்றங்கள் ஏற்பட துணை புரிகின்றது. அதாவது பல்வகை முன்னேற்றங்களும் ஒருங்கிணைந்து காணப்படுகின்றன.

2.4 முதிர்ச்சியும், முன்னேற்றமும்

முதிர்ச்சியடைதல் என்னும் இயற்கையான செயல்பாடு, உயிரியின் உள்ளே நிகழும் வளர்ச்சியால் ஏற்படுவது, உயிரியல் மரபினால் பெறப்பட்ட பண்புகளும், இயல்புகளும் இணைந்து மலருவதே முதிர்ச்சியாகும். இது பயிற்சி, அனுபவம், கற்றல் இவற்றால் விளைவது அல்ல. (உ-ம்) புளியம்பிஞ்சு ஒன்று தினந்தோறும், உருப்பெருக்கம் பெற்று வளர்ச்சியடைகிறது. மீப்பெரும் வளர்ச்சி ஏற்பட்ட நிலையில் அதன் உருப்பெருக்கம் நின்று போகிறது. இதன் மீப்பெரும் வளர்ச்சி நிலைக்கு முதிர்ச்சி என்று பெயர். புளியமபிஞ்சு வளர்ச்சியடைந்து புளியங்காயாக மாறி முதிர்கிறது. முதிர்ச்சியடைந்த பின் அதன் வளர்ச்சி முடிவடைகிறது. ஆனால் அதன் தன்மையில் மாற்றம் (Development) நிகழத் தொடங்குகிறது. அதாவது, பழுக்கத் தொடங்குகிறது. முதிர்ந்த பழமாக மாறிய பின்பும், மாற்றம் அல்லது முன்னேற்றம் தொடர்ந்து ஏற்பட்டு உதிர ஆரம்பிக்கின்றது. எனவே, வளர்ச்சியின் பெரும் எல்லைக்குப் பெயர் முதிர்ச்சி. மனிதனின் பல்வகை இயக்கங்களிலும், செயல்பாடுகளிலும் ஏற்படும் முன்னேற்றம், முதிர்ச்சி, கற்றல் இவற்றின் விளைவால் ஏற்படுகிறது. ஆறு மாதக் குழந்தைக்கு எவ்வளவு பயிற்சியோ, கற்றல் அனுபவங்களோ கொடுத்தாலும் கூட அதனைப் பேசவைக்கவோ, நடக்க வைக்கவோ முடியாது. அதேபோன்று ஒரு குழந்தை மூன்று வயதை அடைந்த காரணத்தினாலயே அது தன் தாய்மொழியைப் பேச ஆரம்பிக்காது. பேசுவதற்கு சொல்லிக் கொடுத்தால் மட்டுமின்றி பேச்சு வராது. குழந்தை கேட்டுப் பழகும் மொழியையே பேசத் தொடங்குகிறது. முன்னேற்றம் ஏற்படுவதற்கும், கற்பித்தலைத் தொடங்குவதற்கும் முதிர்ச்சி எத்தனை அவசியமானது என்பதை விளக்கும் பல ஆய்வகச் சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன.

2.5 மரபும் சூழ்நிலையும்

2.5.1 மரபு

மரபு என்பது ஒருவரிடம் இடம்பெற்றுள்ள உடன் தோன்றிய தனித்த தன்மைகளின் ஒட்டுமொத்தமான பண்புகளைக் குறிக்கும்.

2.5.2 சூழ்நிலை (Environment)

சூழல் என்பது மனிதன் பெறும் மொத்த அனுபவங்கள் ஆகும். சூழல் என்பது வீடு, உணவு, உடை, இயந்திரம், நிலம், மரம், நீர்நிலை,ஆகாயம் முதலியவற்றை உள்ளடக்கியது.

2.5.3 தனிமனித வளர்ச்சியில் மரபு மற்றும் சூழ்நிலையின் பங்கு



Downloaded From
www.nagaicollege.com

பெற்றோரிடமிருந்து குழந்தைக்கு ஜீன்கள் (Genes) மூலம் உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் பண்புகள் பரிமாறப்படுகின்றன. உட்கருவினுள்ளே 46 குரோமோசோம்கள் அதாவது 23 ஜோடி குரோமோசோம்கள் காணப்படுகின்றன. இதில் ஒரு இணை 23 குரோமோசோம்கள் தாயிடமிருந்தும் (XX) மற்றொரு இணை 23 குரோமோசோம்கள் தந்தையிடமிருந்தும் (XY) கருவுக்குக் கிடைக்கிறது. ஜீன்கள் பெற்றோரிடமிருந்து குழந்தைக்குக் கடத்தப்படுகிறது. ஆதலால் மரபு என்பது உயிரியல் செயல்பாடுகளைக் கொண்டது. இதன் மூலம் முன்னோர்களிடமிருந்த பாம்பரைப் பண்புகள் பெற்றோர் மூலமாகக் குழந்தைக்குச் சென்றடைகிறது. இவ்வாறாக வந்த மரபுப் பண்புகள் சூழ்நிலைக்குத் தக்கவாறும், வாழ்க்கைக்கு ஏற்றவாறும் அவ்வப்போது மாறுபடுகிறது. சூழ்நிலையைப் பொறுத்தே தனிமனிதனின் பண்புகள் வெளிப்படுகிறது. மனிதனிடம் மறைந்திருக்கும் பண்புகள் சூழ்நிலைக்குத் தக்கவாறு வெளிப்படும். தாயின் கருவில் இருக்கும் பொழுது குழந்தை ஜீன்கள் மூலம் பெற்ற பண்புகள் சூழ்நிலைக்கேற்றவாறு வெளிப்படுகின்றன. தாய் கருவுரும் பொழுதே குழந்தை சூழ்நிலைக்கேற்றவாறு வளரும் பண்பினைப் பெறுகிறது. சூழ்நிலைக்கு ஏற்றவாறு கருவானது தாயிடமிருந்து தன் வளர்ச்சிக்கு ஏற்ற உணவுப் பொருளைப் பெற்றுக் கொள்கிறது. குழந்தை பிறந்த பிறகு அதனுடைய சூழ்நிலையை, உடல், மனரீதியாக மாற்றிக் கொள்ளும் தன்மையைப் பெறுகின்றது.

சூழ்நிலை (Physical Environment)

புறச்சூழ்நிலை என்பது வீட்டில் உள்ள சூழ்நிலை, பள்ளியில் ஏற்படும் சூழ்நிலைகள், நூலகங்கள், பொழுதுபோக்கு மன்றங்கள், ஆய்வகங்கள் - போன்றவற்றைப் பொருத்தே இருக்கும்.

மரபு நிலை (Social Heredity)

நம்முடைய சமூக மற்றும் கலாச்சாரப் பண்புகளை மாற்றாமல் புதிய முறைக்குக் கொண்டு செல்வதற்கு சமூக மரபுநிலை என்று பெயர்.

தனி மனிதனின் எல்லாவிதமான வளர்ச்சிக்கும் சமூக மரபுநிலை ஒரு வீரியமுள்ள காரணியாக உள்ளது. திருமண உறவின் மூலம் புடைய சமூக, கலாச்சார பண்பாடுகளை மரபணுக்களின் வழியாக அடுத்த தலைமுறைக்கு அளிக்கின்றோம். கருத்தரித்தலின் போது குரோம்சோம்களில் இரா ஜீன்கள் குழந்தைக்குக் கடத்தப்படுவதன் வாயிலாக இது நிகழ்கிறது. பரம்பரை பரம்பரையாக சில பண்புகள் இவ்வாறுதான் கடத்தப்படுகின்றன. சமூக மரபு உரிமை நிலை என்பது ஒரு குழுச் செயல் என்பதால் அந்த சமூகத்தினால் அடையப்பெற்ற சமூக நன்மதிப்புகளைப் பொறுத்தே இந்த வம்சாவழி அமைகின்றது. சமூகத்தில் தாழ்ந்த நிலையில் உள்ள வம்சாவழியினர் உயர் நிலையிலுள்ளோரைப் பின்பற்றுகின்றனர்.

சமூகச் சூழ்நிலை (Social Environment)

குழந்தையானது பிறந்தவுடனேயே சூழ்நிலைக்கு ஏற்றவாறு தன்னை மாற்றிக் கொள்கிறது. மரபும், சூழ்நிலையும் ஒரு தனி மனிதனின் ஆளுமைத் திறனை வளர்ப்பதற்குப் பெரிதும் உறுதுணையாக இருக்கின்றது. மரபும் சூழ்நிலையும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய காரணிகள். இக்காலத்தில் ஆசிரியர்களின் கற்றல் - கற்பித்தலுக்கு மரபும், சூழ்நிலையும் உறுதுணையாக உள்ளது.

மரபும், சூழ்நிலையும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய காரணிகள்

மரபும், சூழ்நிலையும் வேறல்ல. இவை இரண்டும் ஒன்றே. விதைக்கும், மண்ணிற்கும் உள்ள ஒற்றுமை போல மரபும், சூழ்நிலையும் ஒற்றுமையுடையது. இரண்டும் ஒரே கருத்தினைக் குறிக்கின்றது. மரபு என்பதை களிமண்ணாகக் கொண்டால், அதனால் உருவாக்கப்படும் உருவம் சூழ்நிலையைக் குறிக்கிறது.

Downloaded From www.nagaicollege.com

தனி மனிதன் மரபினாலும், சூழ்நிலையாலும் உருவாக்கப்படுகிறான் மரபின் முக்கிய வேலை ஆளுமைத் திறனை வளர்ப்பதேயாகும். அதேபோல் சூழ்நிலையும் ஒரு மனிதனை நல்ல மனிதனாக உருவாக்குவதில் முக்கியப் பணியாற்றுகிறது. மரபுக்கும், சூழ்நிலைக்கும் உள்ள தொடர்பை சேகரிப்பது மட்டுமில்லாமல் பெருக்குவதும் அவசியமாகும். தனிமனிதன் மரபுக்குச் சமமாக, சூழ்நிலை மூலமாகத் தன் திறமையை வளர்த்துக் கொள்கிறான்.

2.6 வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தின் அடிப்படை கோட்பாடுகள்

1. வளர்ச்சியானது மரபு, சுற்றுப்புறச் சூழ்நிலை இவற்றின் விளைவாகும்

குழந்தைகள் தன் பெற்றோர்களிடமிருந்து அதிகமான பரம்பரைப் பண்புகளையும், உடல் அமைப்பையும் பெறுகின்றனர். சுற்றுப்புறச் சூழ்நிலையால் மனிதன் அதிகம் பாதிக்கப்படுகின்றான். ஒரு தனிமனிதனின் அனைத்துப் பண்புகளும் மரபு நிலையாலும், சூழ்நிலையாலும் விளைவதே ஆகும்.

2. முன்னேற்றம் ஒரு தொடர்ச்சியான செயல்

மனித வாழ்க்கை பல நிலைகளாகப் பகுக்கப்பட்டு உள்ளது. அவை குழந்தை ப்பருவம், பிள்ளைப்பருவம், குமரப்பருவம் முதலியன. குழந்தைகளுக்குக் கல்வி பயிற்றுவிப்பதற்காகவே இப்பருவமானது பிரிக்கப்பட்டுள்ளது எனலாம். ஒருவருடைய வளர்ச்சியானது ஒரு பருவத்திலிருந்து மற்றொரு பருவத்திற்கு செல்வதை அதாவது வளர்ச்சி அடைவதைத் தடுக்க முடியாத வளர்ச்சியானது தொடர்ந்து மெதுவாக, சீராக நடைபெறுகிறது.

3. முன்னேற்றம் பொதுவானவற்றிலிருந்து குறிப்பிட்டவற்றிக்கு செல்லும்

பொதுவானவற்றிலிருந்து முன்னேற்றம் செல்லும்போது செயல்திறன் மேம்பாடு ஏற்படுகின்றது.இந்த வளர்ச்சியானது கூட்டு செயலிலிருந்து பலதரப்பட்ட செயல்களை செய்யும் பொழுது ஏற்படும் அதேபோல் குழந்தை சிறிது சிறிதாக பல நிலைகளைக் கடந்துதான் முறையாக நடக்கக் கற்றுக்கொள்கிறது.

4. முன்னேற்றம் என்பது ஒருங்கிணைந்த செயல்கள்

ஒரு மனிதனின் செயல்திறன் மற்றும் மேம்பாட்டுச் செயல்கள் குறிப்பிட்ட வரிசைக்கிரமமாக நிகழ்கிறது. உதாரணம்: மனிதனின் வளர்ச்சி நிலைகள்.

5. உடலின் பல்வேறு பகுதிகள் வெவ்வேறு விகிதங்களில் வளசர்ச்சியடைதல்

மனித உடலின் அனைத்து பாகங்களும் ஒரே விகிதத்தில் வளர்ச்சி அடைவதில்லை. ஆறு வயதிலேயே மூளை முழு வளர்ச்சி அடைகின்றது. ஆக்கச்செயல், கற்பனைத்திறன் பிள்ளைப் பருவத்தில் சுமாராக வளர்ச்சி அடைகிறது. இளமைப்பருவத்தில் அது மிகவும் வேகமாகக் காணப்படுகிறது. முன்னேற்றம் என்பது வெவ்வேறு செயல் திறன்களுக்கும் மேம்பாட்டிற்கும் இடையே காணப்படுகின்ற உள் தொடர்பாகும். குழந்தைகளின் மனவெழுச்சி வளர்ச்சியானது குழந்தைப் பருவத்தில் சராசரியை விட அதிகம் காணப்படும். சமூகத்திறன், மனப்பான்மைகள் அவரிடம் சராசரி அளவை விட அதிகம் காணப்படும். அறிவு வளர்ச்சி பாதிக்கப்பட்ட குழந்தைகள் சராசரிக் குழந்தைகளை விட சிறிய உருவம் உடையவர்களாகவே இருப்பார்கள். முன்னேற்றம் என்பது ஒருங்கிணைந்த செயல்திறனாகும். செயல்திறன் மேம்பாட்டுத் திறன் என்பது மேலும் மேலும் செயல் திறன்களை சேகரித்துக் கொண்டே செல்வது என்பதைக் குறிக்கின்றது. முன்னேற்றம் வாழ்க்கையில் தொடர்ந்து மாற்றத்தை ஏற்படுத்தக்கூடியதாகும். செயல்திறன் மேம்பாட்டு முறையானது தொடர்ந்து நன்மை பயக்கக் கூடியது.

Downloaded From www.nagaicollege.com

அலகு 3 வளர்ச்சியின் பரிமாணம்
UNIT III - DIMENSIONS OF DEVELOPMENT

3.1 வளர்ச்சியின் பரிமாணம்

உடல் வளர்ச்சி (Physical Development)

உடல் வளர்ச்சியில் உடற்கூறு வளர்ச்சி (Anatomical Growth), உடலியல் வளர்ச்சி (Physiological Growth) என இரு கூறுகள் உள்ளன. எலும்புக் கூட்டின் வளர்ச்சி, எலும்பின் தன்மையில் வளர்ச்சி, உடலின் உயரம், எடை ஆகியவற்றில் மாற்றம் போன்றவை, உடற்கூறு வளர்ச்சியாகும். உடல் எலும்புகளின் முதிர்ச்சியும், நிலையான பற்கள் (Permanent Teeth) முளைப்பதும் உடற்கூறு வளர்ச்சியை காட்டும் சின்னங்களாகக் கருதப்படுகின்றன. உடலில் பல்வேறு மண்டலங்களான பகுதிகளான இரத்த ஓட்டமண்டலம், நரம்பு மண்டலம், சுவாச மண்டலம், தசை மண்டலம் தொகுதி போன்றவற்றில் எழும் மாற்றங்கள் உடலியல் வளர்ச்சி எனப்படும்.

அறிதிறன் வளர்ச்சி (Cognitive Development)

இது அறிவுத்திறனின் பல்வேறு கூறுகளான கற்பனை செய்தல், சிந்தித்தல், ஆராய்ந்தறிதல், புலன்காட்சி, நிலைவிலிருத்தல், வேறுபடுத்துதல், பொதுமைப்படுத்துதல், தொடர்பு படுத்துதல் ஆகியவற்றில் ஏற்படும் மேம்பாடுகளையும், அதனால் விளையும் பொருளறிவுப் பெருக்கத்தையும் குறிக்கின்றது.

மனவெழுச்சி வளர்ச்சி (Emotional Development)

குழந்தை பிறப்பின்போது இருக்கும் மனவெழுச்சியானது பிறப்பிலிருந்து படிப்படியான வளர்ச்சி மூலம் பயம், கோபம், மகிழ்ச்சி, துக்கம், அன்பு, கருணை, அருவறுப்பு போன்ற பல்வேறு மனவெழுச்சிகள் அமையப் பெற்ற இவற்றை பொருத்தமான நேரத்தில் பொருத்தமான வகையில் வெளிப்படுத்தக்கற்று, உணர்ச்சிகளை கட்டுக்குள் வைத்திருக்கும் மனவெழுச்சி முதிர்ச்சிநிலையை அடைதலே மனவெழுச்சி வளர்ச்சி ஆகும்.

ஒழுக்க வளர்ச்சி (Moral Development)

சமூக அறநெறிகளை அறிந்து அதன்படி நடத்தல், ஒழுக்க வளர்ச்சி எனப்படும். சரி, தவறு என்று பிரித்தறியும் திறனைப் பெற்று தனக்கென ஒழுக்கக் கோட்பாட்டை அமைத்துக் கொள்வதையே ஒழுக்க வளர்ச்சி குறிப்பிடுகிறது. சமூக வளர்ச்சியும், ஒழுக்க வளர்ச்சியும் இணைந்தவை. சமூக நடத்தை அறநெறிகளின் அடிப்படையில் அமைந்திருந்தால் அதன் பயனை அதிகரிக்க வல்லது. பல சமூகப் பண்புகள் சிறப்பான ஒழுக்கப் பண்புகளாகவும் உள்ளன. முழுமையான சமூகவியல்பு பெற்றவன் நல்லொழுக்கம் உடையவனாகவும் இருத்தல் வேண்டும். அறப்பண்புகளையும், ஒழுக்க மதிப்புகளையும் கல்வி வலியுறுத்த வேண்டும்.

3.2 வளர்ச்சி நிலைகள்

குழந்தை பிறந்ததிலிருந்து பல வளர்ச்சி நிலைகளைக் காண்கிறது. **ஹர்லாக்** (Hurlock) என்பவர் தனது **வளர்ச்சி சார் உளவியல்** (Development Psychology) என்னும் நூலில், மனிதனின் வாழ்க்கைக் காலத்தை, ஒன்பது பருவ வளர்ச்சி நிலைகளாகப் பிரித்துக் காட்டுகிறார்.

3.2.1 பருவ வளர்ச்சி நிலைகள்

- கருவளர்ப்பருவம் (Pre-natal); கருவுற்ற நாளிலிருந்து பிறப்பு வரை
- சிசுப்பருவம் (Infancy) பிறந்ததிலிருந்து 2ம் மாதங்கள் முடிய
- தவழ்நடைப் பருவம் (Babyhood) 3-ம் மாதத்திலிருந்து இரண்டு ஆண்டுகள் முடியும் வரை

Downloaded From www.nagaicollege.com

- இளங்குழந்தைப் பருவம் (Early Childhood): மூன்றிலிருந்து 6 வயது வரை
- பிள்ளைப்பருவம் (Later Childhood): 7 முதல் 12 வயது வரை
- குமரப்பருவம் (Adolescence); 12 முதல் 18 வயது வரை
- வயது வந்தோர் பருவம் (Early Adulthood) 19 முதல் 40 வயது வரை
- நடுவயதுப் பருவம் (Middle age) 40 முதல் 60 வயது வரை
- முதிர் பருவம் (Old age); 60 முதல் இறக்கும் வரை

இளம் குழந்தைப் பருவம்

இளங்குழந்தைப் பருவம் பிரச்சினைக்குரிய வயது என்றும், துருவி ஆராயும் வயது என்றும், கேள்விகள் கேட்டுத் துளைக்கும் வயது என்றும் கல்வியாளர்களால் வர்ணிக்கப்படுகிறது.

உடல் வளர்ச்சி

இப்பருவத்தில் நிகழும் உடல் வளர்ச்சியின் வேகம், தவழ் நடைப் பருவ வளர்ச்சியின் வேகத்தைவிட மெதுவாக நிகழ்கிறது. தவழ்நடைப் பருவத்தில் முறைப்படுத்தப்பட்ட குழந்தைகளின் பழக்க வழக்கங்களான தூங்குதல், பசித்து உண்ணுதல், தாகத்திற்கு நீர் அருந்துதல், சிறுநீர், மலம் கழித்தல் ஆகியன மேலும் முறைப்படுத்தப்படுகின்றன. இப்பருவத்தில் கை, கால், பேச்சு உறுப்புகள் ஆகியன முழுவளர்ச்சி அடைவதால் இவற்றைக் குழந்தைகள் முழுத் திறனுடன் பயன்படுத்தத் தொடங்குகின்றனர். இளங்குழந்தைகளின் பேசும் தன்மையும், பேச்சின் அளவும், தன் வயதையொத்த பிறகுழந்தைகளோடும், வயது வந்தோர்களோடும் இணக்கமான நடத்தையை வளர்த்துக் கொள்வதற்குப் பெரிதும் உதவுகின்றன.

மனவெழுச்சி வளர்ச்சி

தவழ்நடைப் பருவக் குழந்தைகளைப் போலவே இளங்குழந்தைகளும் உணர்ச்சிகளை வெளிப்படுத்துகின்றனர். இருப்பினும், தவழ்நடைப் பருவக் குழந்தைகளுக்குத் தாங்கள் வெளிப்படுத்தும் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தத் தெரிவதில்லை. ஆனால் இளங்குழந்தைகளும் வளர வளர தாங்கள் வெளிப்படுத்தும் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தத் தெரிந்து கொள்கின்றனர். சிறு குழந்தைகள் வளர வளர அவர்களிடம் புதிய ஆர்வங்களும் (Interests) வளர்கின்றன. எடுத்துக்காட்டாக, ஆடைகள், விளையாட்டுப்பொருள்கள், உணவு வகைகள் ஆகியவற்றினைப் பெறுவதில் குழந்தைகள் ஆர்வத்துடன் வளர்கின்றனர்.

சமூக வளர்ச்சி

இப்பருவத்தில் பெரியோர் கொண்டுள்ள எதிர்பார்ப்புகளுக்குப் புறம்பாகவே இளங்குழந்தைகள் நடந்து கொள்கின்றனர். ஆகவே பெரியோரின் கருத்துப்படி, இளங்குழந்தைகளின் நடத்தைகள், சமூக இயல்புடையதாகக் (Social) கருதப்படாமல் சமூக இயல்பற்றதாகவே (unsocial) கருதப்படுகிறது. எடுத்துக்காட்டாக, எதிர்மறையான நடத்தை, தாக்குதலுணர்வு, தன்னலம், மாற்றுப் பாலினக் குழந்தைகளை வெறுப்புணர்வோடு நோக்கத் தொடங்குதல் போன்ற சமூக இயல்பற்ற நடத்தைகள் இப்பருவத்தில் காணப்படுகின்றன. இவ்வயதில் பொம்மை விளையாட்டு, நடித்துக் காட்டுதல், பல பாகங்களை வைத்து ஒரு பொருளை உருவாக்குதல், போட்டி வைத்து விளையாடுதல், வானொலி, திரைப்படம், தொலைக்காட்சி, கணிப்பொறி, செல்லிடைப் பேசி ஆகியவற்றில் வழங்கப்படும் விளையாட்டு நிகழ்ச்சிகளை மிகுந்த ஆர்வத்தோடு செய்தல், பார்க்கவும், கேட்கவும் ஆகியனவற்றைக் குழந்தைகள் விரும்பிச் செய்கின்றன.

Downloaded From www.nagaicollege.com

அறிவுத் திறன் வளர்ச்சி

இப்பருவத்தில் உயிர் வாழ்தல், இறப்பு, உடல் பாகங்களின் செயல்கள், தூரம், எடை, எண்கள், காலம், பாலினத்திற்குரிய செயல்கள் (Sex roles), சரி, தவறு, அழகு, சித்திரக் கதைகள் போன்ற பொதுவான கருத்துக்கள் குழந்தைகளிடம் வளர்கின்றன.

3.2.2 பிள்ளைப்பருவம்

ஒரு குழந்தையின் 6 வயதிலிருந்து பாலுறுப்புகள் முதிர்ச்சியடையும் வரையுள்ள பருவம் பிள்ளைப் பருவம் ஆகும். இப்பருவத்தைப் பள்ளிப் பருவம் எனக் கல்வியியலாளர் கூறுவர். இதை விளையாட்டுப் பருவம் அல்லது கூட்டாளிப் பருவம் என உளவியலார் கூறுவர். இதை முதிர் குழந்தைப் பருவம் எனவும் கூறலாம்.

உடல் வளர்ச்சி

இப்பருவத்தில், பிள்ளைகளிடம் மெதுவான, சீரான வளர்தல் இருக்கும். இவர்கள் உடல்சார்ந்த பல திறன்களைப் பெறுகின்றனர். பேச்சுத் திறனில் முன்னேற்றம் ஏற்படுகிறது. இவற்றின் வளர்ச்சியால் பிள்ளைகளிடம் தன்னிணக்கமும், சமூக இணக்கமும் வளர்கின்றன.

மனவெழுச்சி வளர்ச்சி

இப்பருவத்தில், ஆண் பிள்ளைகளும், பெண் பிள்ளைகளும் பெற்றோர், ஆசிரியர், நண்பர்கள் போன்றோரின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்றவாறு தங்களின் மனவெழுச்சிகளை வெளிப்படுத்தக் கற்றுக் கொண்டு வருகின்றனர். மிகுதியான மனவெழுச்சி தோன்றும் நிலையிலும், அதைச் சமூக எதிர்பார்ப்புகளுக்கு உகந்த வகையில் வெளிப்படுத்துகின்றனர்.

சமூக வளர்ச்சி

இப்பருவத்தில், ஒரு குழந்தையின் சமூக வளர்ச்சியில், நண்பர்களின் (Unsocial) பங்கு முக்கியத்துவம் பெறுகிறது. ஒவ்வொரு ஆண் அல்லது பெண் பிள்ளையும் ஏதாவது ஒரு நட்புக் குழுவில் இடம் பெறுகின்றனர். இப்பருவப் பிள்ளைகளின் சமூகவியல்புகள் நட்புக் குழுவால் பெரிதும் வளர்ச்சியடைகின்றன. இப்பருவத்திலுள்ளோர் தங்களுக்கு மன நிறைவளிக்கும் விளையாட்டுகளிலும், பெரியவர்களிடமிருந்து பாரட்டுதல் கிடைக்கும் விளையாட்டுகளிலும் மட்டும் சேர்கின்றனர். இப்பருவப் பிள்ளைகள் பலரோடு பழகும் வாய்ப்புகள் அதிகரித்திருப்பதால், அவர்களின் ஆர்வங்களும் திறன்களும் அதிகரிக்கின்றன.

ஆளுமை வளர்ச்சி

இப்பருவப் பிள்ளைகள் நல்லது கெட்டது எது? என்பதை நன்கு தெரிந்து கொண்டே வீடு, பள்ளி இவற்றையொட்டிய சூழல்களில் தவறான நடத்தைகளில் ஈடுபடுகின்றனர். இதற்கு முதல் காரணம், தனது கூட்டாளிகளுடைய நல்லெண்ணத்தையும், பண்புகளையும் பெறுவது ஆகும். இரண்டாவது, பெரியவர்கள் விதித்துள்ள அதிகாரமும், கட்டுப்பாடு இவற்றிலிருந்து சுதந்திரம் பெறும் நோக்கு ஆகும். இப்பருவப் பிள்ளைகளிடம் ஆர்வம் பெருகுகிறது. அரசியல், திரைப்படம், ஆடைகள், மதம், உடலுறுப்புகள், பாலினம், எதிர்காலத் தொழில்கள், தகுதிக் குறியீடுகள் (Status Symbols) போன்றவற்றில் மிகுந்த ஆர்வம் காட்டுகின்றனர். பெரியவர்கள் விதித்துள்ள விதிகள், கட்டுப்பாடுகள் போன்றவற்றை மறுக்கத் தொடங்குகின்றனர்.

சுய மேலாண்மை வளர்ச்சி

குடும்பத்தில் நல்லுறவை வளர்க்காத பிள்ளைகள், பள்ளிச் செயல்களிலும், பழகுவதிலும் இணக்கமற்ற நடத்தையை வெளிப்படுத்துகின்றனர். இதனால், இவர்களின் சுயமேலாண்மை (Self-

Downloaded From www.nagaicollege.com

Concept) பெரிதும் பாதிக்கப்படுகிறது. இப்பருவத்தில் அதிகமாக உண்ணுவதால், உடல் எடைக் கூடிக் (முடிநளவைல) காணப்படும். இதனால் இவர்களுக்குத் தங்களைப் பற்றிய தாழ்வு மனப்பான்மை எழுவதோடு, அவர்களின் சுயகருத்து பாதிக்கப்படுகிறது. பெண் பிள்ளைகளைப் போல் உடற்கட்டு அமைந்துவிட்ட பையன்களும், ஆண் பிள்ளைகள் போல் உடற்கட்டு வாய்ந்து விட்ட பெண் பிள்ளைகளும், நண்பர்களின் கேலிக்கும் ஆளாகின்றனர். எனவே, இவர்களிடம் இணக்கமற்ற நடத்தை தோன்றுவதோடு, அவர்களின் சுயமேலாண்மையும் பாதிக்கப்படுகிறது. பள்ளிப் பருவத்தில் ஒவ்வொரு. பையனும், பிள்ளையும் பெறுகின்ற சமூக ஏற்புடைமையே அவர்களின் மகிழ்ச்சி அல்லது சோகத்தை நிச்சயிப்பதால், ஆசிரியர்கள் பிள்ளைப் பருவத்தில் குறைபாடுடைய மாணவ, மாணவிகளையும் பரிவோடும், அன்போடும் வழிநடத்திச் செல்லுதல் அவசியம்.

குமரப்பருவத்தில் ஏற்படும் உடல் வளர்ச்சி

குமரப்பருவத்தில் ஏற்படும் உடல் வளர்ச்சி, உடலில் திடீர் வளர்ச்சியாகத் (Adolescent Sport) தோன்றுவதால் அப்பருவத்திலுள்ள மாணவர், மாணவிகளின் உடல் வளர்ச்சியில் மூன்று முக்கிய மாற்றங்கள் ஏற்படுகின்றன. அவை

உடல் தோற்றம்

குமரப்பருவத்தில் உடல் பருமன், எடை ஆகியன வளர்ச்சியடைகின்றன. உடற்கட்டு குழந்தைப் பருவத்திலிருந்து இளையோர் பருவத் தோற்றத்திற்கு மாறுதலடைகிறது.

முதனிலைப் பாலினப் பண்புகள்

குமரப்பருவத்தின் தொடக்கமே, முதனிலைப் பாலினப் பண்புகள் (Primary Sex Characteristics) முதிர்ச்சியுடன் தொடங்குகிறது. ஆண்களின் பாலின் உறுப்பு, விந்துகளை வெளிப்படுத்தும் வளர்ச்சி பெறுகிறது. பெண்கள் பூப்பெய்துகின்றனர்.

இரண்டாம் நிலைப்பாலினப் பண்புகள்

குமரப்பருவ பெண்களுக்கு மார்பகங்கள் வளர்ச்சியடைகின்றன. இடுப்பு பெரிதாகிறது, முகத்திலும் பிற இடங்களிலும் அந்தரங்கப் பருவ முடிகள் (Pubic-hairs) முளைக்கத் தொடங்குகின்றன. குரல் முழுமையும், இனிமையும் அடைகிறது. குமரப்பருவ ஆண்களுக்கு மீசை அரும்புகிறது. அவர்களின் முகத்திலும் பிற இடங்களிலும் பருவ முடிகள் முளைக்கத் தொடங்குகின்றன. இப்பருவத்தில் ஆண்களின் பாலின உறுப்பு பருமனாகத் தொடங்குகிறது. குரல் இயல்பாகிறது, முதலில் கரடு, முரடாகிப் பின்னர் சிறிது, சிறிதாக இயல்பாகிறது.

உடல் வளர்ச்சியால் விளையும் பிரச்சனைகள் குமரப்பருவத்தில் ஏற்படும் உடல் வளர்ச்சியால் மாணவ, மாணவியரிடம் நான்கு முக்கிய உளப்பிரச்சினைகள் எழுகின்றன. அவை :

உடல் தோற்றம் பிரச்சினை

குமரப்பருவத்தில் மாணவர்களிடமும், மாணவிகளிடமும் உடற்கட்டும், பாலின உறுப்புகளும் வெளிப்படையாக வளர்ச்சி பெறுவதால், அவர்கள் தங்களைப் பற்றிய தெளிவான உடல் தோற்றப் பிம்பத்தைப் (Body image) பெறுகின்றனர். இவர்களின் உடல் தோற்றப் பிம்பமே பெருங்கவலை தரக்கூடியதாக அமைந்துவிடுகிறது. குமரப்பருவத்தினருள், பலர் தங்களின் பொருந்தாத தோற்றத்தைக் (Clumsiness and Awkawardness) கண்டு மகிழ்ச்சி கொள்வதில்லை. இதனால் விளையும் மன உணர்வுகள், குமரப்பருவ மாணவர்களின் கற்றலையும், இணக்கமான நடத்தையையும் பாதிக்கின்றது. குமரப்பருவ மாணவர்கள் தங்களின் முகத்தில் தோன்றுகின்ற பருக்களை நினைத்தும், உடலில் காணப்படும் தழும்புகள், கரும்புள்ளிகள் இவற்றை நினைத்தும் மிகுந்த கவலை கொள்கின்றனர்.குமரப்பருவப் பெண்கள் மிகவும் வளர்ந்தோர், மிகவும் குட்டையாகவோ, மிகவும்

Downloaded From
www.nagaicollege.com

மெலிந்தோ காணப்படும் தோற்றத்திற்கு வருந்துகின்றனர். தங்களின் மார்பகம் மிகவும் பெரிதாக வளர்ச்சியடைந்ததற்காகவோ, தகுந்த அளவு வளர்ச்சி இல்லாததற்காகவோ கவலை கொள்கின்றனர். பருவமடைதலில் பிரச்சினை, பருவமடைதலில் சில மாணவ, மாணவிகள் முந்துகின்றனர்.

முந்திப் பருவமடைதல் (Early Maturing)

தன் வகுப்பு நண்பர்களைவிட வேகமாகப் பருவமடையும் மாணவ, மாணவிகள் சில சிக்கல்களைச் சந்திக்கின்றனர். அவர்களுடன் பழகுவதற்கு மற்ற மாணவர்கள் தயக்கம் காட்டுகின்றனர். ஏனெனில், இவர்கள் ஆசிரியர்களிடம் அவ்வப்போது எதிர்ப்புகளை வெளிப்படுத்துகின்றனர். சீக்கிரமே பருவமடையும் மாணவிகளும் சில முக்கியமான சிக்கல்களைச் சந்திக்கின்றனர். அதனால் அவர்கள் கவலையும் குழப்பமும் அடைகின்றனர். இத்தகைய மாணவிகள் பயம் நீங்கித் தெளிவும், நம்பிக்கையும் பெறுதல் அவசியம். இத்தருணத்தில் உள்ளாடைகள் அணிவதன் அவசியம் பற்றியும், பெண்களுக்குரிய உடல் தூய்மை (Feminine Hygiene) பற்றியும் மாணவிகளுக்கு வழிகாட்டுதல் தேவைப்படுகின்றன.

பிந்திப் பருவமடைதல் (Late Maturing)

பிந்திப் பருவமடையும் மாணவர்களும், மாணவிகளும் சில உளநிலைச் சிக்கல்களைச் சந்திக்கின்றனர். பிந்திப் பருவமடையும் மாணவ மாணவியர் அவர்களின் நண்பர்கள் வட்டத்தில் (Peer group) கேலி செய்யப்படுகின்றனர். சில சமயங்களில் அவர்கள் நண்பர்கள் வட்டத்திலிருந்து ஒதுக்கப்படுகின்றனர். இதனால் பிந்திப் பருவமடையும் மாணவிகள் தங்களைப் பற்றிக்கொண்டுள்ள சுயகருத்து (Self-Concept) மிகவும் பாதிக்கப்படுகிறது. இது அம்மாணவிகளின் இயல்பான சமூக வளர்ச்சிக்குத் தடையாக அமைகிறது. இன்னும் பருவமடையாத மாணவிகள் சிலர் தன்னோடு பயிலும் மற்றவர்கள் பருவமடைகின்றதைக் கேள்விப்படுகையில், தங்களுக்கு இயல்பான வளர்ச்சி இல்லையோ என அஞ்சுகின்றனர். மற்ற அனைவரும் பருவமடைந்தபோது, தான் மட்டும் பருவமடையாத நிலையிலிருக்கும் மாணவிக்கு, தாம் பருவமே அடையாமலே போய்விடுவோமோ என்ற பயம் தொற்றிக் கொள்கிறது.

பாலினப் பொருத்தமற்ற உடற்கட்டு

ஆண்களுக்குரிய அல்லது பெண்களுக்குரிய உடலமைப்புகளைப் பெறாத குமரப்பருவ மாணவ, மாணவிகள் மிகுந்த கவலை அடைகின்றனர். பெண்களைப் போன்ற உடலமைப்பு கொண்ட மாணவர், நண்பர்கள் வட்டத்தில் கேலிக்குள்ளாகிறார். அதே போல் ஆண்களைப் போன்று உடலமைப்புக் கொண்ட மாணவியும் கேலிக்குள்ளாகிறார்.

ஆண், பெண் உறவில் சமூக இணக்கமற்ற நடத்தை

குமரப்பருவ மாணவர்களிடமும், மாணவிகளிடமும், உடல் வளர்ச்சியில் புதிய மாற்றங்கள் ஏற்பட்டு விட்டதால், அவர்கள் நெருங்கிப் பழகுவதற்குக் கூச்சமும், வெட்கமும் அடைகின்றனர். இதனால் மாணவர்களும், மாணவிகளும் பழகுவதற்கு அஞ்சித் தனியே ஒதுங்கியும் செல்கின்றனர். பள்ளிச்சூழலில் குமரப்பருவ மாணவர்களும், மாணவிகளும் ஒருவருக்கொருவர் பேசிப் பழகும் சமூகப் பண்பினைப் பெறத்தவறினால், இருவரிடமும் பிற்காலத்தில் சமூக இணக்கமற்ற நடத்தை தோன்றிவிடும். உண்மை வாழ்க்கையில் மாற்றுப் பாலினத்தாரோடு (Opposite Sex) பேசி உறவாடும் சமூக வளர்ச்சியை இழக்க நேரிடும். எனவே, ஆசிரியர் பள்ளியில் குமரப்பருவமாணவர்களும், மாணவிகளும் சேர்ந்து பழகும் வகையில், கலந்துரையாடுதல், நாடகம் நடித்தல்,பள்ளி விழாக்களை நடத்துதல் போன்ற வாய்ப்புகளை ஏற்படுத்தித் தர வேண்டும். ஒரு மாணவரும், மாணவியும் பேசினால், அதைத் தவறான கண்ணோட்டத்தோடு பார்த்து ஆசிரியர் தண்டித்தல் கூடாது.

Downloaded From www.nagaicollege.com

குமரப்பருவ பிரச்சனைகள்

குமரப்பருவத்தில் மாணவ, மாணவிகளும் பல பிரச்சினைகளைச் சந்திக்கின்றனர். குமரப்பருவத்தினரின் பிரச்சினைகளைச் சேகரித்து ஐந்து பகுதிகளாகப் பிரித்து தந்துள்ளனர். அவை:

- உடல் சார்ந்த பிரச்சினைகள்
- தன் எடை அதிகரிக்க அல்லது குறைய வேண்டும்.
- தனது உருவத்தை அழகாக்கிட வேண்டும்.
- தனது உடற்கட்டையும், உடலமைப்பையும் முன்னேற்ற வேண்டும்.
- முகத்திலுள்ள பருக்களைப் போக்க வேண்டும்.

பள்ளிசார்ந்த பிரச்சினைகள்

- எந்தப் பாடங்களை (Course) எடுத்துப் படித்தால் பயன் கிடைக்கும்?
- செய்து கற்றலுக்குரிய அனுபவங்கள் பள்ளியில் இல்லாமலிருத்தல்
- நாம் படிக்கும் பாடங்களுக்கு உள்ள மதிப்பு.
- படிப்பில் கவனம் செலுத்த முடியாத நிலை.

பிறர் தொடர்பான பிரச்சினைகள்

- மற்றவர்கள் என்னை அதிகம் விரும்ப வேண்டும்.
- எனக்கு நிறைய நண்பர்கள் வேண்டும்.
- நான் அதிகம் பிரபலமாக (Popular) வேண்டும்.
- கவிதை, கதை எழுத வேண்டும் அல்லது நடனம் பழக வேண்டும்.

தனது சொந்தப் பிரச்சினைகள்

- என் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தக் கஷ்டப்படுகிறேன்.
- சின்ன விசயங்களுக்காகக் கவலை அடைகிறேன்.
- குற்ற உணர்வால் வாடுகிறேன்.
- என்மேல் எனக்கு நம்பிக்கையில்லை.
- எனக்குத் தோழி அல்லது தோழன் இல்லை.

தொழில்சார்ந்த பிரச்சினைகள்

- நான் எந்த தொழிலுக்குப் பொருத்தம்.
- எனது உண்மையான ஆர்வங்கள்.
- என்னிடமுள்ள திறமைகள்.
- கல்லூரிப்படிப்பைத் தொடங்க வேண்டும்

ஆசிரியரின் பொறுப்புகள் மாணவர்களிடம் தோன்றும் குமரப்பருவ சிக்கல்களைக் களைவதில், ஆசிரியருக்குச் சில பொறுப்புகள் உள்ளன. அவை:

புரிந்து கொள்ளல்

ஒரு வகுப்பில் உடல் மெலிந்த மாணவர்களும், உடல் பருமனான மாணவர்களும் இருக்கலாம். மிகக் குட்டையானவர்களும், மிகவும் வளர்ந்தவர்களும் இருக்கலாம். சீக்கிரமே பருவமடைந்தவர்களும், இன்னும் பருவம் அடையாதவர்களும் இருக்கலாம். ஆசிரியர் அவர்களைப் புரிந்து நடத்துதல் வேண்டும்.

Downloaded From www.nagaicollege.com

நல்ல மனப்பான்மையை வளர்த்தல்

வெவ்வேறு வேகத்தில் மாணவர்கள் பருவமடைவதும், அவர்களுக்கு வெவ்வேறு உடற்தோற்றங்கள் இருப்பதும் உலக இயல்பே என ஆசிரியர் அறிவுரை கூறி நல்ல மனப்பான்மையை மாணவரிடம் ஏற்படுத்துதல் வேண்டும்.

ஏற்றுக் கொள்ளுதல்

குமரப்பருவத்தில் உளப் பிரச்சினைகளுள்ள மாணவர்களை, ஆசிரியர் கேலியோ, கிண்டலோ செய்வதைத் தவிர்த்தல் வேண்டும். மாணவர்களுக்குத் தேவை ஆசிரியரின் ஏற்றுக் கொள்ளுதலே (Acceptance) என்பதால், ஆசிரியர் அவர்களிடம் அன்பு காட்டுதல் வேண்டும். வகுப்பில் எந்த மாணவர்களும் பிறரைக் கேலியோ, கிண்டலோ செய்து யாரையும். காயப்படுத்தாமல் பார்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

மனநிறைவு காணச் செய்தல்

மிகவும் குட்டையான அல்லது குண்டான அல்லது அழகற்ற மாணவர்களிடம் அவர்களைத் தங்களின் உண்மையான சுயகருத்தை ஏற்றுக் கொண்டு, அதில் மனநிறைவு காண ஆசிரியர் தூண்டுதல் வேண்டும்.

தலைமைப்பண்புகளை வளர்த்தல்

முந்திப் பருவமடையும் மாணவர்களுக்கு வகுப்புத் தலைவர் (Leadership) பொறுப்பினைத் தந்து, அவர்களிடம் தலைமைப் பண்புகளை ஆசிரியர் வளர்த்தல் வேண்டும்.

தனிமையில் அழைத்துக் கூறுதல்

பெரும்பாலும் சுயகருத்து (Self-Concept) தொடர்பான கருத்துக்களை ஆசிரியர் அனைவர் முன்னிலையிலும் கூறுதல் கூடாது. தனிமையாக மாணவர்களை அழைத்து அறிவுரை கூறுதல் நல்லது.

3.3 வளர்ச்சி சார் செயல்கள்

ஒவ்வொரு சமுதாயமும், தம் உறுப்பினர்கள் யாவரும் தத்தம் வயதுக்கேற்றவாறு குறிப்பிட்ட திறன்களில் தேர்ச்சியடைதலையும், குறிப்பிட்ட நடத்தை முறைகளைக் கற்றுத் திகழ்வதையும் எதிர்பார்கின்றது. உதாரணமாக, குழந்தைப்பருவம் முடிவதற்குள் தங்களது குழந்தைகள் தாய்மொழியில் படிக்க, பேச, எழுதக் கற்பது எல்லா சமுதாயத்திலும் எதிர்பார்க்கப்படுகிறது. இத்தகைய சமூக எதிர்பார்ப்புகளுடன் கூடிய பல்வேறு வயதுகளுக்கான வளர்ச்சியினைக் குறிக்கும் நடத்தைகளும் செயல்களும் வளர்ச்சிசார் செயல்கள் என்று வர்ணிக்கப்பட்டது. வளர்ச்சிசார் செயல்கள். ஒருவனது வாழ்க்கையின் குறிப்பிட்ட வயது அல்லது பருவத்தில் எழுகின்றன. இவற்றை வெற்றியுடன் செய்து முடிப்பது மகிழ்ச்சியையும், பின்னர் வரப்போகும் செயல்களில் வெற்றியையும் அளிப்பதாகும். இவற்றில் தோல்வி ஏற்பட்டால் மகிழ்ச்சியின்மையும், அடுத்து எழும் செயல்களில் தோல்வியும் கிடைக்கும்.

3.3.1 வளர்ச்சி சார் செயல்களின் கல்விப் பயன்கள்

ஒருவன், ஒரு குறிப்பிட்ட வயதில் தன்னிடமிருந்து, தான் சார்ந்துள்ள சமூகம் என்ன எதிர்பார்க்கிறது என்பதை அவனுக்கு உணர்த்துகிறது.

வாழ்க்கைப் பருவத்தில், அடுத்த நிலையில் அவன் செய்ய வேண்டிய செயல்கள் யாவை என்பதை உணர்த்தி, அதனைச் செய்வதற்கு அவனை ஆயத்தப்படுகிறது. பெற்றோர்களும், ஆசிரியர்களும் குழந்தைகளின் ஒவ்வொரு பருவத்திலும் சமூகத்தால் எதிர்பார்க்கப்படும் செயல்கள்

Downloaded From www.nagaicollege.com

என்ன என்பதனை உணர்ந்து, அவற்றைப் பெறுவதற்குரிய பயிற்சியினை அளித்தால், குழந்தைகள் சமூக எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப நடந்து, சமூகப் பொருத்தப்பாட்டுடன் நிகழ்த்தி வாழ்க்கையை சீராக நடத்திச் செல்வர். வளர்ச்சி செயல்களில் ஒரு குழந்தை தேர்ச்சியடையாமல் காணப்பட்டால் அவர்களுக்கு சிறப்புக் கல்வியும் பயிற்சியும் அளிக்க ஏற்பாடு செய்திடல் வேண்டும்.

வளர்ச்சிப் பருவத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் ஏற்படும் புதிய சூழ்நிலைக்குத் தன்னை தகவமைத்துக் கொள்வது என்பது மிகவும் கடினமான செயலாகவும், மனவெழுச்சி இறுக்கத்திற்கு (Emotional-Tension) காரணமாகவும் அமைகிறது. இவற்றினைச் சமாளிப்பதற்கு, ஒருவன் வாழ்க்கையின் வளர்ச்சிக் கட்டங்களுக்குரிய வளர்ச்சிநிலைச் செயல்களை அறிந்திருக்க வேண்டியதும், அதற்கேற்ற வகையில் தன்னைத் தயார் செய்வது மிகவும் அவசியமாகும்.

Downloaded From www.nagaicollege.com

அலகு -4 அறிதிறன் வளர்ச்சி -I
Unit-IV COGNITIVE DEVELOPMENT –I

4.1 அறிதிறனின் செயல்முறை

அறிதிறன் செயல்முறை (நினைவுச் செயல்முறை) என்பது அறிதிறன் பரந்துபட்ட அமைப்பாகிய நினைவுகள் மற்றும் பழக்க வழக்கங்களை உள்ளடக்கியது ஆகும். புலன் காட்சி, தகவல் சேகரிப்பு, தகவல்களை பெறுதல், பொதுமைப்படுத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கிய செயல்முறயையாகும். பழைய அறிவில் இருந்து புதிய தகவல்களை உருவாக்கும் செயல்முறையாகும். மனித அறிதிறன் என்பது நினைவு மற்றும் நினைவிலி ஆகிய இரண்டு செயல்முறைகளையும் உள்ளடக்கியது ஆகும். இச்செயல்முறையானது கட்டமைக்கப்பட்ட மற்றும் பெறப்பட்ட இரண்டு முறைகளையும் வழிநடத்துகிறது. மேலும் செய்திகளானது அறிதிறன் மற்றும் உள்ளுணர்வு சார்ந்ததாக அமையும். உதாரணமாக, தனிநபரானது ஒரு பிரச்சனையே பார்த்து அதற்கான தீர்வுகளை அவர்கள் தங்களுடைய மூளைச் செயல்பாடுகள் மற்றும் பழைய அறிவிலிருந்து தீர்மானிக்கின்றனர். உற்று நோக்கும் முன்னர் சேமிக்கப்பட்ட தகவல்கள், தகவல்களைப் பெறுதல், தகவல்களை இணைத்தல், தேவையற்ற தகவல்களை ஒதுக்குதல் மற்றும் முயன்று தவறிக் கற்றல் ஆகியவற்றை உள்ளடக்கிய முடிவுகளை எடுக்கும் செயல்முறையை ஆகியவற்றைக் கொண்டதாகும்.

4.1.1 அறிவுப்புல செயல்கள்

ஒருவரின் அறிவுப்புல வளர்ச்சிக்கு (Cognitive Development) கீழ்க்கண்ட செயல்கள் அடிப்படையானவை.

புலனறிவுச் சிந்தனை

ஒருவரின் அறிவுப்புலத்தின் (Cognition) முதல் படியாக விளங்குவது புலனறிவு (Cognition) ஆகும். ஒருவருக்குப் புலனறிவு, சுற்றுச்சூழலில் உள்ள பொருட்களின் உதவியால் வளரும். புலனறிவுச் சிந்தனையில் ஒருவரிடம் புலனியக்கங்களின் சிந்தனை அதிகமிருக்கும். பார்வைப் புலனறிவு மிகுந்திருக்கும். புறச்சூழல் அனுபவங்களே புலனறிவுச் சிந்தனைக்கு அடிப்படையாகும். இச்சிந்தனை வளர்ந்திட நிறைய புறச்சூழல் அனுபவங்கள் தரப்படுதல் வேண்டும்.

கருத்துமையச் சிந்தனை

புலனறிவுக்கு அடுத்தபடியான வளர்ச்சியே, கருத்துமையச் சிந்தனை ஆகும். கருத்துமையச் சிந்தனையில், காட்சியும், மொழியும் சேர்ந்து தோன்றும். கருத்துமையச் சிந்தனை செய்யும் குழந்தையிடம், குறியீட்டு நடத்தை காணப்படும். அதாவது குறியீடுகளைப் பயன்படுத்துதல், பொருளைப் பெயரிட்டு அழைத்தல், கருத்துகளைக் கூறுதல் போன்ற சிந்தனை மிகுந்திருக்கும், மொழியும் கருத்துக்களுமே கருத்துமையச் சிந்தனைக்கு அடிப்படையாகும். கருத்துமையச் சிந்தனை வளர்ந்திட நிறைய கற்கும் வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருதல் வேண்டும்.

4.2 கவனம்

சூழலில் உள்ள சில குறிப்பிட்ட புறத்தூண்டல்களை மட்டும் ஊன்றிக் கவனித்தல் கவனம் (Attention) எனப்படும். கவனத்தில் மூன்று செயல்கள் நடைபெறுகின்றன. அவை:

ஒரு புறச்சூழல் தெளிவு செய்யப்படுகிறது

புறச்சூழலில் சில பயனுள்ள தேவையான தூண்டல்கள் மட்டும் மையப்படுத்தப்படுகின்றன. அவை புலன்காட்சியில் (Perception) தெளிவாகத் தெரிகின்றன. அதே சமயத்தில், புறச்சூழலில் தேவையற்ற தூண்டல்கள் ஓரத்திற்க்குத் தள்ளப்படுகின்றன. அவையனைத்தும் புலன்காட்சியில் தெளிவின்றித் தெரிகின்றன. உ.ம் ஒரு மாணவன் தன் அறையில் உட்கார்ந்து பாடநூலை வாசித்துக் கொண்டிருக்கும் போது, அவனது முழுக்கவனமும் அந்தப் பாடநூலில் தான் இருக்கும் மற்ற

Downloaded From www.nagaicollege.com

பொருள்களான மேஜை அவன் உட்காாந்திருக்கும் நாற்காலி அறையின் கதவுகள் சன்னல்கள், அறைச்சுவர்கள் மேலே எரிந்து கொண்டிருக்கும் விளக்கு ஆகியன அவனின் புலன்காட்சியின் ஓரத்தில் தெளிவின்றித் தோன்றும்

4.2.2 கவனத்திற்கும், ஆர்வத்திற்கும் இடையேயுள்ள தொடர்பு

ராஸ் (Ross) என்பவரின் கருத்துப்படி, கவனமும் ஆர்வமும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றதாகும். ஆர்வம் என்பது மனதில் தோன்றும். விஷேச குணம், கவனம் என்பது மனதின் செயல்முறை ஆகும். ஆர்வமே கவனத்தை எங்கே செலுத்த வேண்டும் என நிர்ணயிக்கின்றது. ஆர்வமே கவனத்தை வழிநடத்துகிறது.

"ஆர்வம் என்பது மறைந்திருக்கும் கவனம். கவனம் ஆர்வத்தின் செயல் வடிவம்." மெக்டுகல் (Mc Dougal)

ஆர்வம் என்பது உள்ளிருந்து கவனத்தை தூண்டும். ஒரு பொருளிலோ, செயலிலோ அதிக ஆர்வத்துடன் ஈடுபடும் பொழுது நமது கவனம் அதில் அதிகமாக நிலைக்கிறது. இதிலிருந்து கவனம் என்பது ஆர்வத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது எனலாம்.

4.2.3 கவனத்தில் ஈடுபடுத்தும் அகக்காரணிகள்

ஒரு பாடத்தை மாணவர் ஊன்றிக் கவனிப்பதும், அல்லது கவனமே செலுத்த முடியாமல் போவதும், மாணவருக்குள் இருக்கும் ஐந்து முக்கிய அகக் காரணிகளைப் பொருத்ததாகும்.அவை :



ஆர்வம் (Interest)

ஒரு பாடத்தின் மேல் ஏற்படும் கவனத்திற்கு அடிப்படையாக விளங்குவது மாணவரின் ஆர்வம் ஆகும்.

தேவை (Need)

ஒரு பாடத்தின் மேல் ஏற்படும் கவனத்திற்கு அடிப்படையாக விளங்கும் இரண்டாவது காரணி மாணவரின் தேவை ஆகும்.

ஆயத்தம் (Mental Readiness)

ஒரு பாடத்தின் மேல் ஏற்படும் கவனத்திற்கு அடிப்படையாக விளங்கும் மூன்றாவது காரணி மாணவரிடம் வளர்ந்திருக்கும் மனப்பக்குவம் அல்லது மனமுதிர்ச்சி ஆகும்-

மனநிலை (Mood)

ஒரு பாடத்தின் மேல் ஏற்படும் கவனத்திற்கு அடிப்படையாக விளங்கும் நான்காவது காரணி மாணவரின் மனநிலை ஆகும். மிகுந்த கோபம், கவலை, உவகை ஆகியவற்றால் பாதிக்கப்படும் மனநிலை போன்ற காரணங்களால் பாடக்கருத்துக்களில் ஊன்றிக் கவனம் செலுத்த இயலாது.

Downloaded From www.nagaicollege.com

உடல்நிலை (Physical Condition)

பாடத்தின் மேல் செலுத்தும் கவனத்தைப் பாதிக்கும் ஐந்தாவது காரணி. மாணவரின் உடல் நிலை ஆகும். எடுத்துக்காட்டாக, தலைவலி, காய்ச்சல், வயிற்றுவலி போன்றவை வகுப்பில் கவனத்தைப் பாதிக்கின்றன.

கவனத்தை கவர்ந்திழுக்கும் புறக் காரணிகள்

ஒரு பொருள், ஒரு நிகழ்ச்சி, ஒரு மனிதர், ஒரு செயல் ஆகியவற்றில் வெளிப்படையாகக் காணப்படுகின்ற கவனத்தைக் கவர்ந்திழுக்கும் தன்மைகளுக்குப் புறக்காரணி எனப்பெயர். ஆசிரியர் புறக்காரணியை வகுப்பில் முறையாகப் பயன்படுத்தி, மாணவரின் கவனத்தை கவர்ந்திழுக்க முடியும். கற்பித்தலின் போது மாணவரின் கவனத்தை ஈர்த்திட ஆசிரியர் வெளிப்படுத்தக்கூடிய புறக்காரணிகள் உள்ளன. அவை:

செறிவு (Intensity)

செறிவற்ற, வலுவற்ற, அழுத்தமற்ற புறத்தூண்டலை விடச் செறிவுமிக்க அல்லது வலுவான "ஒரு புறத்தூண்டல் கவனத்தை இழுக்கிறது. எடுத்துக்காட்டாக, மெல்லிய குரலை விட உரத்த குரல் கவனத்தை இழுக்கிறது. எனவே ஆசிரியர், வகுப்பிலுள்ள மாணவர் அனைவரும் கேட்கும் வகையில் ஏற்ற இரக்கத்துடன் உரத்த குரலில் பாடம் நடத்துதல் வேண்டும்.

அளவு (Size)

மிகச்சிறிய பொருளை விட மிகப் பெரிய பொருள் கவனத்தை இழுக்கிறது. எடுத்துக்காட்டாக, பாடநூலில் சிறிய எழுத்துக்களை விடப் பெரிய எழுத்துக்களின் சொற்கள் மாணவரின் கவனத்தை இழுக்கிறது. எனவே, ஆசிரியர் கரும்பலகையில் பெரிதாக "எழுதுதல், பெரிதாகப் படம் வரைதல், பெரிய அளவில் மாதிரிகள் (Models) செய்து காட்டுதல் போன்ற செயல்களால் மாணவரின் கவனத்தை கவர்ந்திழுக்க வேண்டும்.

திரும்புக் கூறுதல் (Repetition)

ஒரு முறை காணப்படும் புறத்தூண்டலைவிட, மீண்டும் மீண்டும் தோன்றும் ஒரு புறத்தூண்டல் கவனத்தை இழுக்கிறது. எனவே பாடம் நடத்துகையில் முக்கியமான சொற்கள், கடினமான சொற்றொடர்கள், எளிதில் உச்சரிக்க இயலாத சொற்கள் ஆகியவற்றை ஆசிரியர் ஒரிரு முறை திருப்பிக் கூறுதல் வேண்டும்.

மாற்றம் (Change)

மாறாத நிலையிலுள்ள புறத்தூண்டலைவிட திடீர் மாற்றமடையும் புறத்தூண்டல் எளிதில் கவனத்தை இழுக்கிறது. பாடம் நடத்துகையில், ஆசிரியர் திடீரென மின்னட்டை (Flash Card) காட்டுதல், திடீரென குரலை உயர்த்துதல் அல்லது தாழ்த்துதல், திடீரெனக் கேள்விகள் எழுப்புதல் போன்றவைகளால் ஆசிரியர் மாணவரின் கவனத்தைக் ஈர்க்கமுடியும்.

Downloaded From www.nagaicollege.com

இயக்கம் (Movement)

அசையாத புறத்தூண்டலைவிட அசைகின்ற புறத்தூண்டல் கவனத்தை இழுக்கிறது. நின்ற இடத்திலேயே நிற்காமல் வகுப்பில் சிறிதளவே நடந்து பாடம் நடத்துதல், கைகள், தலை, உடம்பு, ஆகியவற்றைப் பாடம் நடத்தும்போது பொருள்பட அசைத்தல், நிலையான மாதிரிகளைவிட இயங்கும் மாதிரிகளை வகுப்பில் காட்டுதல் போன்றவற்றால் ஆசிரியர் மாணவர்களின் கவனத்தைக் கவர்ந்திழுக்க முடியும்.

வேறுபாடு (Contrast)

ஒரே சீரான புறத்தூண்டலைவிட, சற்று வேற்றுமையான புறத்தூண்டல் கவனத்தை இழுக்கிறது. எனவே வகுப்பறையில் ஆசிரியர் கற்பிக்கும்போது முற்றிலும் மாறுபட்ட கற்பித்தல் முறைகளைக் கையாளுதல் வேண்டும். மேலும் கரும்பலகையில் படம் வரையும் போது, முக்கியமான பாகங்களை வண்ணச் சுண்ணக்கோலால் வேறுபடுத்திக்காட்டுதல், கருத்துகளிலுள்ள ஒற்றுமை வேற்றுமைகளைப் புலப்படுத்துதல் போன்றவை மாணவரின் கவனத்தை இழுக்கின்றன.

புதுமை (Novelty)

சாதாரண பொருளைவிட, அதிசயமான, விநோதமான, வித்தியாசமான, முற்றிலும் புதியதொரு பொருள், செயல், நிகழ்ச்சி போன்றவை ஒருவரின் கவனத்தைக் கட்டியிழுக்கின்றன. எனவே, வகுப்பில் புதுமையான சோதனைகள், புதுமையான விளக்கங்கள், புதுமையான கருத்துக்கள் வழங்குவதின் வழியே ஆசிரியர் மாணவரின் கவனத்தைத் தன்பால் ஈர்க்கலாம்.

4.3 கவன வீச்சு



கவன வீச்சு என்பது ஒருவருடைய கவனத்தின் அளவு அல்லது எல்லை எனப்படும். ஒரே ஒரு பார்வையில் ஒருவர் நினைவில் கொள்ளும் பொருள்களின் எண்ணிக்கையே கவன வீச்சு எனப்படும். ஒருவரின் கவனவீச்சினைக் கணக்கிட உதவும் கருவிக்கு "டேகிஸ்டாஸ்கோப்" (Tachistoscope) என்று பெயர். இக்கருவியிலுள்ள ஒரு செவ்வகத் துளையின் வழியே,

அச்சடிக்கப்பட்ட அட்டைகள் விழும். அதில் உள்ள புள்ளிகள் அல்லது எழுத்துகள் சில விநாடிகள் மட்டுமே காணப்படும். அவற்றைக் கவனித்து, ஒருவர் கூறும் புள்ளிகளின் அல்லது எழுத்துக்களின் எண்ணிக்கையே, அவருடைய கவனவீச்சு ஆகும். மனிதனின் சராசரிக் கவனவீச்சு 4 முதல் 6 வரையிலான எண்கள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

4.4 கவனமின்மையும், கவனச் சிதறலும்

கவனமின்மை

புறச்சூழலில் நிகழும் ஒரு குறிப்பிட்ட தூண்டலையோ, செயலையோ கவனிக்காத நிலை கவனமின்மை எனப்படும். ஓர் ஆசிரியர் பாடம் நடத்துகிறார். மாணவர் தன் கவனத்தைப் பாடத்தில் செலுத்த விரும்பமில்லை. இது கவனமின்மை எனப்படும். மாணவரின் கவனமின்மைக்கு, மாணவரிடம் காணப்படும் குறைவான அகக் காரணிகள் அல்லது புறக்காரணிகள் காரணமாயிருக்கலாம்.

கவனச்சிதறல்

ஒரு செயலில் ஒருவர் செலுத்த விழையும் கவனத்தைத் தொடர்ந்து, செலுத்த விடாமல் தடுக்கும் காரணிக்கு கவனச் சிதறல் அல்லது கவனக் குறைவு எனப்பெயர். ஆசிரியர் தீவிரமாகப் பாடம் நடத்திக் கொண்டிருக்கும்போது, தெருவில் செல்லும் கார்கள் எழுப்பும் ஓசைகள், அரசியல் ஊர்வலத்தில் எழுப்பப்படும் முழக்கங்கள் போன்ற தடைகள்.

Downloaded From www.nagaicollege.com

4.5 புலனுணர்வுகளும், புலன் காட்சியும்

புலனுணர்வுகள்

ஓவ்வொருவருக்கும் தோல், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்புலன்கள் (Sense Organs) உள்ளன. இவை முறையே உணர்தல், சுவைத்தல், பார்த்தல், நுகர்தல், கேட்டல் ஆகிய ஐம்பெரும் செயல்களைச் செய்கின்றன. இந்த ஐம்புலன்களின் உதவியால்தான், ஒருவர் உலகை அறிய முடியும். இவை இல்லையேல், புற உலகு நமக்குப் பேரிருளாகவே தோன்றும். எனவே, ஐம்புலன்களால் பெறப்படுபவை அல்லது அறியப்படுபவை புலனுணர்வுகள் எனப்படுகின்றன.

புலனுணர்வுகள் = ஐம்புலன்கள் + புறத்தூண்டல்கள்

செவியால் ஓர் ஒலியைக் கேட்பது, மூக்கினால் பொருளின் மணத்தை நுகர்தல், கண்களால் ஒரு பொருள்களைப் பார்த்தல், நாக்கினால் சுவைத்தல், உடலினால் உணர்தல் ஆகிய அனைத்தும் புலனுணர்வுகள் ஆகும்.

புலன் காட்சி

புலன் உறுப்புகள் வாயிலாகப் பெற்ற புலன, உணர்விற்கு நாம் ஏற்கனவே திரட்டிய அனுபவங்களின் அடிப்படையில் பொருள் அமைத்து மற்ற பொருள்களின் தன்மையை அறிதலை புலன்காட்சி என்கிறோம். புலன்காட்சி தோன்றுதலில் இடம்பெறும் செயல்கள் சுற்றுப்புறச் சூழ்நிலையிலுள்ள பொருட்களால் (தூண்டல்கள்) விளைந்தவை. அவை:

- பொருத்தமான புலன்களைத் தூண்டல்கள் சக்தி அலைகளால் தாக்குவது
- தூண்டலுக்குரிய புலன் உணர்வு
- திரட்டிய அனுபவங்களைப் பயன்படுத்தி, புலன் உறுப்பைத் தாக்கிய தூண்டலின் இயல்புகளை அறிதல்

புலன்காட்சியின் அடிப்படை புலன் உணர்வுகள்தான் எனினும், இந்த இரண்டையும் பிரித்துத் தனித்தனியே அனுபவிக்க முடியாது. புலன் உணர்வுகள் நம் மனத்துள் தோன்றும்போதே, அப்புலன் உணர்வுகள், பொருள் கொண்டு புலன்காட்சிகளாகி விடுகின்றன. புலன் காட்சியை புலன் உணர்வுகளும், அவற்றின் பொருளறிதலும் இணைந்த ஒன்றாகும்.

4.6 புலன் காட்சியுடன் தொடர்புடைய காரணிகள்

புலன் காட்சியின் காரணிகள்/ விதிகள் (Factors of Perception/ Laws)

உருவப் பின்னனி (figure Ground) புலன் காட்சிக்கு உருவப் பின்னணியும் ஓர் அடிப்படை நியதியாகும். உருவத்தை பின்னனியிலிரந்து தனியாகப் பிரித்தல் புலன் காட்சித் செயல்முறைக்கு அடிப்படையாக உள்ளது.

மேற்கண்ட படத்தில் இரட்டையர்களின் முகத்தோற்றமும் பூஜாடி தோற்றமும் காணப்படுகிறது இது உருவப் பின்னணி தொடர்பின் அடிப்படையில் புலன் காட்சி அமைகிறது. புலன் காட்சியானது பல வகையான கருத்துக்களால் வலுவூட்டப்படுகிறது. புலன்காட்சி என்பது உணர்ச்சி மிகுந்தது ஆகும். உட்புற வெளிப்புறகாரணிகளானது புலன் காட்சியை நிர்ணயிக்கிறது.

4.6.1 வெளிப்புற காரணிகள்/விதிகள் (External Factors/laws)



1. அண்மை விதி (law of Proximity)

அண்மை என்பது பொருள்களிடையே உள்ள நெருக்கத்தைக் குறிக்கிறது.

Downloaded From www.nagaicollege.com

A&B ஒரு குழு, C & D மற்றொரு குழு, இங்கு கோடுகள் அருகில் அமைந்துள்ளன. அருகாமை என்பது காரணி B C அல்லது

D அல்லது A & E போன்றவற்றை ஒரு குழுவாக அமைக்க முடியாது. இங்கு 8 செங்குத்துக் - கோடுகள் அண்மை விதியினால் இரண்டு இரண்டு கோடுகளாகச் சேர்ந்து நான்கு தொகுதிகளாகத் தெரிகிறது.

2. ஒப்புமை விதி (Law of similarity)

ஒரே மாதிரியான உருவ ஒற்றுமை அமைப்பு கொண்ட அதாவது ஒரே மாதிரியான தோற்றமுடைய பொருள்கள் எல்லாம் ஒரு குழுவைச் சார்ந்ததாகும்.



தொடர்ச்சி விதி (Law of Continuity)

புள்ளிகள் ஒரே நேர்கோட்டிலோ (அல்லது) வளைகோட்டிலோ இருந்தால் ஒரே சீராகக் காணப்படும். இல்லையெனில் வெவ்வேறு திசைகளில் சிதறிக் காணப்படும். இதில் தொடர்ச்சி விதி பயன்படுகிறது.



பூர்த்தி செய்தல் விதி (Law of Closure)



மேலே உள்ள முக்கோணம், சதுரம், வட்டம் போன்ற படங்களில் இடைவெளிகள் இருப்பதை நாம் பார்க்கவில்லை. இடைவெளிகள் இருந்தாலும் அவைகளை முழுமை பெற்ற படங்களைப் போல் காட்சி அளிக்கிறது. நாம் காணும் பொருட்களைக் காணும் திறனை மனிதப்புலன்காட்சிக்கு அளிப்பது இணைப்பு விதியாகும்.

4.6.2 உட்புறக் காரணிகள் விதிகள் (Internal factors Laws)

1. கடந்த கால அனுபவம் (Past experience)

புலன் காட்சியினை நிர்ணயிப்பதில் கடந்த கால அனுபவம் ஒரு முக்கிய காரணியாக அமைகிறது. நாம் புலன் உறுப்புகள் வாயிலாகப் புலன் உணர்வுத் தூண்டல்களைத் தொகுத்து, இணைத்து கடந்த கால அனுபவத்தின் அடிப்படையில் அவற்றிற்கு அர்த்தம் தந்து, ஊக்கம் அளித்து அதனை அறிந்து கொள்கிறோம். இதுவே, புலன் காட்சியாக மற்றும் புலனறிவாக அமைகிறது. (உ.ம்) நாம் ஆகாயத்தில் மேகக்கூட்டங்களைப் பார்க்கும் பொழுது பல

Downloaded From www.nagaicollege.com

உருவத்தோற்றத்தைப் பார்க்கலாம். நாம் பார்க்கும் உருவங்களுக்கு காரணம் நாம் இத்தகைய உருவங்களில் பரிச்சயம் பெற்றிருப்பதால்தான்.

மனப்பான்மை (Attitude of mental set)

புலன்காட்சியை நிர்ணயிக்கும் மற்றொரு அகக்காரணி மனப்பான்மை அல்லது மனநிலை ஆகும். (உ-ம்) பாரப்பவையெல்லாம் நமக்கு தேவையனதாகத் தோன்றும்.

புலன்காட்சியில் ஏற்படும் பிழைகள் (Errors in perception)

நமது புலன்காட்சி எப்பொழுதும் சரியாக இருப்பதில்லை. அவ்வப்போது நமது புலன் காட்சியில் தவறுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. ஒரு குறிப்பிட்ட தூண்டல் நமது புலன் உறுப்பினைத் தூண்டி சரியான விளக்கத்தைப் பெறும் பொழுது (அ) தூண்டலைச் சரியாகப் புரிந்துகொள்ளும் பொழுது அது புலன்காட்சி எனப்படுகிறது. மாறாக, ஒரு தூண்டல் தவறாகப் புரிந்து கொள்ளப்படுமேயானால் அதனை தவறான புலன்காட்சி என்கிறோம்.

புலன் காட்சியில் ஏற்படும் தவறை இரு பிரிவாகப் பிரிக்கலாம்.

1. திரிபுக்காட்சி 2. இல்பொருள் காட்சி

1. திரிபுக்காட்சி (Illusion)

திரிபுக்காட்சி என்பது தவறான புலன் காட்சியினைக் குறிக்கும். உண்மை நிலையோடு ஒத்துப்போகாத புலன்காட்சியினைத் திரிபுக் காட்சி என்பர்.



(எ.கா) இரவில் ஒரு சிறிய கயிறு, பாம்பு போன்ற தோற்றமளித்தல் (பார்வைத் திரிபுக் காட்சி). பக்கத்து அறையில் யாரோ ஒருவரது பேச்சுக்குரல் கேட்கும்போது, அதை நமது நண்பரின் பேச்சுக்குரல் என உணர்தல் (கேட்டல் திரிபுக்காட்சி). அ. 1.1 **முல்லர் - லயர் திரிபுக் காட்சி (Muller - Lyer illusion)**

முல்லர் - லயர் என்ற இருவரால் விளக்கப்பட்ட பார்வைத் திரிபுக் காட்சியினை முல்லர் - லயர் திரிபுக்காட்சி என்கிறோம். இதில் ஒரே சம அளவு உடைய இரு நேர்கோடுகள் சமமற்றதாக வேறுபட்ட அளவில் காணப்படும். இதனை கீழேயுள்ள கோடுகள் விளக்குகிறது.



Downloaded From www.nagaicollege.com

இந்த இரு கோடுகளில் இறகு முனை போன்ற முனைகளுடன் அமைந்த கோடு, மேலேயுள்ள அம்புக்குறி முனைகளுடன் முடியும் கோட்டைவிட பெரியதாகத் தோன்றுகிறது. ஆனால் உண்மையில் அவை இரண்டும் ஒரே அளவு உடையவை. முனைகளின் தன்மையைப் பொறுத்து அவை மாறுபட்டு தோன்றுகிறது.

1.2 படுக்கை - நேர்கோடு திரிபுக் காட்சி - (Horizontal - Vertical Ulusion)

இதில் ஒரே அளவுடைய இரு கோடுகள் ஒன்று படுக்கைக் கோடாகவும், மற்றொன்று செங்குத்துக் கோடாவும் அமைகின்ற காரணத்தால் அளவில் மாறுபட்டு தோன்றுகின்றன.

இதில் செங்குத்துக்கோடு, படுக்கைக் கோட்டினை விட அளவில் பெரியதாகக் காட்சி அளிக்கிறது. ஆனால், இரண்டும் ஒரே அளவு உடையது.

2.இல்பொருள் காட்சி (Hallucination)



நாம் எந்தவிதத் தூண்டலும் இல்லாமலும், ஒரு தூண்டல் இருப்பதாக உணர்வது இல்பொருள் காட்சி ஆகும். இது, இல்லாத ஒன்றினை இருப்பதாகக் காண்பது. (எ-கா) மேற்கண்ட காட்சியில் காட்சி நகருவதைப் போல தோன்றுதல்.

கல்வியில் இதன் முக்கியத்துவம் (Educational importance)

- கவனத்தைப் போலவே புலன் காட்சியும் மனிதனின் நடத்தையைப் பாதிக்கின்ற முக்கிய காரணியாகும்.
- மனிதனின் நடத்தை புலன் காட்சியைச் சார்ந்து இருக்கிறது.
- ஒரு பொருளின் மீது சரியான புலன்காட்சி இருப்பது அவசியமாகும். இது திறமையான கற்றலுக்கும், முறையான நடத்தலுக்கும் வழிகோலுகிறது.

Downloaded From www.nagaicollege.com

4.7 கற்பனை (அல்லது) சாயல்கள் (அல்லது) மன பிம்பங்களை உருவாக்குதல்

அறிதல் பலநிலைகளைக் கொண்டது. புலன் காட்சியறிதல், அந்நிலைகளின் அடிப்படையான முதல் நிலையாகும். அறிதலில் மேம்பட்ட நிலைகளை படங்கள் (அ) சாயல்கள் (Images) துணை கொண்டறிதல் என்று அழைக்கிறோம். இவ்வகைச் சிந்தித்தலில் பயன்படுத்தப்படும் சாயல்கள், சொற்சாயல்களாகவோ, உள்ளீடான சாயல்களாகவோ இருக்கலாம். நம் புலன் உணர்ச்சிகளால் நேரடியாக ஏற்படாத மன உருவங்கள் (Mental Forms) அதாவது சாயல்களைப் பயன்படுத்தி அறிதலே, சாயல் துணை கொண்டறிதல். எனப்படும். புலன் உணர்ச்சிகளுக்குப் பொருள் அமைத்தலால் ஏற்படும் அறிவு புலன்காட்சியறிவாகும். ஆனால், அப்பொருள் நம் எதிரே இல்லாமலே அதைப்பற்றி எண்ணுதல், அதன் சாயல் நம் மனதில் தங்கியிருப்பதனால் இயலுகிறது. புலன்காட்சியை முதலில் தோற்றுவித்த ஒரு பொருள் இன்றியே அப்பொருள் பற்றி உணர்தலைச் சாயல் அல்லது மனபிம்பம் (Image) என்கிறோம்.

சாயல்களின் வகைகள்



காட்சிச் சாயல்கள் (Visual images) (உ-ம்) நம்மை விட்டுப்பிரிந்து சென்ற நண்பனின் முகத்தை நம் மனக்கண் முன் கொண்டு நிறுத்துதல், வகுப்பாசிரியரின் முகத்தை நினைவு கூர்தல் ஆகியவை.
கேள்விக். சாயல்கள் (Auditory Images) (உ-ம்) முன்தினம் கண்ட திரைப்படத்தில் வந்த இசைப்பாட்டினை, மீண்டும் மனதில் தோன்றச் செய்ய முடிவது
சுவைச் சாயல்கள் (Gustatory Images) (உ-ம்) நேற்று விருந்தில் உண்ட உணவின் சுவையை இன்று நினைத்து அனுபவிக்க முடியும்
மனச்சாயல்கள் (Olfactory Images) (உ-ம்) மல்லிகை மலரின் மனத்தை நினைவில் வைத்திருத்தல்
தொடு சாயல்கள் (Tactile Images) (உ-ம்) பந்தை உதைக்கும் உணர்ச்சி

ஒவ்வொருவரிடமும் எல்லா வகைச் சாயல்களும் காணப்படினும், ஒருவகைச் சாயல் - காட்சிச்சாயலோ, கேள்விச்சாயலோ அல்லது தொடுசாயலோ- மிகுந்து இருக்கும். எனவே, ஆசிரியர்கள் பாடம் கற்பிக்கையில் மாணவர்களின் பல புலன்களையும் பயன்படுத்திக் (Multisensory Approach) கற்பித்தல் நன்று. வாய்மொழி, கரும்பலகையில் எழுதுதல், படங்கள், சோதனைகள் ஆகியன யாவும் கற்பித்தலில் இடம் பெற வேண்டும்.

குழந்தைகளின் சாயல் திறன்

சாயல்கள் உருவாக்கும் திறன் (Imagery) சிறு குழந்தையிடமும் உண்டு. குழந்தைகள் பெரும்பாலும் புலனீடான (Concrete) சாயல்களையே சிந்தனையில் (Thinking) பயன்படுத்துவர். ஆனால் வயது வந்தவர்கள் சொற்சாயல்களைப் (Verbal Images) பெரிதும் பயன்படுத்துவர். அதாவது, தமது புலன்களால் உணர்ந்திருந்தனர். ஆனால், படித்தறிந்ததன் மூலம் பெற்ற சாயல்களை, சிந்தனையில் பயன்படுத்துவர். புலனீடான சாயல்களைக் காட்டிலும் சொற்சாயல், அதிக சாயல்களைத் தரவல்லது. மொழிச் சொற்களின்றி கருத்தியல் சிந்தனை ஏற்பட முடியாது. இதைத்தவிர சொற்களைப் பயன்படுத்தி சிந்தித்தல் சிக்கனமானது. வேகமாக சிந்திக்கவும் நமக்கு

Downloaded From www.nagaicollege.com

உதவுகிறது. ஆகையால், குழந்தைகளின் சொல்லறிவைப் பெருக்க ஆசிரியர்கள் முயல வேண்டும். குழந்தைகள் தமது மீதான ஆக்கச் சாயல்களுடன் (Reproductive Images) தங்களது கற்பனையில் எழும் கருத்துக்களையும் சேர்த்துக் குழப்பி விடுவதும் உண்டு. குழந்தைகள் சொல்லும் சிலவகைப் பொய்கள் இக்குழப்பத்தினால் தோன்றுபவை. சிறு குழந்தையிடம் வெகு தெளிவான, திருத்தமான, துல்லிய விபரங்களுடன் கூடிய சாயல்களைத் தோற்றுவிக்கும் திறன் காணப்படும். புலன்காட்சி போன்றே தோன்றக்கூடிய இத்தகைய சாயல்களை மீத்தெளிசாயல்கள் (Eidetic images) என்று உளவியல் அறிஞர்கள் குறிப்பிடுவர். இத்திறன் 12 வயதுக்குப்பின் குறைந்துவிடும்.

Downloaded From www.nagaicollege.com

அலகு 5 அறிதிறன் வளர்ச்சி -II
UNIT V - CONGNITIVE DEVELOPMENT - II

5.1 அறிவுப்புல வரைபடம்

அறிவுப்புல வரைபடம் அல்லது கருத்துரு (Cognitive Map) என்னும் கருத்தினை வழங்கியவர் டோல்மன் (E.C. Toman) ஆவார். குறிக்கோளினை அடைய உதவும் சூழலைப் பற்றிய அறிவார்ந்த புலனறிவுக்கு அறிவுப்புல வரைபடம் எனப் பெயர். கற்றலில் அறிவிப்புல வரைபடம் எப்படிப் பயன்படுகிறது என்பதை டோல்மன் வழங்கிய கோட்பாட்டிலிருந்து அறியலாம். இவரின் கருத்துப்படி,

ஒரு மனிதனின் அனைத்து நடத்தைகளுக்கும் நோக்கமுள்ளது

அந்நடத்தைகள் குறிக்கோளை நோக்கிச் செல்பவை. ஒவ்வொரு மனிதனும், குறிக்கோளை அடைவதற்கு ஒரு புறச்சூழலைப் பயன்படுத்தியாக வேண்டும். இச்சூழலில் பல தூண்டல்கள் உள்ளன.

ஒருவர் குறிக்கோளை அடைய வேண்டுமெனில், குறிக்கோளை அடைவதற்கு உதவும் முக்கியத் தூண்டல்கள் எவையென மனத்தினுள் காட்சியாக கண்டறிதல் வேண்டும்.

இவ்வாறு, ஒரு புறச்சூழலில் குறிக்கோளுக்கும், அவற்றை அடைய உதவும் முக்கியத் தூண்டல்களுக்கும் உள்ள உறவை மனத்திற்குள் காட்சியாகக் காணக்கற்று கொள்வது அறிவுப்புல வரைபடம் எனப்படுகிறது. இதை டோல்மன், ஒரு எலியானது பலபாதை வழிச்சோதனையில், உணவினை முயன்று தவறிக் கற்கவில்லை, மாறாக சோதனைச் சூழலில் உணவுக்கும், உணவை அடைய உதவும் முக்கியப் பாதைகளுக்கும் உள்ள உறவை, எலி ஒரு வரைபடமாகக் கற்றுக் கொண்டது என விளக்கினார். அறிவுப்புல வரைபடம் பற்றிய கருத்து, கல்வியில் பயன்படுகிறது. சான்றாக, ஓர் ஆசிரியர், ஒரு பாடத்தின் முக்கியப் பாடக்கருத்துகளை கரும்பலகைச் சுருக்கமாகத் தருவதால் அவை மாணவர்களின் மனத்தில் முழுமையான மனக்காட்சியாக நிற்கின்றன.

5.2 பியாஜேயின் அறிவுப்புல வளர்ச்சி நிலைகள்

சுவிட்சர்லாந்து நாட்டு உளவியலறிஞர் பியாஜே (Piaget) குழந்தைப் பருவம், குமரப்பருவம் ஆகிய இரு பருவங்களிலும் ஒருவரின் அறிவுப்புலம் எவ்வாறு பல்வேறு நிலைகளில் வளர்ச்சியடைகிறது என்பதைக் கண்டறிந்து கூறினார். இவை பியாஜே வழங்கிய அறிவுப்புல வளர்ச்சி நிலைகள் எனப்படுகிறது.

பியாஜேயின் முக்கியக் கோட்பாடுகள்

- ஒரு குழந்தையின் முதல் 15 ஆண்டுகளில், அறிவு வளர்ச்சியில் நான்கு வளர்ச்சி நிலைகள் உள்ளன. ஒவ்வொரு வளர்ச்சி நிலையிலும், குழந்தை சில குறிப்பிட்ட சிந்தனைகளை வளர்த்துக் கொள்கிறது.
- எல்லாக் குழந்தைகளும் அறிவு வளர்ச்சியின் நான்கு நிலைகளையும் கடந்தே வரவேண்டும். ஒவ்வொரு குழந்தையும் உரிய வேகத்தில் அறிவு வளர்ச்சியின் நிலைகளைக் கடந்து செல்கின்றது. எனினும், எந்தக் குழந்தையும் எந்த ஒரு அறிவு வளர்ச்சியையும் புறக்கணித்துவிட்டு இன்னொரு மேலான வளர்ச்சிக்கு வந்துவிட முடியாது.
- குழந்தையின் வயது கூடும்போது, அக்குழந்தையின் சிந்திக்கும் தன்மை சிறிது சிறிதாக நுட்பமான உறவுகளைக் காணும் அடிப்படைக்கு (Logic) ஏற்புடையதாக வளர்ந்து வருகிறது
- குழந்தை ஒரு பொருளைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டுமானால் அக்குழந்தை அப்பொருளைக் கையாளுதல் வேண்டும். குழந்தை தனது புலன்களின் உதவியாலோ, சிந்தையில் உருவகித்தோ கையாளுவது அவசியம்.

Downloaded From www.nagaicollege.com

5.2.1 அறிவுப் புல வளர்ச்சி நிலைகள்

பியாஜேயின் கோட்பாட்டின்படி, ஒரு குழந்தை பிறந்ததிலிருந்து 15 வயது வரையில் நான்கு சிந்தனை நிலைகளில் தனது அறிவினை வளர்ச்சியடையச் செய்து கொள்கிறது.



புலனியக்கச் சிந்தனை வளர்ச்சி (Sensori-Motor Stage)

புலனியக்கச் சிந்தனை வளர்ச்சி, குழந்தைகளின் பிறப்பிலிருந்து 2 வயது வரை நீடிக்கிறது. இந்த வயதுக் காலத்தில், குழந்தை புலன் அனுபவங்கள் (பார்த்தல், தொடுதல், சுவைத்தல்), உடலியக்கச் செயல்கள் (தவழ்தல், எழுதல், நடத்தல் போன்றவை) ஆகிய இரண்டையும் பயன்படுத்திச் சுற்றுப்புறத்திலுள்ள பொருட்களைப் பற்றிய அறிவைப் பெறுகிறது. இவ்வயதுக் குழந்தைகள் அடையும் அறிவு வளர்ச்சிகள்:

- சுற்றுச்சூழலிலுள்ள பொருள்களிருந்து குழந்தை தன்னைத் தனியே பிரித்துக் காணுகிறது.
- இயக்கம், ஒலி, ஒளி ஆகியன உள்ள பொருள்களால் குழந்தை ஈர்க்கப்படுகிறது.
- தனக்குப் பிடித்த செயலை குழந்தை நீண்ட நேரம் செய்கிறது.
- பொருள்களைக் கையாளுவதால் அவற்றைக் குழந்தை அடையாளம் காணுகிறது.
- குழந்தையின் பார்வையிலிருந்து ஒரு பொருளை மறைத்தாலும், பொருளின் இடத்தை மாற்றி வைத்தாலும் அப்பொருள் நிலையாக உள்ளது என அறிகிறது.

5.2.2 முற்சிந்தனை வளர்ச்சி (Pre-Operational Stage)

முற்சிந்தனை வளர்ச்சி என்பது குழந்தையிடம் சிந்தித்தலுக்குரிய அடிப்படையில் வளர்வதைக் குறிக்கும். முற்சிந்தனை வளர்ச்சி, 2 வயதிலிருந்து 7 வயது வரை நீடிக்கிறது. இந்நிலையில், குழந்தை சிந்தித்தலுக்கு அவசியமான மொழியைப் பயன்படுத்திக் கருத்துண்மையை (Concept) வளர்த்துக் கொள்கிறது. சான்றாக, இவ்வயதுக் குழந்தைகள் அடையும் அறிவு வளர்ச்சிகள்:

- குழந்தைகள் பொருள்களை ஒரேயொரு குறிப்பிட்ட சிறப்புப் பண்புகளின் அடிப்படையில் வகைப்படுத்துகின்றனர்.
- குழந்தைகள் பொருள்களுக்கு மொழிக் குறியீடுகளைப் பயன்படுத்துகின்றனர்.
- குழந்தைகளால் பொருள்களை ஏறு வரிசையிலோ, இறங்கு வரிசையிலோ அடுக்கிவைக்க முடிகிறது. ஆனால், அவற்றிலிருந்து முடிவுகள் ஏதும் பெற முடியாமல் இருக்கின்றனர்.
- எண்களைப் பயன்படுத்தி, இவ்வயதுக் குழந்தைகளால் எளிய கணக்குப் பயிற்சிகளைச் செய்ய இயலும்.

Downloaded From www.nagaicollege.com

பருப்பொருள் சிந்தனை வளர்ச்சி (Concrete Operations:7 - 11)

பருப்பொருள் சிந்தனை வளர்ச்சியில் ஒரு குழந்தை நிச்சயமான பொருட்களைப் (Concrete Objects) பற்றி, நுண்மையறிவு அடிப்படையில் (Logical Operations) சிந்திக்கத் தொடங்குகிறது. ஒரு பொருளைப் பற்றியும், அதன் உள்ளமைப்பு குறித்தும் குழந்தை விவாதித்து அறிகிறது.

முறையான சிந்தனை வளர்ச்சி (Normal (Operations)

குமரப்பருவத்தை நெருங்கியும், குமரப்பருவத்திலும் உள்ள 11-14 அல்லது 15 வயதுக் குழந்தைகள் முறையான முழுச்சிந்தனை வளர்ச்சியில் ஈடுபடுகின்றனர். இது வரை பருப்பொருளைப் பயன்படுத்தியே சிந்தனையில் ஈடுபட்ட இப்பருவத்தினர், இனிமேல் கருத்தியல் சிந்தனையில் (Abstract Thinking) ஈடுபடத் தொடங்குகின்றனர். முறையான சிந்தனையில் ஈடுபடும் குழந்தைகள் அடையும் அறிவு வளர்ச்சிகள்:

- ஒரு செயலின் பின் விளைவுகளை முன்கூட்டியே கூறுவர்.
- சாத்தியமாகக் கூடிய காரணங்களைக் கண்டறிந்து கூறுவர்.
- கருதுகோள் அமைத்து முடிவுகள் எடுத்து விளக்கமும் அளிப்பர்.

முறையான செயல்நிலை/கருத்தியல் நிலை(Formal Operational Stage) **11 முதல் 15 வயது வரை**

குழந்தை இவ்வயது நிலையில் குமரப்பருவத்தில் அடியெடுத்து வைக்கிறது. கருத்தியல் சிந்தனை இந்நிலையில் குழந்தையிடம் காணப்படுகிறது. கொடுக்கப்பட்டுள்ள சூழ்நிலையின் அடிப்படையில் எதிர்காலத்தில் என்ன நிகழ வாய்ப்புள்ளது என்பது பற்றியும் சிந்திக்க முடியும். பிறர் நோக்கிலிருந்து கருத்துக்களையும், பிரச்சனைகளையும் இவ்வயதினர் பார்க்க முடியும். ஒரு பிரச்சனைக்கான தீர்வுகளை கருதுகோள்களாக இவர்கள் சிந்தித்துப் பார்க்கும் உறவுகள், நெறிமுறைகள், அரசியல் போன்றவற்றின் மீது தங்களது கருத்துக்களை முறைப்படுத்தி வெளிப்படுத்த இவர்களால் முடியும். பிரச்சனைகளுக்குத் தீர்வுகாணும் அறிவியல் சிந்தனையும் இவ்வயது நிலையினரிடம் காணப்படுகிறது. பியாஜே மேற்கண்ட அறிவுப்புல வளர்ச்சி நிலைகளை இயற்கை வளர்ச்சியின் அட்டவணை என வலியுறுத்துகின்றார். குழந்தைகளுக்குக் கருத்தியல் எண்ணங்களைப் புரிந்து கொள்வது என்பது முடியாத ஒன்றாகும். குழந்தை எப்பொழுது பருப்பொருள் எண்ணங்களைப் புரிந்து கொள்கின்றதோ அப்பொழுது தான் அறிதிறன் வளர்ச்சி நிலை தொடங்குகின்றது.

பியாஜே கோட்பாட்டின் கல்விப்பயன்கள்

அறிவு வளர்ச்சிக்கேற்ப கற்பித்தல்

பாடம் கற்பித்தல் மாணவனுடைய அறிவுத்திறனுக்கு ஏற்றாற்போல் அமைதல் வேண்டும். பியாஜே கோட்பாட்டின்படி, புதிய கருத்தினைக் கற்கத் தொடங்குமுன், ஒரு குழந்தை அக்கருத்தைக் கற்பதற்குரிய முதிர்ச்சியும், ஆயத்தமும் பெற்றிருத்தல் வேண்டும். உரிய அறிவும், வளர்ச்சியும் முதிர்ச்சியடையாத குழந்தைக்குக் கணிதம், அறிவியல் பாடக்கருத்துக்களைப் புகுத்துதல் அர்த்தமற்றதாகும். மாணவரின் நுழைவு நடத்தைக்கு ஏற்றாற்போல், கற்பிக்கும் முறைகள் பொருத்தமானதாக இருத்தல் வேண்டும்.

கற்றல் தோல்விக்குக் காரணம்

உண்மையில், ஒரு குழந்தை ஒரு பாடத்தில் தோல்வி அடைவதில்லை. ஏனெனில், குழந்தையின் அறிவு வளர்ச்சிக்குப் பொருந்தாத பாடக்கருத்துக்களை ஆசிரியர் திணிப்பதால்தான் குழந்தையிடம் கற்றல் தோல்விகள் ஏற்படுகின்றன.

பருமப்பொருள் வழியே கற்பித்தல்

இளங்குழந்தைகளுக்குப் பருப்பொருள்களை வைத்துக் கற்பித்தல் வேண்டும். குழந்தைகளுக்கு எளிதில் புலப்படாத நுட்பமான கருத்துக்களைப் புகுத்துதல் கூடாது.

Downloaded From www.nagaicollege.com

நுண்மைக் கருத்துக்களைக் கற்பித்தல்

முதிர் குழந்தைப் பருவத்திலும், குமரப்பருவத்திலும், குழந்தைகளுக்கு முறையான சிந்தனை வளர்ச்சி வந்துவிடுவதால், கணிதம், அறிவியல் பாடங்களில் நுட்பமான கருத்துக்களை மாணவர்களுக்குக் கற்பிக்கலாம்.

வரிசைப்படுத்திக் கற்பித்தல்

பியாஜேயின் கருத்துப்படி அறிவு வளர்ச்சியானது வரிசை முறையாகவும், படிப்படியாகவும் அணுகக்கூடியது. ஒவ்வொரு பருவத்திற்குரிய அறிவு வளர்ச்சிக்கான கருத்துக்களை முழுமையாகக் கற்ற பின்பே அடுத்த அறிவு வளர்ச்சிக்குரிய பாடக்கருத்துகளுக்கு மாணவர்கள் செல்ல வேண்டும். பியாஜேயின் கோட்பாட்டின்படி, ஒவ்வொரு வகுப்புப் பாடத்தையும் முறைப்படியும், முழுமையாகவும் கற்குமாறு மாணவர்களை வலியுறுத்த வேண்டும்.

செய்து கற்றல்

செய்யும் செயல்களின் வழியே அறிவு வளர்ச்சி ஏற்படுகிறது. ஒவ்வொரு மாணவனும் தான் கற்கும் பாடக் கருத்துக்களைச் செயல் வழியே கற்றறிதல் வேண்டும். அவ்வாறு கற்பதால், மாணவர்கள் சிக்கல் தீர்வுத் திறன்களைப் (Problem Solving) பெறுகின்றனர்.

வளர்ச்சிக்கேற்ற ஆற்றல் அனுபவங்கள்

குழந்தையின் ஒவ்வோர் அறிவு வளர்ச்சி நிலைக்கும் ஏற்றவாறு வெவ்வேறு கற்றல்அனுபவங்கள் தரப்படவேன்டும் அவை அறிவு வளர்ச்சியைத் தூண்டுவதாகவும் அமையவேண்டும்.

5.6 காரண - காரியங்களை ஆராய்ந்தறிதல் (REASONING)

காரணங்களை ஆராய்ந்து அறிதல் மற்றும் காரியங்களை ஆராய்ந்து அறிதல் என்பன காரண - காரியங்களை ஆராய்தல் (Reasoning) எனப்படும். இத்தகைய ஆராய்தலானது நிகழ்ச்சிகளையும், பொருட்களையும், உலக உண்மைகளையும் புரிந்துகொள்ள, அறிந்து கொள்ள உதவுகிறது. ஆராய்தலின் போது எது உண்மை, என அறியலாம். எனவே ஆராய்தல் என்பது உயர்நிலை உளச்செயலாக அமைகிறது. ஆராய்ச்சி திறன் ஒருவனுடைய நுண்ணறிவினைக் காட்டுவதாக அமைகின்றது.

காரண - காரியங்களை ஆராய்ந்தறிதல் திறன் இரண்டு வகைப்படும். ஒன்று தொகுப்பாய்வுத் திறன் (Inductive reasoning) மற்றொன்று பகுப்பாய்வுத் திறன் (Deductive reasoning) என்பவையாகும். தொகுப்பாய்வுத்திறன் என்பது பல தனித்த உண்மைகளிலிருந்து பொது உண்மையைத் தொகுத்துப் பெறும் ஆற்றலாகும். பகுப்பாய்வுத்திறன் என்பது பொது உண்மைகளைப் பகுத்து தனித்தனியான நடைமுறை உண்மைகளை பெறும் ஆற்றலாகும்.

5.6.1 காரண-காரியங்களை ஆராய்ந்தறிதல்:-வரையறை

ஏற்கனவே உள்ள தீர்வுகளைப் பயன்படுத்தி, தீர்க்கப்படாத ஒரு பிரச்சினையை கடந்தகால அனுபவங்களை ஒன்றிணைத்து தீர்க்கும் திறன் காரண காரியங்களை ஆராய்ந்தறியும் திறனாகும் - மன் (N.E.Munn)

காரண-காரியங்களை ஆராய்ந்தறிதல் : வகைகள்

1) தொகுத்தறியும் திறன் (Inductive Reasoning)

இம்முறையில் ஒரு குறிப்பிட்ட பிரச்சனையிலிருந்து ஒரு பொது முடிவுக்கு வருவதாகும். பிரச்சனைகளை அலசி, ஆராய்ந்து ஒரு பொதுக்கருத்தை உருவாக்குவது.

2) பகுத்தறியும் திறன் (Deductive Reasoning)

ஏற்கனவே கண்டுபிடித்த அல்லது ஒப்புக்கொண்ட முடிவை ஒரு - குறிப்பிட்ட பிரச்சனைக்குக் கையாளுவதாகும்.

Downloaded From www.nagaicollege.com

5.7 பிரச்சனை தீர்வு கற்றல்

பிரச்சனை தீர்வு கற்றல் : பொருள் (Problem Solving Learning)

கற்றலின் முதிர்ச்சி நிலை இதுவே. இது தனியாளுக்குப் பிரச்சினையைத் திறமையாகத் தீர்ப்பதற்கான ஆற்றலைக் கொடுக்கிறது. தனியாளின் புதிய பிரச்சனைக்கானத் தீர்வுக்குப் புதிய வழிமுறை (idea) தேவையான ஒன்றாகும். ஒன்றைத் திரும்பத் திரும்பச் செய்வதற்குப் பதிலாகப் புதியவற்றைக் கண்டுபிடிப்பதற்குப் பிரச்சனையைத் தீர்த்தல் உதவுகின்றது.

5.8 பிரச்சனையைத் தீர்க்கும் திறன்

ஓர் இலக்கை அடைய முயலும் ஒருவனுக்கு, அவ்விலக்கை அடைய முடியாதபடி, சில தடைகள் குறுக்கிடுமானால், ஒரு பிரச்சனை அவனை எதிர்நோக்கியுள்ளது என்கிறோம். இக்குறுக்கீடுகளைக் கடக்கவே ஆய்வு உதவுகிறது. பிரச்சனையின்றி ஆய்வு இல்லை. பிரச்சனைகளைத் தீர்த்தலில் புதுவழித்தேடல், பொருள் காணல், தேர்வு, உட்காட்சி, திறனாய்வு, படைப்பு போன்ற பல உளச் செயல்கள் அடங்கியுள்ளன. பிரச்சனைகளுக்கு விடைகாணல் காட்சி நிலையிலும் நிகழலாம், கருத்து நிலையிலும் நிகழலாம். பிரச்சனைகளைத் தீர்ப்பதில், தீர்வு காண உதவக்கூடிய வழி முறைகள் எவை எனத் தோன்றுகிறதோ அவற்றைப் பயன்படுத்திப் பார்ப்பது, முயன்று -தவறிக்கற்றல் முறை ஆகும். மற்றோர் அணுகு முறையில், ஒரு பிரச்சனையைத் தீர்ப்பதற்கு என்னென்ன முறைகளைக் கையாளலாமோ அவற்றை அடுத்ததடுத்துக் கையாளுதல் ஆகும். ஜான்டுயி, ஆய்வுச் செயல் 5 முக்கிய படிகளைக் கொண்டது என்கிறார். அவையாவன:

- புதியவற்றை அறிதல்
- செய்திகளைத் தேடித் தொகுத்தல்
- புதிருக்கு விடைகளாக அமையக் கூடிய கருதுகோள்களைத் தோற்றுவித்தல்
- கருதுகோளைச் சரிபார்த்து உண்மையறிதல்
- உண்மையென்று அறிந்த கருதுகோளைப் புதுநிலைகளுக்குப் பயன்படுத்துதல்

5.9 சுய அறிதல் அறிவு

அறிதல் எவ்வாறு அமைகின்றது. அதற்காக நாம் மேற்கொள்ளும் வழிமுறைகள் அறிதல் சரியாக அமைய எவ்வாறு உதவுகின்றன, அவை உதவுகின்றவாறு அவற்றை எவ்வாறு செயல்படுத்துவது என்பதை போன்ற அறிதலைப் பற்றிய விபரங்களை அறிந்து கொள்வது சுய அறிதல் அறிவு அல்லது அறிதலின் அறிதல் என்கிறோம் (Metacognition). அறிதல் (Cognition) என்பது எதைப் பற்றி அறிந்து கொள்ளுகின்றோமோ, அந்தப் பொருளை செயல் மூலமோ, சிந்தனை மூலமோ கையாண்டு அதுபற்றிய விபரங்களை அறிந்து கொள்ளுதல் ஆகும். அறிதலின் அறிதல் என்பது அறிதலை சிந்தனை மூலம் கையாண்டு, அது பற்றிய விபரங்களை அறிந்துணர்தல் எனலாம். அதாவது சிந்தித்து அறிதலின் அறிதல் (Thinking of Thinking) என்பதாகும்.

5.10 சுய அறிதலின் ஆசிரியருக்கான தாக்கங்கள்

சுய அறிதல் என்பது மாணவர்கள் தமது கற்றலை மேன்மைபடுத்திக்கொள்ளவும், கற்கும் போது சிறப்பான உத்திகளைப் பயன்படுத்தவும் உதவுகின்றது. கற்றலில் பல்வேறு அணுகு முறைகள் இருந்தாலும் அவற்றுள் மிகவும் திறன் வாய்ந்த அணுகுமுறை எவ்வாறு கற்க வேண்டும் என்பதை மாணவர்கள் அறிந்துணரச் செய்வதோடு அதை செயற்படுத்திடவும் அவர்களுக்கு போதுமான பயிற்சி அளித்திடல் ஆகும். எத்தகைய கற்றல் உத்தி தனக்கு மிகவும் ஏற்றது என்பதை ஒவ்வொரு மாணவனும் சுய அனுபவத்தின் அடிப்படையில் தெளிவு செய்வதுடன் அதை செம்மையாக நடை முறைப்படுத்திடுவதற்கான பயிற்சியையும் பெற்றிருத்தல் வேண்டும். எத்தகைய கற்றல் முறை சிறப்பானது என்ற அறிவு மட்டும் இருந்தால் போதுதாது. அதனை செயல்படுத்தி, வெற்றியடையும்

Downloaded From www.nagaicollege.com

வழிமுறையில் நேரடியான அனுபவம் பெறுதலும் மிகவும் அவசியமாகும். இவ்விரு கூறுகளில், ஒன்று இல்லாமல் மற்றொன்று பயன் தராது. அறிதலின் அறிதல் என்பது, கற்றலில் இடம் பெறும் அறிவுசார் செயல்களைப் பற்றியும், நன்கு கற்றுத் தேர்ச்சி பெறுவோர், பிற மாணவர்களிடமிருந்து எவ்வாறு வேறுபடுகின்றனர் என்பதைப் பற்றியும் புரிந்து கொள்ள கல்வியாளர்களுக்கு பெரிதும் துணைபுரிகிறது. எனவே, இது கற்பித்தல் செயல்முறையை செம்மைப்படுத்தும் வழிமுறையாகவும் அமைகிறது. ஆசிரியர்கள், மாணவர்களை கற்றலுக்கான பல்வேறு உத்திகளை அறியச் செய்வதுடன், அவற்றை அவர்கள் சுய அனுபவத்தின் மூலம் பழகிப் பயிற்சி பெறவும் உதவுகிறது.

Downloaded From www.nagaicollege.com

அலகு 6 - கற்றல்
UNIT-VI- LEARNING

6.1 கற்றல் : பொருள் (Meaning)

கற்றல் என்பது பள்ளியில் முக்கியப் பங்கு வகிக்கின்றது. "ஒருவரின் நடத்தையில் ஏற்படும் மாற்றமே கற்றல்" எனப்படும். உளவியல் ரீதியில் கற்றல் என்பது தூண்டலுக்கேற்ற துலங்கல் ஆகும். ஆரம்பத் தூண்டல், துலங்களில் சில மாற்றத்தை ஏற்படுத்துகின்றது. மனிதனின் நடத்தையில் தொடர்ச்சியாக மாறுபாடு இருக்கும். எனவே கற்றல் என்பது மாற்றத்தையும், சூழ்நிலைக்கு ஏற்ப இணக்கமாக நடந்து கொள்ளும் முறையுமாகும்.

6.2 கற்றல் வரையறைகள் (Definitions)

கற்றல் என்பதற்கான நிலையான வரையறை கிடையாது. வரையறைகள் அனைத்தும் கற்றலின் பண்புகளை உள்ளடக்கியே உள்ளது. உளவியல் அறிஞர்கள், கல்வி அறிஞர்கள் அவர்களின் கருத்துக்களுக்கேற்ப மாறுபடுகின்றது. கற்றலின் சில முக்கியமான வரையறைகள் பின்வருமாறு :

கேட்ஸ்ஸ் (Gates) என்பவர் அனுபவம், பயிற்சி ஆகியவற்றின் மூலம் எழும் நடத்தை மாற்றமே கற்றல் எனப்படும் என்கிறார்.

ஜி.டி. போயஸ் (G D. Boaz) - "ஒரு தனிமனிதன் பொதுவாக வாழ்க்கையில் பெறக்கூடிய பழக்கவழக்கங்கள், அறிவு, மனப்பான்மை ஆகியவற்றைத் தரக்கூடிய ஒரு செயல் முறையே கற்றல் எனப்படும்".

6.3 கற்றலின் தன்மையும், முக்கியத்துவமும்

கற்றலின் தன்மைகள், கற்றலின் முக்கியப் பண்புகள்

- கற்றல் அனைத்து உயிரிகளிடமும் காணப்படுகிறது.
- கற்றல் தொடர்ச்சியானது.
- கற்றலால் நடத்தை செம்மையடைகிறது.
- கற்றல் நோக்கத்தோடு கூடியது. ஒரு மாணவன் பள்ளியிலும், பள்ளிக்கு வெளியேயும் கற்கக்கூடியவை, குறிக்கோள்கள், மனநிறைவு ஆகியவற்றோடு நெருங்கிய தொடர்புடையவை, நோக்கமில்லாமல் யாரும் எதையும் கற்பதில்லை.
- கற்றல் பன்முகம் கொண்டது. நமது பல்வேறு கற்றல்கள் ஒருங்கிணைந்தவை. ஆய்வு நோக்கங்களுக்காக உளவியலாளர்கள் பல்வகை கற்றல்களை-சொல் சார்ந்த கற்றல், புலன்காட்சி கற்றல், உடலியக்கக் கற்றல், கருத்தமைவுக் கற்றல், மனவெழுச்சிக் கற்றல், பிரச்சினையைத் தீர்க்கக் கற்றல் என் வேறுபடுத்திக் காட்டுகின்றனர். இவ்வாறு வேறுபடுத்திக் காட்டுதல் செயற்கைத்தனமாக இருந்த போதிலும் கற்றலைப் புரிந்து கொள்ள உதவுகின்றன.
- கற்றல் அனுபவங்களால் விளைவது. எனவே, கற்றல் என்பது பிறரால் அளிப்பது அன்று, சுய அனுபவங்கள் வாயிலாக ஒவ்வொருவரும் முயன்று அடைவது.

கற்றலின் முக்கியத்துவம்

மனித நடத்தைக்கு அடிப்படையாக அமைவது கற்றலே. நாம் பேசும் மொழி, நமது பழக்க வழக்கம், நம்பிக்கை, மனப்பான்மை, இலட்சியம், கொள்கை, ஆளுமை குணம், புலன்காட்சி ஆகிய அனைத்திலும் கற்றல் முக்கிய பங்கு வகிக்கிறது. சுவாசித்தல், கண் சிமிட்டுதல், தாயிடம் பால் அருந்துதல், கால் கைகளை உதைத்தல், ஒலியெழுப்புதல் போன்ற மிகச்சில இயல்பு ஊக்கங்களைக் கொண்டு பிறக்கும் குழந்தையானது, கற்றலின் காரணமாகவே, தனது சுற்றுச் சூழலைக் கையாள்வதில் மேம்பட்ட நடத்தையை வெளிப்படுத்த முடிகிறது, இதன் காரணமாகவே

Downloaded From www.nagaicollege.com

அக்குழந்தை தனித்து இயங்குவதிலும், சுயசார்புடையதாக மாறுவதிலும் வெற்றி பெறுகிறது. மற்ற உயிரினங்களைக் காட்டிலும் குழந்தைதான் அதிக காலம் பெற்றோரின் பராமரிப்பில் வளர்கின்றது. எனவே தனது கற்றல் ஆற்றலால் மனிதக் குழந்தை பிற உயிரிகளை விடசிறப்புற்று வலிமை மிக்கதாகத் திகழ முடிகிறது.

6.4 கற்றலின் வகைகள்

கற்றலின் வகைகள் கற்கும் பணியின் தன்மையையும், கற்பவரின் கற்கும் ஆற்றலையும் பொறுத்து பல்வேறு விதமான கற்றல்கள் ஏற்படக் கூடும், கற்கும் வகைகளில் முக்கியமானவை:

- **செய்திறன் கற்றல் (Skill Learning)**
  உடலியக்கத்தை அடிப்படையாகக் கொண்ட ஒடுதல், குதித்தல், நீந்துதல், ஒவியம் வரைதல், நடனமாடுதல், விளையாடுதல், வாகனம் ஒட்டுதல் போன்ற பல்வேறு விதமான திறன்களும் தார்ண்டைக்கின் முயன்று தவறிக் கற்றல் கோட்பாடுபடி கற்றுக் கொள்ளப்படுகின்றன.
- **புலன்காட்சிக் கற்றல் (Perceptual Learning)**
  நம் பணியின் உட்கூறுகள் அமைந்துள்ள விதத்தையும், அவை எவ்வாறு ஒருங்கிணைந்து செயல்படுகின்றன என்பதையும் அறிந்துணர்வதன் மூலம் கற்றல்.
- **பொதுமைக்கருத்துவழிக் கற்றல் (Conceptual Learning)**
  காணப்படும் பொருள்கள் அல்லது காட்சிகள் இவற்றிற்கு இடையே உணரப்படும் பொதுப்பண்பிற்கான பெயரே பொதுமைக் கருத்து (Concept) என்று பெயர். மனப்பான்மை, மற்றும் ஆர்வம் ஆகியவற்றை, ஆக்கநிலையிருத்தம் மூலம் கற்றல்.
- **பின்பற்றிக் கற்றல் (Imitational Learning)**
  இவ்வகையில் அமைந்ததுதான மொழிக்கற்றல். குழந்தைகள், பெற்றோர்கள் பேசுவதை உன்னிப்பாக கவனித்து அதேபோன்று திரும்ப பேசக் கற்றுக்கொள்கின்றனர்.
- **உற்று நோக்கிக் கற்றல் (observational Learning)**
  இவ்வகைக் கற்றலுக்கும், பார்த்தவற்றை அதேமாதிரி திரும்பச் செய்யக் கற்றலுக்கும் உள்ள முக்கிய வேறுபாடு, உற்று நோக்கிக் கற்றலில் தான் பார்த்தது மாதிரி திரும்ப செய்யக் கற்றுக் கொள்ளும் போது தனக்கென்று ஒரு பாணி உருவாக்கிக் கொள்வதுதான். சமூகத்தில் நாம் இயங்கக் கற்றுக் கொள்வது உற்று நோக்கிக் கற்றல் வகையைச் சார்ந்தது.

6.5 தார்ண்டைக்கின் முயன்று தவறிக் கற்றல்

தார்ண்டைக்கு (Thorandike. 1881-1938) ஓர் அமெரிக்கக் கல்வி உளவியலார் ஆவார். இவர் மொழிந்த கற்றல் கோட்பாடு முயன்று தவறிக் கற்றல் என்பதாகும். அவர் ஒரு கூண்டினுள் (Puzzle Box) பசித்த பூனையை வைத்துச் சோதனை செய்து, தனது கற்றல் கோட்பாட்டினை வெளியிட்டார். தார்ண்டைக்கின் கருத்துப்படி, தூண்டலுக்கும், துலங்கலுக்கும் உள்ள உறவை வலுப்படுத்துவதே கற்றல் எனப்படும். முயன்று தவறிக் கற்கும் போதுதான் தூண்டலுக்கும், துலங்கலுக்குமுள்ள தொடர்பு வலுப்படுத்தப்படுகிறது. மேலும், முயன்று தவறிக் கற்கும்போது, சரியான துலங்கல் வலுப்படுத்தப்பட்டது மட்டுமில்லாமல், தவறான துலங்கல் நீக்கப்படுகிறது. தார்ண்டைக்கின் கருத்துப்படி, எந்தவொரு நடத்தையும் அல்லது கற்றலையும் தூண்டல்-துலங்கல் (S-R Units) என்ற அடிப்படை அலகுக்குக் குறைக்க முடியும். எனவே, தார்ண்டைக்கு கற்றலில் நடத்தைக்கு முக்கியத்துவம் அளிப்பதால், இவர் நடத்தைக் கோட்பாட்டாளர் ஆகிறார்.

Downloaded From www.nagaicollege.com

6.6 தார்ண்டைக்கின் கற்றல் விதிகள்

கற்றலின்போது, தவறான துலங்கல் நீக்கப்பட்டு, சரியான துலங்கல்கள் வலுப்படுத்தப்படுவதை விளக்கிடத் தார்ண்டைக்கு மூன்று அடிப்படையான கற்றல் விதிகளை வெளியிட்டார். அவை:

- **விளைவு விதி (Law of Effect)**

  தார்ண்டைக்கின் முதல் கற்றல் விதியின்படி, மகிழ்விக்கக் கூடிய விளைவுகளால், புதிய நடத்தையிலுள்ள தூண்டலும், துலங்கலும் வலுப்படுத்தப்படுகின்றன. ஆனால், திருப்தியளிக்காத அல்லது மகிழ்வளிக்காத விளைவுகளால், நடத்தையிலுள்ள தூண்டலுக்கும், துலங்கலுக்குமுள்ள உறவு வலுவிழக்கிறது. இதையே, இன்னொரு வகையிலும் கூறலாம், அதாவது, பரிசு கிடைக்கும் விளைவை ஏற்படுத்தும் நடத்தை வலுப்படுகிறது. தண்டனை கிடைக்கும் விளைவை ஏற்படுத்தும் நடத்தை மறைகிறது.

- **பயிற்சி விதி** (Law of Exercise)

  தார்ணடைக்கின் இரண்டாவது கற்றல் விதியின்படி ஒரு செயலைத் திரும்பத் திரும்ப செய்யும்போது, தூண்டலுக்கும், துலங்கலுக்குமுள்ள உறவு வலுப்படுத்தப்படுகிறது. அதாவது பயிற்சியானது புதிய நடத்தையைத் தோற்றுவிக்கிறது.

- **ஆயத்த விதி (Law of Readiness)**

  தார்ண்டைக்கின் மூன்றாவது கற்றல் விதியின் படி, கற்போரின் ஆயத்த நிலை தூண்டல், துலங்கலை வலுப்படுத்துகிறது. கற்போரின் ஆயத்தமற்ற நிலையில் தூண்டல், துலங்கல் உறவு வலுவிழக்கிறது.

தார்ண்டைக்கின் சோதனை

தார்ண்டைக்கின் கற்றல் கோட்பாடுகளை அவர் செய்த கூண்டுப் பெட்டிச் (Puzzle Trial and error learning) சோதனையால் அறியலாம். தார்ண்டைக்கின் கூண்டுப்பெட்டி கண்ணாடியாலானது. கண்ணாடிப் பெட்டியில் ஒரு நுணுக்கமான தாழ்ப்பாள் உள்ளது. அதை இழுத்தால், கண்ணாடிப் பெட்டியின் கதவு திறந்துவிடும், அப்பெட்டிக்கு வெளியே வைக்கப்படும் உணவைக் கண்ணாடிப் பெட்டிக்குள்ளிருந்து காண இயலும். இச்சோதனையில், ஒரு பசியுள்ள பூனை கண்ணாடிப் பெட்டிக்குள் வைக்கப்பட்டது. அருகில், கிண்ணத்தில் மீன் உணவு பெட்டிக்கு வெளியே வைக்கப்பட்டது. பசியெடுத்த பூனை, கூண்டுக்குள் அங்குமிங்கும் ஒடியது. பெட்டி திறக்கப்படவில்லை. அவ்வாறு பெட்டிக்குள் பூனை அலையும் போது தற்செயலாகத் தாழ்ப்பாளை பூனை தட்டிவிட, கண்ணாடிப் பெட்டியின் கதவு திறக்க, பூனை வெளியே வந்தது. உணவு கிடைத்தது. இதே சோதனை பல நாட்கள் தொடர்ந்து செய்யப்பட்டது. பின்னர் வந்த நாட்களில், பூனை அங்குமிங்கும் ஓடாமல் கதவைத் திறப்பதற்கான கம்பியை எளிதில் இழுத்தது. இச்சோதனையில், பூனை முயன்று தவறிக் கற்றல் முறையில் கண்ணாடிக் கதவைத் திறக்கக் கற்றுக் கொண்டது.



எளிதாகக் கதவைத் திறக்கும் செயலானது, பூனையிடம் வலுப்படக் காரணம் பூனை பசியோடு இருந்ததாலும் (ஆயத்த விதி) பூனைக்கு உணவு கிடைத்ததாலும் (விளைவு விதி) பல முறை பூனை திரும்பத் திரும்ப முயன்றதாலும் (பயிற்சி விதி) எனக்கூறலாம், எனத் தார்ண்டைக்கு முடிவு செய்தார். கல்விப் பயன்கள் தார்ண்டைக்கின், கற்றல் கோட்பாட்டினால், ஆசிரியர், தனது கற்பித்தல் முறைகளைக், கீழ்க்கண்டவாறு மாற்றிக் கொள்ள வேண்டும். அவை:

Downloaded From www.nagaicollege.com

- **மாணவரின் ஆயத்த நிலைக்கேற்ப கற்பித்தல்**
  ஒவ்வொரு செயலைத் திறம்படச் செய்வதற்கும், அதற்குரிய உடல்சார்ந்த முதிர்ச்சி அவசியம். எழுத்துப்பயிற்சி, விளையாட்டுப் பயிற்சி ஆகிய செயல்களில் மாணவர்களை ஈடுபடுத்துவதற்கு முன்னர், செயல்களைச் செய்வதற்கு உரிய உடல்சார்ந்த முதிர்ச்சி அவசியம். ஒரு பாடக்கருத்தினைக் கற்பிக்கத் தொடங்குமுன். அக்கருத்தினைக் கற்றுப் புரியும் அளவிற்கு மாணவர்களிடம் மன ஆயத்தத்தை ஆசிரியர்கள் உறுதிப்படுத்துதல் வேண்டும்
- **கற்பித்தலில் பரிசும், தண்டனையும்**
  ஆசிரியர் மாணவரிடம் என்ன நடத்தையை வலுப்படுத்த விரும்புகின்றாறோ, அந்நடத்தையை மாணவர் வெளிப்படுத்தும் போது, அம்மாணவருக்கு ஆசிரியர் பரிசுகள், பாரட்டுதல், புகழ்தல் ஆகியன வழங்கிடுதல் வேண்டும். மாணவரிடம் என்ன நடத்தையை நீக்கிட விரும்புகின்றாறோ, அந்நடத்தையை மாணவர் வெளிப்படுத்தும் போது ஆசிரியர் தண்டனை, இகழ்தல், கடுஞ்சொல் ஆகியவற்றை வழங்கிடுதல் வேண்டும்.
- **அதிகமான பயிற்சிகள் வழங்குதல்**
  மாணவர்களிடம் ஒரு நடத்தை செம்மைபுற வேண்டுமெனில், அம்மாணவர்கள் கற்கும் புதிய செயலில் மிகுந்த பயிற்சிகளை ஆசிரியர் வழங்குதல் வேண்டும்.
- **ஊக்குவித்தலும், ஆர்வத்தைத் தூண்டுதலும்**
  ஒரு புதிய செயலைக் கற்பதற்கான அவசியத்தை மாணவரிடம் ஆசிரியர் விளக்குதல் வேண்டும். கற்றலின் மீது மாணவர்களுக்குத் விருப்பையும், ஆர்வத்தையும் ஆசிரியர் ஊட்டுதல் வேண்டும்.
- **தெளிவான கற்றல் குறிக்கோள்கள்**
  மாணவர்கள் அடைய வேண்டிய கற்றல் குறிக்கோள்கள் மாணவரின் திறமையைச் சோதிப்பதாக இருத்தல் வேண்டும், சிறப்பான கற்றல் குறிக்கோள்களால் மாணவர்கள் ஊக்கம் பெறுவதாக இருத்தல் வேண்டும்.

6.8 பாவ்லோவின் பழைய ஆக்க நிலையிறுத்தல்

பாவ்லோவின்-பழைய ஆக்க நிலையிறுத்தல் என்பது ஓர் அடிப்படையான கற்றல் கோட்பாடாகும். இக்கோட்பாட்டினை ரஷ்ய நாட்டு உடலியல் அறிஞரான பாவ்லோவ் (Ivan Pavlov - 849-1936). ஒரு நாயினை வைத்துச் சோதனை நடத்தி வெளியிட்டார். ஆக்க நிலையிறுத்தல். குறித்து, இன்று பல புதிய கோட்பாடுகள் வெளிவந்துள்ளன. இன்றைய புதிய கோட்பாடுகளுக்கு பாவ்லோவின் கோட்பாடு முன்னோடியாகவும், அடிப்படையாகவும் விளங்குவதால், இது பழைய ஆக்கநிலையிறுத்தல் எனப்படுகிறது. ஒரு செயற்கையான புறத்தூண்டலுக்கு, இயற்கைத் துலங்கலை வெளிப்படுத்துதல் பழைய ஆக்கநிலையிறுத்தல் எனப்படும்.

பாவ்லோவ் சோதனை

பாவ்லோவ் சோதனை் ஆக்க நிலையிறுத்தல் பற்றிய கருத்துக்களை பாவ்லோவ் நாயினை வைத்து நடத்திய சோதனையால் நன்கு விளக்கிட முடியும். நாய் ஒன்றினை கூண்டிற்குள் வைத்து, அதன் வாயில் சுரக்கும் உமிழ்நீரினை அளக்கும் கருவி ஒன்று இணைக்கப்பட்டது. கூண்டிற்குச் சற்று தொலைவில் மணியொன்று கட்டப்பட்டு மணியொலி கேட்குமாறு அடிக்கப்பட்டு வந்தது. முதலில் நாய் மணியொலிக்கு உமிழ்நீரினைச் சுரக்கவில்லை. இரண்டாம் மணியொலி ஏதும் எழுப்பாமல் நாய்க்கு உணவு அளிக்கப்பட்டது. இப்பொழுது நாய் உணவைக் கண்டதும் உமிழ்நீரினைச் சுரந்தது. மூன்றாவதாக, மணியொலி எழுப்பிய சில வினாடிகளில், நாய்க்கு உணவு வழங்கப்பட்ட உணவைக் கண்டதும், நாய் உமிழ்நீரினைச் சுரந்தது. பல நாட்களுக்கு மணியொலி எழுப்பி,

Downloaded From www.nagaicollege.com

உடனே நாய்க்கு உணவு அளிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சி, தொடர்ச்சியாகப் பல நாட்கள் நடந்தது. நான்காவதாக, மணியொலி மட்டும் எழுப்பப்பட்டது, நாய்க்கு உணவு ஏதும் வழங்கப்படவில்லை. இந்நிலையில் நாய் மணியொலி கேட்டவுடன் உமிழ்நீரினைச் சுரந்தது. அதாவது, உணவு தராமல் கூட, நாய் மணியொலி கேட்டவுடன் உமிழ்நீரினைச் சுரக்கக் கற்றுக் கொண்டது. முதன் முதலில் மணியொலி கேட்டால், உமிழ்நீரினைச் சுரக்கத் தெரியாத நாய், அதே மணியொலிக்கு உமிழ்நீரினைச் சுரக்கக் கற்றுக் கொண்டது. இச்சோதனையில், உணவுக்கு (இயற்கைப் புறத்தூண்டல்) மட்டும் உமிழ்நீரினைச் சுரக்கக் கற்றிருந்த நாய், மணியொலிக்கும் (செயற்கைப் புறத்தூண்டல்) உமிழ்நீரினைச் சுரக்கக் கற்றுக் கொண்டது. பழைய ஆக்கிநிலையிறுத்தம் எனப்படுகிறது, இதில் நாய் தன் விருப்புக்கு உட்படாத செயலைக் (மணியொலிக்கு உமிழ்நீர் சுரப்பது) கற்றுக் கொண்டுவிட்டது. பாவ்லோவ் சோதனையின் செயல்முறைகளை கீழ்கண்டவாறு சுருக்கமாக விளக்கலாம்,



தூண்டல்	துலங்கல்
உணவு	உமிழ்நீர் சுரத்தல்
உணவு மணியொலி	உமிழ்நீர் சுரத்தல்
மணியொலி	உமிழ்நீர் சுரத்தல்

இதில் உணவு என்பது இயற்கைப் புறத்தூண்டல், மணியொலி என்பது செயற்கைப் புறத் தூண்டல் ஆகும்.

கல்விப் பயன்கள்

- அழைப்பு மணிக்கு எழுந்து சென்று கதவைத் திறத்தல், சிவப்பு விளக்கைப் பார்த்தவுடன் வண்டியை நிறுத்துதல் போன்ற நடத்தைகளை பழைய ஆக்கநிலையிறுத்தல் வழியே நாம் கற்றுக் கொள்கிறோம்.
- குழந்தையின் தவறான மனவெழுச்சிகளையும், பயவுணர்வுகளையும் கண்டறிந்து அவற்றை நீக்குவதற்கு ஆசிரியர் முயலுதல் வேண்டும்

6.8 ஸ்கின்னரின் செயல்பாடு ஆக்கநிலையிறுத்தம்

பி. எப். ஸ்கின்னர் (B. F Skinner) ஓர் அமெரிக்க உளவியலாளர், நடத்தையியல் கோட்பாட்டாளர்.

ஹார்வேர்டு பல்கலைக் கழகத்தில் உளவியல் துறையில் பேராசிரியராக பணிபுரிந்தார், அவர் தன்னுடைய முனைவர் பட்டத்தை ஹார்வேர்டு பல்கலைக் கழகத்தில் இருந்து 1939ஆம் ஆண்டு பெற்றார். ஸ்கின்னர் மின்னிசொட்டா மற்றும் இண்டியான பல்கலைக்

Downloaded From www.nagaicollege.com

கழகங்களிலும் பேரசிரியராகப் பணிபுரிந்தார். அவர் தனது வாழ்நாளில் கடைசி நாட்களில் கூட உளவியல் தொடர்பான செயல்பாடுகளில் எழுவதிலும், சொல்வதிலும், சொற்பொழிவிலும் ஈடுபட்டார். ஸ்கின்னர் தனது படைப்புகள் பற்றி இறப்பதற்கு பதினைந்து நிமிடங்களுக்கு முன்பு கூட சொற்பொழிவு ஆற்றிகொண்டிருந்தார். இறப்பதற்கு சில நாட்களுக்கு முன்பு அவருக்கு அமெரிக்க உளவியல் சங்கம் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கவுரவித்தது, வலுவூட்டலை செம்மைப்படுத்த வேண்டும் என்றால் தூண்டல் வலுவுள்ளதாக இருக்க வேண்டும் என்ற கருத்தைப் பறைசாற்றினார். செயல்படு ஆக்கநிலையுறுத்தல் கோட்பாட்டைப் பரிசோதனை மூலம் நிரூபித்தார். நடத்தையியல் தொடர்புடைய கருத்துகளை அவர் தாம் எழுதிய இருபத்தொரு புத்தகங்களிலும் 180 சிறு கட்டுரைகளிலும் வெளியிட்டுள்ளார்.

இவ்வகைக் கற்றலில், கற்பவரே இயங்கிச் செயல்படுவதால் இது செயல்படு ஆக்கநிலையிறுத்தல் எனப்படுகிறது, செயல்படு ஆக்க நிலையிறுத்தல் என்னும் கல்விக் கோட்பாடு, கற்பவர் தன் விருப்பமுடன் இயங்கி வெளிப்படுத்தும் செயல்களைப் பற்றி விளங்குகிறது. கற்பவரின் ஒரு செயலைப் பாராட்டிப் பரிசு - தந்தால், அவர் அச்செயலை அவர் திரும்பவும் செய்வார் என்பது ஸ்கின்னர் கல்விக் கோட்பாட்டின் அடிப்படையாகும். ஸ்கின்னர், கோட்பாட்டின்படி, செயல்படு ஆக்கநிலையிறுத்தல் நடைபெற மூன்று வெளிக்கட்டுப்பாடுகள் அவசியம். அவை:

- கற்பவரின் செய்லை வலுப்படுத்திட ஒரு தூண்டல் இருத்தல் வேண்டும்
- கற்பவர் செயலை வெளிப்படுத்தியவுடன் அத்தூண்டல் வழங்கப்படுதல் வேண்டும்
- செயல் வெளிப்படும் ஒவ்வொரு முறையும் அத்தூண்டல் தொடர்ந்து பலமுறை வழங்கப்படுதல் வேண்டும்

இத்தகைய கற்றலில் கற்பவரே ஒரு செயலைச் செய்தல் அல்லது இயக்குதல் ஓர் உள் கட்டுப்பாடாகும்.

6.9 ஸ்கின்னர் சோதனையின் கல்விப் பயன்கள்

ஸ்கின்னர் சோதனைப் பெட்டியில் எலியை விட்டவுடன், கொக்கியை அழுத்தி உணவைப் பெறுவது என்பது தெரியாமல் எலி, அங்குமிங்கும் ஓடியது அவ்வாறு ஓடும்போது, எதிர்பாராத விதமாகக் கொக்கியை எலி அழுத்திட எலிக்கு உணவு கிடைத்தது. உணவை உண்ட எலி மேலும் பெட்டிக்குள் ஓடிய பொழுது கொக்கியை அழுத்த, எலிக்கு மீண்டும் உணவு கிடைத்தது. இதுவரை, கொக்கியை அழுத்தினால் உணவு கிடைக்கும் என்பதைக் கற்றுக் கொள்ளாதிருந்த எலி, அச்செயலைக் கற்கிறது. பின்பு உணவு வேண்டும்போதெல்லாம் அங்குமிங்கும் ஓடாமல் நேரடியாகக் கொக்கியை அழுத்தி உணவைப் பெறுவதைக் கற்றுக் கொள்கிறது. இச்சோதனையில், கொக்கியை அழுத்துதல் என்ற செயலைச் (operant) செய்ய, உணவுதான் தூண்டலாக (Stimulus) விளங்குகிறது. கொக்கியை அழுத்தும்போதெல்லாம் உணவு என்ற பரிசு கிடைத்து விடுவதால் கொக்கியை அழுத்தும்போது எலிக்கு உணவு கிடைக்காமல் இருந்திருக்குமேயானால் கொக்கியை அழுத்தும் செயலை எலி எளிதில் கற்றிருக்க முடியாது என்பது ஸ்கின்னரின் கருத்து. கல்விப் பயன்கள் ஸ்கின்னரின் செயல்படு ஆக்கநிலையிறுத்தல், ஆசிரியருக்குப் புதிய பயிற்சிகளையும் பயன்களையும் தந்துள்ளது. அவை:

கற்றல் குறிக்கோள்கள் தயாரித்தலும், கற்பித்தலும்

ஆசிரியர் நடத்த வேண்டிய பாடப்பொருளைச் சிறிய கருத்துகளாக பிரித்துக் கொள்ளுதல் வேண்டும். ஒவ்வொரு கருத்தினையும், மாணவரின் செய்கைகளில் வெளிப்படும் நடத்தையாக வரையறுத்தல் வேண்டும். ஆசிரியரது காணக்கூடிய மாணவரின் நடத்தைகளே கற்பித்தல் குறிக்கோள்கள் ஆகும். இக்குறிக்கோள்களை அறிவுக்குத் தகுந்த வகையில் வரிசைப்படுத்தி ஆசிரியர் கற்பித்தல் வேண்டும். ஒவ்வொரு கற்பித்தல் குறிக்கோள்களையும் மாணவர் வரிசையாகக் கற்றுததேர் வேண்டும்.

Downloaded From www.nagaicollege.com

பரிசு அல்லது வலுவூட்டம் வழங்குதல்

பின்னூட்டம் வழங்குதல் (Feedback)

மாணவர் சரியான விடை தரும் போதெல்லாம், உடனடியாக அம்மாணவருக்குச் சிறிய பரிசு அல்லது புகழ்ச்சி வலுவூட்டமாகக் (Reinforcement) கிடைக்க வேண்டும்.

பாடத்தைத் திட்டமிடுபவர்

ஆசிரியர் வகுப்பறையில் பாடம் கற்பிப்பவர் என்பதைத்தாண்டி பாடங்களைத் திட்டமிடுபவர் என்ற நிலை உருவாகிறது.

ஆசிரியர்-மாணவர் சந்திப்பு

கற்கும் நூல்களோ, கற்பித்தல் கருவிகளோ மாணவருக்குக் கிடைத்துவிட்டால் அம்மாணவர் ஆசிரியரைச் சந்திக்கும் வாய்ப்பே இல்லாமல் போய்விடும்.

கற்றல் வளமையம்

கற்கும் நூல், கற்பித்தல் கருவிகள் ஆகியன இருந்துவிட்டால், இப்பொழுது பள்ளிகளில் காணப்படும் விசாலமான அறைகளைப் போல் ஏதும் தேவையிராது. வகுப்பறை ஒரு கற்றல் வளங்களைக் கொண்ட மையமாகும்.

சூழலைக் கட்டுப்படுத்துதல்

ஒரு மாணவரின் நடத்தையை மாற்ற விழையும் ஆசிரியர் சூழலைக் கட்டுப்படுத்துவதின் வழியே மாணவரின் நடத்தையை மாற்ற முடியும்.

கோஹ்லரின் உட்காட்சிக் கற்றல்

கோஹ்லரின் ஒரு ஜெர்மானிய உளவியலார். இவர் கூறிய கற்றல் கோட்பாடு உட்காட்சிக் கற்றல் எனப்படுகிறது. இவர் மனிதக் குரங்குகளை வைத்துத் தன் சோதனைகளைச் செய்தார். இவருடைய கற்றல் கோட்பாடானது, பின்னர் தோன்றிய பல அறிதல் சார்ந்த கற்றல் கோட்பாடுகளுக்கு முன்னோடியானதாகும். கற்றலானது வலுவூட்டும் தூண்டலால் நிகழும் நடத்தை அல்ல என்பது கோஹலரின் கருத்தாகும். மாறாக, புறச்சூழலில் உள்ள தூண்டல்களை வேறுபடுத்தியும், அவற்றை தொடர்படுத்தியும் காணுதல் உட்காட்சிக் கற்றல் எனப்படும். உட்காட்சிக் கற்றலில், ஒரு குழந்தை ஒரு சிக்கலுக்கான தீர்வைத் தானே கண்டுபிடிக்கிறது. இதில் புறச்சூழலிலுள்ள ஒரு சிக்கல் புரிந்து கொள்ளப்படுகிறது. கற்றலுக்கு அடிப்படையாக உட்காட்சி (Insight) அல்லது சிந்தனை விளங்குகிறது.

கோஹ்லரின் சோதனை. கல்விப்பயன்கள்



கோஹ்லரின் சோதனை: உட்காட்சி பற்றிய கருத்துக்களை கோஹ்லர் மனிதக்குரங்கினை வைத்து நடத்திய சோதனையால் நன்கு விளங்கிக் கொள்ள முடியும். சுல்தான் (Sultan) என்னும் அறிவாற்றல் அதிகமுள்ள ஒரு மனிதக் குரங்கு ஒரு கூண்டில் வைக்கப்பட்டது. கூண்டிற்கு மேலே - சுல்தானுக்கு எட்டாத உயரத்தில் வாழைப்பழங்கள் தொங்க விடப்பட்டன. கூண்டிற்குள் ஒரிடத்தில் இரு குச்சிகள் வைக்கப்பட்டிருந்தன. இவை ஒவ்வொன்றும் பழத்திற்கு எட்டாத அளவுக்குக் குட்டையானவை. இவையிரண்டினையும் இணைத்து விட்டால் பழத்தை எட்டித்தொடும் வகையில் நீளமானவை. இரு குச்சிகளும் இணைப்பதற்கு ஏற்றவாறு செய்யப்பட்டவை. முதலில் சுல்தான் குச்சிகளை வைத்துப் பழத்தைத் தொட்டது, பழங்கள் எட்டவில்லை. பின்னர் சுல்தான்,

Downloaded From www.nagaicollege.com

அக்குச்சிகளை வைத்து விளையாடும் போது, இரு குச்சிகளையும் இணைத்து நீளமான குச்சியாக்கிப் பார்த்தது. அச்சமயம் சுல்தானுக்கு, உட்காட்சிக் கற்றல் நிகழ்ந்தது. அதாவது நீளமான குச்சியைக் கருவியாகப்பயன்படுத்தி பழத்தை எட்ட முடியும் என்ற உட்காட்சி சுல்தானிடம் தோன்றிவிட்டது. இணைந்த நீளமான குச்சியால், சுல்தான் பழத்தைப் பெற்றது, அடுத்தடுத்த நாட்களிலும் இச்சோதனை நடத்தப்பட்டதில் சுல்தான் பழத்தை எட்டுவதற்கு எடுத்துக் கொண்ட நேரம் வெகுவாகக் குறைந்தது. இச் சோதனையில், சுல்தான் பழத்தைப் பெறுவதை முயன்று தவறிக் கற்கவில்லை என்றும், புறச்சூழலிலுள்ள குச்சிகளுக்கும், பழத்திற்கும் இடையே சுல்தான் தொடர்புபடுத்திப் பார்த்ததால் மட்டுமே உட்காட்சிக் கற்றல் நிகழ்ந்தது என்றும் கோஹ்லர் விளங்கினார். கல்விப்பயன்கள் கோஹ்லரின் சோதனை முடிவுகளானது, ஆசிரியரின் கற்பித்தல் முறையில் புதிய மாறுதல்களை வலியுறுத்துகின்றன.

கல்விப்பயன்கள்

- **ஆசிரியர் கற்றலில் உதவியாளர் (Facilitator of learning)**
  ஆசிரியர் மாணவரின் கற்றலுக்கு உதவக்கூடியவர். எனவே, ஆசிரியர் வளமான கற்றல் சூழலை மாணவர்களுக்கு அமைத்துத் தருதல் வேண்டும். செய்திகளைத் கற்க்கும் விரிவுரை முறையை ஆசிரியர் கைவிடுதல் வேண்டும்.
- **தானே கற்றல் (Independent Study)**
  கற்றல் என்பது மாணாக்கரே செய்யப்பட வேண்டிய செயல். எனவே, மாணவரே செய்து கற்க ஆசிரியர் தூண்டுதல் வேண்டும். இதற்காக, ஆசிரியர் பல செயல் திட்டங்களை மாணவருக்கு வழங்குதல் வேண்டும்.
- **சிக்கலுக்கு தீர்வு காணல் (Problem Solving);**
  மாணவர் தானாகவே சிக்கலுக்குத் தீர்வு காணும் வகையில் ஆசிரியர் கற்றல் செயல்களை அமைத்துத் தருதல் வேண்டும். மாணவரே கண்டறிந்து கற்கும் முறையை ஆசிரியர் ஊக்குவித்தல் வேண்டும்
- **விதிகளைக் காணக் கற்பித்தல் (Inductive Reasoning)**
  ஆசிரியர் பாடம் நடத்துகையில், விதிகளை நேரடியாகக் கூறுதல் கூடாது. ஆசிரியர் விதிகளுக்குரிய சான்றுகளை மட்டுமே தருதல் வேண்டும். மாணவர்கள் தாங்களாகவே விதிகளைக் காணும் வகையில் கற்பித்தல் அமைய வேண்டும்.
- **முழுமையான அனுபவம் (Whole Experience)**
  மாணவர்கள் கண்டுபிடித்துக் கற்க வேண்டுமானால் அவர்களுக்குப் புறச்சூழலில் முழுமையான அனுபவம் அவசியம். பாடம் நடத்துவதற்கு முன், பாடத்தைப் பற்றிய முழுமையான சுருக்கம் தரப்படுதல் வேண்டும். பாடத்தைப் மற்றவற்றுடன் தொடர்பு படுத்திக்கற்க வேண்டும்.

6.10 காக்னேயின் அடுக்குக் கற்றல்

இராபர்ட் எம்,காக்னே ஒரு அமெரிக்க நாட்டுக் கல்வி உளவியலாளர் ஆவார். இவர் பள்ளிக் குழந்தைகள் கற்கும் விதத்தை என்பதை விளக்கிட ஒரு கற்றல் கோட்பாட்டினை வழங்கினார். அது படிநிலைக் கற்றல் கோட்பாடு எனப்படுகிறது. காக்னே கோட்பாடு கற்றலைப் பல படிநிலைத் தன்மை உடையதாகக் கருதுகிறது. அவரின் கருத்துப்படி

- கற்றல் என்பது ஒரே ஒரு நடத்தை மாற்றத்தை மட்டும் குறிப்பது அல்ல, மாறாக கற்றல் என்பது பலவித நடத்தை மாற்றங்களைக் குறிக்கிறது.

Downloaded From www.nagaicollege.com

- படிநிலைக் கற்றல், பல படிநிலைத்தன்மை உடையது. எனவே, உயர்நிலையிலுள்ள ஒரு கற்றல் நிகழ வேண்டுமானால் அதன் கீழ்நிலையிலுள்ள பிற கற்றல் வகைகளை ஒருவர் நன்கு கற்றுத் தேர்ந்திருப்பது அவசியம்
- கற்றல் என்பது நடத்தையையும், சிந்தனையையும் உள்ளடக்கிய ஒரு செயல்

6.11 காக்னேயின் எட்டுவகைக்கற்றல்-விளக்கம்

காக்னே என்னும் கற்றல் அறிஞர் கற்றல் சூழல்கள் என்னும் தனது நூலில் எட்டு வகையான கற்றல் வகைகளை - கற்றலில் எளிதாக தொடங்கிச் சிக்கலான கற்றல் வரை - விளக்குகிறார்.

- **குறியீட்டுக் கற்றல்**
  ஒரு குறியீட்டுக்கு மனவெழுச்சித் துலங்கலை வெளிப்படுத்துதல், குறியீட்டுக் கற்றல் எனப்படும். இதில் ஒரு தூண்டலுக்குப் பதிலியாக மதிப்பு விளங்கும் குறியீட்டுத் துலங்கல் வெளிப்படுத்தப்படுகிறது.
- **தூண்டல் துலங்கல் கற்றல்**
  ஒரு தூண்டலுக்கு உடலின் தசை உறுப்புகளைப் பயன்படுத்திக் குறிப்பிட்ட தெளிவான துலங்கலை வெளிப்படுத்துதல் தூண்டல் துலங்கல் கற்றல் (Stimulus-Respense Learning) எனப்படும்.
- **தொடர் செயல் கற்றல்**
  முன்னரே கற்றிருந்த பல தூண்டல் துலங்கல்களை ஒன்றாக இணைத்துப் புதிய துலங்கலை வெளிப்படுத்துதல் தொடர் செயல் கற்றல் (Chain 1.earning) எனப்படும்.
- **சொல் இணைத்துக் கற்றல்**
  ஒரு தூண்டலுக்கு உரிய சொல்லை அத்தூண்டல் உடன் இணைத்துச் சொல்லக் கற்பது சொல் இணைத்துக் கற்றல் (Verbal Association) எனப்படும்.(உ-ம்): ஒரு பொருளைப் பெயரிட்டு அழைத்தல்.
- **வேறுபடுத்திக் கற்றல்**
  ஒரே மாதிரியான தூண்டல் தொகுதிகளையுடைய பொருள்களில் அல்லது மனிதர்களில் காணப்படும் புற வேறுபாடுகளை வைத்து, அதற்கேற்றவாறு வெவ்வேறு துலங்கலை வெளிப்படுத்துதல் வேறுபடுத்திக் கற்றல் (Discriminatin Learning) எனப்படும்.(உ-ம்): மாணவரை ஆசிரியர் சரியாகப் பெயர் சொல்லி அடையாளம் காணுதல்.
- **கருந்துளைக் கற்றல்**
  பொதுவான நுண்மைப் பண்புகளின் அடிப்படையில் மனிதர்களையும், பொருள்களையும் வகைப்படுத்தல் என்பது கருத்துமையக் கற்றல் (Concept Learning) எனப்படும். இங்கு பொதுமைக் கருத்து உருவாகிறது. (உ-ம்): மனிதர்கள்,விலங்குகள் என வகைப்படுத்துதல்.

Downloaded From
www.nagaicollege.com

- **கொள்கைகளைக் கற்றல்**
  இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கருத்துகளுக்கு இடையேயுள்ள தொடர்பினைப் புரிந்து கொள்ளுதல், கொள்கைகளைக் (Principle learning) எனப்படும்.(உ-ம்): உயிர் வாழ உணவு அவசியம்.
- **சிக்கலுக்குத் தீர்வு முலம் கற்றல்**
  ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துகள், விதிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி, முற்றிலும் புதிய சிக்கலுக்கு விடை காணுதல், சிக்கலுக்குத் தீர்வு முலம் கற்றல் (Problem Solving) எனப்படும்.(உ-ம்): கணக்கிற்கு தீர்வு காணுதல்,

6.12 கற்றல் பாதைகள் அல்லது கற்றல் வளைகோடுகள்

கற்றலின் வளர்ச்சியை ஒரு வரைபடமாக விளக்குதல் கற்றல் வளைகோடு ஆகும். இதனை கற்றல் பாதை என்றும், பயிற்சிப்பாதை என்றும் குறிப்பிடுவதுண்டு. கற்றல் பாதையின் உருவம் கற்கும் விதத்தைப் பொறுத்தது. அனைவரது கற்றல் பாதையும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. ஒருவர் எத்தகைய செயலைக் கற்கிறார், அவரது கற்கும் திறன் எத்தன்மையது, அவரது ஆர்வம் எத்தகையது என்பவற்றைப் பொறுத்தே அவரது கற்றல் பாதை அமையும். மூவகை கற்றல் வளைகோடுகள் கண்டறியப்பட்டுள்ளன.

உடன்பாட்டு முறையில் முன்னேற்றம் அமைந்த (Positively Accelerated). கற்றல் வளைகோடு வார்த்தைகளை மனப்பாடம் செய்தல், செய்திறன்களைப் பயன்படுத்தி முடித்துவிடும் எளிய வேலைகள் போன்றவற்றை செய்திடும்போது இத்தகைய வளைகோட்டினைப் பெறுகிறோம். இத்தகைய வளைகோட்டில் கற்றலின் பயிற்சிக்காலம் அதிகரிக்க அதிகரிக்க, விளைபயனும் அதிகரித்துக் கொண்டே செல்லும்.

எதிர்மாறான முன்னேற்றத்தைக் காட்டும் கற்றல் வளைகோடு ஆரம்ப நிலையில் கற்றலின் விளைபயன் அதிகமாகவும், போகப் போக விளைபயன் குறைந்து கொண்டே செல்லும் நிலையினைக் காட்டும் வரைபடம், எதிர்மாறான முன்னேற்றத்தைக் காட்டும் கற்றல் வளைகோடு எனப்படும், கற்கும் பொருள் போகப்போகக் கடினமானதாக அமைந்திருப்பதும், தொடக்கத்தில் எளியவற்றைக் கற்றுப் பிறகு கடினமானவற்றைக் கற்க முற்படுவதும், கற்றல் தொடங்கியபோது காணப்பட்ட ஆர்வம் காலப்போக்கில் குறைந்திடுவதும் எதிர்மாறான முன்னேற்றத்தைக் காட்டும் மற்றும் வளைகோடு அமைவதற்கான காரணங்களாகும்.

6.13 அமைப்பு கொண்ட கற்றல்

கற்றலில் ஏற்ற இறக்கங்களைக் கொண்டு அமையும்போது, அதன் அடிப்படையில் பெறப்படும் கற்றல் வளைகோடு அமைப்பு கொண்டதாயிருக்கும். கற்றலின் ஆரம்ப நிலையில் அதிக முன்னேற்றமின்றி சுணக்கநிலை ஏற்படுகிறது. கற்பவருக்கு அக்காரியம் அதிக பரிச்சயம் இல்லாததாலும், அப்பணிக்கு தன்னை தயார்படுத்திக் கொள்ளாததாலும் காலதாமதம் ஏற்படுகிறது. நான் கற்றலில் கனிசமான நேரம் ஈடுபடும்போது, பயிற்சியின் காரணமாக, காலதாமதமின்றி காரியம் மிகச் சுலபமாக அதிக வேகத்துடன் கற்றுக் கொள்ளப்படுகிறது.

இதைத் தொடர்ந்து, கற்றலில் தேக்கநிலை ஏற்படுகிறது. அதாவது கற்றலில் அதிக பலன் இன்றி, ஏற்ற-இறக்கம் இன்றி ஒரே நிலையில் கற்றலின் பலன் இருக்கிறது. அதாவது, பயிற்சி அதிகரிப்பினால் தேர்ச்சி நிலையில் மாற்றம் இல்லாதது போன்ற தோற்றம் ஏற்படுகிறது. தேக்கநிலையில் மனம் தளராமல் பயிற்சியில் ஈடுபடும்போது சீரான முன்னேற்றம் தொடர்ந்து ஏற்படுகிறது. சீரான முன்னேற்றத்தைத் தொடர்ந்து உச்ச நிலை அடைகிறது. இது நபருக்கு நபர் அளவில் மாறுபடுகிறது. உச்ச நிலையைத் தொடர்ந்து, தளர்வு ஏற்பட்டு தேர்ச்சி நிலை படிப்படியாகக் குறைய ஆரம்பிக்கின்றது.

Downloaded From www.nagaicollege.com

6.14 கற்றல் மாற்றம்

கற்றல் மாற்றம் என்பது ஒரு கற்றல் நிகழ்வில் பெறப்பட்ட அறிவு, செய்திறன்கள், பழக்கங்கள், மனப்பான்மை போன்ற எந்த அனுபவக் கூறும் பிரிதொரு கற்றல் நிகழ்வுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, தாக்கத்தை ஏற்படுத்துவதே கற்றல் மாற்றம் எனப்படும். முந்தைய கற்றல் அனுபவம் தற்போதைய கற்றலில் ஏற்படுத்தும் தாக்கத்தின் தன்மையைப் பொறுத்து கற்றல் மாற்றம் கீழ்க்கண்டவாறு வகைப் படுத்தப்படுகின்றன:

ஒரு குறிப்பிட்ட பாடத்தை நாம் கற்றபின்னர், அந்தப்பாடம் வேறு ஒரு பாடம் கற்றுக் கொள்ள உதவினால் அல்லது எளிதாக்கினால் அதனை நேரடிக் கற்றல் மாற்றம் (Psitive Transfer) என்போம்,

(உ-ம்) சைக்கிள் ஓட்ட கற்றுக் கொண்டவனுக்கு பைக் ஓட்டக் கற்றுக் கொள்வது எளிதாக அமைகிறது.

6.15 எதிர்மறைக் கற்றல் மாற்றம்

நாம் கற்ற பாடம், வேறு ஒரு பாடம் கற்றுக் கொள்ளத் தடையாக இருந்தால் அல்லது கற்றுக் கொள்வதைக் கடினமாக்கினால் அதனை எதிரிடை கற்றல் மாற்றம் (Negative Transfer) என்கிறோம். (உ-ம்) பிறமொழிகளைக் கற்பதில் தாய் மொழியின் பாதிப்பு.

பூஜ்ய கற்றல் (0-Learning)

முன்னர் நாம் கற்ற பாடம், வேறு ஒரு பாடம் கற்றுக் கொள்ளும்போது எவ்விதத் தாக்கத்தையும் ஏற்படுத்தாமல் இருத்தல், அவ்விரு கற்றல் நிகழ்வுளுக்கிடையே பூஜ்யக்கற்றல் மாற்றம் ஏற்படுவதாகக் கூறுகிறோம்,

(உ-ம்) "படிப்பல் தேர்ச்சி பெற்றவர், கார் ஓட்டக் கற்றுக் கொள்வதில் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்துவதில்லை

கற்றல் மாற்றத்தை ஏற்படுத்தும் முறைகள்

தனது கற்பித்தல் முறைகளின் மூலம் மாணவர்களிடையே பயிற்சி மாற்றம், அதிக அளவு நிகழ ஆசிரியர் உதவ முடியும். இதற்கு பயிற்சி மாற்றம் மாணவர்களிடையே தானாகவே நிகழக்கூடியது என்று எண்ணாமல் ஆசிரியரும், மாணவர்களும் முயன்று அடைவதே என்பதை நன்கு உணர வேண்டும். இப்போக்கை கருத்தில் கொண்டு ஆசிரியர் கீழ்க்கண்ட வகுப்பறை கற்றல்-கற்பித்தல் நடைமுறைகளையும், உத்திகளையும் செயற்படுத்த வேண்டும்.

- பயிற்சி மாற்றத்திற்கு உதவக்கூடிய வகையில் பாடப் பொருட்களை அமைத்தலுக்கு முதற்படி, கற்பித்தலுக்கான இலக்குகளை தெளிவாக வரையறை செய்தலும், இவ்விலக்குகளை நடத்தையின் அடிப்படையில் விவரித்தலும் ஆகும்.
- பயிற்சி மாற்றமானது ஒரு பாடத்தில் பெறப்பட்ட அறிவு, திறன்கள் போன்றன புதிய நிலைமைகளிலும் பயன்படும் என்ற மனநிலையும் அதை ஊக்குவிக்கும்.
- பாடப் பொருளையும், பாடச் செயல்களையும் நன்கு அமைப்பதன் வழியே இவற்றுள் மாற்றம் பெறத்தக்கவற்றை மாணவர்கள் தேர்ந்தெடுத்துக் கவனித்தல் இயலும்.
- முடிந்தவரை கற்பித்தலுக்குச் செயல்திட்ட முறையை பயன்படுத்த வேண்டும். இது பல்வேறு பாடங்களையும், செயல்களையும் ஒருங்கே இணைக்கிறது.
- கற்றல் ஏற்பட வேண்டிய வரிசைக்கிரமத்தை முதலில் திட்டமிட்டுக் கொள்ள வேண்டும். பின்பு அதற்குத் தகுந்தவாறு கற்பிக்க வேண்டும்
- மாணவர்களின் கற்றல் முன்னேற்றத்தை அவர்களுக்கு உடனுக்குடன் தெரிவிக்க வேண்டும்
- ஒரு பொதுக்கருத்து, பொதுவிதி அல்லது ஒரு செயல்முறை போன்றவற்றை மாணாக்கர்களுக்குக் கற்பிக்கையில், ஒரிரு எடுத்துக்காட்டுகளின் வழியே இவற்றை

Downloaded From www.nagaicollege.com

கற்பித்தலைக் காட்டிலும் இவற்றுக்கான பலதிறப்பட்ட எடுத்துக்காட்டுகளையும் செயல்களையும் ஆசிரியர் பயன்படுத்துவது பயிற்சி மாற்றத்துக்கு உதவும்.

- கற்பிக்கத் தொடங்குமுன் பாடத்தின் அனைத்து கருத்துகளையும் பல்வேறு தலைப்புகளின் கீழ் வகைப்படுத்தி முழுமைநோக்கு ஏற்படும்படி, கரும்பலகையில் எழுத வேண்டும். இது முன்கூட்டியே வகைப்படுத்தப்பட்ட தொடர்புடைய அமைப்புகளாக பாடப்பொருளை மாணவர்கள் உணர உதவும் பாடத்தை முடிக்கும்போது மீள்பார்வை செய்வது நல்லது.
- SQ3R முறையை கற்றலுக்குப் பயன்படுத்துவது நல்லது.
- ஒரு கருத்தை மாணவர்கள் கற்கச் சிரமப்பட்டால், அதனை எளிமைப்படுத்தி, மாற்றியமைத்து வழங்க வேண்டும்
- மற்ற கற்றல் முறைகளைவிட இது சிறந்ததாக உள்ளது

6.16 நினைவுபடுத்தலும், மறதியும்

நினைவுபடுத்துதல் என்பது ஒவ்வொரு மாணவரும் தான் கற்றவற்றை உடனே மறந்துவிட்டால் கற்பிப்பதாலும் கற்றலாலும் ஒரு பயனுமில்லை. இருப்பினும், ஒவ்வொரு மாணவரும் தான் கற்றவற்றைச் சிறிது காலமாவது நினைவில் இருத்தி வைத்து, அவற்றைத் தேவைப்படும்போது நினைவு கூர்தல் வேண்டும். ஆசிரியர் பயன்படுத்தும் சில முறையான கற்பித்தல் உத்திகளால் மாணவர்கள் தாங்கள் கற்றவற்றை நினைவில் இருத்தி வைத்து அவற்றைத் தேவைப்படும் போது நினைவு கூர்தல் இயலும்.

நினைவில் நிருத்தக் கற்கும் முறைகள்

பகுதியாகக் கற்றலும், முழுமையாகக் கற்றலும்

கொடுக்கப்பட்ட பாடம் அனைத்தையும், ஒரு நேரத்தில் பயிற்சி செய்து கற்பது, முழுமையாகக் கற்றல் எனப்படும். கொடுக்கப்பட்ட பாடத்தைச் சிறு சிறு பகுதிகளாக பிரித்து ஒவ்வொரு பகுதியாகப் பயிற்சி செய்து கற்பது பகுதியாகக் கற்றல் எனப்படும். பகுதியாகப் பிரித்துக் கற்பதில் முதலில் முதல் இரண்டு பகுதிகள் தனித்தனியே கற்கப்படுகின்றன. பின்னர் அவையிரண்டும், ஒன்றாக்கப்பட்டுக் கற்கப் படுகிறது. பின்னர் 3ஆம் பகுதி தனியே கற்கப்படுகிறது. பின்னர். இது ஒன்று இரண்டு ஆகியவற்றுடன் சேர்த்துக்கற்கப்படுகிறது. இதேபோல், பாடத்தின் கடைசிப் பகுதி வரையிலும் கற்கப்படுகிறது. பொதுவாக, இம்முறையில் மனப்பாடப் பகுதியை மாணவர்கள் மனப்பாடம் செய்கின்றனர். நீண்ட நாட்களுக்குப் பாடக் கருத்தை நினைவில் வைத்திருக்க விரும்புவோர், பகுதிமுறைக் கற்றலைப் பயன்படுத்தலாம். ஆனால் நேரம் அதிகம் செலவாகும். சிறிது நாட்களுக்கு மட்டுமே பாடத்தை நினைவில் வைத்திருக்க விரும்புவோர், முழுமையாகக் கற்றல் முறையைப் பயன்படுத்தலாம். இதில் மறதி அதிகம் ஆனால், நேரம் மிச்சமாகும்.

இடையீட்டுக் கற்றலும், இடையீடற்ற கற்றலும்

பாடம் அனைத்தையும் ஒரே நேரத்தில் ஒரே தடவையில் நேர இடைவெளி விடாமற் கற்பது இடையீடற்ற கற்றல் எனப்படும். பொதுவாக, மாணவர்கள் தேர்வு நாட்களில் இம் முறையில்தான் ஒரு பாடத்தை ஓரிரு நாட்களில் கற்கின்றனர். உடனடியாக நினைவு கூர்ந்திடுதலே முக்கிய நோக்கம் எனில், இடைவெளி விடாமற் கற்றலே சிறந்ததாகும். இதில் கற்கும் நேரம் ஒரேமுறை என்பதால், நேரம் மிச்சமாகிறது. இம்முறையில் கற்கப்படுபவை வேகமாக மறந்து போகின்றது. கொடுக்கப்பட்ட பாடம் அனைத்தையும் இடைவெளி விட்டும், ஓய்வு எடுத்தும் கற்பது இடையீடற்ற கற்றல் எனப்படும் இதில் கற்கும் நேரம் சில தடவைகள் ஆகும். இம்முறையில் கற்கப்படும் பாடமானது நீண்ட நாள் நினைவில் நிற்கும். மேலும், ஒவ்வொரு கற்றலுக்கும் நேர இடைவெளி இருப்பதால் தவறாகக் கற்பது திருத்தப்படுகிறது, ஆயினும், இம்முறையில் மிகுந்த நேரம் செலவாகிறது.

Downloaded From www.nagaicollege.com

மிகைக் கற்றல் (Over Learning)

மிகைக் கற்றல் என்பது நினைவில் நன்கு நிற்கும் ஒரு கருத்தை மேலும் மேலும் கற்பதாகும். மாணவர்கள் பாடக் கருத்துக்களை மிகையாகக் கற்கும்போது, அவை அவர்களின் நினைவில் நீண்டநாள் நின்றுவிடுகிறது. இவ்வாறு கற்றலை எளிதில் மறக்க முடியாததாகிறது. எந்த நேரத்திலும் நினைவுகூர்ந்து சொல்வது எளிமையாகிறது. எனவே ஆசிரியர் முக்கியமான வரையறைகள், நீண்ட உரைகள், அடிப்படையான பாடக் கருத்துக்கள் ஆகியவற்றை மிகையாகக் கற்றிட மாணவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

பாடக்கருத்தினைத் திருப்புதல்

பாடக் கருத்தினைப் பலமுறை திருப்பிப் பார்ப்பதால் மாணவர்கள் அவற்றை நன்கு நினைவில் இருத்திக் கொள்கிறார்கள். மாணவர்கள் அடிக்கடி படித்திடவும், அடிக்கடி திருப்பிப் பார்க்கவும் ஏற்றவாறு ஆசிரியர் அடிக்கடி தேர்வு வைத்தல் வேண்டும். தானே ஒப்பித்துப் பார்த்தல், தானே வாய்விட்டு ஒப்பித்தல் என்பது வெறுமனே வாசித்தலைக் காட்டிலும், சிறந்ததாகக் கருதப்படுகிறது. தானே ஒப்பித்துப் பார்க்கும் மாணவர்கள், தங்களுடைய நினைவாற்றலை நன்கு வளர்த்துக்கொள்கிறார்கள், மாணவர்கள் தமக்குத் தாமே ஒப்பித்துப் பார்க்கும்போது, அவர்கள் தங்களின் தவற்றினைத் திருத்திக் கொள்கிறார்கள். இதனால் கற்றவை நினைவில் நிற்கின்றன. ஆசிரியர் தங்கள் மாணவர்களைத் தாமே சொல்லிப் பார்த்துப் பழகுமாறு தூண்டுதல் வேண்டும்.

பின்னூட்டம் (Feedback)

மாணவர்கள் தாங்கள் எவ்வளவு சரியாகப் பாடக் கருத்தினைக் கற்றிருக்கிறோம் என்ற செய்தியை ஆசிரியர் வாயிலாகத் தெரிந்து கொள்ளுவதால், மாணவர்கள் கற்பவை நன்கு நினைவில் நிற்கின்றன. ஆசிரியர் தருகின்ற பின்னூட்டத்தால் மாணவர்கள் தங்களது கற்றலில் முன்னேற்றத்தை நன்கு அறிந்து கொள்கிறார்கள். மேலும் மாணவர்கள் தாங்கள் கற்றவற்றில் உள்ள குறைகளை அறிந்து திருத்திக் கொள்வார்கள்.

மறதி-விளக்கம்

ஒரு குறிப்பிட்ட காலம் கழிந்த பின் நினைவில் தங்காது போகும் பாடப்பொருளின் அளவு மறதி (Forgeting) எனப்படும், ஒரு முறை கற்ற செய்தி அல்லது பாடம், பின் தேவைப்படும் போது, நினைவுகூர்ந்திட முடியாமற் போவது மறதி ஆகும்.

மறதி ஏற்படக் காரணங்கள்

ஒரு மாணவர் தான் கற்றவற்றை ஏன் மறக்கிறார் என்பதற்க்கு சில உளவியல் காரணங்கள் கூறப்படுகின்றன. அவை:

நீண்ட காலம் பயன்படுத்தாமை

தான் கற்றவற்றை ஒருவர் நீண்ட காலமாகப் பயன்படுத்தாமல் இருந்தால் மறதி ஏற்படுகிறது. காலம் கழியும்போது மூளையில் பதிந்த நினைவுச் சுவடுகள் மறைவதால் மறதி விளைகிறது. மனமகிழ்ச்சி தராத செய்திகள் அல்லது நினைத்தால் வேதனை தரும் செய்திகள் போன்றவை, அடிமனத்தில் வலிய அழுத்தி வைக்கப்படுவதால் மறக்கடிக்கப்படுகின்றன.

மனவெழுச்சி நிலை

ஒருவரின் மனவெழுச்சிகள் மறதியை உண்டு பண்ணுகின்றன. ஒருவருக்கு சந்தோசம், கோபம், உவகை ஆகியனவற்றால் மறதி ஏற்படுகிறது, எடுத்துக்காட்டாக, நன்கு பயின்ற பாடம் தேர்வறையில் மறக்கப்படுவதும், நன்கு பயிற்சி செய்திருந்த பேச்சு, மேடை ஏறியவுடன் மறந்து விடுவதும் மனவெழுச்சியின் காரணமேயாகும்.

குறுக்கீடுகள்

புதியதாகக் கற்கும் பாடமும், ஏற்கனவே கற்ற பழைய பாடமும் ஒன்றையொன்று குறுக்கீடு செய்து கொள்வதால், மறதி தோன்றுகிறது, இரு வகைக் குறுக்கீடுகள் மறதியை உண்டு பண்ணுகின்றன. அவை:

Downloaded From www.nagaicollege.com

முன்னோக்குத் தடை: இதில் முன்பு கற்ற பழைய பாடம் புதிய பாடத்தை மறக்கச் செய்கிறது.

பின்னோக்குத் தடை: இதில் இப்போது கற்கும் புதிய பாடம், பழைய பாடத்தை மறக்கச் செய்கிறது. பின்னோக்குத் தடை விளக்கம் புதிதாகக் கற்றுக் கொள்ளும் ஒரு பாடம், முன்பு கற்ற ஒரு பாடத்தை நினைவுக்கூர்ந்திடத் தடையாக அமைவது பின்னோக்குத் தடை (Retroactive - Inhibition) எனப்படும். பின்னோக்குத் தடையில் இன்று படித்த பாடம் ஏற்கனவே படித்த பாடத்தினை நினைவுகூர்ந்திடத் தடையாக இருக்கிறது. அதாவது, புதிய பாடம் படித்ததால், பழைய பாடம் மறக்கிறது பின்னோக்குத் தடையால், ஏற்கனவே கற்றவற்றில் இழப்பு ஏற்படுகிறது.

6.17 மறத்தல் வளைகோடு

மறத்தல் வளைகோடு நினைவிலிருத்தல் வளைகோடு என்றும் அழைக்கப்படும். கற்றல் நிகழ்ந்தபின், காலம் செல்லச்செல்ல மறத்தலின் அளவு எவ்விதம் உள்ளது என்று அளவிடுதல் ஆகும். இது நீண்ட கால நினைவிற்கே பொருந்தும். இது கற்கும் பொருளுக்கு ஏற்ப மாறுகிறது. பொருளற்ற கற்றலுக்கு மறத்தல் விகிதம் அதிகமாகவும், பொருளுணர்ந்து கற்கும் கவிதை, உரைநடை ஆகியவற்றிற்கு மிகக் குறைவானதாகவும் ஏற்படுகிறது. வகுப்பறைச் சொற்பொழிவுகள், கற்பித்தல் ஆகியவற்றிற்கான மறத்தல் விகிதம் தொடக்கத்தில் மிக அதிகமாகவும், காலம் அதிகரிக்க அதிகரிக்க குறைவாகவும் காணப்படும். எபிங்காஸ் சோதனைப்படி கற்றபின் முதல் ஒரு மணி நேரத்தில் 1/2 பங்கும், 8 மணி நேரத்தில் 2/3 பங்கும், ஒரு வரைத்தில் 4/5 பங்கும், கற்றவற்றில் மறந்து போகிறது. கல்லூரி வகுப்பின் 40 நிமிட சொற்பொழிவுக்குப்பின் மாணவர்கள் 62% கற்ற பொருட்களையும், 3 நாட்களுக்குப்பின் 45%, 1 வாரத்திற்கு பின் 35%, 8 வாரங்களுக்குப் பின் 20% நினைவு கூர்ந்தனர்.



நாம் கற்றவை ஒரு போதும் முழுமையாக மறந்து போவதில்லை என்பதையும் மறத்தல் வளைகோட்டிலிருந்து அறியலாம். எனவே, கற்றல் நிறைவுற்ற அடுத்த ஒரு மணிநேரமே மாணவர்கள் மனப்பாடம் செய்வதற்கும், மீட்டுணர்தலில் பயிற்சி பெறுவதற்கும் உரிய காலம் என்று ஆசிரியர்கள் உணர வேண்டும். ஏனெனில், அப்போதுதான் மறத்தல் விகிதம், உயர் நிலையில் இருக்கும் காலம். அப்போது மீட்டுக் கொணரும் பயிற்சி, மேற்கொள்வதால் மறத்தலைத் தடுத்து நிறுத்த முடியும்.

நினைவினை மேம்படுத்துதல்

- எதைக் கற்றாலும் கற்க வேண்டும் என்ற ஆர்வம் அல்லது ஊக்கத்தோடு கற்க வேண்டும்.
- பொருளுணர்ந்து கற்பவை, எளிதில் கற்கப்படுவதோடு, நீண்ட நாட்களுக்கு நினைவிலிருத்தப்படுகின்றன.
- எதைக் கற்பதற்கும் SQ3R' முறை (கணக்கெடுப்பு (Survey), வினா எழுப்புதல் (Questioning), வாய்விட்டு பொதுவாகப் படித்தல் (Recite) பலமுறை திரும்பக் கற்றல் (Repeat), மீள்பார்வை (Review) மிகச் சிறந்தது.

Downloaded From www.nagaicollege.com

- கற்கும் போது ஒப்பித்தல் அல்லது மனப்பாடம் செய்தல் சுயமதிப்பீட்டுக்கு வழிகோலுகிறது. எனவே மனப்பாடம் செய்வதற்கு, குறிப்பாக சிறு குழந்தைகளுக்கு ஒப்பித்தல் முறை சிறந்ததாகக் கருதப்படுகிறது.
- இடைவெளி விட்டு, சிறுக கற்றலே சிறந்த நினைவிலிருத்தலுக்கு உகந்தது .• திரும்பதிரும்ப கற்றல் (மீக்கற்றல்-Over-Learning) மறத்தலை குறைக்க துணைபுரியும்.
- கற்பவற்றை ஏற்கனவே கற்றவற்றோடு தொடர்புபடுத்திக் கற்றலும், கற்கும் பல பகுதிகளுக்கு இடையேயான தொடர்பைப் புரிந்து கொண்டு கற்றலும், படித்தபின் மனப்பாடம் செய்தலும் நினைவிலிருத்தலை மேம்படுத்தும் வழிமுறைகளாகும்.
- கற்கும் பொருட்களுக்கு இடையே இயற்கையான தொடர்பு ஏதும் இல்லாத போது கூட செயற்கைத் தொடர்புகளை ஏற்படுத்திக் கற்றிட வேண்டும். உதாரணமாக வானவில்லின் நிறங்களை வரிசையாக நினைவுகூற VIBGYAR என்ற பொருளற்ற செயற்கைச் சொல்லைப் பயன்படுத்துகிறோம்.
- பலபுலன் வழிக்கற்றல் (Multi Sensory Learming) மேம்பட்ட நினைவுக்கு வழிவகுக்கிறது. உதாரணமாக, ரேடியோ விளம்பரங்களைவிட தொலைக்காட்சி விளம்பரங்கள் சுலபமாக நம் மனதில் பதிந்து, வெகு நாட்களுக்கு நீடிக்கின்றன.
- கற்றல் நிகழும்போது அவ்வப்போது சோதித்தறிதலும், கற்றபின் உறக்கம் அல்லது ஓய்வெடுத்தலை தொடரச் செய்வது கற்றலால் விளையும் மூளை மென்படிமங்களை நிலைபெறச் செய்கின்றன
- முன்னோக்கத்தடை, பின்னோக்கத்தடை ஏற்படா வண்ணம், படிக்கும்போது பாடங்களை சீர்படுத்தி மாற்றி மாற்றி கற்கலாம்.
- கற்கும் செய்திகளை முறைப்படுத்திச் சீரமைப்பதன் மூலம் அந்தச் செய்திகளை நீண்டகாலம் நினைவில் வைத்திருக்க முடியும். எனவே, செய்திகளை முறைப்படுத்துதல் என்பது நினைவினை உயர்த்திக் கொள்ள உதவும்.

Downloaded From www.nagaicollege.com

அலகு 7 தனியாள் வேற்றுமைகள்
UNIT VII - INDIVIDUAL DIFFERENCES

முன்னுரை

எல்லா மாணவர்களும் ஒரே மாதிரியானவர்கள் இல்லை. ஒவ்வொருவரும், தனித்தன்மையுடையவர்கள் என்பதைப்பற்றி விவாதிக்கின்றோம். ஒவ்வொருவரும் அறிவுத்திறன், ஆர்வம், மனப்பான்மை, மதிப்புகள் ஆகியவற்றில் வேறுபடுகின்றனர். இப்பாடத்தில் தனியாள் வேற்றுமையின் தன்மைகள், கற்பித்தல் உத்திகள் போன்றவை விவரிக்கப்பட்டுள்ளது. கல்வியில் வேற்றுமைப் பண்புகளான சிறப்பியல்புக் கல்வி, மீத்திறக் குழந்தைகளின் கல்வி, கல்வியில் பின்தங்கியோர் போன்றோருக்கான கல்வி முறைகளையும் விவாதிக்க உள்ளோம். மேலும் இவற்றைக் கற்பதன் மூலம் பள்ளியில் நல்லதொரு சூழலை அமைத்துத்தந்து மாணவர்களின் ஆற்றலை ஆசிரியர்களால் வளர்க்க இயலும்.

மனிதனின் எல்லா நடத்தைகளுக்கும் ஆதாரமாக இருப்பது ஊக்குவித்தல் ஆகும். அதுபோல கற்றலுக்கும் ஆதாரம் ஊக்குவித்தலாகும். ஆசிரியர் மாணவரை முறையாக ஊக்குவித்தால் கற்றல் நடத்தையில் விரும்பத்தக்க மாற்றங்களை அடையமுடியும் ஊக்கம் செயலில் ஆர்வத்தையும், கவனத்தையும், ஈடுபாட்டையும் அளிக்கின்றது என்பதைக் காண்போம். மேலும் இப்பாடத்தில் ஊக்கக்கோட்பாடுகள் பற்றியும், ஊக்குவித்தலுக்கான சில வகுப்பறை உத்திகளையும் காண்போம்.

கற்கும் திறன், சூழ்நிலைக்குத் தக்கவாறு நடந்து கொள்ளும் திறன், சிக்கலான பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் திறன் போன்றவற்றுள் மாணவர்களிடையே தனியாள் வேறுபாடுகள் காணப்படுகின்றன. இத்தகைய வேறுபாடுகளுக்கு காரணம், அவர்களின் நுண்ணறிவில் காணப்படும் வேறுபாடுகளேயாகும்.

7.1 தனியாள் வேற்றுமை

மனிதர்களுக்கிடையே உடலமைப்பு, நடத்தை, போன்றவற்றில் காணப்படும் நிலைத்த வேறுபாடுகளுக்கு தனியாள் வேற்றுமைகள் எனப் பெயர், உளவியலில் ஒரு பிரிவான வேற்றுமை உளவியல் மனிதர்களுக்கிடையே காணப்படும் தனியாள் வேற்றுமைகளை அளந்து ஆராய்கின்றது. ஒரு வகுப்பில் மாணவர்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் பல்வேறு பண்புகளில் வேறுபடுகின்றனர்.

7.2 தனியாள் வேற்றுமையின் தன்மை

ஒரு வகுப்பில் பயிலும் மாணவர்கள் பல்வேறு பண்புகளில் வேறுபட்டிருந்த போதிலும், கல்வியாளர்கள் கற்றலையும், கற்பித்தலையும் பாதிக்கக் கூடிய சில முக்கியமான வேறுபாடுகளை மட்டும் கவனத்தில் கொள்கின்றனர். அவை:

- ஆயத்தநிலை
- மனப்பான்மை
- ஆர்வங்கள்
- முதிர்ச்சி
- உடல்நலம்
- மனவெழுச்சி
- சமூக இணக்கம்
- வாழும் சூழல்
- திறன்கள்
- எதிர்காலக் குறிக்கோள்கள்
- பள்ளியில் சாதனை அடைவு
- அறிவாண்மை

Downloaded From www.nagaicollege.com

7.3 தனியாள் வேற்றுமைக்கான காரணங்கள்

உளவியல் அறிஞர் டைலர் (Tyler) என்பவரின் கருத்துப்படி, தனியாள் வேற்றுமைகள் கீழ்க்கண்டபடி காணப்படுகின்றன. அவை:

- அறிவாண்மை
- பள்ளியில் அடைவுத்திறன்
- சிறப்புத் திறன்கள்,
- ஆளுமை
- ஆர்வமும், மதிப்புகளும்
- அறிதன்மைப் புலம்

மேற்கண்ட காரணங்கள் மட்டும் இல்லாமல் மேலும், சில காரணிகள் தனியாள் வேற்றுமைக்குக் காரணமாக விளங்குகின்றன. கற்கும் திறன், புதிய நிலைகளுக்குத் தக்கவாறு நடந்துக் கொள்ளும் திறன், சிக்கலான பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் திறன் போன்றவற்றுள் மாணவர்களிடையே தனியாள் வேறுபாடுகள் காணப்படுகின்றன. அவை:

- வயது
- பாலினம்
- இனம்
- சமூக நிலை
- சூழல்
- மரபு

7.4 தனியாள் வேற்றுமைக்கேற்ற கல்வியியல் நிகழ்வுகள்

கற்பித்தல் உத்திகள், ஒவ்வொரு மாணவரின் தனிப்பட்ட தேவைகள், வேற்றுமைப் பண்புகள் ஆகியவற்றை நிறைவு செய்வதற்கு இரு உத்திகளில் கற்பித்தல் பயன்படுத்தப்படுகிறது, அவை :

- **நிர்வாகத் திட்டங்கள்**
  தலைமையாசிரியர் அல்லது பள்ளி நிருவாகத்தினர் மாணவர்களின் தனியாள் வேற்றுமைக்கேற்ப சில கற்பித்தல் முறைகளைப் பின்பற்றுகின்றனர். அவை:
- **குழுவகைக் கல்வித் திட்டம்**
  இதில் மாணவர்கள் அவர்களின் திறமைக்கேற்ப பல்வேறு குழுக்களாகப் பிரித்துக் கற்பிக்கப்படுவர்.
- **பாடச் சுமை**
  திறமைமிக்க மாணவருக்கு நிறையப் பாடங்களும், திறமையற்ற மாணவருக்குக் குறைவான பாடங்களும் கற்பிக்கப்படும்.
- **சிறப்பு வகுப்புகள்:**
  மெல்லக் கற்போருக்கு சிறப்பு வகுப்புகள் நடத்தப்படுகின்றன. மாணவர்களின் தொழில் ஆர்வங்களுக்கேற்ப தொழிற் படிப்புகள் வழங்கப்படுகின்றன.
- **ஆசிரியராகக் கற்பித்தல்**
  பல்வேறு ஆசிரியர் ஒரு குழுவாகக் கூடி ஒரு குறிப்பிட்ட பாடத்தை நிறைய மாணவர்களுக்கும், சிறு குழந்தை லான மாணவர்களுக்கும் கற்பிப்பர்.
- **நேர அட்டவணை**
  மாணவர்களின் வேறுபட்ட தேவைகளுக்கேற்ப ஒரே அளவிலான நேர வேளைகள் வழங்கப்படுகின்றன. ஒரு சில மாணவர்கள் ஒரு செயலைக் குறைந்த நேரத்தில் முடிக்கலாம்.

Downloaded From www.nagaicollege.com

ஒரு சில மாணவர்கள் வேறொரு செயலை நீண்ட நேர நேரத்தில் முடிக்கலாம். எனவே மாணவர்களின் திறமைக்கும், தேவைக்கும் ஏற்றவாறு நேரத்தை வகுத்துக் கொள்ளலாம்.

- **சிறப்புக் கற்றல்**
  மாணவர்களின் கற்கும் வேகத்திற்கு ஏற்ப சிறப்புக் கற்றல் வழங்கப்படுகின்றன. ஆண்டின் நடுவிலேயே நன்கு பயிலும் மாணவரை அடுத்த வகுப்பிற்கு அனுப்பி வைப்பதும், மிகுந்த ஆற்றலுடைய மாணவரை ஒரு வகுப்பை விட்டு மேல் வகுப்புக்கு அனுப்புவதும், திறமைக் குறைவான மாணவரை ஓராண்டு பாடத்தை அதே வகுப்பில் மீண்டும் படிக்க வைப்பதும் பரிந்துரைக்கப்படுகிறது.

7.5 வகுப்பறைக் கற்பித்தல்

கற்பித்தல் திட்டங்கள், பண்புகளுக்கேற்ப மெல்லக் கற்போர், சராசரியாகக் கற்போர், நன்றாக படிக்கும் மாணவர்கள் ஆகியோர் ஒரேமாதிரியாக பயனடையும்படி ஆசிரியர் வகுப்பறையில் பல்வேறு கற்பித்தல் திட்டங்களை மேற்கொள்ளலாம். அவை:

- **மேற்பார்வைக் கற்றல்**
  இதில் கற்பதற்குச் சிரமப்படும் மாணவர்களுக்கு ஆசிரியர் தேவையான உதவிகளைச் செய்கிறார்.
- **பாட ஒப்படைப்புகள்**
  மாணவர்களின் திறமைகளுக்கேற்ப ஆசிரியர் எளிதாகவும், கடினமானதாகவும் பாட ஒப்படைப்புகளைத் தந்து வகுப்பறையில் செய்து முடிக்க உதவுகின்றார்.
- **தானே கற்றல்:**
  ஒவ்வொரு மாணவரும் தனது கற்கும் வேகத்திற்கேற்ப, ஆசிரியர் சிறப்புக் கற்றலை வகுப்பில் தருகின்றார்.
- **பலநிலைக் கேள்விகள்**
  மாணவர்களின் திறன்களுக்கேற்றவாறு ஆசிரியர் கேள்விகளை அமைத்து வகுப்பில் கேட்கிறார்.
- **மாற்றியமைக்கப்பட்ட பாடப்பொருள்**:
  பாடப் புத்தகத்திலேயே சில கடினமான பகுதிகளை நீக்கி மெல்லக் கற்போருக்கு தருவதும், நன்றாகப் படிக்கும் மாணவர்களுக்குக் கூடுதலான பாடப்பொருளினை தருவதும் பரிந்துரைக்கப்படுகின்றது.
- **தனிப்பயிற்சி**
  படிப்பில் பின்தங்கிய மாணவருக்குப் பள்ளி வேளைக்கு முன்போ, பின்போ ஆசிரியர் கற்பிக்கலாம். சில சமயங்களில் ஆசிரியருக்குப் பதிலாக, நன்றாகப் படிக்கும் மாணவரின் மேற்பார்வையில் தனிப்பயிற்சி தரலாம்.
- **கற்றலுக்கான உதவிகள்**
  ஒரு குறிப்பிட்ட அலகினை பல்வேறு காட்சிக் கேள்விக் கருவிகளின் உதவியால் மாணவர்கள் கற்க முடியும். இதில் மாணவர் தான் கற்க வேண்டியவற்றையும் கற்றவற்றைத் தானே சோதித்து அறியவும் முடிகின்றது.
- **கணிப்பொறி வழிக் கற்பித்தல்**
  ஒவ்வொரு மாணவரின் கற்கும் இயல்புக்கும், தேவைக்கும் ஏற்ப கணிப்பொறி வழிக் கற்பித்தலை ஆசிரியர் வழங்க முடியும்.

Downloaded From www.nagaicollege.com

7.6 மீத்திறன் மிக்கோருக்கான கல்வி

மீத்திறக் குழந்தைகள்

சில குழந்தைகள் நுண்ணறிவு ஈவில் 130க்கும் மேற்பட்டு அறிவுத் திறமையில் உயர்ந்து காணப்படுவர். இவர்கள் மீத்திறக் குழந்தைகள் எனப்படுவர். மீத்திறக் குழந்தைகளை இரு வகைகளாகப் பிரிக்கலாம். இவைகள்:

- பொது ஆற்றல் மிக்க குழந்தைகள்
- குறிப்பிட்ட துறைகளில் மீத்திறம் பெற்ற குழந்தைகள்

பொது ஆற்றல் திறன் மிக்க குழந்தைகளின் நுண்ணறிவு ஈவு அதிகம் காணப்படும். கற்றலில் ஆர்வம் மிகுதி, புதுப்போக்குடைமை, விடா முயற்சி, பகுத்தறியும் திறன், முன்னேற்றத்தினை அடைய விழையும் மனப்பான்மை, நகைச்சுவை உணர்ச்சி, தருக்க முறையில் சிந்திக்கும் சக்தி முதலியன வெகு அதிகமாகக் காணப்படும். குறிப்பிட்ட திறன் மிக்க குழந்தைகள் இசை, ஓவியக்கலை போன்ற குறிப்பிட்ட துறைகளில் பற்று மிகுதியும், ஆற்றல் அதிகமும் கொண்டு இருப்பர்.

7.7 மீந்திறக் குழந்தைகளுக்குரிய கல்வி முறைகள்

- ஆற்றல் வழி வகைப்படுத்துதல் முறைப்படி, மீத்திறக் குழந்தைகளுக்கு என்றே பள்ளியில் ஒரு தனிப்பிரிவு ஏற்படுத்தி கல்வி போதித்தல் நலம், மீத்திறக் குழந்தைகளைத் தனிமைப்படுத்தும்போது கல்வி தவிர்த்த மற்ற பள்ளி நடவடிக்கைகளில் பிற மாணவர்களுடன் சகஜமாக அவர்கள் பழக வாய்ப்பளித்தல் அவசியம்.
- மீத்திற குழந்தைகளை ஆண்டு இறுதியில் அடுத்த வகுப்புக்கு மாற்றாமல், அதற்கு அடுத்த உயர்வகுப்புகளுக்கு மாற்றும் துரிதப் பிரிவு மாற்றல் முறையை மேற்கொள்ளலாம். இப்படி மேல் வகுப்புக்கு மாற்றுவது, பொது பாடத்திட்டம் அமைக்கப்பட்டிருந்தால் மட்டுமே பயனளிக்கும்.
- பாடதிட்டத்தை அதிகரிக்கும் முறை சிறந்ததாகக் கருதப்படுகிறது. இதில் ஒரு வகுப்பில் படிக்கும் மீத்திற குழந்தைகளுக்கு மட்டும் தனிப்பட்ட முறையில் அவர்களது ஆற்றலுக்குத்தகுந்த அதிகப்படியான வேலை கொடுக்கப்படுகிறது. அவ்வேலையை முடிக்கக் கொடுக்கப்படும் கால அளவும் குறைக்கப் படுகிறது.
- குறிப்பிட்ட சிறப்பு ஆற்றலில் மீத்திறம் பெற்ற மாணவர்களுக்கு அவ்வாற்றலைப் பொருத்தவரை மேல்வகுப்பு மாணவர்களுடன் சேர்த்துக் கற்பிப்பது சிறந்த முறையாகும். இன்று நம் நாட்டில் பயன்படுத்தப்படும் ஆற்றல் மிக்க மாணவர்களை கண்டறியவும் தேர்வுகள் மீத்திறம் பெற்றோரைக் கண்டறியவும், இவர்களுக்கான சிறந்த வாய்ப்புகளை அளிக்கவும் உதவுகின்றன.

7.8 சிறப்பியல்புக் குழந்தைகளுக்கான கல்வி

வழக்கமான வகுப்பறைக் கற்பித்தல் முறையிலிருந்து சற்று வேறுபட்ட கல்வித் தேவைகளையுடைய குழந்தைகள் அனைவரும் சிறப்பியல்புக் குழந்தைகள் எனப்படுவர். இவர்கள் ஒரு வகுப்பில் அல்லது பள்ளியில் மிகக் குறைந்த அளவில் இருப்பர். குழந்தைகளை அவர்களின் நுண்ணறிவு ஈவை (IQ) வைத்துப் பல்வேறு வகையான சிறப்பியல்புக் குழந்தைகளை வகைப்படுத்தும் வழக்கம் பழையதாகி விட்டது. இன்று, குழந்தைகளை அவர்களின் கற்கும் ஆற்றலை வைத்து வகைப்படுத்துகின்றனர். டன் (Dunn) என்பவர் புதிய முறையில் குழந்தைகளின் கற்கும் ஆற்றலை வைத்து ஒன்பது வகையான சிறப்பியல்புக் குழந்தைகளைக் கண்டறிந்துள்ளார். அவர்கள்:

- பொதுவான கற்றலில் சராசரியாகவும், அதிகமாகவும் குறைபாடுடைய குழந்தைகள்.

Downloaded From www.nagaicollege.com

- பொதுவான கற்றலில் சாதாரண குறைபாடுடைய குழந்தைகள் மெல்லக் கற்போர் என முன்னர் அழைக்கப்பட்டனர்.
- குறிப்பிட்ட கற்றலில் குறைபாடுடைய குழந்தைகள்.
- உயர் அறிவாற்றலைக் கொண்ட குழந்தைகள் மீத்திறன் குழந்தைகள் என முன்னர் அழைக்கப்பட்டனர்.
- நடத்தைக் குறைபாடுடைய குழந்தைகள், மனவெழுச்சிக் குறைபாடுடைய குழந்தைகள் நடத்தைப் பிறழ்வுடைய குழந்தைகள் என முன்னர் அழைக்கப்பட்டனர்.
- பேச்சுக் குறைபாடுடைய குழந்தைகள்.
- செவிக்குறைபாடுடைய குழந்தைகள்.
- பார்வைக் குறைபாடுடைய குழந்தைகள்.
- உடல் ஊனம், உடல் நலக் குறைபாடுடைய குழந்தைகள்.

7.9 கல்வியில் பின்தங்கியோர்

முன்பு கல்வியில் பின் தங்கியோர் என்று அழைக்கப்பட்டோர் தற்போது, மெதுவாக கற்போர் என்று பெயரிடப்பட்டுள்ளனர், இத்தகையோர் தொடர்ந்து பள்ளித் தேர்வுகளில் குறைந்த மதிப்பெண்களையே பெறுவர். இக்குறைந்த கல்வித் தேர்ச்சி அனைத்துப் பள்ளிப் பாடங்களிலோ அல்லது ஒரிரு பாடங்களிலோ இருக்கக்கூடும்.

7.9.1 கல்வியியல் பின்தங்கியோருக்கு உதவுதல்

- மெதுவாகக் கற்போருக்கான தனிப்பட்ட வகுப்புகள் நடத்துவதுதான் சிறந்த முறையாகும்.
- இம்மாணவர்களுக்கு கற்பிப்பதில் தனிக்கவனம் செலுத்த வேண்டும். ஒவ்வொரு கருத்தை போதித்த பின்பும் அதை நிலைநிறுத்த அதிக அளவு பயிற்சி கொடுக்கப்பட வேண்டும்.
- வகுப்பறைக் கற்பித்தலில் பாடப்பொருள் கற்பித்தலுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து விளக்கப்படங்கள், மாதிரிகள் செய்து காட்டல், காட்சி கேள்வி சாதனங்களை பயன்படுத்துதல் போன்றவற்றை அதிக அளவில் ஈடுபடுத்த வேண்டும்.
- ஒரு குழந்தை எவ்வளவு பிற்பட்ட நிலையில் காணப்படினும், அதனை ஆசிரியர் பரிவுடன் ஏற்று, பிற மாணவர்களிடம் நடந்து கொள்வது போன்றே அதனிடமும் இயற்கையாக நடந்து கொள்ள வேண்டும்.
- புதிய கற்றல் அனுபவங்களை அவர்களது பழைய கற்றல் அனுபவங்களின் அடிப்படையில் அவற்றுடன் தொடர்பு படுத்தி ஆசிரியர் கற்பிக்க வேண்டும்.
- குழந்தைகளது தன்னம்பிக்கை வளர உற்சாகமூட்டும் வகையில் ஆசிரியர்கள் நடந்து கொள்ள வேண்டும்.
- குழந்தைகளது குடும்ப, சமூகப் பின்னணி பற்றிய விபரங்களை ஆசிரியர் அறிந்திருத்தல் அவசியம். மேலும், இப்பின்னணி பற்றிய அறிவு, குழந்தைகளது இன்றைய கல்விப் பிரச்சனைகளை உணர்வதற்கும், புதிய பிரச்சினைகளும், சிக்கல்களும் எதிர்காலத்தில் எழாமல் தடுப்பதற்கும் ஆசிரியருக்கு உதவும்

7.10 உடலியக்க மற்றும் மனவளர்ச்சி குறைபாடுடைய குழந்தைகள்

உடலியக்கக் குறைபாடுடைய குழந்தைகள் மற்ற குறைபாடுகளுடைய சில குழந்தைகளும் வகுப்பில் இருக்கக் கூடும். உடலினை நன்கு பயனுள்ள முறையில் இயக்குதலில் குறைபாடுகள், தெளிவற்ற முறையில் கையெழுத்து இருத்தல், குழந்தைபோல் மழலை பேசுதல், திக்கிப் பேசுதல் போன்ற பேச்சுக் குறைபாடுகள், இடக்கைப் பழக்கம் போன்றவை, இத்தகைய இயக்கக்

Downloaded From www.nagaicollege.com

குறைபாடுகளாகும். இத்தகைய குறைபாடுகள் பல சமயங்களில் தேவையான திறன்களைக் கற்கவும், பிறருடன் பழகிச் சமூகவியல்பு பெறுவதிலும், கல்வி வளர்ச்சியிலும் தடையாக இருக்கக்கூடும்

மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் மக்கள் தொகையில் 10% இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. இவர்களின் நுண்ணறிவு ஈவு 50 லிருந்து 70க்குள் இருக்கும். இவர்களுக்கு ஒரு சாதாரணக் குழந்தையிடம் இருக்கும் அறிவில், பாதி அல்லது முக்கால்வாசிதான் இருக்கும். மன வளர்ச்சி குன்றியிருப்பதால், சூழலுக்கேற்ப நடந்து கொள்ளும் பண்பு இவர்களிடம் மிகவும் குறைவாக இருக்கும். ஆயினும் இவர்களால் அடிப்படைக் கல்வி கற்க முடியும்.

7.11 சிறப்பியல்புக் குழந்தைகளுக்கு கல்வி வழங்குதல்

- சிறப்பியல்புக் குழந்தைகளைக் கண்டறிந்து, பள்ளி வழிகாட்டுதல் மையம் மூலம், அவர்களுக்கு அவ்வப்போது தகுந்த அறிவுரைகளை வழங்கிடல் வேண்டும்
- வகுப்பாசிரியர் இத்தகைய மாணவர்களிடம் தனிக்கவனம் செலுத்தி, அவர்களுக்கு தனிப்பட்ட பிரச்சனைகள் ஏதுமிருப்பின் அவற்றைக் களைய உதவ வேண்டும்
- அவ்வப்போது பெற்றோர்-ஆசிரியர் கூட்டங்கள் நடத்தி, இத்தகைய மாணவர்களது பெற்றோரிடம் கலந்துரையாடி மாணவர்களைப் பற்றிய புரிந்துணர்வோடு பிரச்சனைகளுக்குத் தீர்வு காணவேண்டும்.
- வறுமை நிலையில் உள்ள திறமையான மாணவர்களுக்கு படிப்பு மற்றும் மேற்படிப்பிற்கான உதவி, சலுகைகள், நிதியுதவியும் கிடைத்திட ஆசிரியர் வழிவகை செய்திடல் வேண்டும்.
- இத்தகைய மாணவர்களை உடனுக்குடன் பாராட்டிப் பரிசளித்து ஊக்குவிப்பதன் மூலம் அவர்களது தன்னம்பிக்கையை உயர்த்தி அவர்கள் சாதிக்க உதவ முடியும்.
- வகுப்பில் குழுமுறையில் ஒப்படைப்புகளை நிறைவேற்றிட வழிவகை செய்து குழுத்தலைவர்களாக இத்தகைய திறமைமிகு மாணவர்களை நியமித்திடலாம்.

Downloaded From www.nagaicollege.com

ஊக்குவித்தல் - பகுதி - I
UNIT -VIII – MOTIVATION: PART - I

8.1 ஊக்கம்

இலக்கு நோக்கிய நடத்தையை தொடங்கி வைத்தலிலும், தொடங்கிய நடத்தை தொடர்ந்து இயங்குவதற்கும், இறுதியில், இந்நடத்தை முடிவு பெறுவதற்கும் காரணமாக இருப்பது ஊக்கமாகும். இவ்வாறு ஊக்கம் என்ற செயல் அதாவது ஊக்குவித்தல் நடைபெற தூண்டும் காரணிகளை ஊக்கிகள் (Motives) என்று குறிப்பிடுகிறோம். திட்டவட்டமான சில செயல்களில் ஓர் உயிரியின் நடத்தை அமைய ஊக்கிகள் அதனைத் தூண்டுகின்றன. இவ்வூக்கிகள் உயிரியின் உள்ளிருந்து செயல்பட்டு அதன் நடத்தையைக் கட்டுப்படுத்தும். இவ்வூக்கிகள் உடல் சார்ந்தவையாகவோ, உள்ளத்தைச் சார்ந்தவையாகவோ இருக்கலாம்.

8.2 ஊக்கத்தின் பணிகள்

எந்த ஒரு செயலிலும் ஊக்கம் அதிகரித்துக் காணப்பட்டால், அதைச் செய்வதில் அதிக ஆர்வமும், அதை உடனடியாக செய்து முடிக்க வேண்டும் என்ற உந்துதல் ஏற்படும். ஏதோ ஒரு வகை ஊக்கி எல்லா கற்றல் நிலைமைகளிலும் இருத்தல் இன்றியமையாதது என்கிறார் கெல்லி (Kelly) என்பவர். பள்ளி வகுப்பறைகளில் ஆசிரியர்களது கற்பித்தல் முயற்சி பலதடவை எதிர்பார்க்கப்படும் பயனை அளிக்காமல் வீணாவதற்கு மாணாக்கர்களிடம் போதிய ஊக்கம் இன்மையே காரணமாகும். இதன் விளைவாக மாணவர்கள் ஆர்வமின்றி, இயந்திரம் போல்கற்றலில் செயல்படுவர். மாணவர்களது திறமைக்கும், அவர்களது வகுப்பறைக் கற்றல், அடைவுக்குமிடையே காணப்படும் பெரும் இடைவெளி ஊக்கத்துடன் தொடர்புடையது ஆகும்.

8.3 ஊக்கிகளின் வகைகள்

உடல்தேவைகளுடன் இணைந்த ஊக்கிகள்

மனிதன் உயிர் வாழ்வதற்குப் பசி, தாகம், பிராண வாயு, உறக்கம், ஓய்வு, பாலுணர்ச்சி ஆகிய தேவைகள் இன்றியமையாதது. இவற்றுடன் இணைந்த ஊக்கிகள் மனித நடத்தையில் அமையும் மிக வலுவான ஊக்கிகளாகும். இவை விலங்குகளது நடத்தையைப் பெருமளவு கட்டுப் படுத்துபவை. ஆனால், மனிதர்களிடம் மனம் சார்ந்த தேவைகள், சமூகத் தேவைகள், தன்னார்வத் தேவைகள் ஆகியவற்றால் எழும் ஊக்கிகளும் செயற்படுகின்றன. இவை விலங்குகளுக்குக் கிடையாது. உடலின் உள்ளே எழும் மாற்றங்கள் உடலியல் தேவைகளை உருவாக்குகின்றன.

மனம் சார்ந்த தேவைகளிலிருந்து எழும் ஊளக்கிகள்

மனம் சார்ந்த தேவைகள் சமூகத் தொடர்புள்ள தேவைகளுடன் இணைந்தவையாகும். ஏனெனில் சமுதாயத்தில் பிறருடன் தொடர்பு கொள்வது மனத்தேவைகள் நிறைவு பெறப் பல சமயங்களில் இன்றியமையாததாகிறது. மனம் சார்ந்த தேவைகள் ஒன்றுடன் ஒன்று குறுக்கிட்டுப் போராட்ட நிலைமையைத் (Conflict of motives) தோற்றுவித்து, அவை தீர்க்கப்படாமல் தீவிரமடைதல், பொருத்தப்பாடின்மைக்கும் (MalAdjustment), நெறிபிறழ் நடத்தைக்கும் (Anti-Social Behavior) காரணமாக அமையும்.

மனதனின் தேவைகளுள் முக்கியமானவை்

- பாதுகாப்புணர்வு
- விடுதலை உணர்வு
- தொடர் செயல் அனுபவம்

Downloaded From www.nagaicollege.com

பாதுகாப்புணர்வு

ஒவ்வொரு மனித செயலும் பாதுகாப்புணர்ச்சியைப் பெறுவதாகவே அமையும். குழந்தைகள் அன்புக்காகவும், பரிவுக்காகவும் ஏங்குகின்றனர். தன் வீடு, தன் பெற்றோர் என்ற எண்ணம் குழந்தைக்கு பாதுகாப்புணர்ச்சியைத் தருகிறது. பாதுகாப்புணர்வின்மை (Insecurity) குழந்தையின் பொருத்தப்பாட்டு நடத்தையை மிகவும் பாதிக்கவல்லது. பாதுகாப்புணர்வு இருவகைப்படும். பிறரது துணையால் தோன்றும் பாதுகாப்புணர்ச்சியை சார்புள்ள பாதுகாப்புணர்ச்சி என்கிறோம். கற்றலினால் பல திறன்களைப் பெற்று, எந்நிலையிலும் பிறர் உதவியின்றி தன் திறன் கொண்டே வெற்றி பெற முடியும் என்ற தன்னம்பிக்கையைப் பெறுவது சார்பற்ற பாதுகாப்புணர்ச்சியாகும். பாதுகாப்புணர்ச்சியின் பல கூறுகளாவன:

- உடல்சார் பாதுகாப்புணர்ச்சி
- சமூக பாதுகாப்புணர்ச்சி
- அறிவுசார் பாதுகாப்புணர்ச்சி
- மனவெழுச்சிசார் பாதுகாப்புணர்ச்சி

சுதந்திர உணர்வு

குழந்தை ஓடியாட விரும்புகிறது, கட்டுப்பாட்டை விரும்புவதில்லை. தன்னிச்சையாக சிந்திக்கவும், தீர்மானிக்கவும், சோதனை செய்யவும் சூழ்நிலையில் உள்ள பொருட்களை ஆராயவும், குழந்தைக்கு வாய்ப்புகள் கிடைக்காவிட்டால் அதன் அறிவு வளர்ச்சி தடைபடும். சுதந்திர நடத்தையினின்றே பொறுப்புணர்ச்சி எழ முடியும். நாமே இதைச் செய்தோம் என்னும் மகிழ்ச்சி கலந்த அடைவு உணர்ச்சி, சுதந்திரத்துடன் செய்த செயல்களினின்றே தோன்றும்.

தொடர் செயல் அனுபவம் (Adventure)

புதியவற்றைச் செய்யவும், புது அனுபவத்தைப் பெறவும் குழந்தைகள் விழைகின்றனர். ஆராய்தலில் ஆர்வம்(Curiosity), பொருட்களைப் புதிய முறையில் கையாள முற்படுவது (Manipulation) ஆகியன செயலூக்கத்துடன் தொடர்பு கொண்டவை.

சமூகத் தேவைகளால் எழும் ஊக்கிகள்

சமூகத் தேவைகளால் எழும் ஊக்கிகள் (Social Motives) பிறரால் ஏற்க்கப்படுதல்(acceptance), பிறரது பாராட்டுக்களைப் பெறுதல்(Social approval), பிறரோடு இணைந்து செயற்படுதல்(Social affiliation) போன்ற சமூகத் தேவைகளால் எழுபவை. மனிதன் ஒரு சமூக விலங்கு, சமூக ஏற்புப் பெறுதல் மனித நடத்தைக்குப் பின் அமையும் ஊக்கியாகும். தன் உணர்வுத் தேவைகளால் எழும் ஊக்கிகள் ஒவ்வொருவரது தனித்தன்மை வாய்ந்த ஆளுமையினால் தோன்றுபவை. தன்மதிப்பு உயரத்தக்க செயல்களில் ஈடுபடுவது, தனது திறமைகளின் முழுவளர்ச்சியில் ஈடுபாடு போன்றவைகளால் எழும் ஊக்கிகள் இவ்வகையில் அடங்கும். தற்கருத்து (Self-Concept), இலக்கு (Goal), மதிப்புகள் (Values), ஆர்வங்கள் (Interests) ஆகியவை இவ்வகை ஊக்கிகளைத் தோற்றுவிக்க காரணமாக அமைகின்றன. அடைவூக்கமும் இவ்வகைத் தேவைகளுடன் இணைந்ததெனக் கொள்ளலாம்.

8.4. ஊக்கக் கோட்பாடுகள்

ஊக்கக் கோட்பாடுகள் (Theories of Motivation) ஊக்கிகள் எவ்வாறு எழுகின்றன, இவை எவ்வாறு நடத்தையை முறைப்படுத்திக் கட்டுப்படுத்துகின்றன போன்றவற்றை விளக்க உளவியலறிஞர்கள் பல கோட்பாடுகளை முன்வைத்தனர். அவற்றில் முக்கியமானவை வருமாறு:

Downloaded From www.nagaicollege.com

மாஸ்லோவின் படிநிலைத் தேவைகள் கோட்பாடு (Maslow's Theory of Hirarchial Needs)

விலங்குகளும், மனிதர்களும் தமது நடத்தை மூலம் தூண்டல்களால் தோற்றுவிக்கப்படும் விறைப்பு நிலையைக் குறைக்கத்தான் முற்படுகின்றனர் என்ற ஹல்லின் கோட்பாடு முழுமை பெற்ற பொருத்தமான விளக்கமாகத் தோன்றவில்லை. மனித நடத்தையின் பெரும் பகுதி தேவைகளை உருவாக்குதலுக்கு உதவுவனவாகக் காணப்படுகின்றன. பல சிக்கலான மனித ஊக்கிகள், நம்பிக்கைகள், மதிப்புகள் போன்ற அறிவு சார்ந்த இலக்குகளை, அடைய எழுவனவேயன்றி வெறும் அடிப்படைத் தேவைகளுடன், இணைந்தவை என்று கொள்வது பயனற்றது. ஊக்கிகள் பற்றிய விரிவான கருத்தினை ஆபிரகாம்மாஸ்லோ (Abraham Maslow) என்பவர் வெளியிட்டுள்ளார். இவ்வூக்கிகளும், வளர்ச்சிக்கு உதவும் ஊக்கிகளும் (Growth Motivation) அடங்கும். மனிதத் தேவைகளின் முக்கியத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு ஊக்கிகளை மாஸ்லோ வரிசைப்படுத்தியுள்ளார். கீழ்நிலைத் தேவைகள், ஊக்கிகள் ஆகியவை பூர்த்தி செய்யப்பட்ட பின்புதான், அதற்கு அடுத்த மேல்நிலைத் தேவைகள் எழுகின்றன என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது, ஊக்கிகள் தேவைகளுடன் தொடர்புடையவை. ஒரு தேவை நிறைவு பெற உதவும் இலக்கை அடைந்தவுடன் அத்தகைய நடத்தையைத் தோற்றுவித்த ஊக்கி மறைகிறது. மாஸ்லோ ஊக்கிகளையும், தேவைகளையும் ஏழுநிலைகளாக கீழ்க்கண்டவாறு வரிசைப்படுத்துகிறார். மாஸ்லோவின் படிநிலைத் தேவைகள்:



உடலியல் தேவைகள் (Safety and Security Needs)

உணவு, தண்ணீர், சுவாசித்தல், உறக்கம், பாலுணர்ச்சி, புலன்நுகர்வு நிறைவு போன்றவை உடலியல் தேவைகள். இவை உயிர் வாழ்வதற்கு இன்றியமையாதவை. இவ்வகைத் தேவைகள் ஓரளவேனும் நிறைவு பெற்றால்தான் அடுத்த உயர்நிலை ஊக்கிகள் செயற்படுதல் சாத்தியமாகும். வறுமையில் வாடும் குழந்தைகள் வகுப்பறைக்கற்றலில் போதிய ஆர்வம் காட்டாமலிருத்தலுக்கும், அவர்களது பல உடலியல் தேவைகள் போதிய அளவு நிறைவு பெறாமல் இருத்தலேயாகும்.

பாதுகாப்புத் தேவைகள் (Safety and Security Needs)

பாதுகாப்புணர்ச்சி பெறுதல், ஒழுங்கு, முறைமை ஆகியன பாதுகாப்புத் தேவைகளுள் அடங்கும். சுற்றுப்புற உலகின் ஓர் அமைப்பையும், ஒழுங்குமுறையையும் குழந்தைகளை உணரவைத்து அவர்களது அறிவுக்கேற்ப ஒழுங்கு, கட்டுப்பாடு போன்றவற்றிற்கு உட்படுத்த வேண்டும்.

அன்பு உரிமைத் தேவைகள் (Affiliational Needs)

பிறரது அன்புக்கு (Affection) ஏங்குவதும், தான் அவர்களுள் ஒருவனாக ஏற்றுக் கொள்ளப்படுவதும், தன்னைப் பற்றிய சுயகருத்தும் (Self Concept), சமுதாயத்தில் தனது பங்கு பற்றிய (Identitly) உண்மையுணர்வும் ஏற்பட, பிறரது ஏற்பு (Acceptance) இன்றியமையாததாகும்.

Downloaded From www.nagaicollege.com

இத்தகைய தேவை, நிறைவேறாத போது சில மாணவர்கள் தங்களது திறமைக்கேற்ப கல்விச் சாதனையை அடைய முடியாத நிலையில் (Under Achievement) இருக்கக் கூடும்.

சுயமதிப்புத் தேவைகள் (Self-Esteem Needs)

தன்னம்பிக்கை, சுதந்திர உணர்வு, பலம் பெற்றுத் திகழ விழைதல், தேர்ச்சியும் திறனும் பெற்றுத் திகழ முயலுதல் போன்றவை அடங்கும். பிறரால் பாராட்டப்படும் அளவுக்கு, தான் மதிப்புற்றுத் திகழ வேண்டும் என்றே ஒவ்வொருவரும் நினைக்கிறோம். தனது சுயமதிப்புத் தேவை நிறைவேறாத காரணத்தினால் தாழ்வு மனப்பான்மை, தன்னைப் பற்றிய அவநம்பிக்கை, பிறரோடு கூடி செயல்பட முடியாத தன்மை ஆகியவை தோன்றுகின்றன.

அடைவூக்கத் தேவைகள் (Achievement Needs);

ஒன்றை அறிந்து கொண்டு அதைப்புரிந்து கொள்ளுதல் இதில் அடங்கும். செய்திகளின் அடிப்படையில் தொடர்பு கொள்ளுதல், எவற்றை எவ்வாறு செய்ய வேண்டும் என்று அறிந்திருத்தல், பொருட்கள், நிகழ்வுகள், குறியீடுகள் பற்றி அறிந்திருத்தல், ஆகியவை அறிவுத் தேவையில் அடங்கும். தொடர்புகளைப் பற்றி அறிதல், செயல்முறைகளை அறிதல், பல்வகை அறிவுசார் செயல்களை இணைத்தல் ஆகியவை புரிந்து கொள்ளும் தேவையில் அடங்கும், அடைவுத் தேவை என்பது அறிவுசார் தேவையாகும்.

அழகுணர்வுத் தேவைகள் (Aesthetic Needs):

முறைமை, தூய்மை, அழகு, இலக்கியச்சுவை ஆகியவை இவ்வகைத் தேவைகளுள் அடங்கும். கீழ்நிலை அடிப்படைத் தேவைகள் நிறைவு பெறாதவர்கள் அழகுணர்வுத் தேவைகளைப் பற்றி நினைத்தே பார்க்கமாட்டார்கள். குப்பத்து மக்கள் தங்கள் இருப்பிடத்தையும், சுற்றுப்புறத்தையும் தூய்மையாக வைத்துக் கொள்ளாததற்கு இதுதான் காரணமாகும்.

தன்நிறைவுத் தேவைகள் (Self-Actualization)

முதல் மூன்று நிலைத் தேவைகள், குறைபாட்டினை நிறைவு செய்ய உதவுவன (Deficiency Needs). அடுத்த நான்கும் வளர்ச்சி பெற்று மனிதப் பண்புகள் முழுமை பெற உதவும் தேவைகளாகும். தன்னிறைவுத் தேவைகள் முழுமை பெற்றவரின் இயல்புகள் முழுமை பெற்ற மனிதனது (Self Acturalized Person) நடத்தைக்குப் பின் உயர்நிலை ஊக்கிகள் காணப்படும். மனவெழுச்சி முதிர்ச்சி, சமூக முதிர்ச்சி, இசைவான ஆளுமை போன்ற குறிக்கும் பண்புகள் பலவும் மாஸ்லோ குறிப்பிடும் முழுமை பெற்றவனிடம் காணப்படும்.

- உண்மை நிலை பற்றிய உணர்வு
- தன்னையும், பிறரையும் ஏற்றுக் கொள்ளுதல்
- நகைச்சுவையுணர்ச்சி
- ஆக்கத் திறமை
- இயல்பாகச் செயற்படுதல்
- பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் வகையில் செயலாற்றுதல்
- தன்னலப் பண்பு குறைந்து காணப்படுதல்
- சுதந்திரமாக இயங்குதல்
- நிலைமைகளை ஒருபுறச் சாய்வின்றி ஆராய்தல்
- சமூகச் செயல்களில் ஆர்வம்
- சிறப்பான மனிதத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வது

Downloaded From www.nagaicollege.com

- இலக்குக்கும், அதற்கான வழிமுறைகளுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டினை அறிந்து செயல்படுதல் போன்ற பண்புகள் முழுமை பெற்ற மனிதனிடம் காணப்படும் என்று மாஸ்லோ குறிப்பிடுகிறார்.

8.5 இலக்கு அடைவு ஊக்கிகள்

ஒருவன் தான் மேற்கொள்ளும் எல்லாச் செயல்களிலும் சிறப்பு மிக்க உயர் (Achievement Motive) சாதனையை அடைய முற்படுதல் (Striving for Excellence) இவ்வூக்கியின் இலக்காக அமைகிறது. இவ்வெழுச்சிக்கு ஆதாரங்களாக உயர்நிலைப்பட்ட சுயமதிப்பும் (Self-Esteem), சுயகருத்தும் அமைகின்றன. அடைவு ஊக்கி இயல்பாகக் காணப்படுவதல்ல. சமுதாய பாதிப்பால் உருவாகி, முக்கியமாக போட்டி மனப்பான்மை (Competition) காணப்படும் சமுதாய பாதிப்பிலிருந்து அடைவு ஊக்கி எழுகிறது. என்று அட்கின்சன் கூறுகிறார்.

அடைவூக்கம் மிகுந்து காணப்படுவரின் இயல்புகள்

- போட்டி நிலைமைகளில் சிறப்பாகச் செயல்படுகின்றனர். மற்றவர்களைப் பின்னுக்குத் தள்ளும் வண்ணம் உயர்ந்த அடைவை வெளிப்படுத்துவர். தனக்குச் சரியான போட்டி இல்லாதிருந்தும், தன் முந்தைய சாதனையோடு போட்டியிட்டுப் புதிய சாதனையைப் படைக்க முயல்வர்
- தொடர்ந்து செயலாற்றும் திறன் படைத்தவர். கடினமான செயல்களையே தேர்ந்தெடுப்பர்.
- வெற்றி பெற வேண்டும் என்ற வெறியோடு திகழ்வர்.
- தோல்வியை கண்டு அச்சமுறாமல் வெற்றியையே சிந்திப்பர்.
- அடைவுத் தொடர்பான பணிகளில் தொடர் முயற்சியில(Persistisance) ஈடுபடுவர்.
- கடினமானவற்றை வேகமாகவும், எளிதாகவும் இவர்கள் கற்கின்றனர்.
- இத்தகையோர் தன்னம்பிக்கை மிகுந்து காணப்படுவர், விரும்பிப் பல்வேறு பொறுப்புகளை ஏற்பர்.
- எந்த ஒரு செயலிலும் தமது முழு ஆற்றலையும் பயன்படுத்தி ஈடுபடுவர்
- பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் எளிதில் சோர்வு அடையாமல் தொடர்ந்து மேற்கொள்வர்
- இவர்களது இலக்கு அடைவு (Achievement) உயர்நிலைக்கு உட்பட்டுக் காணப்படும்

8.6 ஊளக்குவித்தலில் வெற்றி-தோல்விகளின் பங்கு

தோல்விகளில் ஊக்குவித்தலின் விளைவு எதிர்மறையானது. வெற்றிகள் மாணவர்களது சுயகருத்தினை உயர்நிலைப்படுத்தி, மேலும் வெற்றிகளைப் பெற உந்தும் வலுவான ஊக்கிகளாக அமையும். எனவே, முயற்சிகள் வெற்றியளிக்கும் வகையில் கற்றல் செயல்களை அமைக்க வேண்டும். மாணவர்களைக் கற்பதற்கு ஆயத்தப்படுத்துவதில் திட்டவட்டமான குறுகிய காலக் கற்றல் இலக்குகளை நிர்ணயித்தல் மூலம் கற்றலில் அவர்களது வெற்றி வாய்ப்பினை அதிகரித்தல், வெற்றி பற்றிய உடனடி உணர்வை (Feed Back) மாணவர்களுக்கு அளித்தல், தங்களால் எவ்வளவு கற்றல் இயலும் என்பது பற்றிய உண்மையான அறிவை மாணவர் பெற உதவுதல், ஒவ்வொரு மாணவனும் தத்தம் ஆற்றலுக்கேற்ப கற்க அனுமதித்தல் போன்றவற்றை ஆசிரியர் கையாளுவது பயன்மிக்கது.

Downloaded From www.nagaicollege.com

அலகு 9 ஊக்குவித்தல் - II
UNIT IX - MOTIVATION II

9.1 ஊக்குவித்தலுக்கான வகுப்பறை உத்திகள்

வகுப்பறைக் கற்றல்-கற்பித்தலில் மாணவர்களை ஊக்குவிக்கும் (Tips of Classroom Motivation) வழிமுறைகள் கல்வியில் மிக முக்கியமானதாகும். பொதுவாக மாணவர்களை, கற்றலில் ஊக்குவிக்க ஆசிரியர்கள் பயன்படுத்தும் உத்திகளாவன:

1. பல்வேறு வயதுக்குழந்தைகளது கற்றலை ஊக்குவிக்கும் பலவகைத் தூண்டல்களை பொருத்தமான முறையில் ஊக்கிகளாகச் செயற்படுத்தவேண்டும்.
2. கல்வியாண்டு முழுவதும் தொடரும் அகமதிப்பீடு (Internal Assessment) கற்றலில் ஊக்குவித்தல் நிலையினை நீடித்த முறையில் ஏற்படுத்தி, திறன் மேம்பாட்டுக்கு உதவும்.
3. கற்க வேண்டியவை தமக்குப் பயனுள்ளவை என்ற கருத்து மாணாக்கர் மனதில் எழுமாறு ஆசிரியர் முயல வேண்டும். அதாவது கற்பவற்றை நடைமுறை வாழ்க்கையோடு தொடர்புபடுத்திக் கற்கச் செய்ய வேண்டும்.
4. மாணவர்களது முந்தைய கற்றல் அனுபவங்களோடு இணைந்த முறையிலே புதிய கற்றல் அனுபவங்கள் அவர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட வேண்டும். கற்றல் அனுபவத்தோடு மாணாக்கன் ஒன்றிப் போகுமாறு அவ்வனுபவத்தை அமைத்தல் அவசியம்.
5. கற்றலில் தாம் அடைய வேண்டிய இலக்குகள் பற்றித் தெளிவான முன்னறிவை மாணாக்கர்களுக்கு ஆசிரியர் பாடம் தொடங்கும் முன் அளிப்பதுடன் (Giving the Over View of thelesson), இவ்விலக்குகளை வெற்றியுடன் அடையத் தேவைப்படும் தன்னம்பிக்கையையும் அவர்கள் ஒவ்வொருவரிடமும் வளர்க்க வேண்டும்.
6. வெற்றி பற்றிய உடனடி அறிவும் (Feed Back of Success), மாணவர்களது தேவை, இயல்பு ஆகியவற்றை அறிந்து தூண்டல் பொருட்களை பயன்படுத்துதல் போன்றன ஊக்குவித்தலை அதிகப்படுத்த உதவும்.
7. பொருள் புரிந்து கற்கச் செய்தல், கற்பித்தல் துணைக் கருவிகளை சரியான முறையில் பயன்படுத்துதல், செய்து கற்றல் கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்துதல் போன்றனவும், ஊக்குவித்தலை அதிகப்படுத்தும்.
8. தீவிரமாகவும், தேவைக்கு அதிகமாகவும் ஊக்குவிப்பது தவறாகும். இதனால் கவலைகளும், போராட்டங்களும் மாணாக்கரிடையே எழக்கூடும்.
9. ஒத்துழைப்பும், போட்டியும் இணைந்து செயல்படும் செயல்களையும், வழிமுறைகளையும் அதிக அளவில் பயன்படுத்த வேண்டும்.
10. ஒவ்வொருவரும் ஒரேமாதிரி வெற்றி பெறும் வகையில் கடினத் தன்மையை அதிகரித்துச் செல்லும் முறையில் தர வரிசைப்படி அமைந்த ஒப்படைப்புகளையும், செயல்திட்டங்களையும் மாணவர்களுக்கு அளிக்க வேண்டும். வெற்றி ஒருவரது சுயகருத்தை உயர்த்தி செம்மைப்படுத்தும்.

9.2 பாராட்டும், குறைகூறலும்

வகுப்பறையில், ஆசிரியர் மாணவர்களை ஊக்குவிக்கும் முறைகளில் பரிசும், தண்டனையும் (Praise and Blame) ஒருவிதம். இது தவிர பாராட்டும், குறைகூறலும் மற்றொரு வகையான ஊக்குவித்தலாகும். பாராட்டுதலை விரும்புவது, அங்கீகாரம் பெற விரும்புவது மனித இயல்பு, அதிலும் குறிப்பாக பள்ளி மாணவர்களான குமரப்பருவத்தினரிடையே இது அதிகம் உண்டு. ஆசிரியர் மாணவர்களை அவர்களின் கற்றல் வெளிப்பாடு நடத்தை சிறப்பாக அமையும் பொழுது, மாணவர் மனம் மகிழும் விதத்தில் வார்த்தைகளால் பாராட்டுவது அவசியம்.

Downloaded From www.nagaicollege.com

அத்தகையப் பாராட்டுகள் அவனுக்கு ஊக்கமாக அமையும், அவனது கற்றலும் நடத்தையும் சிறப்புற மேம்படும். ஆனால் மற்றவர்கள் அதனை அங்கீகரிக்கும் விதத்தில் பாராட்டு அமைய வேண்டும். அத்தகையப் பாராட்டுகள் அக ஊக்கியாகவும், புற ஊக்கியாகவும செயல்படும். அது நேர்முக வலுவூட்டலாகவும் அமைகின்றது. குற்றம் கூறல் குறைகூறல் என்பவை எதிர்மறை ஊக்கிகள். ஆசிரியர் கையாளும் முறையில், அவை நேர்மறை- விளைவுகள் தோற்றுவிக்கும் விதத்தில் செயல்படுத்தலாம். குறைகூறல் மாணவர் மனம் புண்படாத வகையில், ஆனால் அதேசமயத்தில், குறையை உணரும் வகையில் அமைந்தால் அதுவும், ஊக்குவித்தலாகவே அமையும். தொடர்ந்து குறைகூறுவது, தொடர்ந்து திட்டுவது மாணவரிடம் எதிர்மறையான விரும்பத்தகாத நடத்தை விளைவுகளை ஏற்படுத்தும்.

9.3 பரிசும், தண்டனையும்

ஊக்கிகள் உள்ளிருந்து எழக்கூடியவைகளாகவோ, வெளியிலிருந்து தூண்டுபவையாகவோ இருக்கலாம். புறத்தூண்டுபவை ஊக்குவிக்கும் பொருட்கள் எனப்படுகின்றன (Incentives). ஊக்குவித்தல் செயலில் உந்துதல்கள் யாவும் உள்ளேயிருந்து தோன்றக்கூடியன. புறத் தூண்டல்கள் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து, பின்னர் தாமே செயல்களை ஊக்குவிக்கும் பண்புள்ளவை. அக ஊக்கியின் விளைவாக ஒருவனின் நடத்தையே இலக்காகிறது. விளையாட்டு குழந்தைகளுக்கு இயல்பாவதால் அதனை அகஊக்கி எனலாம். ஆனால் பரிசுகள், தண்டனைகள் போன்றவற்றால் ஊக்குவிக்கப்படும் நடத்தைகள் புறஊக்கிகளால் தோற்றுவிக்கப்படுகின்றன. குழந்தைகளின் கற்றலில் அக ஊக்கிகளைப் பயன்படுத்துவது நல்லது. பரிசுகள், பாராட்டு நல்ல ஊக்கியாகும். பரிசுகள் மாணவரது சக்தி, ஆக்கத்திறன், வெளிப்பட வாய்ப்புகளாகின்றன. கற்றலைத் தொடங்கி வைக்க பரிசுகள் பயன்படுத்தப்பட்டுப் பின்னர் மாணாக்கர் தாமே ஆர்வமுடன் தொடர்ந்து கற்கும் வகையில் வகுப்பறை செயல் அமைக்கப்பட வேண்டும். பரிசுகள் அடிக்கடி பயன்படுத்தப்படுதல் தவிர்க்கப்பட வேண்டும். மாணவர்கள் பரிசு பெறுவதே, இறுதி இலக்கு என தவறான கருத்துடன் தேவையற்ற போட்டி, ஏமாற்றுதல் போன்றவற்றில் ஈடுபட வழிவகுக்கக்கூடாது. பரிசுகளை ஒரு சிலரே பெற முடியுமாதலால், மற்றவர்களுக்கு வகுப்பறை ஆர்வம் குறையக் கூடும். தண்டனை எதிர்மறைப்பட்டவை. விரும்பத்தகாத நடத்தையைத் தடுக்க, ஓர் புற ஊக்கியாக தண்டனை பயன்படுகிறது. அதிக வேலையளித்தல், அபராதம், வெளியில் நிறுத்துதல், மன்னிப்பு கோரச்செய்தல், பள்ளியைவிட்டு நீக்குதல் போன்றவை தண்டனைகளாகும். உடலை வருத்தும் தண்டனைகள் மதிப்பு நிலையைக் கீழ்த்தரப்படுத்துவதாகக் கருதப்படுகின்றன. எனினும், எளிய தண்டனைகள் தேவைப்படுகின்றன. தண்டிப்பது தவிர வேறு வழியில்லை என்ற நிலையில் மட்டுமே கையாளப்பட வேண்டும்.

- தேவை ஏற்பட்டால் தவிர தண்டனையளித்தல் கூடாது. கற்றலை ஊக்குவிக்க தண்டனைப் பயன்படுத்தப்படக் கூடாது.
- குற்றம் செய்தால் தண்டனை உறுதி என்ற உணர்வு ஏற்படும் வகையில் தண்டனையைக் கையாளுவது, சீர்த்திருத்த முயல்வது சிறந்தது.
- குற்றம் புரிந்தவன் எதனால் தண்டிக்கப்படுகிறான் என்பது தெளிவாக்கப்பட வேண்டும்
- ஒரு சிலரின் நடத்தைக்காக வகுப்பில் உள்ள அனைவரையும் தண்டிக்கப்படக் கூடாது
- தண்டனையளிப்பதில் தலைமையாசிரியர் மற்றும் பிறரது தலையீடு இருக்குமாயின் ஆசிரியர் மதிப்பு குறையும், தண்டனை பயனற்றதாகிவிடும்
- தண்டிக்கப்பட்டவரும் பிறரைப் போல் பரிவுடன் கவனிக்கப்பட வேண்டும்
- வெற்றி, தோல்விகளும் கற்றலில் மாணவர்களை ஊக்குவிப்புவைகளாக அமைகின்றன, வெற்றிகள் நேர்மறையானவை. தோல்விகள் எதிர்மறையானவை. எனவே கற்றலின் துவக்க

Downloaded From
www.nagaicollege.com

நிலையில் தோல்வி தவிர்த்து வெற்றி ஏற்படும் வகையில் கற்றல் செயல்களை ஆசிரியர் அமைத்தல் வேண்டும்

9.4 பின்னூட்டமும், முடிவு பற்றிய அறிவும்

எந்த ஒருவருக்கும் அவரது செயலின் முடிவு பற்றிய அறிவு சிறந்த நடத்தைக்கு வழிவகுக்கும். செயலின் முடிவு பற்றிய அறிவு பெற பின்னூட்டம் (Feed Back) முதல்படியாகும். ஒருவன் ஒரு செயலில் ஈடுபட்டபின் அச்செயல் பற்றிய கருத்து, ஈடுபட்டவரின் நிலை ஆகியவை பற்றிய ஒரு ஆய்வு பின்னூட்டம் எனப்படுகின்றது. பின்னூட்டத்தின் மூலம் அச்செயலின் முடிவு பற்றிய தெளிவான அறிவு செயலில் ஈடுபட்டவருக்கு நிறைவாகயிருப்பின் அதுவே குறைகள் பற்றிய அறிவும், உணர்வும், குறைகள் நீக்கவும், செம்மைப்படுத்திக் கொள்ளவும் துணைபுரிகின்றன. எனவே கற்றலில் ஆசிரியர் உடனடியாகப் பின்னூட்டம் கொடுத்து கற்றல் முடிவு பற்றிய அறிவை கற்பவர் அறியச் செய்வது சிறந்ததாகும், இக்கருத்தின் அடிப்படையிலும், உளவியல் கருத்துகளின் அடிப்படையிலும் உருவாக்கப்பட்டதே திட்டமிட்டுக் கற்பித்தல், திட்டமிட்டுக் கற்றல், கணினி வழிக்கற்றல் முறைகளாகும்.

9.5 எதிர்பார்ப்பு நிலை

ஒன்றினை அடைவதில் உள்ள மிகுந்த விருப்பமே, எதிர்பார்ப்பு (Level of Aspiration) எனப்படுகின்றது. அடைய விரும்பும் இலக்கினை அடைய எவ்வளவு கடினமான முயற்சி தேவைப்படும் என்பதன் அடிப்படையில் எதிர்பார்ப்பு நிலை அமையும். ஒருவன் எளிதில் அடையக்கூடிய இலக்குகளை அடைய விரும்பினால் அவனது எதிர்பார்ப்பு நிலை கீழ்மட்டமாக இருப்பதைக் குறிக்கும். ஆனால் மென்மேலும் சாதனை படைக்க வேண்டுமென்று தன் இலக்கை ஒருவன் உயர்த்தினால் அவன் எதிர்பார்ப்பு நிலை உயர்ந்தது. ஊக்குவித்தல், ஈடுபாடு, தன்னம்பிக்கை போன்றன எதிர்பார்ப்பு நிலையை உயர்த்த உதவக்கூடியன. சிறிய தோல்வி கற்பவனை முயன்று கற்கத்தூண்டும். ஆனால் தொடர் தோல்விகள் எதிர்பார்ப்பு நிலையினைக் குறைத்துவிடும். வகுப்பில் பயிலும் மாணவர்களின் வயது, பிறரின் சாதனை போன்றவைகளும் எதிர்பார்ப்பு நிலையினைக் கட்டுப்படுத்துவன. சமூக, பொருளாதாரக் கராணமும் எதிர்பார்ப்பு நிலையில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

Downloaded From www.nagaicollege.com

அலகு 10 நுண்ணறிவு
UNIT-X – INTELLIGENCE

10.1 நுண்ணறிவு (Intelligence)

நுண்ணறிவு : பொருள் (Definitions)

சூழ்நிலையைப் புரிந்துகொண்டு அதைச் சரியான முறையில் பயன்படுத்துதல் நுண்ணறிவு என்பது சரியான வழியில், சரியான நேரத்தில் சரியான அர்த்தத்தை அறியும் ஆற்றல் என்பதாகும்.

10.2 நுண்ணறிவு : வரையறைகள் (Definition)

வெஸ்லர் (Wechsler) - ”நுண்ணறிவு என்பது ஒருவன் நோக்கத்தோடு செயல்படல், பகுத்தறிவோடு சிந்தித்தல், சூழ்நிலையை திறமையாக சமாளித்தல் போன்றவைகள் சேர்ந்த ஒரு கூட்டு செயலாற்றல்‘‘ ஆகும்.

ஸ்டொடார்ட் (Stoddard) - “நுண்ணறிவு என்பது ஒருவன் கடினமான, சிக்கலான, புதுமையான, பயனுள்ள உயர்வான செயல்களைத் தொடங்கி குறுக்கிடுகளுக்கிடையேயும் தொடர்ந்து நிகழ்த்த உதவும் ஆற்றல்”

10.3 நுண்ணறிவுக் கோட்பாடுகள்

நுண்ணறிவின் இலக்கணம் (Theories of Intelligence) பற்றிப் பல கருத்துகள் உளவியல் உலகில் நிலவுவது போலவே, நுண்ணறிவின் அமைப்பு பற்றியும் பல கோட்பாடுகள் காணப்படுகின்றன. இவற்றுள் முக்கியமான சிலவற்றை இங்கு காண்போம்.

10.3.1 ஒற்றைக் காராணிக்கோட்பாடு

நுண்ணறிவு எனப்படுவது ஒரு பொதுத்திறன் (Unitary Ability) என்று சிலர் கருதுகின்றனர். இத்திறன், பலதிறப்பட்ட செயல்களுக்கும், அடிப்படை எனப்படுகின்றது. இக்கொள்கையை நுண்ணறிவு பற்றிய முக்கியக் கொள்கை எனலாம். குடிமக்கள் அனைவரையும் ஆட்டுவிக்கும் அதிகாரமனைத்தும், ஓர் அரசனிடம் குவிந்திருப்பது போன்று பலதிறப்பட்ட செயல்களுக்குப் பின் அவற்றைத் திறம்பட இயக்கும் ஒரே ஒரு பொதுத் திறனுண்டு என்றும், இதுவே ஒருவனது நுண்ணறிவாகும் என்றும் இக்கொள்கை குறிப்பிடுகிறது, பீனேவின் கருத்தும், இக்கோட்பாட்டை ஒத்ததாகவே எண்ணப்படுகிறது. ஏனெனில், ஒருவனுடைய நுண்ணறிவு ஈவு (I.Q) என்ற ஒற்றை மதிப்பினைக் கொண்டு நுண்ணறிவை அளவிட முடியும் என்று பீனே எண்ணினார். இக்கொள்கையின்படி, ஒருவன் மிகுந்த நுண்ணறிவைப் பெற்றிருப்பானேயானால், வாழ்க்கையின் எல்லாப் பகுதிகளிலும் அதைப் பயன்படுத்தி வெற்றிகரமாக விளங்குவான்.

10.3.2 இரட்டைக் காரணிக் கோட்பாடு

ஸ்பியர்ன்மென் தனது இரட்டைக் காராணிக் கோட்பாட்டை 1904-ல் வெளியிட்டார். இக்கோட்பாடு புள்ளி விபர இயலின் வழி எழுந்ததாகும். இதன்படி, நுண்ணறிவு 'G' என்ற பொதுக்காராணி, முக்கியமாக ஆராய்ந்தறியும் திறனோடு தொடர்பு பெற்று விளங்குவதால் எல்லா மனச்செயல்களிலும் பங்கு கொள்கிறது. ஆனால், குறிப்பிட்ட தனிச் செயல்களிலேயே சிறப்புக் காரணிகள் ஒவ்வொன்றும் தனித்தனியாக பங்கு பெறுவதால், அவற்றிற்கிடையே தொடர்பு ஏதும் இல்லை. ஸ்பியர்மெனின் கோட்பாடுபடி, ஒவ்வொரு செயலும் பொதுக்காரணி, அச்செயலுக்குரிய குறிப்பிட்ட ஒரு சிறப்புக் காராணி ஆகியவற்றின் தொடர்பு கொண்டு திகழ்வதாகும்.

'G' காராணி பெரும்பாலும் மரபால் தீர்மானிக்கப்படுகிறது. எல்லா செயல்களிலும் தேர்ச்சிப் பெற்று விளங்க இது உதவுகிறது. ஆனால் குறிப்பிட்ட துறையில் சிறந்து விளங்க அத்துறைக்குத் தேவையான சிறப்புக் காரணி வலுப்பெற்றுத் திகழ வேண்டும். எனவே எந்த இருமனிதர்களை ஒப்பிட்டாலும் அவர்கள் இருவரும் ஒரே மாதிரியான புத்திசாலித்தனத்தைப் பெற்றிருப்பதில்லை. எனவே, ஒரு குறிப்பிட்டத் துறையில் ஒருவர் சிறந்து விளங்குவதை தீர்மானிப்பது அத்துறை

Downloaded From www.nagaicollege.com

செயல்களுக்குத் தேவையான 'G' யின் அளவு, "S'யின் அளவு ஆகியவை ஆகும். நுண்ணறிவின் பொதுக்காராணி மின்சக்தி போன்றது. சிறப்புக் காரணிகள் வெவ்வேறு மின் இயந்திரங்களைப் போன்றவை, பொதுவாக, நுண்ணறிவு என்னும்போது "G' காரணியையே குறிப்பிடுகிறோம். 'S' காரணிகளை நாட்டங்கள் அல்லது சிறப்புத் திறன்கள் என்கிறோம்.

இக்கோட்பாடு, நுண்ணறிவை அளவிடும் சோதனைகளை உருவாக்குவதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது, பல்வேறு மனத்திறன்களை சோதனையில் பெறப்படும் ஒட்டுமொத்த மதிப்பெண் பொதுக்காராணியான "G" ஐ அளிப்பதாகக் கொள்ள வேண்டும், ஏனெனில், ஒவ்வொரு பகுதிக்கும் உரித்தான சிறப்புக் காராணிகளின் "S" விளைவுகள் தங்களுக்குள் சமன் செய்யப்பட்டு விடுகின்றன. எனவே, முழுமையான நுண்ணறிவுச் சோதனை பல்வேறு மனத்திறன்களான சொல்லாற்றல், எண்ணாற்றல், நினைவாற்றல், குவிசிந்தனை போன்றவற்றை அளவிடும் பல பகுதிகளைக் கொண்டதாக இருக்க வேண்டும் என்பது புலனாகிறது.

10.3.3 பலகாரணிக் கொள்கை

பலகாரணிக்கொள்கை (Thurstone's Multifactor Theory): இக்கோட்பாட்டின்படி, நுண்ணறிவானது பல்லாயிரக்கணக்கான சிறு சிறு ஆற்றல்களை உள்ளடக்கியது. எந்தவொரு மனச்செயலிலும் பல்வேறு ஆற்றல்கள் ஒன்றிணைந்து செயல்படுகின்றன. இரண்டு பகுதிகளில் ஒருவர் மேம்பட்ட தேர்ச்சியை வெளிப்படுத்துகிறார் என்றால் அதற்குக் காரணம், அப்பகுதிகளில் இடம் பெறும் ஆற்றல் இணைப்புகளில், ஒத்தக் கூறுகள் மிகுந்து காணப்படுவதேயாகும். இக்கோட்பாட்டின்படி, நுண்ணறிவு என்பது ஒரே காரணியால் ஆனது அல்ல. தார்ண்டைக்கின் நுண்ணறிவுச் சோதனை 4 பகுதிகளைக் கொண்டது:

- வாக்கியத்தைப் பூர்த்தி செய்தல்
- எண் கணக்குகள் தொடர்பாக ஆராய்ந்தறிதல்
- சொற்களஞ்சியம்
- கட்டளைகளை நிறைவேற்றுதல்

இச்சோதனைகள் நான்கிடையேயும் மிக அதிகமான நேரிடை தொடர்பு காணப்படுவதால், இவற்றை வைத்து மற்ற நுண்ணறிவின் அம்சங்களைக் காப்பது, மிக எளிதே என்று தார்ண்டைக் கூறுகிறார்.

10.4 கில்போர்டின் நுண்ணறிவுக் கோட்பாடு

அமெரிக்காவின் தெற்கு கலிபோர்னியா பல்கலைக்கழக உளவியல் ஆய்வகத்தில் உளச்செயல்களை பகுப்பாய்வு செய்து, 1966-ல் நுண்ணறிவுக் கட்டமைப்பு என்ற கோட்பாட்டை கில்போர்டு வெளியிட்டார். இக்கோட்பாட்டின்படி, மனித மனம் முப்பரிமாணங்களில் செயல்படுகிறது என்றும், அவ்வாறு செயல்படும் நிலைகளுக்கேற்ப வெவ்வேறான உளத்திறன்கள் வெளிப்படுகின்றன என்றும் அறியப்படுகின்றது, ஒவ்வொரு உளத்திறனிலும், ஒரு குறிப்பிட்ட உளச்செயல் (Mental Process) ஒரு பொருள் மீது செயல்பட்டு, விளைவு ஒன்றை ஏற்படுத்துகிறது என்று கில்போர்டு அறிவித்தார்.



Downloaded From www.nagaicollege.com

பொருள் எனப்படுவதனுள் உருவம் (Figural), குறியீடு (Symbolic), சொல் பொருள் (Semantic), நடத்தை (Behavioural) ஆகியன அடங்கும். செயல் ஐந்து வகைகளாகும். அறிதல் (Congnition) நினைவு கூர்தல் (Memory) குவிசிந்தனை (Convergent Thinking), விரி சிந்தனை (Divergent Thinking) மதிப்பீடு (Evalution) என்பன இவை, விளைவுகள், அலகுகள், வகைகள், தொடர்புகள், ஒருங்கமைப்புகள், மாற்றியமைப்புகள், அனுமானங்கள் என்ற ஆறாகும்.

மொத்தம் 4x5x6 = 120 நுண்ணறிவுக் கூறுகளை கில்போர்ட் சுட்டிக் காட்டி இவற்றில பலவற்றை மதிப்பிடவும் முயன்றுள்ளார். இன்று கில்போர்ட் நுண்ணறிவுக் கூறுகளாக 5x6x6 = 180 குறிப்பிடப்படுகின்றன. நுண்ணறிவுக் கூறுகளின் விளக்கம்.

செயல்

- **அறிதல்**
  கொடுத்த விபரங்களிலிருந்து கேட்கப்பட்டதை உடனடியாகக் கண்டுபிடித்து பொருள்உணர்தல் ஆகியவை,
- **நினைவு கூர்தல்**
  கற்ற செய்திகளை நினைவில் இருத்தித் தேவைப்படும் போது வெளிக்கொணர்தல்.
- **குவிசிந்தனை**
  கொடுக்கப்பட்டுள்ள விபரங்களிலிருந்து பொதுவாக எதிர்பார்க்கப்படும் சிறந்த விளைவு அல்லது பயனை என்பதைக் கண்டு அறிதல்.
- **விரிசிந்தனை**
  கொடுக்கப்பட்டுள்ள விபரங்களைப் புதுமையான கோணத்தில் உற்று நோக்கி அல்லது மாற்று முறைகளில் சிந்தித்துப் புதிய பயன்பாடுகள், புதிய அணுகுமுறைகளைத் தோற்றுவித்தல்.
- **மதிப்பிடுதல்**
  கொடுக்கப்பட்டுள்ள விபரம், எந்த அளவு பொருத்தமானது, சரியானது, போதுமானது, விரும்பத்தக்கது என்று முடிவுக்கு வருதல்,

பொருள்

- **உருவம் சார்ந்தவை**
  கையாளப்படும் விபரம் அல்லது செய்தி, உருவங்கள், படங்கள் போன்ற பருப்பொருள்களாகவும், அவற்றின் உருவம், அளவு, வண்ணம் ஆகியவற்றைத் தெரிவிப்பதாகவும் அமைந்திருத்தல். எது பின்னணியாக அமையும், எது உருவமாக அமையும் என்ற கோட்பாடும் இதில் உள்ளடங்கும். இங்கு பல்வேறு புலன் உணர்வு இடம் பெறக்கூடும்.
- **குறியீடு சார்ந்தவை**
  இதில் எழுத்துக்கள், எண்கள், மரபுவழி உபயோகிக்கப்படும் குறியீடுகள், இசைக்குறியீடுகள், சொற்கள் போன்றவை அடங்கும் .
- **சொல்பொருட்கள் சார்ந்தவை**
  பொதுவாக உபயோகிக்கப்படும் சொற்களுக்கான பொருளைப் பெறுதல், படங்கள் உணர்த்தும் செய்திகள் போன்றவை இதில் அடங்கும்.
- **நடத்தைசார்ந்தவை**
  மனித இடைவினைகளை வெளிப்படுத்தும் நோக்கத்தில் அமைந்த நம்முடைய மற்றும் பிறரது மனப்பான்மைகள், விருப்பங்கள், சிந்தனை, புலன்காட்சி, மனஉணர்வுநிலை போன்ற கூறுகளை உள்ளடக்கிய சொல்சாரா (Non-Verbal) விபரங்களே இங்கு கையாளப்படும்.

Downloaded From www.nagaicollege.com

விளைவுகள்

- **அலகுகள்**
  தனித்த விபரங்களை ஒன்றிணைத்து பொருள் காணுதல்.
- **வகைகள்**
  பொருட்களை அவற்றினிடையே காணப்படும் பொதுப் பண்புகளின் அடிப்படையில் வகைப்படுத்துதல்.
- **தொடர்புகள்**
  கொடுக்கப்பட்ட மாறிகளுக்கிடையேயான தொடர்பை யூகித்தறிதல்.
- **ஒருங்கமைப்புகள்**
  கொடுத்த விபரங்களை அல்லது செய்திகளை ஒருங்கிணைத்து ஓர் அமைப்பு அல்லது வடிவத்தை ஏற்படுத்துதல்.
- **மாற்றி அமைததல்**
  கொடுத்த விபரங்களை அல்லது செய்திகளை வேறுவகையில் வரையறுத்தல், மாற்றியமைத்தல்.
- **அனுமானங்கள்**
  கொடுத்த விபரங்களிலிருந்து, நாம் எதிர்பார்க்கக்கூடியவை, தோன்றக் கூடிய விளைவுகள், பெறக் கூடிய கணிப்புகள் ஆகியவை இதில் அடங்கும்.

10.5 மனவெழுச்சி நுண்ணறிவு

ஹெயின் என்பவரது வரையரைப்படி, மனவெழுச்சி நுண்ணறிவு என்பவை மனவெழுச்சிகளைத் தெளிவாக உணர்தல், வெளிப்படுத்துதல், அடையாளம் காணுதல், நினைவிலிருத்தல், அவற்றைப் பயன்படுத்திக் கற்றல், நெறிப்படுத்துதல் ஆகிய ஆற்றல்களை இயல்பாகப் பெற்றிருத்தல்.

- இது இயல்பாகவே, ஒவ்வொரு குழந்தையிடமும் பிறவியிலேயே அமையப் பெற்றுள்ளது.
- இது ஒவ்வொரு குழந்தையிடமும், வெவ்வேறு அளவுகளில் அமையப் பெற்றிருக்கும்.
- இது மனவெழுச்சிகளை உணர்ந்து செயல்படும் ஆற்றலோடு தொடர்பு உடையது.
- இது உணர்வுகளை நினைவிலிருத்தலையும் உள்ளடக்கியது.

10.5.1 மனவெழுச்சி நுண்ணறிவின் உட்கூறுகள்

ஜாக் மேயர் மற்றும் பீட்டர் ஸ்லோவே மனவெழுச்சி நுண்ணறிவின் உட்கூறுகளாக பின்வரும் நான்கினைக் குறிப்பிடுகின்றனர்,

1. **மனவெழுச்சியினை உணர்தல்**
   - தன் உணர்வுகளையும், மனவெழுச்சிகளையும் நன்குணர்தல்
   - சொற்கள், குரல் ஒலி, முகபாவம், செய்கைகள் ஆகியவற்றின் மூலம் பிறரது உணர்வுகளையும், மனவெழுச்சிகளையும் புரிந்து கொள்வதோடு, கலைப்படைப்புகள், வடிவமைப்புகள் போன்றவற்றை உன்னிப்பாக கவனிக்கும் ஆற்றலை பெற்றிருத்தல்.
   - மனவெழுச்சி பற்றிய அடிப்படை அறிவைப் பெற்றிருத்தல் மற்றும் பிறரது மனவெழுச்சிகளை குறிப்பிட்டு இனம் காணும் திறமை, அவற்றை தெளிவாக வெளிப்படுத்தும் ஆற்றல், அவை பற்றி விவாதிக்கும் ஆற்றல் ஆகியவற்றைப் பெற்றிருத்தல்.
2. **மனவெழுச்சியினை சிந்தனையில் பயன்படுத்துதல்**
   - தமது உணர்வுகளை ஆராய்ந்தறிதல், முடிவுகள் எடுத்தல், பிரச்சனைகளைத் தீர்த்தல் போன்ற கருத்தியல் செயல்பாடுகளில் பயன்படுத்துதல்

Downloaded From www.nagaicollege.com

- தமது உள்ளுணர்வின் மூலம் சிந்தித்து செயல்படுதல்

3. **மனவெழுச்சிகளைப் புரிந்து கொண்டு பகுத்தாய்தல்**
   - மனவெழுச்சிப் பிரச்சனைகளைத் தீர்த்தல்
   - மனவெழுச்சி, சிந்தனை, செயல்பாடு ஆகியவற்றிற்கு இடையேயான தொடர்புகளை புரிந்து கொள்ளுதல். சிந்தனை எவ்வாறு மனவெழுச்சியை உண்டாக்குகின்றது, மனவெழுச்சி சிந்தனையை எவ்வாறு பாதிக்கின்றது, ஒருவரது மனவெழுச்சியின் வெளிப்பாட்டால் அவரதுநடத்தையும், பிறர் அவரிடம் நடந்து கொள்வதும் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்பதை புரிந்துகொள்ளுதல்
4. **மனவெழுச்சிகளை நெறிப்படுத்தி சுய முன்னேற்றத்துக்கு வழிவகுத்தல்:**
   - ஒருவர் தமது மனவெழுச்சிகளுக்கும், மகிழ்ச்சிக்கும் தாமே பொறுப்பு ஏற்றல்
   - பிறர் தமது மனவெழுச்சிகளை கண்டறிந்து, பயன் பெற உதவுதல்

10.6 நுண்ணறிவுச் சோதனைகளின் பயன்கள்

- கல்வியில் வழிகாட்டுதலுக்கு
- குழந்தைகளின் மனத்திறன் அறிய
- மாணவர்களின் குறிப்பிட்ட திறனை அளவிட
- மாணவர்களைப் பிரித்து, பணிகள் அளித்து கற்பிக்க
- பின்னடைவிற்கான காரணமறிந்து குறைதீர்க்க
- எதிர்கால முன்னேற்றத்தை குறிப்பிட
- ஆய்வுகளுக்காக
- பணிநியமனத் தேர்விற்காக
- தகுதி அடிப்படையில் உதவிகள் வழங்க மற்றும் தேர்வு செய்ய
- செயல்களின் விளைவுகளை அளந்தறிய
- ஒரு குழந்தை ன் நுண்ணறிவுத் திறனை அறிந்திட
- மாணவர்களின் மீள்திறனைக் கண்டறிந்து சிறப்புப்பயிற்சியளிக்க.

10.7 நுண்ணறிவு ஈவு (Intelligence Quotient)

ஒரு குறிப்பிட்ட மனவயது நிலையை அடைய ஒருவனுக்கு எவ்வளவு காலம் (பிறப்பு முதல்) தேவைப்பட்டது என்பதை நுண்ணறிவுச்சோதனையில் கவனிப்பதில்லை. எனவே, ஒருவனது மனவயது பற்றிய அறிவு மட்டுமிருப்பின் அவனைப்பற்றி நம்மால் திட்டமாகக் கூற இயலாது. ஒருவனது மனவயது 8 என்று வைத்துக் கொள்வோம். அதாவது அவன் நுண்ணறிவுச சோதனையில் 8 வயது வரை அமைந்த வினாக்களுக்குச் சரியாக விடையளிக்கிறான். அவனது கால வயது 6-ஆக இருப்பின் அவன் நுண்ணறிவு வயதுக்கு மீறிய திறமையுள்ளவன். அவனது கால வயது 10 என்றால் அவன் பின்னடைந்தவன். எனவே, ஒருவனுடைய மன வயதுடன் அவனது கால வயதையும் ஒப்பு நோக்கினால்தான் அவனது திறன் தெளிவாகும். ஸ்டெர்ன் (Stein) என்பாரது கணக்கீட்டின்படி

$$\text{நுண்ணறிவு ஈவு-} \frac{\text{மனவயது}}{\text{காலவயது}} \text{X } 100$$

இதன்படி நுண்ணறிவு ஈவு 100 சாதாரண நுண்ணறிவையும், அதற்கு மேற்பட்டால் நுண்ணறிவு மிகுதியையும், 100-க்கு கீழ்ப்பட்டால் நுண்ணறிவுக் குறைவையும் குறிக்கும்.

Downloaded From www.nagaicollege.com

10.8 நுண்ணறிவுப் பரவலும் வகைப்பாடும் (Clssifications & Distributuion of I.Q.'s)

சமுதாயத்தில் பெரும்பாலானோர், சராசரி நுண்ணறிவு ஈவு படைத்தவர்கள். சுமார் 1 சதவிகித மேதைகளும், மூளைவளர்ச்சி குன்றியவர்களும் காணப்படுகின்றனர். இக்குழந்தைகளுக்குச் சாதாரணப் பள்ளிகளில் அளிக்கப்படும் கல்வியால் எந்த பயனும் இல்லை, இத்தகையோருக்கான சிறப்புப் பள்ளிகளில் சேர்த்து கல்வியளித்தால், அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான திறன்களையும் அடிப்படை அறிவும் பெற்று தங்கள் வேலைகளை தாங்களே பார்த்துக் கொண்டு சுயசார்புடையவர்களாக திகழ வைக்க முடியும்.

10.8.1 நுண்ணறிவு வளர்ச்சி (Growth of Intelligence)

நுண்ணறிவு என்பது வயது அதிகரிக்க அதிகரிக்க வளர்ச்சி பெற்று முன்னேற்றமடைகிறது. இவ்வளர்ச்சி எல்லா வயதிலும். கிட்டத்தட்ட ஒரே சீராக இருப்பது போல் தோன்றினாலும் கூட, முதல் 5 வயதுவரை வளர்ச்சியில் தீவிரம் காணப்பட்டு, முதிர்ச்சியடையும் நிலையில் சிறிது வேகம் குறைகிறது. இவ்வளர்ச்சி 15 வயதில் முழுமையடைவதாக பீனேயும், 16 வயதில் முழுமையடைவதாக டெர்மன் - மெரில் போன்றோரும் கருதுகின்றனர். நுண்ணறிவு வளர்ச்சியில் தனியாள் வேற்றுமைகள் (Individual differences) காணப்படுகின்றன. திறன்மிக்கோரது நுண்ணறிவு வளர்ச்சி 16 வயதுக்குப் பிறகும் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் தொடரலாம் மந்த புத்தியுள்ளோரின் நுண்ணறிவு வளர்ச்சி 10 - 12 வயதிலேயே நின்று போகக் கூடும். குழந்தைகளில் காலம் கடந்து வளர்ச்சியடைவோரும் (late bloomers) உண்டு. இவர்களின் நுண்ணறிவு வளர்ச்சி 7-8 வயது வரை மெதுவாக இருந்தாலும், பின்னர் அதிகமாகும்.

நுண்ணறிவு வளர்ச்சி ஆழமாகவும் (depth), அகலமாகவும் (width) பரவுவதாக நம்பப்படுகிறது. நுண்ணறிவின் செங்குத்து வளர்ச்சி (Vertical Growth) 16 வயதுடன் முழுமை பெற்று விடுவதாகவும், நுண்ணறிவுவைப் பயன்படுத்திப் பயிற்சி அல்லது கல்வி அறிவினால் விளைகிற பொருளறிவு (knowledge) அல்லது "கிடைமட்ட வளர்ச்சி (Horizontal Growth) பெருகிக் கொண்டே போவதாகவும் கருதப்படுகிறது. எனவே 40 வயதுடைய ஒருவருக்கு நுண்ணறிவுச் சோதனையைப் பயன்படுத்தி நுண்ணறிவை அளவிட்டால், அவருடைய 16 வயதில் அவருக்கு என்ன மன வயது இருந்ததோ, அதையே காட்டும். ஆனால் செங்குத்து நுண்ணறிவு (Vertical Intelligence) சூழ்நிலையின் இடைவினையினால் விளைகின்ற "கிடைமட்ட நுண்ணறிவு" (Horizontal intelligence) காரணமாக ஏற்படுகின்ற செய்திறன்களும் (Skill), பொருளறிவும் (Knowledge) பெருகிக் கொண்டே செல்லும். எனவே நுண்ணறிவுச் சோதனைகளால் அளவிடப்படுவது செங்குத்து நுண்ணறிவே என்று அறிதல் வேண்டும்.

10.8.2 நுண்ணறிவுக் கெழவின் மாறாத்தன்மை (Constancyof I.Q.)

மனவயது என்பது ஒருவரது நுண்ணறிவின் நிலையையும், நுண்ணறிவு ஈவு என்பது அவரது நுண்ணறிவை அவருடைய வயது ஒத்தவர்களோடு ஒப்பிடப்படும்போது உள்ள நிலையையும் குறிப்பதாகும். நுண்ணறிவு ஈவின் அளவு எப்போதும் "ஒப்பிட்ட அளவு" ஆகும். அதாவது காலவயது அதிகரிக்க மனவயதும் உயர்கிறது. ஆகையால் நுண்ணறிவு ஈவு மாறுவதில்லை . மீத்திறக் குழந்தைகள் எப்போதும் மீத்திறனுடனும், மந்த புத்தியுடைய குழந்தைகள் தொடர்ந்து மந்த புத்தியுடையதாகவும் உள்ளன. 16 வயதிற்குப் பின், வாழ்க்கையில் ஏற்படும் பல பிரச்சனைகளைத் தீர்ப்பதற்குரிய செயலாற்றல், நுண்ணறிவு ஈவினால் ஏற்படுவதில்லை மாறாக அனுபவத்தினால் ஏற்படும் ஆற்றலாகும்.

அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வுகள் "நுண்ணறிவுக் கெழந்தை ன் மாறாத் தன்மை" என்ற கருத்தையே சந்தேகத்திற்குரியதாக மாற்றியுள்ளது. ஹவுசிக் என்பார் 150 குழந்தைகளின் நுண்ணறிவு ஈவை 2 வயது முதல் 18 வயது வரை தொடர்ந்து அளவிட்டு வந்ததில் 10 முதல் 30 புள்ளிகள் வரையில் மாற்றங்கள் நிகழ்ந்ததாகக் குறிப்பிடுகிறார். பெயிலி, ரிச்சர்ட்ஸ் ஆகியோரது

Downloaded From www.nagaicollege.com

ஆய்வு முடிவுகளும் ”நுண்ணறிக் குெழந்தை ல் மாற்றம்” (Fluctuation in T.Q.) என்ற கருத்தை வலியுறுத்துவதாக அமைந்துள்ளன. அளவிடப்படும் நுண்ணறிவு ஈவில் மாற்றம் ஏற்படுவதற்கான பல்வகைக் காரணங்களில் கீழ்க்கண்டவை முக்கியமானவை: i) சோதனை நடத்தப்படும் சூழ்நிலைகள் ii) சோதனை நடத்தப்படும் காலங்களில் உடல்நலனிலும், மனநிலையிலும் எழும் மாற்றங்கள் iii) பயன்படுத்தப்படும் நுண்ணறிவுச் சோதனைகளின் சந்தேகமான நம்பகத்தன்மை iv) அடுத்தடுத்து சோதனைகள் நடத்தும்போது, சோதனை உருப்படிகளோடு ஏற்படும் பரிச்சயம் v) சோதனைத் தரங்கள் (Norms) முழு அளவு உண்மையுள்ளனவாக இல்லாமை vi) நுண்ணறிவுச் சோதனைகளின் தன்மையில், அதாவது அவை எத்திறன்களை அளவிட முற்படுகின்றன என்பதில் காணப்படும் வேறுபாடுகள் vii) மனவெழுச்சி, ஆளுமைப் பண்புகள் ஆகியவற்றில் எழும் மாறுதல்கள் ஆகியவை. எனவே எல்லாவற்றையும் கருத்தில் கொள்ளும்போது, நம்பகத்தன்மை மிகுந்த பொருத்தமான நுண்ணறிவுச் சோதனையை அதுவும் குழந்தைகளின் 7-8 வயதுக்குப் பிறகு பயன்படுத்தி நுண்ணறிவு ஈவைக் கணக்கிட்டால்,அது பெருமளவு மாறாத்தன்மையுடன் திகழும் என்று கூறலாம்.

நுண்ணறிவுச் சோதனைகளின் பயன்கள்

1. நுண்ணறிவுச் சோதனைகள், மாணவர்களின் படிப்பு, தொழில் ஆகியவற்றில் வழிகாட்டவும், நெறிப்படுத்தவும் (educational and vocational guidance) ஆசிரியர்களுக்குப் பயன்படுகின்றன.
2. பள்ளியில் மாணவர்களை தரம் பிரிப்பதற்கு இவற்றைப் பயன்படுத்தலாம். மாணவருள் மீத்திறனுடையோர்களையும், பிற்பட்டோரையும் கண்டறிய இச்சோதனைகள் இன்றியமையாதனவாகும்.
3. தற்காலத்தில் மாணவர்களை அவர்களது ”ஆற்றலின்படி வகைப்படுத்தும் முறை” (Ability grouping) சிறந்ததாகக் கருதப்படுகிறது. இம்முறைப்படி ஒவ்வொரு வகுப்பிலும் மூன்று பிரிவுகள் இருக்கும். மீத்திறன் மிக்கவர்களை முதல் பிரிவிலும், சாதாரண நுண்ணறிவுள்ளவர்களை இரண்டாவது பிரிவிலும், பின்தங்கிய மாணவர்களை மூன்றாவது பிரிவிலும் சேர்த்து தனித்தனியாக கற்பித்தல்.
4. குழந்தைகளின் பள்ளித் தேர்ச்சியில் பின்தங்கிய நிலைக்குரிய காரணத்தை அறிய நுண்ணறிவுச் சோதனையைப் பயன்படுத்தலாம். பல்வேறு தொழில்களுக்குப் பொருத்தமானவர்களைத் தேர்ந்தெடுக்க நுண்ணறிவுச் சோதனைகள் பயன்படுகின்றன.

Downloaded From www.nagaicollege.com

அலகு 11 ஆக்கத்திறன் அல்லது படைப்பாற்றல்
UNIT XI - CREATIVITY

11.1 ஆக்கத்திறன் (அல்லது) படைப்பாற்றல்

ஆக்கத்திறன் (Creativity) என்பது புதியனவற்றை படைக்கும் ஆகும். தொழில்நுட்ப சமுதாய வளர்ச்சிக்கு புதிய கருத்துகளும், கண்டுபிடிப்புகளும் தேவைப்படுகின்றன. இதற்கு அடிப்படை ஆக்கச் சிந்தனையே. ஆக்கச் சிந்தனையின் விளைவு புதுமை (Novelty) உடையதாக இருக்கும். பயனுள்ள முறையில் ஆக்கச் சிந்தனை அமைவதற்கு உதவக் கூடிய பல்வேறு பண்புகள், ஆற்றல்கள் ஆகியவற்றின் தொகுப்பை நாம் ஆக்கத்திறன் எனக் குறிப்பிடலாம். பழைய எண்ணங்களை புது வடிவத்தில் அமைப்புறச் செய்தலும், பழைய எண்ணங்களிடையே புதுத்தொடர்புகளைக் காணுதலும், ஆக்கச் சிந்தனையினால் உருவாதலாகும். ஸி.ஆர். ரோஜர்ஸ் (C.R. Rogers) வரையறைப்படி, ஆக்கச் சிந்தனை என்பது ஒருவரது தனித்தன்மைக்கும், அவரது வாழ்வில் எதிர்படும் பொருட்கள், மனிதர்கள், நிகழ்வுகள், சூழ்நிலைகள் ஆகியவற்றிற்கும் இடையே ஏற்படும் இடைவினையினால் புதுமையான பொருட்களோ அல்லது தொடர்புகளோ விளைவதாகும்.

11.2 ஆக்கத்திறனுக்கும், நுண்ணறிவுக்கும் இடையேயான வேறுபாடு மற்றும் தொடர்பு

நுண்ணறிவுக்கு குவிசிந்தனையும், ஆக்கத்திறனுக்கு விரிசிந்தனையும் அடிப்படையாக விளங்குகின்றன என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. குவிசிந்தனையில், எல்லோராலும் ஒப்புக்கொள்ளக்கூடிய சரியான விடையை அல்லது தீர்வைப் பெறுவதே குறிக்கோளாகக் கொள்ளப்படுகிறது. ஆனால் விரிசிந்தனையில் வெவ்வேறு விதமான பல்வகைத் தீர்வுகளை பெற முயற்சிக்கப்படுகிறது. எனவே, நுண்ணறிவுச்சோதனையில் ஒவ்வொன்றிற்கும் ஒரே ஒரு சரியான விடையே உண்டு. ஆனால் ஆக்கத்திறன் சோதனையில் ஒவ்வொன்றுக்கும் பல கிடைக்கும். ஆக்கத்திறனுக்கும், நுண்ணறிவு ஈவு அதிக அளவு பெற்றிருக்க வேண்டுமென்பதில்லை. அதாவது, அதிக நுண்ணறிவு ஈவு உடையோர் மிகுந்த ஆக்கத்திறனோடு திகழ வேண்டியதில்லை. ஆனால், போதுமான சராசரி அளவு நுண்ணறிவு இன்றி, ஆக்கத்திறன் தோன்ற வாய்ப்பில்லை.

- நுண்ணறிவுச் சோதனைகள் செயற்படுதலையும், சரியான விடை என்று ஒப்புக் கொள்ளப்பட்டவற்றை வழங்குதலையும் வலியுறுத்துகின்றன. விடைகளை அளிப்பதில் சோதிப்பவனின் தனித்தன்மைக்கு வாய்ப்புகள் இல்லை. ஆனால், ஆக்கத்திறன் சோதனைகளில் தனித்தன்மை, சுதந்திரம், சிந்தனை நெகிழ்ச்சி, கருத்து விரிவாக்கம், துரிதமாகவும், தடையின்றியும் சிந்தித்தல், புதுமை ஆக்கம் படைத்தல் ஆகியவற்றிற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றன.
- ஆக்கத்திறன் மிக்க குழந்தைகள் பலர் சமுதாயத்தில் பின்தங்கிய குழுக்களிலும் காணப்படுகின்றனர்.

11.3 குவிசிந்தனையும், விரிசிந்தனையும்

குவிசிந்தனை (Convergent Thinking)

ஒன்றைப்பற்றி எல்லோராலும் ஒப்புக் கொள்ளக்கூடிய ஒரு தீர்வைக் குறிக்கோளாகக் கொண்டு செயல்படும் உள்ளார்ந்த ஆய்வு குவிசிந்தனை. இது குறுகலானது. ஒரு திசையில் சிந்திக்கக் கூடியது. பொதுவாக தீர்வு வழியை மட்டும் சிந்திப்பது குவி சிந்தனையாகும், ஒரு நோக்கில் அமைக்கப்படுவது திசைப்படுத்தப்பட்டது. பல்வேறு தூண்டல்கள் இணைந்து ஒருமுகமாகச் செயல்படுவது குவிசிந்தனையை வளர்க்கும்.

Downloaded From www.nagaicollege.com



விரிசிந்தனை (Divergent Thinking)

ஒன்றைப்பற்றி சுதந்திரமாக பல்நோக்கில், பலகோணங்களில் ஆழ்ந்து, பரிசோதிப்பது, சிந்திப்பது விரிசிந்தனையாகும். கற்பனை, யூகங்கள் கலந்தது விரிசிந்தனை. ஒரு பிரச்சனையை நன்கு ஆராய்ந்து, அப்பிரச்சனையின் பல்வேறு பரிமாணங்களையும் சிந்தித்து ஒன்றுக்கு மேற்பட்ட தீர்வுமுறைகளைச் சிந்திப்பது விரிசிந்தனையாகும். வெவ்வேறு வகையான பல்வகைத் தீர்வுகளைப் பெற முயற்சிக்கப்படுகின்றது. ஒரு தூண்டல் ஒன்றோடொன்று தொடர்புடைய பல துலங்கல்களை வெளிப்படுத்தினால், அது விரிசிந்தனை.

11.4 ஆக்கத்திறன் செயல்முறைப் படிநிலைகள்

இது படைப்புச் சிந்தனையின் அடிப்படை.

படைப்பாற்றல்

படைப்புச் சிந்தனை நான்கு படிநிலைகளைக் கொண்டது.



- தயார் நிலை (அ) ஆயத்தம் (Preparation)
- உள்வளர்ச்சி (அ) உள் உறக்க நிலை (Incubation)
- உள் ஊக்கம் (அ) உள்ளொளி (Inspiration Or Illumination)
- சரிபார்த்தல் (Verification)

தயார்நிலை

பிரச்சனை தேர்வு செய்யப்பட்டு, அது பற்றிய சிந்தனைக்கு வரையறை செய்தல், ஒருமுகப்படுத்துதல், தொடர்பான விபரங்கள் சேகரித்தல், பகுத்தாய்தல் இதன் மூலம் தீர்வுகாண தன்னைத்தானே உளகதியாக, செயலுக்கு தயாரித்துக் கொள்ளும் செயலையும், தீர்விற்கான சேகரிப்பு நிலையையும் குறிப்பதாகும். இவ்வாறு தயாரிக்கும் பொழுது, தேவைப்பட்டால், செயல்திட்டம் மாற்றியமைக்கப்பட்டு திட்டம் வரையப்படும். சில சமயங்களில், தேர்வு செய்யப்பட்ட பிரச்சனை கடினமானதாயின் அதை செயல்படுத்துவதை சற்று தள்ளிவைத்து அதனைப்பற்றி ஆழ்ந்து அறிய முயல்வது இரண்டாம் நிலையாகும்.

Downloaded From www.nagaicollege.com

உள்வளர்ச்சி (அ) உள் உறக்கநிலை (Incubation)

இந்நிலையில் பிரச்சனை தொடர்பான செயல்கள் வெளிப்படுத்தாமல் , முன் அனுபவத்தையும், பெறப்பட்ட தகவல்களையும் உள்வளர்த்து புதிய கோணத்தில் இணைத்து சிந்தித்தலைக் குறிப்பதாகும். சற்று, அதனை உள்நிலையில் வைத்து, ஆர்வமுள்ள வேறு செயல்பாடுகளில் ஈடுபடுவதையும் குறிப்பதால் நம்மையும் அறியாமல் ஏற்பட்ட உள்வளர்ச்சியின் காரணமாக பளிச்சென்ற தீர்வு பற்றிய சிந்தனை தோன்றும். இது, அடுத்த நிலைக்கு வழி செய்கின்றது. உள்வளர்ச்சிக்காலம் நபருக்கேற்ப, இயல்பிற்கேற்ப, பிரச்சனைக்கேற்ப வேறுபடக்கூடியதாகும்,

உத்வேகம் (அ) உள் ஒளி நிலை (Inspiration Or illumination)

உள்வளர்ச்சியின் காரணமாக உட்காட்சி மூலம் திடீர் கருத்து தோன்றும் நிலையைக் குறிப்பதாகும். இது முந்திய சிந்தனையை உறுதிசெய்வதாகவோ, சிறு மாற்றங்களை உள்ளடக்கியதாகவோ, புதிய ஒன்றாகவோ இருக்கலாம். இது எந்த நேரத்திலும் தோன்றலாம். புதுமையானதாகவும் இருக்கலாம்.

சரிபார்த்தல் நிலை (Verification Stage)

இதுவே ஆக்க சிந்தனை வளர்ச்சியின் இறுதிநிலை. சிந்திக்கப்பட்ட தீர்வு, சரியானதா என சோதித்து சரிபார்க்கப்படும். தேவையான திருத்தங்களுடன் தீர்வு முடிவு செய்யப்படும். இந்நான்கும், வரிசைப்படி நிகழ வேண்டுமென கட்டாயமில்லை. இந்நான்கு நிலைகளும் தேவைப்பட்டால் மறு சுழற்சிக்கும் செல்லவேண்டியிருக்கலாம். இவை எல்லாமே பிரச்சனையின் கடினத்தன்மை, தேவை, பயன்பாடு போன்ற காரணிகளால் தீர்மானிக்கப்படுகின்றன. திட்டம் எந்த நேரத்திலும், நிலையிலும் மாற்றத்தக்கதாகும். எந்த ஒரு படைப்பும், இத்தகைய நிலைகளின் விளைவாகத் தோன்றுகின்றன. படைப்புகள் பயனுள்ளதாக ஏற்கப்பட்டால் எல்லோராலும் பயன்படுத்தப்படுகின்றன. இத்தகைய படைப்பு, கருத்து வடிவமானதாகவோ, செயல்வடிவமானதாகவோ, பொருள் வடிவமானதாகவோ அமையலாம்.

11.5 ஆக்கத்திறனை வளர்த்திடும் வழிமுறைகள்

- **கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரம்**
  மாணவர் தன் கருத்துகளை வெளிப்படுத்த சுதந்திரம் அளிக்கப்படுவதுடன், தானே உண்மை கண்டறிந்து வடிவமைக்க சுதந்திரம் அளிக்கப்பட்டு மாணவரின் ஆக்க சிந்தனையை ஊக்குவிக்க வேண்டும்.
- **உற்சாகப்படுத்துதல்**
  மாணவர் கருத்துக்களை ஏற்று, மதிப்பளித்து, வளர்ச்சியை ஆராய்ந்து அவர்களுக்குத் தேவையான புத்தகங்கள், கற்றல் வளங்கள் கிடைக்கச் செய்து உற்சாகப்படுத்த வேண்டும்.
- **ஆர்வமூட்டுதல் (Curiosity)**
  மாணவர்களின் அறிய வேண்டும் என்ற ஆர்வத்தை தடைசெய்யாது பொறுமையுடன், அன்புடன், பரிவுடன் அவர்களை அணுக வேண்டும். அவர்களின் அவசியத் தேவைகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். மாணவர்களை மதிப்பது, ஊக்கப்படுத்துவது அவசியம். மனதில் தோன்றும் வினாக்களை, சந்தேகங்களை வெளிப்படுத்த வாய்ப்பளிக்க வேண்டும். கேலி செய்தல், அடக்கியாளுதல் கூடாது. சரியான கருத்து வெளிப்படுத்தும் பொழுது பாராட்டப்பட வேண்டும். கருத்து ஊக்கப்படுத்தப்பட வேண்டும்.
- **கலைத்திட்டம் (Curriculum)**
  பள்ளியின் பாடக்கலைத்திட்டம், அந்தந்த நிலையில் மாணவர்கள் ஆக்கத்திறன் வளர்க்க ஏதுவாக அமைக்கப்பட வேண்டும். கலைத்திட்ட செயல்பாடுகளில் படைப்பாற்றலுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்.
- **வழிகாட்டுதலும், நெறிப்படுத்துதலும் (Guidance and Counseling)**

Downloaded From www.nagaicollege.com

ஆக்கத்தின் வளர்ச்சியில் முக்கிய இடம் பெறுகின்றது. மாணவர்கள் தனித்தன்மையுடன் தனித்தியங்கி படிக்கவும், செயல்திட்டங்களை மேற்கொள்ளவும், செயல்திட்டங்கள் மூலம் புதியன கண்டறியவும், சரியான வகையில் அவர்களை வழிநடத்தி நெறிப்படுத்துதல் அவசியம்

- **தேர்வு முறை (Examination)**
  மாணவர்களுக்கான தேர்வானது சுதந்திரமாக, சுயசிந்தனை வளர்க்கக் கூடியதாக, கற்பனை வளம் வெளிப்படுத்தக்கூடியதாக, படைப்பாற்றல் சிந்தனைக்கு வாய்ப்பளிக்கக் கூடியதாக வடிவமைக்கப்பட வேண்டும்.
- **ஒப்படைப்புகள் (Assignment)**
  ஆக்கத்திறன் வளர்க்கக்கூடிய வகையில் வீட்டு ஒப்படைப்புகள் வழங்கி சிறந்த ஒப்படைப்புகள் ஊக்கப்படுத்தப்படல் வேண்டும்
- **சமுதாயப் படைப்பாற்றலை பயன்படுத்துதல்**
  படைப்புத்திறன் மிக்க பொருட்காட்சிகள், அறிவியல் மற்றும் தொழில் சார்ந்த படைப்புத் திறன் கைப்பொருட்காட்சிகள், அருங்காட்சியக மையங்கள் ஆகியவற்றிற்கு மாணவர்களை அழைத்துச் சென்று பார்க்கச் செய்வதன் மூலம் படைப்பாற்றலைத் தூண்டலாம்.
- **கற்பித்தல் முறைகள் (Teaching methods)**
  மாணவர்களுக்குக் கருத்து மற்றும் சிந்தனைகளுக்கு சுதந்திரமளித்து, எண்ண சுதந்திரமளித்து, கற்பித்தலில் ஆசிரியர்கள் மாணவரது படைப்பாற்றலைத் தூண்டும் வகையிலும், வளர்க்கும் வகையில் புதுமையைக் கையாண்டு, கற்பித்தல் முறைகளை அமைத்துக் கொள்ள வேண்டும். ஆசிரியரே படைப்பாற்றலை உருவாக்குபவராய் இருத்தல் வேண்டும்.

11.6 ஆக்கத்திறனை அளவிடுதல்

ஆக்கத்திறன்மிக்கவர்களை ஆக்கத்திறன் சோதனைகள் மூலமும், சோதனைகளில்லாத பிறவழிகள் மூலமும் கண்டறியலாம். ஆக்கத்திறன் சோதனைகளில் மொழி மற்றும், படங்களைப் பயன்படுத்தும் முறைகளும் உண்டு.

- இயல்பான பயனுக்கு அப்பாற்பட்ட புதிய பயன்கள் உருவாதல்.
- நடக்கவியலாத நிகழ்ச்சிகள் 5 நிமிடங்களில் எத்தனை நிகழ்ச்சிகளைக் குறிக்க இயலுமோ அனைத்தையும் குறித்தல்.
- நிகழக் கூடாத ஒன்று, இவ்வாறு நிகழ்ந்தால்-என கற்பனை செய்தல்.
- விளையாட்டுப் பொருள்களை சிறப்பானதாக ஆக்குதல்.
- முடிவுறாத உருவங்களை வரைந்து பெயரிடுதல்.
- காகித வெட்டுகளைக் கொண்டு புதிய படங்களை உருவாக்குதல்.

சோதனைகளற்ற ஆய்வு முறைகள்

- உற்று நோக்கல் முறைகள்
- நேர்காணல்
- தர அளவுகோல்
- சரிபார்க்கும் பட்டியல்
- ஆளுமைப்பட்டியல்

Downloaded From www.nagaicollege.com

அலகு 12 ஆளுமை
UNIT XII - PERSONALITY

12.1 ஆளுமை என்பதன் பொருள்

Personality எனும் சொல், **லத்தீன்** வார்த்தையான **persona** என்பதிலிருந்து தோன்றுகிறது. இதற்கு நாடகத்தில் போடப்படும் வேடம் அல்லது **முகமூடி** என்று பொருள். ஆளுமை என்பது ஒருவனது பண்புகளைக் குறிக்கும் வெளித்தோற்றம் எனக் கருதப்பட்டது. ஆனால் இன்று, அதன் பொருள் வேறுபடுகின்றது. குறிப்பிட்ட பண்பில் சிறந்து விளங்குபவன் சிறந்த ஆளுமையுடையோன் எனப்படுகிறான். பலர் இவ்வார்த்தை, உடல் கவர்ச்சியை, உருவத்தைக் குறிப்பதாகக் கருதுகின்றனர். ஆனால் உண்மையிலேயே, ஆளுமை என்பது மிகவும் பரந்த பொருளுடையதாகும். ஒருவர் அவருடைய நிலையில் சமுதாயத்தின் தூண்டலுக்கு வெளிப்படுத்தும் தனிப்பட்ட மதிப்பே ஆளுமை எனப்படுகிறது. ஒவ்வொருவருக்கும் தனித்தன்மைமிக்க பண்புகளுண்டு. இப்பண்புகளின் காரணமாக வெவ்வேறு சூழலிலும் குறிப்பிட்ட நடத்தை வெளிப்படுகின்றது. இந்நடத்தைக் கோலங்கள் ஒருவனின் ஆளுமை தன்மையை வெளிப்படுத்துகின்றன. ஒருவனின் மனவெழுச்சி, திறன், நுண்ணறிவு, அனுபவம், புலன்காட்சி, இயல்பூக்கம், நினைவாற்றல், படைப்பாற்றல், எண்ணங்கள், பழக்கங்கள் ஆகியவற்றின் ஒட்டுமொத்த தொகுப்பே ஆளுமையாகும்.

12.2 வரையறைகள்

Guilford என்பவர் ஆளுமை என்பது ஒருவனின் தனித்தன்மை வாய்ந்த அமைப்பு என்று வரையறுக்கின்றார்.

Woodworth, "கருத்தின்படி, மனிதன் பாரம்பரியத்தாலும், சூழ்நிலையாலும் பெற்றுள்ள உள்ளார்ந்த மனப்போக்குகள், உளத்துடிப்புகள், செயல்முறைகள், உடல் வேட்கைகள், இயல்பூக்கம் ஆகியவற்றின் தொகுப்பே ஆளுமை".

G.W. Allport, "மனப்பண்புகள் சேர்ந்து, ஒருங்கமைந்திருக்கும். இந்த ஒருங்கமைப்பின் இயல்பு, மனிதனுக்கு மனிதன் சிறிதேனும் மாறுபட்டிருக்கும். தனிமனிதன் தன் சூழலில் எவ்வாறு செயல்படுகிறான் என்பது ஒருங்கமைப்பின் தன்மையை பொருத்தது. இத்தகைய உடல் உள்ளப் பண்புகளின் தனிப்பட்ட ஒருங்கமைப்பே ஆளுமையாகும" என்று விளக்குகின்றார். இவ்வாறு ஆளுமை வெவ்வேறு வகையில் வரையறுக்கப்பட்டாலும் பொதுவாக ஆளுமை உருவாக்குவதில் பாரம்பரியத்திற்கும், சூழ்நிலைக்கும் பங்குண்டு மேலும் ஆளுமை தனித்தன்மையானது.

12.3 ஆளுமை வளர்ச்சிக்கான காரணிகள் (Developemnt of Personality)

மனிதன் சிக்கலான சமூகத்தின் உறுப்பினா் அவனடைய முடிவு கறிக்கொள் தன்னைத் தானே உண்மையுள்ளவனாக்கிக் கொள்வதாகும் மனிதனது இயல்பு பழைய அனபவங்களையும், எதிர்காலத் தேவைகளையும் குறிப்பதாகும். மனிதன் பிறக்கும் பொழுதே ஆளமைக்கான சில பரம்பரை பண்புகளைப் பெற்றுள்ளான். அவன் வளரும் பொழுது வெளியுலகைப் புரிந்துகொள்ளும் திறன் வளர்வதுடன், அவனுடைய ஆளுமையும் வெளிப்படுகிறது, தனிமனிதனுடைய ஆளுமை என்பது பரம்பரைக் காரணிகளை விட, சூழ்நிலைக்காரணிகளே அதிக மாறுதல்களைக் கொடுககிறது. ஆளுமைக் காரணிகளை நான்கு வகைகளாகப் பிரிக்கலாம். அவை : 1) உடலியல் காரணிகள் 2) வேதியல் காரணிகள், 3) சூழ்நிலைக் காரணிகள் 4) கற்றல் காரணிகள்

Downloaded From www.nagaicollege.com



1. உடலியல் காரணிகள் (Physique Factors)

உடலியல் தோற்றம் என்பது உடல் அமைப்பு, உடல் பருமன், நிறம், அழகு ஆகிய காரணிகளை உள்ளடக்கியது. இவை ஒரு மனிதனின் ஆளுமை வளர்ச்சிக்கு மறைமுகமாகக் காரணமாகிறது.

2. வேதியியல் காரணிகள் (Chemique Factors)

வேதியியல் காரணியானது நாளமில்லாச் சுரப்பிகளின் (Ductless glands) நேரடியான செயல்பாடுகள் ஆளுமை வளர்ச்சிக்கு காரணியாவதைக் குறிப்பதாகும். இந்த நாளமில்லாச் சுரப்பிகள் வேதிப் பொருட்களைச் சுரந்து இரத்தத்திற்குள் செலுத்துகின்றன. இப்பொருள்கள் ஹார்மோன்கள் என அழைக்கப்படுகின்றன. இச்சுரப்பிகளின் சுரக்கும் தன்மையில் மாறுபாடு ஏற்பட்டால் மனிதனின் ஆளுமையை பெரிதும் பாதிக்கும்.

முக்கிய நாளமில்லாச் சுரப்பிகளின் செயல்கள் (Functions of Major Endocrine glands)

பிட்யூட்டரின் சுரப்பிகள் (Pituitary glands)

இச்சுரப்பி மூளையின் அடிப்பாகத்தில் அமைந்துள்ளது. இது முக்கியமான சுரப்பி ஆகும். இதில் சுரக்கும் பிட்யூட்டரின் (Pituitrine) ஹார்மோன்களானது மற்ற சுரப்பிகளின் வளர்ச்சிகளைத் தூண்டக்கூடியதாகவும், உடலின் வேதித் தன்மையை நிலைப்படுத்தக் கூடியவைகளாகவும் செயல்படுகின்றன.

இச்சுரப்பிகளின் அதிகச்சுரப்பின் போது மனிதனுக்கு அதிகப்படியான வளர்ச்சியையும், சுரப்பதில் பற்றாக்குறை ஏற்படும் பொழுது உடல், பாலின வளர்ச்சியும் தடைபடுகிறது.

தைராய்டு சுரப்பி (The thyroid glands)

இது குரல்வளைக்கு அருகில் காணப்படும். இதில் சுரக்கும் ஹார்மோன் தைராக்ஸின் (Thyroxin) எனப்படும். இதில் அதிகச் சுரப்பு உண்டாகும் பொழுது நரம்புத்தளர்ச்சி, அமைதியற்ற தன்மை, குழப்ப நிலை மற்றும் உறக்கமின்மை ஆகியவை ஏற்படும். சுரப்பியின் ஹார்மோன் பற்றாக்குறை ஏற்படும்போது, முகம் வீங்கியும், பெரிய உதடும், அடி வயிறு பருத்தும். நாக்கு தடித்தும் காணப்படும். இச்சுரப்பி நுண்ணறிவு மற்றும் ஆளுமையுடன் தொடர்புடையது.



Downloaded From www.nagaicollege.com

அட்ரினல் சுரப்பி (The adrenal glands)

அட்ரீனல் காப்பிகள் இரு சிறுநீரகங்களின் மேல் பதிந்திருக்கும் இரு சுரப்பிகளாகும். இதன் ஹார்மோன் அட்ரீனலின் (adrenalin) எனப்படும். இந்த ஹார்மோன் கல்லீரலில் இரத்தத்தில் சர்க்கரையின் அளவை அதிகரிக்கத் தூண்டி அதிக உடற்சக்தியை அளிக்கச் செய்கிறது. இது மேலும் இதயத்தை துாண்டி இரத்த ஓட்ட வேகத்தை அதிகப்படுத்துகிறது. அதிக சக்தியை அளிப்பதால் தனிமனிதனுக்கு பலத்தையும், சக்தியையும் அளிக்கிறது.

பாலினச் சுரப்பிகள் (The sex glands (or) gonads)

இச்சுரப்பிகள் பாலுணர்ச்சிக்குக் காரணமாக அமைகின்றன ஆண்களின் பாலூட்டி சுரப்பிகளான டெஸ்டிஸ்ஸிலிருந்து "ஆண்ட்ரோஜன்" (Androgen) பெண்களின் பால் சுரப்பிகளான ஓவரிஸிலிருந்து "ஈஸ்ட்ரோஜன் (Oestrogen) மற்றும் "புரோஸ்ட்ரோஜன்" (Prostrogen) என்ற ஹார்மோன்களை சுரக்கின்றன. ஹார்மோன்கள் அதிகமாக இருப்பின் வளர்ச்சியும், ஆண் மற்றும் பெண்களை வேறுபடுத்தும் பண்புகளையும் அளிக்கிறது.

3. சூழ்நிலைக் காரணிகள்

சமூகக் காரணிகள்

வாழுமிடம், வாழ்க்கைமுறை, மரபுகள், பண்பாடுகள், கலாச்சாராம், பெற்றோர், குடும்ப நிகழ்வுகள் இவைதொடர்பான காரணிகள் சமூகக் காரணிகளாகும். வீடு, வீடு தொடர்பான நிகழ்ச்சிகள், வீட்டில் உடனிருப்போர் ஆகிய காரணிகள் ஆளுமை வளர்ச்சியில் பங்கு பெறுகின்றன. விரும்பாமல் பெற்ற குழந்தைகள், ஒற்றைக் குழந்தை, வேலைக்காரர்களால் பராமரிக்கப்படும் குழந்தைகள், சிதைந்த குடும்பப் பிள்ளைகள், பிரிந்து வாழும் பெற்றோரின் குழந்தைகள், ஒற்றுமையில்லா பெற்றோரின் குழந்தைகள், ஆளுமை பிறழ்வுக்கு ஆட்படுகின்றனர். இத்தகைய பெற்றோரின் குணங்கள் ஆளுமை வளர்ச்சியைப் பாதிக்கின்றன.

பெற்றோரின் நிலை

சில பெற்றோர், குழந்தைகளின் திறனுக்கு அதிகமான எதிர்பார்ப்புகள் கொண்டுள்ளனர். தன் குழந்தை அதிக மதிப்பெண் பெற வேண்டும். சாதனை புரிய வேண்டும் என்று எதிர்பார்க்கும் பொழுது குழந்தைகளிடம் தொடர் தோல்வி, குற்ற உணர்வு ஏற்படுகின்றது. அதுபோலவே, குறிப்பிட்ட பாலினக் குழந்தைகள் விரும்பப்படுவதும், அதிக சலுகைகள் அளிப்பதும், மற்ற வளர்ப்புத்தாயிடம் வளரும் குழந்தையின் ஆளுமையும் வேறுபடுகின்றது. பெற்றோரால் புறக்கணிக்கப்படும் குழந்தைகள், பெற்றோர்களை இழந்து அனாதை இல்லங்களில் வாழும் குழந்தைகளின் ஆளுமை வளர்ச்சியும் பாதிக்கப்படுகின்றது. குழந்தைகளின் எண்ணிக்கையும் வெவ்வேறு விதமான, விரும்பத்தகாத பாதிப்புகளை ஆளுமை வளர்ச்சியில் ஏற்படுத்துகின்றது. பெற்றோரின் சார்பு அணுகுமுறை மற்ற குழந்தைகளின் பிறழ்வு நடத்தைக்கு வழியாகின்றது. குழந்தையின் பாலூட்டம், அன்றாட பழக்கவழக்கங்களுக்கான பயிற்சிகள், குழந்தைகளுக்கு அதிக சுதந்திரம் அல்லது மிரட்டிப் படியவைத்தல், குழந்தைகளை அவர்களின் போக்கில் விடுதல் அல்லது பெற்றோர்போக்கில் இழுத்துச் செல்லுதல், ஊக்குவிக்கும்முறை, தண்டிக்கும் முறை இவையனைத்துமே குழந்தையின் நடத்தையிலும், ஆளுமை வளர்ச்சியிலும் மிகப்பெரும் மாற்றங்கள் உண்டாக்கக் கூடியன.

கல்வி நிலையம்

ஒருவனின் கல்வி, அவனின் ஆளுமையைத் தீர்மானிப்பதில் முக்கிய பங்கு பெறுகின்றது. கல்வியின் தன்மை கல்வி நிலையத்தினையும், அதில் பணியாற்றும் ஆசிரியர்களையும், கல்வி நிலையத்தின் தரத்தினையும் சார்ந்ததாகும். நல்ல தரமான கல்வி நிலையங்கள் சிறப்பான ஆளுமை வளர்ச்சிக்கேற்ற இடங்களாகத் திகழ்கின்றன. கல்வி நிலையச்சூழல், ஒருவன் கற்கும் வகுப்பறைச் சூழல், கல்விசார், செயல்சார், கல்வி நிலையத்தில் அவனுடன் தொடர்புடையோர் என பல

Downloaded From www.nagaicollege.com

நிலைகளிலும் கல்வி நிலையத்தில் ஒருவன் பெறும் கல்வி அவனின் ஆளுமைக் கூறுகளை தீர்மானிக்கின்றது,

மொழி, பண்பாடு

ஆளுமை வளர்ச்சியில் மொழி முக்கிய பங்கு பெறுகின்றது. மொழி பண்பாட்டுடன் தொடர்புடையது. பாடங்கள் கற்கவும், விளக்கவும், உணர்வுகளை வெளிப்படுத்தவும் மொழியே அடிப்படை. மற்றவர்களுடன் மொழிவழித் தொடர்பின் காரணமாகவும் ஆளுமையில் மாற்றம் ஏற்படுகிறது. வாழும் சூழலுக்கேற்ப சமுதாயப் பண்பாடு அமைகின்றது. மதம், சமுதாய மதிப்புகள், பண்பாட்டு மதிப்புகள் போன்றனவும் ஆளுமையில் தாக்கமுடையன.

சமூகப் பழக்க வழக்கங்கள்

ஒவ்வொருவரும் சார்ந்துள்ள சமுதாயம், பண்பாட்டுக் கூறுகள், சார்ந்த தொழில், திருமணம், பிறருடன் பொருத்தப்பாடு ஆகியவை ஆளுமையின் வளர்ச்சியை நிர்ணயிக்கின்றன. உடை, உணவு, மதம், சமூக நம்பிக்கைகள், மரபுகள், மதிப்புகள் ஆகியவற்றில் வேறுபடும் குழந்தைகளின் ஆளுமைகளும் வேறுபடுகின்றன, புவியியல் அமைப்பும் ஆளுமையைப் பாதிக்கின்றது.

4. கற்றல் காரணிகள் (Learning factors)

கற்றல் என்பது ஒருவனின் வாழ்க்கை முழுவதும் நடைபெறும் செயலாகும். கற்றலின் பொழுது ஒருவன் பெறும் அனுபவங்கள் ஆளுமை வளர்ச்சிக்கு உதவுகின்றன.

12.4 ஆளுமைபற்றிய கோட்பாடுகள்

ஆளுமையினை விளக்க, உருவாக்கப்பட்ட சில் கொள்கைகள் (Theories of Personality) சில ஆளுமை வகைகளையும், வேறுசில ஆளுமையின் அடிப்படைக்கூறுகளையும் வலியுறுத்துவன. இது தவிர உளப்பகுப்புக் கோட்பாடு மற்றும் சமூகக் கற்றல் கொள்கைகளும் ஆளுமை பற்றி விளக்குகின்றன.

12.4.1 உளபகுப்புக் கோட்பாடு

ஒருவரது நடத்தைக்குக் காரணமான நோக்கங்களை ஆழ்ந்து ஆராய்வதன் மூலம் உருவான கொள்கையாகும். இது நனவிலி மனச்செயல்களின் (Unconscious) செல்வாக்கினைக் குறிப்பிடுகின்றது. நனவிலி மனம் பண்படா ஊக்கிகள், மனவெழுச்சிகளின் இருப்பிடம். இவை ஒருவனது சிந்தனை, செயல் இவற்றினடிப்படையில் உருவாகும் ஆளுமையை நிர்ணயிக்கின்றன. ஆளுமை அமைப்பு மூன்று முக்கிய உள்ளமைப்புகளைக் கொண்டது. இவை ஒவ்வொன்றின் செயலும் தனிப்பட்டவை எனினும், இவை ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டும், இடைவினையாற்றியும் நடத்தையைக் கட்டுப்படுத்துகின்றன.



ஆளுமையின் உள்ளமைப்புகள்

- Id எனப்படும் அடித்தளநிலை
- Ego எனப்படும் தன்னுணர்ச்சியினை அடிப்படையாகக் கொண்ட ஈகோ நிலை
- Super Ego எனப்படும் அடுத்த உயர்நிலை அல்லது மேன்மனநிலை

ஆளுமையின் அடித்தளம் Id. இதிலிருந்து பின்னர் Ego மற்றும் Super Ego எனப்படும் மேல்மனம் ஆகியன எழுகின்றன. மரபுவழி பெறப்படும் எல்லா ஊக்கிகளும் இவற்றுள் அடங்கும். பிற நிலைகளின் இயக்கத்திற்குத் தேவைப்படும் லிபிடோ எனப்படும் சக்தியினைக் கொண்டது.

Downloaded From www.nagaicollege.com

இச்சக்திகள் கீழ்த்தர மகிழ்ச்சி பெறுவதை நோக்கமாகக் கொண்டவை. இந்நிலை நனவிலி நிலைப்படும். தன்னுணர் நிலையான Ego துவக்கத்திலிருப்பதில்லை. பின்னர் சூழ்நிலையுடன் நடத்தைப் பொருந்திப் போக வேண்டியிருப்பதால் தேவையின் காரணமாக Ego எழுகின்றது. எனவே இதன் செயல்கள் உண்மை நிலைமை கொள்கையைச் சார்ந்து அமைபவை.

Id-ன் நனவிலி மனதின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவது உயர் நிலையான Egoவாகும். Id-நிலையினை தீர்மானிப்பதாலும், மேனிலை மனமான Super Ego மற்றும் Id- இவை இரண்டினையும் எவ்வாறு சமநிலைப் படுத்தலாம் என்பதிலும், Super Ego முக்கியப்பங்கு பெற்று ஆளுமையைத் தீர்மானிக்கின்றது.

மேல்நிலையான Super Ego 6 வயதில் துவங்குகின்றது. ஆசிரியர் பெற்றோரால் வலியுறுத்தப்படும் சமூக மதிப்புகள், தாங்கள் அறக்கோட்பாடுகள் ஆகியவற்றை குழந்தை மனதுள் கொள்வதால், இம்மேனிலை மனம் தோன்றுகின்றது. மனசாட்சி, வாழ்க்கை, குறிக்கோள் போன்றன மேனிலை மனத்தின் கூறுகள். சமூகம் ஏற்காத Id-ன் பண்புகளை தடைசெய்வது, நற்பண்புகளை மேற்கொள்ள Ego-வைத் தூண்டுவது, நிறைவினைப் பெறுவதை இலக்காகக் கொள்வது போன்றன மேனிலை மனத்தின் செயல்களாகும். Id, Ego, Super Ego ஆகிய மூன்றும் இணைந்து செயலாற்றினால்தான் ஆளுமைச் சமநிலை ஏற்படும். இவை ஒன்றுக்கொன்று முரண்பட்டு செயல்பட்டால், ஆளுமைச் சீர்கேடு ஏற்படும். இணைந்து செயல்படுவதே இசைவான ஆளுமை எனப்படுகின்றது.

மனிதவியல் கொள்கை

ஆளுமை வளர்ச்சியில் நம்பிக்கைகள், நோக்கங்கள், தற்கருத்துகள், உணர்ச்சிகள் போன்றவை சிறப்புப் பங்கினைப் பெறுகின்றன என்பதே மனிதவியல் கொள்கையாகும். Carl Roger இதனையே Self Theory-தன்னையே தான் உணர்ந்து ஏற்றுக்கொள்ளுதல் என்று விளக்குகின்றார்.

Carl Rogers (1902–1987)

Abraham Maslow (1908–1970)

இவரின் கருத்தின்படி, ஒவ்வொருவரும் தன் உணர்ச்சிகளையும், அனுபவங்களையும், முழுமையாகவும், எவ்வித நிபந்தனையுமின்றியும் ஏற்றுக்கொண்டால்தான் இசைவான ஆளுமை பெற முடியும். இளம்பருவத்திலே பிறரிடமிருந்து அன்பு மற்றும் பாராட்டு பெறுவதற்காக நிபந்தனைகளுக்குட்பட்டு நடந்துகொள்வது, இயல்பான போக்கினின்றும் மாற்றி சுயகருத்திற்கும், அனுபவங்களுக்குமிடையே முரண்பாட்டினை தோற்றுவித்து, ஆளுமை பிறழ்வுகளைத் தோற்றுவிக்கும். நெறிப்படுத்தப்படாத அறிவுரை மூலம் இத்தகைய பிறழ்வுகளைப் போக்கமுடியும், மனிதன் இயல்பாகவே பிற வளர்ச்சியையும், சுயதிறன் முழுமை பெறுவதையும், ஆக்கபூர்வமான மகிழ்ச்சியான தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதையும் நாடுவது மனித இயல்பு. ஆபிரகாம் மாஸ்லோவும் (Abraham Maslow) மனிதவியல் கொள்கையின் படி தன் முழுத்திறன் வளர்ச்சியில் மனிதன் ஒவ்வொருவனுக்கும் நாட்டமுண்டு. மனித வாழ்க்கையில் ஒவ்வொருவனும் அன்பு, உற்சாகம்,

Downloaded From www.nagaicollege.com

மகிழ்ச்சி ஆகியவற்றை விரும்புகிறான். ஆதாரத் தேடல் நிறைவு பெற்றால்தான் உயர்நிலைத் தேவைகள் தோன்றும். தன்னுள் உள்ள ஆற்றல்களை முழுமையாக வளர்த்துக் கொண்டு முழுமை பெற்றவனாக விளங்குவதே ஆளுமையின் உயர்நிலை என்பது மாஸ்லோ கருத்து. இத்தகைய ஆளுமையுள்ளவனிடம் இயல்பான, சுதந்திரமான, ஆக்கத்திறன் மிகுந்த நடத்தை காணப்படும்,

Downloaded From www.nagaicollege.com

அலகு 13 ஆளுமையை அளவிடுதல்
UNIT XIII - ASSESSMENT OF PERSONALITY

13.1 ஆளுமை அளவீடு

அளவிடக்கூடியதாயிருப்பது ஆளுமையின் பண்புகளில் ஒன்று. பண்டை காலம் முதல் ஒருவனின் ஆளுமையை (Personality Assessment) அளவிட சோதிடம், கை ரேகை சாஸ்த்திரம், கையெழுத்தின் தன்மை மற்றும் அறிவியல் முறைப்படி முதன் முதலில் தோன்றிய அளவிடல் முறை வகையியல் எனப்படும் முறையாகும் (Type-Theory). மனிதர்களை அவரவர் வகைக்கேற்ப குணநலன் அடிப்படையிலோ, குறிப்பிட்ட மையக்கருத்து அடிப்படையிலோ வகைப்படுத்தினர். ஆளுமையின் பல்வேறு பண்புக் கூறுகளைக் கண்டுணர்ந்து அளவிட ஆளுமைச் சோதனைகளும், ஆளுமைப்பண்புகள் பட்டியலும் பயன்படுத்தப்பட்டன. கல்வியியலில் ஆளுமையை அளவிடுவது அவசியமாகிறது. கல்வியில் பொருத்தமான துறையில் மாணவர்களைப் பயிலச்செய்ய துணைபுரிகிறது. வேலைவாய்ப்புத் துறையில் பணிக்கேற்ற பொருத்தமான நபரைத் தேர்வுசெய்யப் பயன்படுகிறது. ஆளுமையில் அளவிடவேண்டிய பண்புக் கூறுகளின் பட்டியல் தயாரிக்க வேண்டும். சோதனையின் மதிப்புகளிலிருந்து பொருள் கொள்ள கவனமாக இயங்குவதுடன் பிறவழியில் பெறக்கூடிய விபரங்களையும் ஒன்றுசேர்த்து, முழுமையான வகையில் பொருளிருக்க வேண்டும். ஆளுமையை அளவிட பல அறிவியல் முறைகளுண்டு. ஆளுமை அளவிடும் முறைகள் பின்வருமாறு பாகுபடுத்தப்படுகின்றன.

13.2 ஆளுமையை அளவிடுவதற்கான கருவிகள் மற்றும் உத்திகளின் முக்கியத்துவம்

அகவய முறைகள் (Subjective Methods)

- சுயசரிதை
- சுய மதிப்பீடு
- மறுமொழி கோருபவை
- வினாநிரல்
- மனப்பான்மை அளவுகோல்
- ஆளுமைப்பட்டியல்கள் பேட்டி
- நாட்டச் சோதனை
- கவர்ச்சிப் பட்டியல்கள்

புறவய முறைகள் (objective Methods)

- உற்றுநோக்கல்
- சரிபார்த்தல் பட்டியல்
- தர அளவுகோல்

புறத்தேற்ற முறைகள் (Projective Methods)

- புலன்காட்சி அணுகுமுறை
- பொருளறிவோடு இணைத்தல் சோதனை -
- உருவாக்கும் சோதனைகள்
- செயல் சோதனை
- நிலைமை சோதனை

Downloaded From www.nagaicollege.com

வினாநிரல் (Qestionnaire)

தரத்திலும், எண்ணிக்கையிலும் தகவல் சேகரிக்கும், பரிட்சயமான முறையாகும். எல்லாவிதமான தகவல் சேகரிப்பிற்கும் பயன்படுத்தலாம். வினாநிரல் என்பது ஒருவரைப்பற்றி அறியவிருக்கின்றோமோ, அவர்களிடம் வினாநிரல் கொடுக்கப்பட்டு பதில்தருமாறு கோரப்படுகிறது, அந்த நபரைப் பற்றியும், ஆளுமைக் கூறுகளைப் பற்றியும் தகவல் கிடைக்கும் வண்ணம் வினாநிரல் வடிவமைக்கப்படுகின்றது. இது ஒரு தகவல் சேகரிக்கும் முறையாகும்.

ஆளுமைப் பட்டியல் (Personality Inventory)

இது ஆளுமையை அளவிடலில் அதிகம் பயன்படுத்தப்படுகின்றது. ஆளுமைப்பட்டியலில் ஆளுமையின் பல்வேறு கூறுகள் இடம்பெறுகின்றன. ஒருவன் பல்வேறு சூழ்நிலையில் தன்னிடம் ஏற்படும் எண்ணங்களையும், உணர்வுகளையும், செயல்களையும் விளக்கச்செய்து, அதன் மூலம் அவனது ஆளுமை அளவிடப்படுகிறது. தரப்படுத்தப்பட்ட ஆளுமை பட்டியல்கள் உள்ளன. அவைகளைப் பயன்படுத்தி ஆளுமை அளவிடப்படலாம்.

நேர்காணல் அல்லது பேட்டி (Interview)

இம்முறையில், நேரில் ஒருவரை சந்தித்து பேசி, அவரின் நடத்தை வினாக்களுக்குப் பதிலளிக்கும் முறை ஆகியவற்றை உற்றுநோக்கி, அவரது ஆளுமைக் கூறுகளின் தன்மை அறியும் முறை.

உற்றுநோக்கல் (Observation)

குறிப்பிட்ட நோக்குடன் கூடிய முறைப்படுத்தப்பட்ட புலன்காட்சி அனுபவமே உற்றுநோக்கல் எனப்படும். வாழ்க்கையில் ஒருவனின் ஆளுமையைக் கண்டறிய பயன்படும் முறையாகும். எத்தகைய ஆளுமைக் கூறுகள் அறியப்பட வேண்டுமென்று, உற்றுநோக்குபவர்கள் தீர்மானித்து உண்மை வாழ்க்கையில் அதனை உற்றுநோக்கி அளவிடுகின்றார். இது இருவகைப்படும்,

- பங்குபெறும் உற்றுநோக்கல் (Participatory Observation)
- பங்குபெறா உற்றுநோக்கல் (Non-participatory Observation)

பங்கு பெறும் உற்றுநோக்கலில் உற்று நோக்குபவர், உண்மையான வாழ்க்கை நிகழ்ச்சிகளில் உற்றுநோக்கப்படுபவருடன் பங்குபெற்று அளவிடுகின்றார். பங்குபெறா உற்றுநோக்கலில் உற்றுநோக்குபவர் சோதனைக்கு உள்ளாபவரிடமிருந்து, வேறுபட்டு தனித்து செயல்களில் பங்கு பெறாமல் உற்றுநோக்குகின்றார். உற்றுநோக்கல் திறம்பட, துல்லியமாக இருக்க வேண்டுமாயின் பதிவு கருவிகளான புகைப்படக் கருவி (Camera), நிகழ்படக் கருவி (Video) ஒலி பதிவுப்பெட்டி (Tape Recorder) ஆகியவைகளின் துணையுடன் நிகழ்ச்சிகளைப் பதிவு செய்து பலமுறை உற்றுநோக்கி அளவிடுகிறார். உற்றுநோக்கல் அறிவுப்பூர்வமாகவும், அறிவியல் பூர்வமாகவும், நோக்கத்தின் அடிப்படையிலும், நடத்தை அடிப்படையிலும் அமைத்தல் அவசியம்.

நிகழ்வுக்கூறு ஆய்வு (Case Study)

குறிப்பிட்ட காலத்தில் ஒன்றைப்பற்றி அனைத்தையும் அறிவது நிகழ்வுக்கூறு ஆய்வாகும். தனிநபர் ஒருவரிடம் காணப்படும் பிரச்சனைக்குரிய நடத்தைக்கான காரணங்களை அறிவியல் முறைப்படி கண்டறிந்து அவற்றை நீக்கிட, விரிவான வகையில் அந்நபர் தொடர்பான விபரங்களைச் சேகரித்து அவற்றை முறையாக ஆய்வு செய்து, ஆய்வின் அடிப்படையில் தகுந்த தீர்வினைப் பரிந்துரைத்து செயற்படுத்தலே நிகழ்கூறு ஆய்வு எனப்படும். இது மருத்துவத்துறையில் அதிகம் பயன்பட்டாலும், கல்வித்துறையிலும் தற்பொழுது பயன்படுத்தப்படுகின்றது.

Downloaded From www.nagaicollege.com

தர அளவீடு (Rating Scale)

பண்புகளைப் பற்றிய தகவல் பெறும் பொழுது, புள்ளியியல் ஆய்விற்கு உட்படுத்த ஏதுவாக, அளவைத் திட்டமாகத் தெரிவிக்கும் முறை தர அளவுகோல் எனப்படும். கண்டறியும் ஆளுமைப் பண்பின் அளவு 5 புள்ளிகள் கொண்ட ஓர் அளவு கோலில் (Five Point Scale) குறிக்கப்படுகின்றது. இதில் 3-வது நிலை இடைப்பட்ட நிலையையும், 4 மற்றும் 5 கூடுதல் நிலைகளையும், 2 மற்றும் 1 குறைந்த நிலையையும் குறிப்பதாகும். ஏதேனும் ஒரு பண்பினை அளவிட உருவாக்கப்பபட்டவை.

இவ்வாறு ஒருவரின் பல பண்புகள் அளவிடப்பட்டு, அதன் மூலம் ஆளுமையை அறிய உதவுகிறது. ஒவ்வொரு தரத்திற்கும் மதிப்பெண் 5, 4, 3, 2, 1 என்ற நிலையில் 5,4,3,2,1 அளிக்கப்பட்டு இறுதியில் மொத்த மதிப்பெண் அடிப்படையில் புள்ளியியல் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு முடிவு எட்டப்படுகின்றது. தர அளவீடு முறையினால் பிழைகள் ஏற்படவும் வாய்ப்புண்டு. அத்தகைய பிழைகள் வருமாறு:

- **ஒளி பிழை (Halo Effect)**
  ஒருவனைப்பற்றி நாம் முன்னரே பெற்றுள்ள கருத்து தர அளவீட்டில் பிரதிபலிக்கும், பொதுவாக உயர்ந்த கருத்து பெற்றிருந்தால் உயர் மதிப்பளிக்கின்றோம். குறைந்த கருத்து பெற்றிருந்தால் குறைவு மதிப்பளிக்கின்றோம்.
- **தவறான வாதம் (Faulty Logic)**
  ஒரே மாதிரியான இயல்புடைய இருவர் ஒருநிலையில் தரப்படுத்தப்படுகின்றனர்.
- **மைய அளவீட்டுப் பிழை (Central Tendency Error)**
  துல்லிய அளவீட்டுத் திறனற்றவர்கள் பெரும்பாலும் சராசரி தரப்படுத்தலை மேற்கொள்கின்றனர்
- **தாராள மனதுப் பிழை (Generosity Error)**
  தாராள மனப்பான்மை, இரக்க குணம் இவற்றின் காரணமாக உண்மையான தரத்தை விட உயர் மதிப்பு செய்யப்படுகின்றது. நன்று என்று தரப்படுத்தப்பட வேண்டியவர் இரக்கம் காரணமாக, மிகநன்று என்று தரப்படுத்தப்படுவது. இப்பிழைகள் பற்றி உணர்வு அளவிடுபவருக்கு இருந்தாலே, இப்பிழைகள் தவிர்க்கப்படலாம். நல்ல அனுபவம், பிழைகள் தவிர்க்க துணைபுரியும். ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் அளவிடுவதன் மூலம் உண்மை நிலை அறிய முடியும்.

பொருளறிவோடு இணைத்தறியும் சோதனை Thematic Apperception Test (Murray & Morgan) TAT

இச்சோதனையில் 20 படங்கள் உள்ளன. முதலில் 10 படங்களும், பிறகு 10 படங்களும் முறைப்படி காட்டப்படும். இப்படங்களில் எத்தகைய நிகழ்ச்சிகள் சித்தரிக்கப்படுகின்றன. அவை எக்காரணத்தினால் நிகழ்ந்திருக்கலாம் போன்ற வினாக்கள் சோதிக்கப்படுவோரிடம் கேட்கப்படும். அவன் கூறும் செய்தியினை ஆராய்ந்து, அவனது ஆளுமைப் பண்புகளின் தன்மை சோதிக்கப்பட்டு, அவன் கூறும் கதைகளில் எத்தகைய மனநிலைகள் திரும்பத் திரும்ப தோன்றுகின்றன போன்றயாவும் கவனிக்கப்படும். இதிலிருந்து அவனது ஆளுமை அளந்தறியப்படும்.



Downloaded From www.nagaicollege.com

தடையில்லா அல்லது கட்டுப்பாடற்ற இணைப்புச் சோதனை (Free Association Test (Kent & Rosanoff)

ஒரு சொல் கூறப்பட்டவுடன் தனது மனதில் தோன்றும் வேறொரு சொல்லை சோதிக்கப்படுபவன் கூற வேண்டும். இவ்வாறு மறுசொல் கூற எடுத்துக் கொள்ளப்படும் நேரம், சொல்லின் தன்மை ஆகியவை ஆராயப்பட்டு ஆளுமை முடிவு செய்யப்படும். மறுசொல் கூற அதிக நேரம் எடுத்துக்கொண்டால், அது தடைகளைக் குறிக்கும். ஆளுமைப் பண்புகளை அளவிடும் பல்வேறு முறைகளைப் பற்றிய அறிவு, ஆசிரியர்களுக்கும் இன்றியமையாதது. மாணவரிடையே தோன்றக் கூடிய ஆளுமைச் சிக்கல்களையறியவும், மாணாக்கர்களை அவர்களது கல்வி, நடத்தையில் நெறிப்படுத்தவும் இவை பயன்படும். பேட்டிமுறை, தர அளவுகோல்முறை, வினாவரிசைமுறை போன்ற ஆளுமை அளவீடுமுறைகள் சிறிது பயிற்சியுடன் கையாளப்படலாம்.

புறத்தோற்ற முறை (Projective Techniques)

தன் ஆளுமைக்கூறுகள், அகப்பண்புகள் இவைகளுக்கேற்ப முழுஅமைப்பு பெறாத பொருள்கள் மீது தான் புரிந்ததை வெளிப்படுத்துவதால் இது புறத்தோற்ற நுட்பம் எனப்படுகிறது. முழுமையான அமைப்பற்ற சில பொருட்கள் சோதிக்கப்படுபவனுக்குக் காட்டப்படும்பொழுது, அவன் தன் மனநிலை, மனவெழுச்சிகள், பற்றுகள், பண்புக்கூறுகள் இவற்றின் அடிப்படையில் புதிய அமைப்பை உருவாக்குவான். இதனைப் பகுத்து ஆராய்ந்தால், விளக்கமளிப்பவனின் ஆளுமைப் பண்புகளின் தன்மைகள் வெளிப்படும். (உ-ம்) கதை சொல்லுதல், மைத்தடங்களை விளக்குதல், சொற்கள் இணைத்தல், கொடுக்கப்பட்ட காகிதம் அல்லது மற்ற பொருட்களிலிருந்து புதிய பொருட்களை உருவாக்குதல்.

ரோர்ஷாக்கின் மைத்தடச் சோதனை (Rorscharch-Ink Blot Test)

இச்சோதனை 10 அட்டைகளைக் கொண்டது. இதில் மைத்தடம் (Ink Blot) அல்லது பொருளற்ற சமச்சீரான அமைப்புடைய உருவங்கள் காணப்படும். இவைகளில் 5 கருப்பு வண்ண அட்டைகள், 2 கருப்பும் சிவப்பும் கலந்த அட்டைகள், 3 அட்டைகள் பல்வேறு வண்ணங்களைக் கொண்டவையாக உள்ளன. சோதிக்கப்படுபவனுக்கு மைத்தட அட்டை ஒவ்வொன்றாகக் காட்டப்படும். ஒரு மைத்தடம் பற்றிய விபரங்கள் அவனால் கூறப்பட்டவுடன் அடுத்தது காட்டப்பட வேண்டும். எல்லா மைத்தடங்களும் காட்டப்பட்ட பின்னர் சோதனையாளர் சில வினாக்களைக் கேட்பார். இவ்வினாக்கள் சோதனை முடிவை நம்பகமாகச் செய்ய உதவக் கூடியன. விடைகளின் பின்வரும் மூன்று கூறுகள் ஆராயப்படும்.

- **மைத்தடப் பொருள்கள் (Content)**

  மனிதர்கள், உயிரற்றவை, விலங்குகள், செடி கொடிகள் உடற்கூறுகள் விபரம் என 30பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு குறியீடுகள் கொடுக்கப்படுகின்றன.

- **மைத்தடத்தின் இட அமைவு (Location)**

  மைத்தடத்தின் முழுமையான பகுதி விரிவான துலங்கல், சிறிய துலங்கல், புதிய விளக்கங்கள், ஓரப்பகுதியிலுள்ள விபரம், அபூர்வ விபரம் என குறியீடுகள் கொடுக்கப்படுகின்றன

Downloaded From www.nagaicollege.com

- **விடையின் தன்மையை நிர்ணயித்தலின் காரணிகள்**
  - உருவம், வண்ணம், இயக்கம், ஆளுமை மற்றும் மதிப்பீடு
  - தனது மனவெழுச்சிகளை, புறப்பொருள்களைச் சார்ந்து தெளிவாக வெளிப்படுத்தும் இயல்புடையவர்களின் விடைகள் வண்ணங்களால் நிர்ணயிக்கப்படுகின்றன
  - பல மைத்தடங்களுக்கான விளக்கங்கள் முழுத்தடம் அல்லது பெரும் பகுதியினால் நிர்ணயிக்கப்பட்டால், வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கு முழுமையாகத் தீர்வு காணும் மனப்போக்கும், அறிவுத் துறையில் முன்னேற விருப்பமும் காணப்படும்
  - மைத்தடத்தின் பெரும்பகுதியான விபரங்கள், விளக்கங்களை நிர்ணயிப்பவனாக அமைந்தால் பகுத்தறிவின் அடிப்படையில் வாழ்க்கை நடத்துதல், செயல்களில் ஈடுபாடு போன்ற பண்புகள் காணப்படும்.
  - மைத்தடங்களில், இயக்கத்தோடு தொடர்புடைய விளக்கங்கள் கூறினால் கற்பனை மிகுந்துள்ளவர்கள் என்று பொருள்.

13.3 ஒருங்கிணைந்த ஆளுமை (Integrated Personality)

தோற்றம், உடுத்தும் முறை, பேசும் முறை, நடக்கும் முறை, செய்யும் முறை, செயல்திறன் மற்றும் மனநலம் அனைத்தும் இணைந்ததுவே ஆளுமை. எனவேதான், ஒருங்கிணைந்த ஆளுமை எனப்படுகிறது. பல்வேறு காரணங்களின் இடைவிளைவுகள், தனிநபரின் பண்புகள் இணைந்ததுவே ஆளுமையாகும். பல்வேறு கூறுகளையும் இணைத்து ஒருபுறம் விருப்பம், மறுபுறம் திறன் இவைகளை சமநிலைப்படுத்தி, ஒருங்கிணைத்து முழுமையான ஆளுமை வளர்ப்பதே கல்வியின் நோக்கம். இதுவே ஒருங்கிணைந்த ஆளுமையாகும். ஆளுமை, அறிதல், உணர்தல், செயல்படுதல் போன்றவை சமமாக வளர்ச்சியடைந்து சமநிலைப்படுத்தப்பட்ட ஒருங்கிணைந்த அமைப்பாகும். இது சூழ்நிலையுடனும், புறக்காரணியுடனும் பொருந்திப்போக வேண்டும். மரபும் இதன் மீது தாக்கமுடையது. எனவே, கல்வியானது சமநிலைப்படுத்தப்பட்ட ஒருங்கிணைந்த ஆளுமை வளர்ச்சிக்கு துணைபுரிய வேண்டும். இதன் மூலம் மட்டுமே கற்பவர்களும், மற்றவர்களும் வாழ்க்கைச் சூழலை அடையமுடியும். சமநிலைப்படுத்தப்பட்ட உடல் வளர்ச்சி, அறிவு வளர்ச்சி, சமூக வளர்ச்சி, நன்னெறி வளர்ச்சி ஆளுமையே, ஒருங்கிணைந்த ஆளுமை எனப்படும்.

Downloaded From www.nagaicollege.com

அலகு 14 மனநலம்
Unit -XIV MENTAL HEALTH

14.1.மனப்போராட்டம்/|முரண்பாடு - பொருள்

ஒரு குறிக்கோளை அடைய முடியாமல் தடுக்கப்படும் நடத்தைக்கு முரண்பாடு ∴ மனப்போராட்டம் என்று பெயர். இது ஓர் இயற்கைத் தத்துவம். நம் ஒவ்வொருவருக்கும் விருப்பங்கள், தேவைகள், உள் உந்தல்கள், ஊக்கிகள் ஆகியவை அதிகமாக இருக்கின்றன. இவற்றில் ஒன்றுக்கு மேற்பட்ட தேவைகள் அல்லது விருப்பங்கள் ஒரே நேரத்தில் ஏற்படும்போது தோன்றுவது மனப்போராட்டமாகும்.

ஒரு சூழ்நிலையில் ஒருவர் முடிவு எடுப்பதில் ஏற்படும் தடுமாற்றமே மனப்போராட்டம் அல்லது முரண்பாடு ஆகும்.

14.2 மனப் போராட்டத்திற்க்கான காரணங்கள்

- ஒருவனின் இலக்கிற்கும், அடைவிற்கும் இடையே பெரும் வேறுபாடு ஏற்படுவது
- ஒன்றுக்கொன்று பொருந்தாத, பல இலக்குகளை அடைய முயலுதல்
- ஒரு குழுவினின்று பிரிதல்
- தன்னம்பிக்கை இழத்தல்
- பிறரால் வஞ்சிக்கப்படுதல்
- பிறரால் அவமானப்படுத்தப்படுதல்
- குழந்தைகளில்இஉடல் குறைபாடுள்ள குழந்தைகள் தாழ்வு மனப்பான்மையால் உந்தப்படுதல்
- நுண்ணறிவு குறைந்த குழந்தைகள் தங்கள் வாழ்வில் ஏற்படும் பிரச்சனைகளை சமாளிக்கத் தெரியாமல் மனப்போராட்டங்களுக்கு ஆளாதல்
- மனமுறிவுணர்ச்சியுள்ளவர்கள் அதைப் போக்க முரட்டு நடத்தைகளில் (Aggression) ஈடுபடுவதுண்டு
- குடும்ப வறுமைச் சூழல்
- பெற்றோரின் ஆதரவின்மை
- இணக்கமற்ற மற்றும் குழப்பமான பெற்றோரின் குழந்தைகள்
- தீவிரமான கட்டுப்பாடு அல்லது முற்றிலும் கட்டுப்பாடற்ற நிலை
- குழந்தையிடம் பெற்றோர் விருப்பமின்றி இருப்பது, குழந்தைகளுக்காக எல்லாவற்றையும் தாங்களே செய்வது
- தவறான முறையில் பயிற்றுவிக்கப்பட்ட குழந்தைகள் தன்னைக் காட்டிலும் மூத்தோரைப் பற்றி நல்ல மனப்பான்மையின்றி இருத்தல்
- பள்ளியில் கட்டுப்பாடின்மை
- அதிகாரத்துடன் மாணவர்களைத் நடத்துதல்
- மாணவர்களின் திறமைக்கு அப்பாற்பட்ட வேலைகளை செய்ய கட்டாயப்படுத்துதல்

14.3 மனப்போராட்டத்தைத் தவிர்க்கும் முறைகள்

- எதிர்நோக்கும் இலக்குகளை அடைய மாணவரின் விருப்பத்தை அல்லது ஆர்வத்தை மேம்படுத்துதல்
- எந்தப் பிரச்சனையிலும் மாணவர்களின் சுயகருத்தினை சுதந்திரமாக வெளிப்படுத்த வாய்ப்பளித்தல. மன உளைச்சல் தரும் மனநலம் பாதிக்கும் போட்டிகளைத் தவிர்த்தல்.

Downloaded From www.nagaicollege.com

- விளையாட்டு, படிப்பு, சமூக சேவை, கலை, கைப்பணி என பல்வேறு திறமைகளை வளர்த்துக் கொள்ள துணை செய்தல், வாய்ப்பளித்தல்.
- மனநலத்தை மேம்படுத்தக்கூடிய புத்தகங்கள், இதழ்களை படிக்க ஊக்குவித்தல்.
- மனிதஉறவை கற்பித்தல், தக்கவைத்தல், பிரச்சனைகளை சுதந்திரமாக விவாதிக்க அனுமதித்தல், மற்றவர்களுடன் இணைந்து திறம்பட மகிழ்ச்சியுடன் எவ்வாறு வாழ முடியும், அதன் அவசியம் என்ன? என்பன பற்றிய கருத்துக்களை கூறுதல், கதைகள் கூறுதல், மாணவர்களை அதனை உணரச் செய்தல்
- நடத்தைக் கோளாறுகளை களைதல், பாலினம் தொடர்பான போராட்டங்களைத் தவிர்க்க ஆலோசனை கூறுதல். பாலினக் கல்வியும், நன்னடத்தைக் கல்வியும் கலைத்திட்டத்தில் இடம்பெறச் செய்தல்.
- நல்ல மனநலமும், கற்றலில் மகிழ்ச்சியும், பாடத்தில் சலிப்பும் ஏற்படாத வகையில் திறம்பட கற்பித்து ஆர்வத்தினை மேம்படுத்துதல்.
- மாணவர்களின் திறனுக்கேற்ற பொருத்தமான ஒப்படைப்புகள் வழங்குதல்.
- பள்ளிகளில் சரியான வழிகாட்டும் வகுப்புகள், நெறிப்படுத்தும் ஆலோசனை வகுப்புகள் நடத்தி, நெறிபிறழ்வை தவிர்த்தல்.

மாணவர்களைப் பாராட்டி ஊக்குவித்தல்

மாணவர்களின் பிரச்சனைகளை தெளிவாகத் தெரிந்து கொண்டு அதைத் தீர்க்கும் வழிமுறைகளையும் கூறி, மாணவர்களின் மேம்பாட்டிற்கு ஆசிரியர் உறுதுணையாக இருக்க வேண்டும். மாணவர்களின் நல்ல செயல்களை மனதாரப் பாராட்டி அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும்.

14.4 மனப்போராட்டங்களின் வகைகள்

அணுகுதல் - அணுகுதல் மனப்போராட்டம் (Approach-Approach Conflict)

ஒருவன் விரும்பிய இரண்டு இலக்குகளையும் பெறும்பொழுது, எதைத் தேர்வு செய்வது என்பதில் குழப்பம் ஏற்பட்டு மனப்போராட்டம் நிகழ்கின்றது. அவன் வாழ்வில் எதனை அடைய முயற்சிப்பது என்ற குழப்பத்தில் பொருத்தப்பாடின்மை தோன்றுகிறது.

அணுகுதல் - தவிர்த்தல் மனப்போராட்டம் (Approach-Avoidance conflict)

இம்முறையில் நேர் ஊக்கியும், எதிர் ஊக்கியும் பங்கு பெறுகின்றன. உதாரணமாக, தேர்விற்கு படித்துக் கொண்டிருக்கும் பொழுது தொலைக்காட்சியில் உலகக்கோப்பை கிரிக்கெட் ஒளிபரப்பப்படும்போது ஏற்படும் மனப்போராட்டம்.

தவிர்த்தல் - தவிர்த்தல்மனப்போராட்டம் (Avoidance-Avoidance Conflict)

இரு எதிர் ஊக்கிகள் சம வலிமையுடன் செயல்படும்போது எதைத் தவிர்ப்பது என்ற மனப்போராட்டம். மனத்தேவைகளும், சமூகத்தேவைகளும் நிறைவேறாத சமயங்களில் பதற்றம் (Tension), மனமுறிவு, மனப்போராட்டம் ஏற்பட்டு மன சமநிலையைச் சீர்குலைக்கின்றன. மனவெழுச்சி, மனமுதிர்ச்சி குறைவுயுடையோரையே இது அதிகம் பாதிக்கும். மனமுறிவு ஏற்படும் நிலையில் ஒருவன் எவ்வாறு செயல்படுகிறான் என்பதனை பின்வரும் காரணிகள் தீர்மானிக்கின்றன.

- வயது
- உடல்நிலை
- முந்தைய அனுபவம்
- நிறைவேறாத ஆசை
- ஊக்கி
- ஆர்வ நிலை

Downloaded From www.nagaicollege.com

இவற்றின் விளைவாக மாணவர்களிடம் மனக்குழப்பங்களும், மன அமைதியின்மையும் எற்படுகிறது.

14.5 மனமுறிவு/விரக்தி (FRUSTRATION)

மனமுறிவு: பொருள்

மனமுறிவு/விரக்தி என்பது ஒரு செயலைச் செய்யவிடாமல் தடுப்பதாகும். ஊக்கிகளால் ஏற்படுகின்ற திருப்தியைத் தடை செய்யும் பொழுதோ அல்லது தாமதப்படுத்தும் பொழுதோ மனமகிழ்ச்சியற்ற நிலை உண்டாகின்றது. இத்தகைய நிலையே மனமுறிவு எனப்படும். மனமுறிவு மனப் போராட்டத்தால் ஏற்படுகிறது. அதே போல மனப்போராட்டத்தால் மனமுறிவு ஏற்படுகிறது என்று கூறலாம். மனித வாழ்க்கையில் மனமுறிவு ஏற்படுவதற்கான காரணம் என்னவென்றால் ஒருவனது விருப்பங்கள், தேவைகளில் இடையூறு அல்லது தடை ஏற்படுதல் ஆகும்.

14.6 மனமுறிவு: வரையறை

குட் (Good) என்பவரின் கூற்றுப்படி "ஒரு ஆசையை அல்லது தேவையைத் தடைபடுத்தும் போது ஏற்படும் மனவெழுச்சி பதற்ற நிலைக்குத்தான் மனமுறிவு என்று பெயர்".

14.7 மனமுறிவு: விளக்கம்

தன்னம்பிக்கையும், பொருந்தி வாழும் இயல்பும் இன்று மிகவும் அவசியமானவை. ஒவ்வொருவரும், ஒரு செயலை மிகுந்த திறனுடன் பல்வேறு அழுத்தங்களுக்கிடையே செய்து முடிக்க வேண்டிய சூழல் உள்ளது. ஒரு செயலைச் செய்யமுடியாத நிலை ஏற்படும் பொழுது, மனமுறிவு ஏற்படுகிறது. தனிமனிதனுக்கு பல தேவைகள் இருக்கின்றன. இவை நடத்தைக்கு பின்னால் இருந்து இயங்கும் ஊக்கிகளாகும். எனவே இதன் விளைவாக உள்ள உந்துதல் ஏற்பட்டு இலக்கை அடைய பல முயற்சிகள் செய்யப்படுகின்றன. இதில் தடைகள், இடையூறுகள் ஏற்பட்டு, உள்ள உந்துதல் பாதிக்கப்பட்டு அச்செயலை செய்ய முடியாத மனநிலை ஏற்படும் போது, மனமுறிவு ஏற்படுகின்றது. தேவை, விருப்பம், ஊக்கிகள், உள்உந்துதல், தடைகள் அல்லது இலக்கு, இடையூறுகள். மனமுறிவு தூண்டல்களுக்கான துலங்கல் ஏற்படாமல் தடுக்கப்படுகின்ற மனநிலையே, மனமுறிவு எனப்படும். துலங்கல் தடைபடுவது மன முறிவிற்கான காரணமாகும்.

14.8 மனமுறிவிற்கான நிலைகள்

முயற்சி செய்யும் பொழுது, அதனை அடைவதில் தாமதம் ஏற்பட்டால் சலிப்பு, களைப்பு ஏற்பட்டு மனமுறிவு ஏற்படுகிறது. தூண்டலுக்கான ஒரு துலங்கல் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது, அதனை தடுத்து நிறுத்துவதால் ஏற்படும் விளைவே, மனமுறிவு என்கிறோம். ஒன்றை அடைய நெருங்கும் போது இடையூறு ஏற்பட்டு, அடைய முடியாமல் போவது இத்தகைய மனமுறிவு. மனமுறிவு ஏற்படுத்தக் கூடிய தடைகள் பல இருந்தாலும், தடைகள் நீக்கப்பட்டால் மனமுறிவு தவிர்க்கப்படலாம்.

தடைக்கான காரணங்கள்:

- உடல் சார்ந்த தடை
- சமூக பொருளாதார இடைஞ்சல்கள்
- ஒருவரது அறிவுக் குறைவால் ஏற்படும் தடை
- பெற்றோர். ஆசிரியர் அதிகார மனப்பான்மையால் தடை
- பயிற்சி குறைவால் ஏற்படும் தடை

Downloaded From www.nagaicollege.com

14.9 பொருத்தப்பாடு (Adjustment)

சமூக தேவைகளுக்கும், சூழ்நிலைகளின் பதார்த்த நிலைகளுக்கும் இடையே, ஒரு சமரச போக்கை மேற்கொண்டு பொருத்தி வாழ்வதுதான் பொருத்தப்பாடு (யுனதரளவஅநவெ) அல்லது இணக்கம் எனப்படுகிறது.

பொருத்தப்பாடு அடைவு நோக்கு, செயல்முறை நோக்கு இரு விதத்தில் ஆராயப்படுகிறது.

பொருத்தப்பாடுடையவன் சமூகத்துடன் ஒன்றி வாழும் கீழ்க்கணட பண்பில் மேம்பட்டு சிறந்து விளங்குகிறான்.

- உடல் நலம்
- அமைதி
- பணியில் திறன்
- சமூக ஏற்பு அல்லது உடன்பாடு

பொருத்தப்பாடு நடத்தையுடையவன் சிறந்த உடல் நலத்துடன், நோயின்றி, மனப்போராட்டம், இறுக்கம், கவலை, பதற்றம், மனச்சோர்வு இவைகள் இல்லாமல், தன் தொழில் அல்லது பணியில் திறன் பெற்று, பிறருடன் ஒத்துப் போகக்கூடிய சமூக உடன்பாடு பெற்றிருப்பான். ஒருவனது செயல் முறை நோக்கும் உள் தேவைகளுக்கும், சூழ்நிலையின் வெளித்தேவைகளுக்கும் இடையே இணக்கம் காண்பதே பொருத்தப்பாடு. இவைகளுக்கிடையே குழப்பங்கள், பிரச்சனைகள், முரண்பாடுகள், தோன்றாமல் தகவமைத்துக் கொள்வதாகும். ஒருவன் தன் உள்தேவைகளையோ, வெளித்தேவைகளையோ மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும். சுற்றுப்புற சூழ்நிலையை தன் தேவைக்கேற்ப மாற்றலாம் அல்லது சூழ்நிலையை நன்கு புரிந்து கொண்டு அதற்கேற்ப உள்தேவைகளை குறைத்துக் கொள்ளலாம் அல்லது மாற்றிக் கொள்ளலாம். குழப்பமான நிலையினின்று விடுபட தற்காப்பு நடத்தைகளை மேற்கொண்டு ஆளுமையை காத்துக் கொள்ளலாம். சூழ்நிலைக்கேற்ப இணக்கம் பெறுவதே பொருத்தப்பாடு.

14.10 பொருத்தப்பாடின்மை

சூழ்நிலையோடு இணைந்து போகாத தன்மை பொருத்தப்பாடின்மை (ஆயட-யுனதரளவஅநவெ) எனப்படுகின்றது. இதன் விளைவாக உண்டாகும் தற்காப்பு நடத்தைகள்,

- எதிர்ப்பு நடத்தைகள்
- ஒதுங்கி பின்வாங்கும் நடத்தைகள்

என இருவகைப்படும். பொருத்தப்பாடின்மை எல்லோரிடத்திலும் உண்டு என்றாலும், மனப்போராட்டம் காரணமாக, சிலரிடம் தீவிரம் அடைகின்றன. ஒழுங்கற்ற நெறிபிறழ்வு காணப்படும். வகுப்பறையில் எழக்கூடிய எல்லாப் பிரச்சனைகளும் பொருத்தப்பாடின்மையைக் குறிக்கின்றன.

14.11 பொருத்தப்பாட்டின் தடைகள்

- தகுந்த காரணமின்றி வகுப்பிற்குச் செல்லாமை (Truancy)
- மற்றவர்களை கொடுமைப்படுத்துதல் (Bullying)
- திருடுதல் (Stealing)
- பொருட்களை அழித்தல் (Destructiveness)
- ஒழுக்கமின்மை (Indiscipline)
- கனவுகளில் மூழ்கியிருத்தல் (Dreaming)
- எதிலும் காலம் கடத்துதல் (Procrastination)
- தேவையில்லாமல் கவலைப்படுதல் (Meaningless Worrying)
- கூச்ச சுபாவம் (Shy)

Downloaded From www.nagaicollege.com

- நடத்தைப் பிரச்சனைகள் (Problem in Conduct)

மேற்கண்ட பல பிரச்சனைகள் குழந்தைகளிடம் காணப்பட்டு பொருத்தப்பாடின்மையாக வெளிப்படுகின்றன.

14.12 பொருத்தப்பாடின்மைக்கான காரணங்கள் (Causes of maladjustment)

கீழக்கண்டவை பொருத்தப்பாடின்மைக்கான காரணங்களாக காணப்படுகிறது

- பொருத்தப்பாட்டிற்கான முதிர்ச்சியின்மை
- நன்னடத்தைக் கோட்பாடுகள் சிறுவயதில் கற்பிக்கப்படாமை
- சமூக வாழ்க்கையில் பலவற்றில் ஆர்வம்
- ஒரு செயலின் விளைவு பற்றி அறியாமை
- மதிப்புகளின் உயர்வை உணராமல் இருத்தல்
- கட்டுப்பாடின்மையால், பிரச்சனைக்குரிய நடத்தைகளைப் பெற்றிருத்தல்

குடும்பக்காரணிகள்

குடும்ப வறுமை, பெற்றோர்களிடம் காணப்படும் ஒழுக்கமின்மை, தோழமையின்மை, விருப்பமின்றி பெறப்பட்ட குழந்தைகள், குழந்தைகளுக்காக எல்லா பணிகளையும் பெற்றோரே செய்தல், சுயநலம் பொறுப்பற்றதன்மை, காழ்ப்புணர்ச்சி, கண்காணிப்பு இல்லாமை என பல காரணிகள் உண்டு.

சமூகக்காரணிகள்

நடத்தைக்கேடு, தீயநண்பர்கள், திரைப்படங்கள், பத்திரிகைகள், தரமற்ற தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், வலைதளம், ஆன்ட்ராய்டு மொபைல் போன் போன்ற சாதனங்களும், மனதில் தீவர மனவெழுச்சிகளையும், போராட்டங்களையும் தோற்றுவிக்கின்றன.

பள்ளிசார்ந்த காரணிகள்

பள்ளியில் கட்டுப்பாடின்மை, பண்பற்ற ஆசிரியர்கள், மாணவனின் திறமைக்கு மீறிய செயல்களைக் கட்டாயப்படுத்துதல், மாணவர்களை ஆசிரியர்கள் சொந்த வேலைக்குப் பயன்படுத்துதல் போன்றவற்றால் ஒழுக்கமின்மையும், மனப்போரட்டங்களும், நெறிப்பிறழ்வுகளும் ஏற்படுகின்றன.

பிற காரணிகள்

ஆண்களிடம் பொருத்தப்பாடின்மை அதிகம். பெண்களுக்கு சமுதாயம் பாதுகாப்புத் தருவதோடு, சுயகட்டுப்பாட்டுடன் அவா்கள் காணப்படுகின்றனா். ஆண்களுக்கு அதிகப் பணிப்பளு போன்ற பிற காரணங்களும் ஆணாதிக்க குணமும் ஒரு காரணமாக அமைகிறது.

பொருத்தப்பாடின்மையை நீக்கும் வழிகள்

- முறையான பயிற்சி
- அறிவுரை கூறுதல்
- திறமையை பயனுள்ள வழியில் செலவு செய்வதற்கான வாய்ப்பளித்தல்
- அளவான தண்டனை
- உளவியல் சிகிச்சை முறை
- தியானம், யோகா போன்றவற்றை செய்தல்

Downloaded From www.nagaicollege.com

பொருத்தப்பாட்டை முறைப்படுத்ததல் (அ) சரிசெய்தல் (Adjustment Mechanism)

பொருத்தபாட்டை முறைப்படுத்ததல் என்பது தடைகளைத்தாண்டி இலக்கை அடைதல், தேவைகளை நிறைவேற்றுதல் மனப்போராட்டத்திலிருந்து விடுபடல் மற்றும் அவற்றை சமன் செய்தல் ஆகும். பொருத்தப்பாட்டை முறைப்படுத்ததல் முறைமை என்பது ஓர் கருவி, அதன் மூலம் ஒருவா் தன் கோபம், பயம் அகியவற்றை சூழலுக்குத் தக்கவாறு பொருத்தப்பாடுடையதாக மாற்றுவது அகும். அது நல்ல மனநலத்தோடு. குறிபிட்ட பிரச்சனையை தீா்ப்பதற்கு அல்லது குழப்பமான சூழ்நிலையை அணுகும் போது ஒருவன் சுய பொருத்தப்பாடு பெற்று தற்காத்து கொள்ளும் முறைகளை உபயோகித்து மனமுறிவுச்சுழலிருந்து தன்னைத் தற்காத்துக் கொள்ள முயற்சிக்கும் செயலாகும்.

14.13 தற்காப்பு நடத்தை

ஒருவனது பல்வேறு தேவைகளுக்கிடையே முரண்பாடுகளாக தோன்றும் மனப்போராட்டம், மன இறுக்கம், பதற்றம் இவைகளின்று விடுபட கையாளப்படும் யுக்திகளே தற்காப்பு நடத்தை (னுநகநஉெந ஆநஉாயளைஅ) எனப்படும். இவைகளில் தோல்வி ஏற்பட்டால், பொருத்தப்பாடற்ற நடத்தைகள் தோன்றி தற்காப்பு நடத்தைகளை அமைத்துக் கொள்ள அறிவு முதிர்ச்சி, மனவெழுச்சி முதிர்ச்சி, சமுதாய முதிர்ச்சி ஆகியவை அவசியமாகிறது.

தற்காப்பு நடத்தைப் பண்புகள்

இவை நனவிலி நிலையில் ஏற்படுபவை. நம்மை நாமே சமாதானப்படுத்திக்கொள்ளும் முயற்சிகளாகும். கவலை, மன இறுக்கம், குற்ற உணர்வு போன்றவற்றினைப் பாதுகாப்பவை. இக்கட்டான சூழலிலிருந்து விடுவித்து உதவக் கூடியவை, தோல்வியினால் ஏற்படும் மன அதிர்ச்சியை ஈர்க்கக்கூடியவை. ஏதேனும் ஒருவகையில் உண்மையை பிரித்துக் காண்பதாக அமைவன. எத்தகைய தற்காப்பு நடத்தை மேற்கொள்ளப்படுகின்றது என்பது, ஒருவனுடைய பண்பையும், சூழ்நிலையின் தன்மைகளையும் பொருத்தது. ஒருவனின் செயல்பாட்டினை குறைப்பதோடு, முன்னேற்றத்தையும் முடக்கி தன்னைப்பற்றி அறிவு குறைத்தும் அளவுக்கதிகமான தற்காப்பு நடத்தை மேற்கொள்வதும் பொருத்தப்பாடற்ற நடத்தையை வெளிப்படுத்தும்.

14.13.1 அகநோக்குடைமை (Introversion)

பிறருடன் கூடிப்பழகாமல் தன்னுள் ஒதுங்கி தனித்தியங்க முயற்சிப்பது. இது தாழ்வு மனப்பான்மையைத் தோற்றுவிப்பதுடன் தீவிரமானால் சமூக எதிரிகளாகவும் மாறக்கூடும்.

14.13.2 பகற் கனவு காணுதல் (Fantacy)

ஒடுக்கப்பட்ட இச்சைகளை கற்பனை மூலம் வெளிப்படுத்துவது. கற்பனையில் இருந்து விடுபட்டு யதார்த்த வாழ்வில் தன் ஆற்றலை ஒருங்கிணைத்து, கற்பனையில் கண்டதை அடைய முயற்சித்தால் ஆக்கச் சிந்தனைக்கான வழியாக அமையும். உதாரணமாக, பாடத்தெரியாதவன் போட்டிகளில் பரிசு பெறுவதாகக் கற்பனை செய்வது, குறைந்த மதிப்பெண் பெறுபவன் பள்ளியில் முதன்மை மதிப்பெண் பெறுவதாக கற்பனை செய்தல்.

புறத்தெரிதல் (Projective)

தன் இச்சைகளையும், உளச்சிக்கல்களையும், மனவெழுச்சிகளையும் பிறரிடம் உள்ளனவாக எண்ணி அதன்படி செயல்படுதலாகும். விதி என்பதும், கொடுப்பினை இல்லை என்பதும் தோல்வியுறுகிறவன் ஏதாவது ஒரு காரணம் சொல்லி சமாளிப்பதும் இவ்வகையைச் சார்ந்தவை.

14.13.3 காரணம் புனைந்து உரைத்தல் (Rationalisation)

தன் தவறு. குறைகளுக்கான உண்மைக் காரணத்தை மறைத்து, சமுதாயம் ஏற்கக் கூடிய பொருத்தமான காரணத்தைக் கூறுவதாகும். இதுவே போதும், என்று நம்மையே தேற்றிக் கொள்வதும் இத்தகையது. ஏழ்மையில் குடிசை வீட்டில் இருப்பவர், கூரை வீடே குளிர்ச்சி, நன்று என்று கூறி சமாதானமடைவது போன்றவை இத்தகையன.

ஈடுசெய்தல் (Compensation)

ஈடுசெய்தல், ஒன்றினை அடையாமல் இழந்தால், மற்றொன்றையாவது அடைந்தே ஆக வேண்டும் என்று சக்தி முழுவதையும் செலவிட்டு வெற்றிக்கு முயல்வது. ஈடு செய்தல் மூலம் ஒருவரது

Downloaded From www.nagaicollege.com

ஆளுமையின் சமநிலைமை பாதுகாக்கப்படும். தோல்வியடையும் போது ஹிஸ்டிரியா போன்ற நரம்பு தளர்ச்சி வியாதிகள் ஏற்படுவதுண்டு. படிப்பில் வெற்றிபெறாதவன் விளையாட்டில் வெற்றிபெற முற்படுவதும் ஈடுசெய்தலாகும். ஒரு பாடத்தில் தோல்வியுற்றவன் மற்றொன்றில் முதல் மதிப்பெண் பெறும் முயற்சி மேற்கொள்வது போன்றனவும் இவ்வகையைச் சார்ந்தவை.

14.13.4 ஒன்றுதல் (Identification)

நம்மால் வெளிப்படுத்த முடியாத இச்சைகளை, தேவைகளை வெளிப்படுத்தும் வேறொருவருடன் ஒன்றிப்போவது. அந்த மாற்றத்தை ஏற்றுக் கொள்வதின் மூலம், தன் தேவை பூர்த்தியானதாகக் கருதுவது. நான் வாங்காவிட்டாலும் என் நண்பன் பரிசு பெற்றான். அது போதும். இப்படிப்பட்டவை ஒன்றுதலாகும்.

14.13.5 பின்னோக்கம் (Regression)

மனப்போராட்ட அழுத்தங்களின் காரணமாக அவற்றினின்று விடுபட தன்னையுமறியாமல் வளர்ச்சிப்படியில் கீழ் இறங்கி குழந்தைபோல் செயல்படுதலாகும். உதாரணமாக, தன் கருத்து எடுபடாத பொழுது கூட்டத்தைவிட்டு வெளியேறுவது, பிறரிடம் பேச மறுப்பது போன்றவை.

14.13.6 இடமாற்றம் (Displacement)

நிலைமாற்றம் ஒரு மனவெழுச்சி. தன் இயல்பான பொருளிலிருந்து விலகி தொடர்பில்லாத மற்றொன்றில் பிரதிபலிப்பது. ஆசிரியர் கண்டிக்கும் பொழுது சக மாணவரிடம் எரிச்சலடைவது, ஆசிரியர், தலைமையாசிரியர் மீது உள்ள கோபத்தை மாணவரிடம் காட்டுவது, மனைவி, கணவனிடம் உள்ள கோபத்தை குழந்தைகளிடம் காட்டுவது போன்றவை இத்தகையன.

14.13.7 மனமாற்றம் (Sublimation)

இயல்பூக்கத்தினால் ஏற்படும் மனவெழுச்சிகளும், ஊக்கிகளும் சமூகத்தால் ஏற்கப்படவில்லையானால் அவைகள் சமுதாயம் ஏற்கக் கூடிய மாற்றம் எனப்படும். காதலில் தோல்வியுற்றவர் சமூக சேவையில் ஈடுபடுவது, குழந்தைப்பேறு இல்லாதவர் குழந்தையை தத்தெடுத்து வளர்ப்பது போன்றன இவ்வகை பாதுகாப்பு நடவடிக்கைகளாகும். இந்த இறுக்கத்தை தவிர்ப்பதற்காக நாமே திட்டமிடுவது. சமூக எதிர் உணர்வு மனஎழுச்சிகளை சமுதாயம் ஏற்கும் நல்வழியில் திருப்பி தூய்மைப்படுத்தும் பண்பு என்று ஆல் போர்ட் குறிப்பிடுகிறார்.

பின்வாங்குதல் (Withdrawal)

மனமுறிவு ஏற்படுத்தும் சூழ்நிலையை உணர்ந்து அத்தகைய நிகழ்ச்சிகளிலிருந்து விலகிக்கொள்வது, பின்வாங்குதல் ஆகும். ஆர்வமில்லாத வேலைகளிலிருந்து ஒதுங்கிக்கொள்வது. படிக்காத மாணவன் தேர்விற்கு செல்லாமலிருப்பது, தோல்வி ஏற்படும் என்ற பயத்தின் காரணமாக இல்லாத ஒரு காரணம் கூறி போட்டியில் பங்கு பெறாமலிருப்பது போன்றவை இத்தகையவை.

14.13.8 மறத்தல் (Forgetting)

மன இறுக்கமளிக்கக் கூடியவற்றை மறந்துவிடுவது சிறந்த பாதுகாப்பு. தேர்ந்தெடுக்கப்பட்ட சிறப்பு வாய்ந்த மறதிகளும் உண்டு. மறக்கவேண்டும் என்று விரும்பி மறப்பது மகிழ்ச்சியைக் கொடுக்கும். அனுபவத்தைவிட துயரம் தரும் அனுபவம் மறக்கப்படும். இது இருவகைப்படும்

14.13.9 அடக்குதல் (Supression)

துயரம் தரும் அனுபவங்களும், நினைவுகளும் நனவு மனநிலையில் தோன்றும்போதே, அவைகளைத் தடைசெய்வதே அடக்குதல் ஆகும். இது நனவு நிலையில் குறிக்கோள்களுடன் விரும்பி தடைசெய்வதாகும். தன் வீட்டில் நடைபெற்ற துயர சம்பவத்தை மறப்பதற்காக மற்ற செயல்களில் தீவிரமாகத் தன்னைத்தானே ஈடுபடுத்திக் கொள்வது அடக்குதலாகும்.

14.13.10 விரும்பாத அனுபவம்

எண்ணங்கள், நினைவுகள் யாவும் மனநிலையிலிருந்து அடிமன நனவிலி நிலைக்கு தள்ளப்பட்டு மீண்டும் மேல் மனதிற்கு வராதபடி தவிர்த்தல் நசுக்குதலாகும் எண்ணங்களிலிருந்து முழுமையான மறதியைத் தோற்றுவிப்பதாகும். இது உடல்நலத்திற்கும் ஆளுமைக்கும் கெடுதலாகும். நினைவு

Downloaded From www.nagaicollege.com

இழந்து அடிமனதிற்கு தள்ளப்பட்ட பின் விழிப்புணர்வோடு மீண்டும் முயற்சித்தாலும் மீட்டுணர இயலாது.

14.14 பிரச்சனைகளுக்குரிய குழந்தைகள்

பள்ளி மாணவரிடையே பல்வேறு வேறுபாடுகள் காணப்படுகின்றன. மாணவர்களில் சிலர் பிரச்சனைக்குரியவர்களாகக் காணப்படுகிறார்கள். அதற்கு காரணம் மாணவர் மட்டுமல்ல, பெற்றோர், சமுதாயம், அரசு, பள்ளி, ஆசிரியர்கள், பாடங்கள், தேர்வு முறைகள் மதிப்பீடு போன்றவை அவர்களைப் பிரச்சனைக்கு உரியவர்களாக்கிவிடுகின்றன். அத்தகைய குழந்தைகளின் பிரச்சனைகள் பல வடிவங்களில் வெளிப்பட்டு சமுதாயத்தின் வளர்ச்சியை குறைக்கிறது.

14.15 குழந்தைகளின் நெறிப்பிறழ்வு

நெறிப்பிறழ்வு என்பது சமூக விரோத நடவடிக்கையைக் குறிக்கும். பெரியவர்கள் சமூக விரோத செயல்களைச்செய்தால் குற்றவாளிகள் என்கிறோம். நெறிப்பிறழ்வுடைய, குழந்தைகளை இளங்குற்றவாளிகள் (Juvenile Delinquency) என்கிறோம். எக்குற்றங்களைப் பெரியவர்கள் செய்தால் சட்டப்படி தண்டிக்கப்படுவார்களோ அக்குற்றங்கள் செய்யும் சிறுவர், சிறுமியர் நெறிப்பிறழ்வுடையவர்கள் எனப்படுகின்றனர். வயது 17-க்கு உட்பட்டவர்கள் செய்யும் குற்றங்கள் நெறிபிறழ்வுக்குள் அடங்கும். இத்தகையவர்களை சமுதாயத்தினர் கோபமுடனும் வெறுப்புடனும் பார்ப்பதால் அக்குழந்தைகளின் நெறிப்பிறழ்வு தீவிரமடையக்கூடும். ஆரம்பத்தில் பிறவியின்பலனாக குற்றவாளிகளாகின்றனர் என நம்பப்பட்டது. அவர்கள் பிறவிக் குற்றவாளிகள் எனப்பட்டனர். ஆனால் பிறவி இயல்பால் ஒருவன் குற்றவாளியாவதில்லை. சூழ்நிலையே ஒருவனை இந்நிலைக்கு மாற்றுகின்றது என்பது தற்போதைய கருத்து. உளப்போராட்டங்கள் மற்றும் சமநிலையற்ற மனநிலையே நெறிப் பிறழ்வுக்குக் காரணமாகும். இவை குடும்பம், சுற்றுப்புறம், பள்ளி, சமுதாயம் ஆகிய சமூகநிலையங்களின் கோளாறுகளினால் எழுகின்றது. எனவே நெறிப்பிறழ்வு சமூகக் கோளாறுகளின் விளைவு, தனது அடிப்படை உரிமைகளையும், தேவைகளும் நிறைவு செய்யப் போதிய வாய்ப்புகள் அளிக்காத சமூகநிலைக்கு எதிராக எழும் புரட்சி நெறிப்பிறழ்வாகும். சமூகக் குழுக்களின் நடத்தைகளுக்கிடையே காணப்படும் வேறுபாடும் நெறிபிறழ்வுக்கான காரணமாகும். நகரங்களில் வசிக்கும் வசதியற்றோர், அடிப்படைத்தேவைகள் நிறைவு பெறாதோர், நெருக்கமான இடங்களில் வாழ்பவர்கள், பிடிக்காத பெற்றோரின் குழந்தைகள், கண்டிப்பில்லாத குழந்தைகள் போன்ற சமூகத்தின் அனைத்து நிலையிலும் நெறிப்பிறழ்வு அதிகம் காணப்படுகின்றது.

14.16. நெறிபிறழ்வை சரிசெய்ய கையாளப்படும் முறைகள்

- நெறிபிறழ்வு உடையவரின் தனிப்பட்ட பிரச்சனைகள் ஆராயப்படவேண்டும்.
- இவர்களுக்கு என்று தனி நீதிமன்றங்கள் (துரளநலைந உழரசவ) ஏற்படுத்தப்பட்டு உள்ளன. இம்மன்றங்களின் நடுவர்கள், இவர்களிடம் கருணையுடன் நடந்துக்கொள்கின்றனர்.
- இவர்களுக்கென்று சீர்திருத்தப் பள்ளிகள் உண்டு. அங்கு அவர்களுக்கு நன்னெறி நடத்தையும்,தன்னம்பிக்கையும், தாழ்வுமனப்பான்மை போக்கும் பயிற்சியும் அளிக்கப்படுகின்றது.
- மீண்டும் தீயவழிக்குச் செல்லாமல் பாதுகாக்க அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.
- அவர்களின் நிலையை ஆராய்ந்து அதற்கான காரணங்கள் அகற்றும் வழிமுறைகளைக் கூறுவதுடன் இவர்களைச் சீர்திருத்துவதில் நடித்தல், விளையாட்டு போன்றவை பயிற்சியாகப் பயன்படுத்தப்படுகின்றன.

Downloaded From www.nagaicollege.com

- சமூகவியலிற்கு ஒத்தநடத்தை, எதிராக நடத்தைப்பற்றி விளக்கமான அறிவு அளிக்கப்படுவதுடன் அவர்கள் மீண்டும் அப்படியொரு சூழலுக்கு ஆட்பட்டு விடாமல், புதிய சூழலில் வாழவைக்கப்படுகின்றனர.
- அவர்களின் தனித்திறமையை கண்டறிந்து அவர்களை மேம்படுத்துதல்.

14.17 நெறிபிறழ்வு தடுப்பு வழிகள்

- வறுமையில் வாடுபவர்கள், விரக்தி அடையாத வகையில் அரசின் இலவச உணவு, உடை, பொருளுதவி அளிக்கும் திட்டங்களை செயல்படுத்துதல்
- மனப்போராட்டம், மனமுறிவு ஏற்படாமல் பாதுகாத்தல்.
- பள்ளிச் சூழலை மகிழ்ச்சி உடையதாக்குதல்.
- விரும்புகின்ற, திறனுக்கேற்ற மற்றும் சூழ்நிலைக்கேற்றவாறு நற்கல்வி அளித்தல்.
- பள்ளியில் மாணவர்களின் நல்வளர்ச்சிக்கான வழிகாட்டும் அமைப்பை ஏற்படுத்துதல்.
- மனக்கவலை, போராட்டங்கள், உடல்நலக்குறைவு தீவிரமாகும் முன்னர் அவைகளைக் கண்டறிந்து போக்குதல்.
- பயனுள்ள பொழுதுபோக்கிற்கான வாய்ப்புகளை சமுதாயத்திலும், பள்ளியிலும் வழங்குதல்.
- குமரப்பருவத்தினருக்கு ஆக்கப்பூர்வமான பொழுதுபோக்கு சங்கங்கள் அமைத்தல்.
- சாரணர் பயிற்சி, குடிமைப் பயிற்சி, தலைமைப்பயிற்சி, தியானம் போன்ற பயிற்சிகள் அளித்தல்.நன்னெறி, மதிப்புக்கல்வி கற்பித்தல்.
- குழந்தை வளர்ப்பு, கல்வியறிவு வழியுணர்வை பெற்றோர்களுக்கு வழங்குதல்.
- பெரும்பாலும் பள்ளிகளில் ஆசிரியர்கள் அன்பு, பரிவுடன் சிறந்த வழிகாட்டிகளாக செயல்படுவதுடன் வழிகாட்டுதல் திட்டத்தினை செயல்படுத்தினால் இதனைக் குறைக்கலாம்.

14.18 மனநலம்

வாழ்க்கையில், சூழ்நிலையின் பல்வேறு அழுத்தங்களுக்கும் வெற்றிகரமாக பொருந்திப்போகும் திறன் மனநலம் எனப்படும். முழுமையான ஆளுமைக்கும், திறம்பட மகிழ்ச்சியான வாழ்க்கைக்கும் அடிப்படை மனநலமேயாகும். மனநலமென்பது, நல்ல உயர்ந்த அளவிலான உடல் வளர்ச்சி, மனவெழுச்சி பெற்று, மனப்பக்குவம் பெற்று இவைகளுடன், வாழ்க்கையின் இலக்குடன் சமுதாய நலனுக்குத் தன்னால் இயன்றவைகளைச் செய்யும் மனம் பெற்றிருப்பதாகும். இத்தகைய மனநலம் வளர்ச்சி பெறச் செய்தல், மனநல மேம்பாடு, மனநல சீர்கேடு தடுத்தல் பற்றிய கல்வி மனநலவியலாகும்.

14.19 மனநலவியல்

மனநலம் காப்பதும், மனநலக்கேட்டை தடுப்பதும், அதற்கான நல்ல சூழ்நிலையை உருவாக்குதல் பற்றிய கல்வியே மனநலவியல் எனப்படும். மனநலவியல் அறிவு மனநலத்திற்கான வழியாகும். பள்ளியிலும், வீட்டிலும் குழந்தைகளின் மனநலத்தை காப்பது அவசியமானதாகும். ஆகவே, ஆசிரியருக்கு மனநலவியல் அறிவு மிக அவசியமாகும்.

14.19.1மனநலவியலின் நோக்கங்கள்

- வகுப்பில் மனநலம் குன்றியவர்களைக் கண்டறிந்து, தீர்வு நடவடிக்கையை மேற்கொள்ளல்
- தனிநபரின் சுயதிறனை வளர்த்துக் கொள்ள வாய்ப்பளித்தல்
- பிரச்சனையான சூழலில் தன் திறனைப் பயன்படுத்தி திறம்பட பொருந்தி வாழச் செய்தல்
- ஒட்டு மொத்த உடல் வளர்ச்சி, மனவளர்ச்சித் திறன்களுடன் பொருந்தி சமூகச் சூழலில் மகிழ்ச்சியாக வாழ வகை செய்தல்

Downloaded From www.nagaicollege.com

- மனநல குறைவினைத் தவிர்த்து நேர்முக மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளச் செய்தல்
- அனைவரும் நல்ல மனநலத்தோடு இருக்கக் கூடிய சூழ்நிலையை உருவாக்குதல்

14.19.2 மனநலவியலின் பணிகள்

மனநலவியல்இ மாணவர்களின் உளவியல் பிரச்சனைகளைப் புரிந்து கொண்டு சிறப்பாகத்தீர்வு காணுவதற்கான பயிற்சியளிக்கப்படுகின்றது. நல்ல உடல் நலமுள்ளவர்களின் மனநலம் பாதுகாக்கப்பயன்படுகின்றது. கின்றது. மனநலம் பற்றிய உணர்வினை அனைவரும் உணரச்செய்கின்றது. பள்ளி, வீடு சமுதாயத்தில் மனநலக்கேட்டை தவிர்த்து மனநலனை அதனை வளர்க்கும் வழிகளை உணர்த்துகின்றது.

14.20 மனநலம் உள்ளவரின் பண்புகள்

- சமூகநிலையை உணர்ந்து, சமூகத் தகவமைவு பெற்றிருப்பர். சமூகச் செயல்களில், வாழ்க்கையில் மன அழுத்தம் இருந்தால் கூட முறையாக நடந்து கொள்வர்.
- மாறும் சூழலுக்கேற்ப நெகிழ்வுத் தன்மையுடன் நடந்து கொள்வர்
- மனவெழுச்சி முதிர்ச்சியுடன், மனவெழுச்சி கட்டுப்பாடும், மனவெழுச்சிகளை விரும்பத்தகும் முறையில் வெளிப்படுத்தும் திறனும் பெற்றிருப்பர்.
- சரியான நேரத்தில் சுதந்திரமாக சிந்தித்து சரியான முடிவு மேற்கொள்ளும் நுண்ணறிவு மிக்கவராக இருப்பர்.
- ஒரு நல்ல மனநிலையில் இருப்பவர் கற்பனை வாழ்க்கையை மறந்து நிஜ வாழ்க்கையில் விருப்பத்துடன் வாழ்வார்.
- தன் சுய மதிப்பீட்டின் அடிப்படையில் நடத்தையை மேம்படுத்திக் கொள்வர்.
- வாழ்க்கையில் தோல்விகளை சந்திப்பதற்கான தைரியமும், சகிப்புத்தன்மையும் பெற்றிருப்பர்.
- மற்றவர்களால் விரும்பப்படுவதுடன், நல்ல மதிப்பையும் கொண்டிருப்பர்.
- முறையாக, சரியாக, காலந்தவறாமல் கடமை செய்வதுடன், நல்ல விரும்பத்தக்க சமுதாய நலப்பண்புகள் பெற்றிருப்பர்.
- விரும்பத்தகாத செயல்கள், ஒழுங்கற்ற நிலை, மனப்போராட்டம், மனவியாதியின்றி நலமுடன் இருப்பர்.
- சுய கட்டப்பாட்டுடன் சமூகச் சுழ்நிலையில் பொருந்தி வாழ்வர்.

14.21 வீட்டில் மனநலம் காக்கும் வழிகள்

- குழந்தைகளுக்கு சாதகமான சூழலை அமைத்துத் தருதல்
- நியாயமான அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்தல்
- குழந்தைகளுடன் பிரியமுடன் இணக்கமாய் இருத்தல்
- தேவைப்படும் பொழுது முறையாக வழிநடத்துதல்
- குழந்தைகளை அடிக்கடி அடுத்தவர் முன் குறை கூறாதிருத்தல்
- மற்ற குழந்தைகளுடன் ஒப்பிட்டு பேசாதிருத்தல்
- குழந்தைகளை புறக்கணிக்காதிருத்தல்
- தாழ்வு மனப்பான்மை ஏற்படாமல் பாதுகாத்தல்
- அளவுக்கதிகமான பாதுகாப்பளிக்காதிருத்தல்
- குழந்தைகளின் எதிர்காலம் பற்றி அதிகம் கவலையை வெளிப்படுத்தாது இருத்தல்
- படிப்பதில் துணைபுரிந்து வழிநடத்துதல்
- தக்க சமயத்தில் குழந்தைகளைப் பாராட்டுதல்

Downloaded From www.nagaicollege.com

- குழந்தைகளின் எண்ணங்களுக்கு முக்கியத்துவமளித்து அங்கீகரித்தல்
- வீட்டில் நல்ல சூழலில் ஆளுமைக் கூறு பண்புகள் அனைத்தையும் வளர்த்து மனநலம் மேம்படச் செய்வது அதன் வளர்ச்சிக்கு அவசியமானதாகும். நிஜ வாழ்க்கையை குழந்தைகள் புரிந்து கொள்ள வாய்ப்பளித்தல்

14.22 பள்ளியில் மனநலம்

பள்ளியில் ஆசிரியர்களும், அதிகாரிகளும் மாணவர்களின் மனநலம் காப்பதுடன், பொருத்தப்பாடின்மையை நீக்குவதிலும் பெரும்பங்கு வகிக்கின்றனர்

- உடல் நலம் காத்து, நல்ல உடல்நல பழக்கங்களை வளர்க்கத் துணைபுரிவதுடன், பள்ளியில் பாதுகாப்புணர்வினை ஏற்படுத்துதல்
- அன்றாட உடற்பயிற்சி செய்யச் செய்தல்
- தன்னம்பிக்கையையும் தற்சார்பு நிலையையும் வளர்த்தல்
- முறையான சமநிலைப்பட்ட மனவெழுச்சி வளர்ச்சியடைய துணை செய்தல்
- சாதி, மத, இன, மொழி வேறுபாடின்றி அமைதி நிலவச் செய்தல்
- அச்சமற்ற சுதந்திரமான கற்றலுடன் பக்தியும், ஆர்வத்துடன் மகிழ்ச்சியாக இருக்க ஏற்ற சூழல் உருவாக்குதல்
- ஒவ்வொரு மாணவரும் சமூக அங்கத்தினரால் ஏற்கப்பட்டு, அவரிடையே பொருத்தப்பாட்டு பண்பினை வளர்த்தல்
- ஆசிரியர், மாணவர்களின் நம்பிக்கைக்குரியவராய் இருந்து, மனநலம் காக்கத் துணைபுரிதல்
- நேர்முக மனப்பான்மையை மாணவர்கள் வளர்த்துக் கொள்ளுதல்
- மாணவர்களின் தேவையையும், முறையான வளர்ச்சியையும் அடைய அவர்களின் திறமைகளை முழுமையாக பயன்படுத்ததல்
- கற்றலை மகிழ்ச்சியான செயலாக்குதல்

மேற்கண்டபடி பள்ளியில் மாணவருக்கு விரும்பத்தகும் இணக்கமான சூழல்களை வழங்குவதன் மூலம் பள்ளியில் மனநலம் காக்கப்படலாம்.

Downloaded From www.nagaicollege.com

B.Ed. DEGREE EXAMINATION, DECEMBER 2018.

First Semester E

EDUCATIONAL PSYCHOLOGY

(CBCS – 2018–19 Academic Year Onwards)

Time : Three hours **Maximum : 75 marks**

PART A

Answer ALL the questions. **(10 X 2 = 20 marks)**

1. What is introspection?
   அகநோக்குமுறை என்றால் என்ன?
2. Brief the role of nature in growth and development.
   வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தில் மரபின் பங்கினை சுருக்கமாக எழுதுக.
3. List the stages of development put forth by Erik Erikson.
   வளர்ச்சி நிலைகளைப் பற்றி எரிக் எரிக்சன் முன்வைத்த கருத்துக்களை பட்டியலிடுக.
4. Give one example for sensation and perception.
   புலனுணர்வு மற்றும் புலன்காட்சிக்கு ஒரு எடுத்துக்காட்டு தருக.
5. Write any two uses of concept maps in learning.
   கற்றலில் கருத்து வரைபடத்தின் ஏதேனும் இரண்டு பயன்பாடுகளை எழுதுக.
6. List out any four factors that cause forgetting.
   மறதிக்கான காரணிகளில் ஏதேனும் நான்கினை பட்டியலிடுக.
7. Who are mentally retarded children?
   மனநலம் குன்றிய குழந்தைகள் யாவர்?
8. What are the esteem needs according to Maslow?
   மாஸ்லோவின் மதிப்பு தேவைகள் யாவை?
9. List any two intelligence tests.
   நுண்ணறிவுச் சோதனைகளில் ஏதேனும் இரண்டினை பட்டியலிடுக.
10. What do you mean by convergent thinking?
    குவிசிந்தனைப் பற்றி நீவிர் அறிவது யாது?

PART B

Answer all the following questions in about 250 words each. **(5X 5 = 25 marks)**

11. (a) Differentiate growth from development with examples.
    வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் ஆகியவற்றை உதாரணத்துடன் வேறுபடுத்துக.

    Or

    (b) Describe the importance of behavioral psychology in today's classroom.
    இன்றைய வகுப்பறையில் நடத்தை உளவியலின் முக்கியத்துவம் குறித்து விவரி.
12. (a) Discuss the problems faced by adolescents.
    குமரப்பருவத்தினர் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் குறித்து விவாதி.

    Or

    (b) Describe the factors influencing sensation of students in the classroom.
    வகுப்பறையில் மாணவர்களின் புலனுணர்வுகளைப் பாதிக்கும் காரணிகளை விவரி.

13. (a) Explain pre-operational stage in cognitive development put-forth by Jean Piaget.

Downloaded From www.nagaicollege.com

ஜீன் பியாஜே குறிப்பிட்ட அறிவு வளர்ச்சி கோட்பாட்டில் முன் செயல்பாட்டு நிலை குறித்து விவரி.

Or

(b) As a teacher, how will you plan your classroom instruction to teach gifted children?

ஒரு ஆசிரியராக நீவிர் மீத்திறன் குழந்தைகளுக்கு கற்பிப்பதற்கான வகுப்பறை கற்பித்தலை எவ்வாறு திட்டமிடுவாய்?

14. (a) Describe various stages in creativity.

ஆக்கதிறனின் பல்வேறு நிலைகளைப் பற்றி விவரிக்க.

Or

(b) Elaborate the significance of transfer of learning.

கற்றல் மாற்றத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்க.

15. (a) Discuss the role played by rewards and punishment in learning.

கற்றலில் வெகுமதி மற்றும் தண்டனை வகிக்கும் பங்கினை விவாதிக்கவும்.

Or

(b) Explain the role of projective techniques in assessing personality.

ஆளுமையை மதிப்பிடுவதில் புறத்தெறி நுட்பத்தின் பங்கினை விவரி.

PART C

Answer any THREE questions. (3 X10 = 30 marks)

16. Discuss in detail the significance of understanding growth and development of children by teachers.

குழந்தைகளின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தை ஆசிரியர்கள் புரிந்துகொள்வதில் உள்ள முக்கியத்துவத்தை விவாதிக்கவும்.

17. Describe Skinner's operant conditioning theory with educational implications.

ஸ்கின்னரின் செயல்பாட்டு ஆக்க நிலையுறுத்தக் கோட்பாட்டினை கல்வி பயன்களுடன் விவரி.

18. Explain multi factor theory of intelligence given by Thorndike.

தார்ண்டைக்கின் பல காரணி நுண்ணறிவுக் கோட்பாட்டை விவரிக்க.

19. As a teacher, discuss ways and means to foster creativity in your students.

ஒரு ஆசிரியராக, உங்கள் மாணவர்களிடத்தில் ஆக்கதிறனை ஊக்குவிப்பதற்கான வழிமுறைகளைப் பற்றி விவரி.

20. Discuss in detail the various defense mechanisms used by students.

மாணவர்கள் பயன்படுத்தும் பல்வேறு தற்காப்பு நடத்தைகளைப் பற்றி விரிவாக விவரி.

Downloaded From www.nagaicollege.com

DISTANCE EDUCATION – CBCS (2018-19 ACADMEIC YEAR ONWARDS)

EDUCATIONAL PSYCHOLOGY

Time : 3 hours **Maximum : 75 marks**

PART A

Answer all questions **(10 x 2 = 20 marks)**

1. Define growth.
   வளர்ச்சி வரையறு
2. Give the importance of educational psychology.
   கல்வி உளவியல் முக்கியத்துவத்தினைக் கூறு.
3. Define concept map.
   மன வரைபடம் வரையறு
4. Write the importance of educational programmes.
   கல்வி நிகழ்ச்சிகளின் முக்கியத்துவத்தை எழுது
5. What is the need of the learning curve?
   கற்றல் வளைவு தேவையைக் கூறுக.
6. What is achievement motivation?
   அடைவு ஊக்கி என்றால் என்ன?
7. Write the importance of punishment.
   தண்டனையின் முக்கியத்துவத்தை எழுதுக
8. What are the different types of intelligent test?
   நுண்ணறிவு சோதனைகளின் பல்வேறு வகைகள் யாவை?
9. State any two personality assessment tool.
   ஏதேனும் இரண்டு நன்னடத்தை கண்டறியும் கருவிகளைக் கூறுக.
10. Define defence mechanism.
    தற்காப்பு நடத்தை வரையறு.

PART B

Answer all the questions choosing either (a) or (b) **(5 x 5 = 25 marks)**

1. a) Describe the developmental tasks and its educational implications
   வளர்ச்சி சார்நிலை விவரி அதன் கல்வி முக்கியத்துவத்தைப் பற்றி கூறுக

   (or)

   b) Describe the cause of inattention.
   கவனமின்மைக்கான காரணங்களை விவரி.

2. a) State any two practices of improving memory.
   நினைவு மேம்படுத்துவதற்கான ஏதேனும் இரண்டு பயிற்சிகளை கூறுக.

   (or)

   b) Write the provisions of physically, mentally and socially challenged children?
   உடல், மனம் மற்றும் சமுதாயம் ரீதியாக பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான வழிமுறைகளை எழுதுக.
3. a) Give a notethe importance of motivation in the class room.
   வகுப்பறையில் ஊக்குவித்தலின் முக்கியத்துவத்தை பற்றி குறிப்பு வரைக.

   (or)

   b) Describe the Guilford structure of the intellect.
   கில்போர்டுன் நுண்ணறிவு கட்டமைப்பு பற்றி விவரி.

Downloaded From www.nagaicollege.com

4. a) Give the relationship between intelligence and creativity.
நுண்ணறிவுக்கும் படைப்பாற்றலுக்கும் இடையே உள்ள தொடர்பை கூறு.
(or)
b) Describe the concept of mental health.
மன நலத்திற்கான கருத்துக்களைப் பற்றி விவரி.
5. a) How will you maintain the mental health of your students? Discuss
உங்கள் மாணவர்களின் மனநலத்தை எவ்வாறு பேணிக்காப்பீர்கள்? விவாதிக்க
(or)
b) Explain the differet types of mental conflicts.
மனப்போராட்டங்களின் வகைகளை விளக்குக

PART - C

Answer any 3 questions. **(3x10 = 30 marks)**

6. Briefly explain the importance of educational psychology for the teacher
ஆசிரியருக்கு கல்வி உளவியலுக்கான முக்கியத்துவத்தை பற்றி விவரி.
7. What are the factors relating to personality? Explain
ஆளுமையை தீர்மானிக்கும் காரணிகள யாவை? விளக்குக.
8. Describe Maslow's hierarchy of needs.
மாஸ்லோவின் தேவைப் படிநிலைக் கோட்பாட்டினை விவரி.
9. As a teacher. how do you develop creativity in your class students'?
ஆசிரியராக நீங்கள உங்கள் மாணவர்களிடம் எவ்வாறு படைப்பாற்றலை மேம்படுத்துவாய்?
10. Explain Piaget's cognitive development principles
பியோஜேவின் அறிவு வளர்ச்சி கோட்பாட்டினை விளக்குக

Downloaded From www.nagaicollege.com

View publication stats